## பொருளடக்கம்

இனிய தென்றலே! 5

காத்திருந்த கண்களே... 205

*

# இனிய தென்றலே...



*ஏதோ நினைவுகள் கனவுகள்*
*மனதிலே மலருதே - காவேரி*
*ஊற்றாகவே காற்றோடு காற்றாகவே...*

அதிகாலை நான்கு மணிக்கே எழுந்து விட்டாள் தென்றல். மார்கழிப் பனி பற்களை கிடுகிடுக்க வைக்கும் குளிர். சிறு மழையைப் போல் சொட்டு சொட்டாக சொட்டிக் கொண்டிருந்த பனித்துளி, ஆனைக்கட்டி மலையின் கடுங்குளிர் காற்று இவை எதையும் கண்டு கொள்ளாமல் முதல் வேலையாய் குளித்தாள். "ஏண்டி தென்றல் என்னடி உடம்பு உனக்கு? தினமும் அதிகாலையிலேயே அதுவும் பச்சைத் தண்ணீரைத் தலைக்கு ஊத்திக்கிறியே ஜன்னி எதுவும் கண்டுக்கப் போகுது. எங்க வீட்டைப் பார். எங்க மாமியாரிடமிருந்து என் குழந்தைங்க வரை எல்லாருக்கும் வெந்நீர் வேண்டும் குளிக்க. சுடு தண்ணி வெச்சே எனக்கு மாசம் ரெண்டு சிலிண்டர் காலியாகிடும். நீ ஒருநாள் கூட சுடுதண்ணி வெச்சுக் குளிச்சு நான் பார்த்ததே இல்லையே.

உனக்கு குளிரவே குளிராதா'' - என எப்போதும் வியப்பாள் அடுத்த வீட்டு விமலா. அவளுக்கு ஒரு புன்சிரிப்பை பதிலாய் உரைத்துவிட்டு, ''விமலாக்கா எப்போதுமே பச்சைத் தண்ணீரில் குளிப்பதுதான் ஆரோக்கியம், சுறுசுறுப்பு, உற்சாகம். முதல்ல ஒரு கப் ஊத்தினதும் உடம்பு நடுங்கும்தான். அப்புறம் அந்தக் குளிரை நம் உடம்பு ஏற்றுக் கொள்ளும். உடம்பில் ஒரு உற்சாகம் வந்துவிடும். வெந்நீரில் குளித்துவிட்டு என்றாவது ஒரு வெறும் நீரில் குளித்தால்தான் சளி பிடித்துக் கொள்ளும். எதையுமே பழகிக் கொண்டால் சிரமம் இல்லைதானே'' - என்பாள்.

ஆனாலும் அவளது மனம் கேட்கும் 'நீ கூடத்தான் அனைத்தையும் மறக்கப் பழகிக் கொண்டாய். ஆனால் சிரமம் இல்லாமலா இருக்கிறாய்?' என்று. அதன் தலையில் தட்டி அடக்கி விட்டு அடுத்த வேலையில் இறங்கி விடுவாள். மனதை அதன் விருப்பத்திற்கு கட்டவிழ்த்து விடக் கூடாது. தன் கட்டுப்பாட்டிற்குள் அதை வைத்துக் கொள்ள வேண்டும் என்று உறுதியாய் இருப்பாள்.

மனம்தான் பலவற்றையும் சிந்தித்ததே தவிர கைகள் பரபரவென தன் வேலைகளைச் செய்து கொண்டுதான் இருந்தன. இட்லி பாத்திரத்தில் மாவை ஊற்றி அடுப்பிலேற்றினாள். மற்றொரு அடுப்பில் பருப்பை வேக வைத்தாள். முந்தைய நாள் இரவு அப்பாவிடம் பேசிக் கொண்டே நறுக்கி வைத்திருந்த காய்கறிகளை எடுத்தாள். ஈரத் துணியால் போர்த்தி வைக்கப்பட்டிருந்த காய்கறிகள் வாடி வதங்காமல் பிரெஷ்ஷாய் இருந்தது. அவற்றை அலசியெடுத்து பருப்புடன் போட்டு விட்டு தேங்காயை எடுத்துத் துருவ ஆரம்பித்தாள்.



இன்று சனிக்கிழமை கலாவும் உமாவும் ஆறு மணிக்கே வந்து விடுவதாகச் சொல்லி விட்டுத்தான் சென்றிருந்தார்கள். ''அத்தனை சீக்கிரமாய் போவது ஆபத்தம்மா. பனி விலகாமல் பாதை தெரியாதம்மா. குளிர்ச்சிக்கு வழியெல்லாம் பூச்சு பொட்டு சுருண்டு கிடக்குமே'' என்றார் அப்பா மேகநாதன்.

''அதையெல்லாம் பார்த்தால் முடியுமாப்பா. இது கொஞ்சம் பெரிய ஆர்டர். மொத்தமாய் நூறு பாக்கெட் கேட்டிருக்கிறார்கள். வில்வ இலை, துளசி இலை, முசுமுசுக்கை இலை எல்லாம் ஏற்கனவே பறிச்சு காய வைச்சு எடுத்தாச்சு. ஆனா ஆடாதொடை, வல்லாரை, மிளகுக் கொடி, மலை நெல்லி இலை எல்லாம் கண்டிப்பா வேணுமே. அதுக்கு காலையில போனாத்தான் இருட்டு முன் வீடு வந்து சேர முடியும். பனிக்கோ பூச்சிகளுக்கோ பார்க்க முடியாதப்பா. நாங்கள் ஒன்றும் வெறுங்காலோடு போகவில்லையே. நீங்கள் தயாரித்த தோல் பூட்ஸ்களோடு தான் போகிறோம். அதுவும் நாங்கள் மட்டுமா போகப் போகிறோம். சுள்ளி பொறுக்க, மூலிகை பறிக்க, கிழங்கு எடுக்க என எத்தனையோ கூட்டம் வருகிறதே அப்பா. அவர்களோடு போய்விட்டு பத்திரமாக வந்து விடுகிறோம். வீணாக வருத்தப்படாதீர்கள்'' - என தந்தையை சமாதானம் செய்து படுக்க வைத்திருந்தாள். அப்பா எழுந்திருப்பதற்குள் அவருக்குத் தேவையான சாப்பாட்டை எடுத்து வைத்துவிட்டுப் போக வேண்டும். விழித்துக் கொண்டால் மகளின் நிலை கண்டு கண்கலங்குவார். ஏதோ இன்றுதான் மகள் புதிதாய் மலைக் காட்டுக்குள் சென்று மூலிகை பறிக்கப் போவதைப் போல் அத்தனை வருத்தப்படுவார்.

அவளும் தான் நினைத்தாளா என்ன, கோவையில் சிறந்த கல்லூரி ஒன்றில் தாவரவியல் பட்டப்படிப்பு படித்துக் கொண்டிருந்தபோது, இப்படி எல்லாம் நடக்கும் என்று? நினைக்கவில்லையே அவள். மூலிகை மருத்துவம் அப்பாவின் குலத் தொழில். பாட்டன் வழியாய் வந்த தொழில். பெரிதாய்ப் போகவில்லை என்றாலும் வயிற்றில் அடிக்காமல் கஞ்சி ஊற்றிக் கொண்டிருந்தது. எத்தனை தான் பெரிய பெரிய மருத்துவமனைகள் முளைத்தாலும் புதிய புதிய நோய்கள் புகுந்தாலும் ஆங்கில மருந்தை மட்டுமே நம்பாமல் இயற்கை வைத்தியம் மேல் இன்னும் மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர் என்பதற்கு அப்பாவின் உழைப்பே சாட்சி. பக்கவிளைவை எண்ணியோ பணத்தை தண்ணீராய் செலவழிக்க இயலாதவர்களோ இல்லை மூலிகை மருந்தின் மீது உள்ள நம்பிக்கையாலோ அப்பா எப்போதுமே நான்கு ஆட்களோடுதான் இருந்து அவள் பார்த்திருக்கிறாள். அப்போது இருந்தது வாடகை வீடுதான் என்றபோதும் வீட்டின் முன் உள்ள தாழ்வாரத்தில் அப்பா தன் மூலிகை மருந்துகளைத் தயாரித்தும் விற்றும் கொண்டிருந்தார். எல்லாம் நன்றாய்த்தானே போய்க் கொண்டிருந்தது. அந்த வேண்டாத சம்பவங்கள் நடவாமல் போயிருந்தால்...

நல்லதுதான். அப்படி நடந்ததால் தானே தன்னுடைய திறமையும் உழைப்பும் இன்று அனைவரையும் விழி தூக்கிப் பார்க்கச் செய்திருக்கிறது. சொந்த இடத்தில் நான்கு குடில்கள் அமைத்து இருபது பெண்களுக்கு வேலை கொடுக்க முடிந்தது. எத்தனையோ பேர் காரிலும் வண்டியிலுமாக மலையேறி வந்து தனது மூலிகைப் பொடிகளையும், மருந்து உருண்டைகளையும் வாங்கிச் செல்கிறார்களே. அவர்களுக்கு குணமாகி அடுத்தவரையும்



அனுப்பி வைக்கிறார்கள் என்றால்... எல்லாம் முன்னேற்றம் தானே. இந்த முன்னேற்றத்தையும் சுலபமாக எட்டவில்லை தென்றல். முதலில் தனியே போய் மூலிகைகளையும் வேர்களையும் பறித்துக் கொண்டு வந்து அப்பா சொல்லும் அளவு பிரித்து நிழலில் உலர்த்தி அவற்றை பொடி செய்து அல்லது அரைத்து உருண்டைகளாக்கி சுத்தமாய் வாட வைத்து பாக்கெட்டுகளில் அடைத்து மலைமேல் வரும் ஒரே ஒரு பஸ்சில் ஏறி கீழே ஊர்களில் உள்ள கடைகளில் மணிக் கணக்கில் நின்று பேசி புரிய வைத்து, கடைசியாய் ''சரிம்மா. உன் நிலையும் பரிதாபமாகத் தான் இருக்கிறது. ஆனால் விற்காமல் காசு தரமாட்டேன். பாக்கெட்டை தொங்க விடுகிறேன். விற்றதும் காசு தருவேன்'' - என்ற நிபந்தனையுடன் தான் ஒரு சில கடைகளில் வாங்கினார்கள். வாரம் ஒரு முறை மீண்டும் வரும்போது சில கடைகளில் இவள் கொடுத்தது அத்தனையும் அப்படியே கிடந்து அவளைப் பார்க்கும். சில கடைகளில் ஒன்றிரண்டு குறைந்திருக்கும். அவ்வளவுதான். தென்றலின் முகம் வாடிவிடும்.

அதைப் பார்த்துவிட்டு தங்கசாமி அண்ணாச்சிதான் சொன்னார். ''இதோ பாரும்மா. சும்மா இப்படிப் போட்டா எப்படியம்மா விக்கும். உன் மருந்துகளுக்கு ஒரு பேர் வையம்மா. அந்தப் பேரை அச்சடித்து கவர் போடு. கவரிலே இந்த மருந்து எந்தெந்த நோய்க்குப் பயன்படும், எப்படிப் பயன்படுத்த வேண்டும்னு குறிப்பையும் அச்சடிச்சுக் கொடு. அப்புறம் இந்தப் பொடுகு மருந்து, முகப்பரு மருந்து எல்லாம் இருக்குன்னியே. அதையும் நான் சொன்ன மாதிரி செய்து கொடும்மா. ஏன்னா நம்ம கடைக்கு பொம்பளை ஆட்களும் நிறைய வர்றாங்கல்ல. அவங்ககிட்ட சொன்னா

போதும். சீக்கிரமா உன் மருந்து பிரபலமாகிடும். ஆனா ஒண்ணு மருந்தை யாரும் குத்தம் சொல்லக் கூடாது. அப்புறம் என் கடை பேர் கெட்டுப் போகும்'' - என்றார் கண்டிப்பான குரலில்.

அப்படி ஆரம்பமானதுதான் தென்றல் மூலிகை மருத்துவம். தென்றல் அழகு சாதனப் பொடிகள். ''எனக்குப் பிறகு ஒரு வாரிசு இல்லாமல் இந்தத் தொழில் அழிஞ்சிடு மோன்னு நினைச்சேம்மா. நீ அதுக்கு மறுஜென்மம் கொடுத்திருக்க. அதனால் உன் பேர்தான் வெக்கணும்'' என்று அப்பா ஒரே பிடியாய் பிடித்துக் கொண்டார். தங்கசாமி அண்ணாச்சியும் சும்மா சொல்லவில்லை. விளம்பரப் படுத்தினால் தான் பொருள் விற்பனை ஆகும், பிரபலமடையும் என்று தெரிந்தேதான் சொல்லியிருக்கிறார். அன்று அவர் செய்த உதவியால்தான் கொஞ்சமாய் நிமிர்ந்து எழ ஆரம்பித்தாள் தென்றல். முதலில் கலா பிறகு உமா என இளம் பெண்கள் வேலைக்குச் சேர வேலை சுலபமானது. சம்பளம் கொடுக்க வேண்டுமே. அதற்கும் சேர்த்தே உழைத்தாள் தென்றல். உழைப்பு மட்டுமே தன்னுடையது. மற்றபடி என்னென்ன எத்தனை விதம் கலக்க வேண்டும் எப்படி சேகரிக்க வேண்டும் பதப்படுத்த வேண்டும் என தெளிவாய் கூடவே இருந்து செய்து கொடுப்பார் மேகநாதன். பிறகு உள்ளூர் மட்டுமின்றி வெளியூரிலும் இருந்து ஆட்கள் தேடிவர தொழிலை விரிவுபடுத்திக் கொண்டார்கள். அனுபவமும் தான் விரும்பிப் படித்த தாவரவியல் படிப்பும் கைகொடுக்க மளமளவென வளர ஆரம்பித்தாள். இந்த நிலையில் அயல் நாட்டில் இருக்கும் மகனுடன் கடைசி காலத்தை கழிக்கப் போவதாகக் கூறிய சுப்பிரமணியம் மாமா தமது நிலத்தை விற்பதாகக் கூற அந்த இடத்தை வாங்கிக்



கொண்டாள். மலைப்பகுதி என்பதால் அடிக்கடி ஏறி இறங்கி பயணம் செய்ய இயலாத நோயாளிகள் அது வயதானவர்கள் என்றால் மட்டும் தங்குவதற்காக மூன்று குடில்களை அமைத்தாள். மற்றபடி மருந்தைத் தயாரிக்க தனியாக சற்று பெரிதாய் ஒரு குடில். அனைத்தும் மூங்கில் மற்றும் தென்னை ஓலைகளால் அமைந்தவை. தங்கியிருக்கும் ஓட்டு வீடை மட்டும் மாற்றாமல் அப்படியே வைத்திருந் தாள். முதன் முதலாய் நொந்து நூலாய் வந்து குடியேறிய வீடு. அதை மாற்ற மனம் வரவில்லை. போதுமென்ற மனம்தான் சிறந்த மருந்து என்பார் அப்பா. அப்படித்தான் வாழ்ந்தும் கொண்டிருந்தனர்.

இந்நிலையில் தங்கசாமி வந்து அவசரமாய் சென்னைக்கு போவதாகவும் சில குறிப்பிட்ட மருந்துகள் தேவை எனவும் மறுக்காமல் ஒப்புக் கொண்டாள். வேலை அதிகம்தான் என்றாலும் கேட்பவர் அண்ணாச்சி ஆயிற்றே. அவர் தந்த யோசனையால் அல்லவா தன்னால் இந்த அளவுக்கு முன்னேற முடிந்தது. ''காலத்தால் செய்த உதவி சிறிதெனினும்'' அதை மறக்கக் கூடாது என்பதில் உறுதியாய் இருந்தாள்.

தாளித்துக் கொட்டி சாம்பாரை ஊற்றினாள் ''தென்றல். சாம்பார் வெச்சா ஊரே மணக்கும். நாக்குல எச்சில் ஊறுதே'' என்றவாறு வந்தனர் அந்த இரு பெண்களும். தென்றலை யொத்த வயதுடைய பெண்கள்தான். எந்த அலங்காரமும் இல்லாத உண்மையான அழகு யாரையும் சுண்டியிழுக்காத இதமான அழகு. தலை நிறைய எண்ணெய் தேய்த்துக் கொண்டையாய் முடிந்திருந்த போதும் அழகாய்த்தான் இருந்தனர்.

"ஏய் வாங்கடி. ஆளுக்கு ரெண்டு இட்லி சாப்பிட்டுப் போலாம்" என்றவாறே தட்டை எடுத்தாள் தென்றல்.

"ஏய் வேணாம்ப்பா. இதோ தூக்குல சாப்பாடு எடுத்துட்டு வந்துட்டோம், நீயும் எடுத்துக்கோ. அங்கே போயி ஒரு ஒன்பது மணிக்கா சாப்பிடலாம். மணி இப்போ ஆறுதானே ஆச்சு?" என்றாள் கலா.

"அச்சோ ஆறாச்சா. சீக்கிரம் போகலாம் வாங்க. அப்பா எழுந்துக்க முன்னால போயிடணும்" - என்றவாறே சாப்பாடு, தண்ணி, கடலை மிட்டாய், எள்ளுருண்டை அடங்கிய பையை எடுத்துக் கொண்டாள் தென்றல். சின்னதாய் மூன்று கத்திகள் கைகளில் மாட்டிக் கொள்ளும் தோல் உறைகள், சில செடி வகைகள் விஷத் தன்மை உள்ளவை. தொட்டாலோ உரசினாலோ தோல் எல்லாம் தடிப்பாய் வீங்கிவிடும். சிலவற்றின் இலையில் முள் இருக்கும். பறிக்கும் போது கொக்கி போல் கைகளில் பதிந்து விடும் என்று அப்பா சொல்லி இந்தக் கையுறைகளை வாங்கித் தந்திருந்தார். மூவருமாய் மாட்டிக் கொள்ள கொஞ்சம் தடிமனான அந்த முழங்கால் அளவுள்ள லெதர் ஷூக்களையும் தூசி தட்டி போட்டுக் கொண்டனர். கலா உணவு அடங்கிய பையை இடுப்பில் வைத்துக் கொள்ள மூங்கில் கம்புகளையும் ஆளுக்கொன்றாய் கத்திகளையும் எடுத்துக் கொண்டு கிளம்பி வெளியே வர வராண்டாவில் படுத்திருந்த மேகநாதன் கிழக்கு திசை நோக்கி அமர்ந்து சூரிய நமஸ்காரம் பண்ணிக் கொண்டிருந்தார். வாயில் விரல் வைத்தவாறே தென்றல் மற்றவர்களை மெதுவாய் வரச் சொல்லி ஜாடை காட்ட, "என்னம்மா, பட்டாளச் சிப்பாய்களா கிளம்பிட்டீங்களா?" என்றவாறே திரும்பினார் மேகநாதன்.



தலை முழுக்க நரைத்திருக்க மெல்லிய உடம்பை ஸ்வெட்டரால் மூடியிருந்தார். பார்வையில் கனிவும் வருத்தமும் குடி கொண்டிருக்க மகளைப் பார்த்தார். "அப்பா நேற்றே சொன்னேனில்லப்பா. அப்புறம் என்ன வருத்தம் முகத்திலே" - என கடிந்துக் கொண்டாள் மகள். "இல்லம்மா, வயசுப் புள்ளைகள மலையேற விட்டுட்டு வீட்ல அடைஞ்சு கிடக்க எந்த அப்பன் மனசு சங்கடப்பட மாட்டான். அந்த ஆண்டவன் இப்படி முடமாக்கி விட்டானே" - கண் கலங்கியவரை அதட்டினாள் தென்றல். "மனுஷங்க செய்யிற தப்புக்கு ஏம்பா ஆண்டவன் மேல் பழியப் போடுறீங்க. இப்படியெல்லாம் பேசக் கூடாதுன்னு சொல்லி எனக்கே அலுத்துப் போச்சுப்பா. காலையில உற்சாகமா கிளம்பும் போது இப்படி அழுது சங்கடப்படுத்தாதீங்கப்பா. நீங்க அழுகிறதால உங்க கால் சரியாகி மலையேறிப் போய் மூலிகை பறிச்சிட்டு வர முடியுமா? முடியாதில்ல. முடியாதுனு முடிவானப்புறம் ஏன் அழுது கண்ணீரை வீணாக்க வேண்டும். தேவையில்லாம கண்ல இருந்து ஒரு சொட்டு கண்ணீர் வரக் கூடாதுப்பா. அது மனசை கலங்க வெச்சிடும். வைராக்கியத்தை உடைச்சிடும். தன்னம்பிக் கையைப் பாழாக்கிடும். நம்மளைப் கோழையாக்கிடும்பா. நான் கோழையா இருக்க விரும்பல. தயவு செய்து இனியொரு முறை அழாதீங்கப்பா."

மகளின் இறுகிப் போன முகமும் குரலும் மனதை வருத்த, "சரிம்மா... நான் இனிமே அழலை. ஒண்ணும் பேசவில்லை. சரி விடிஞ்சிடுச்சு. பாத்து பத்திரமா

போயிட்டு சீக்கிரம் வந்திடுங்கம்மா. நீங்க வர்ற வரைக்கும் அப்பாவுக்கு இருப்புக் கொள்ளாது'' - என்றார் வாட்டமாய்.

மூவரில் சற்று இளையவளாய் தோன்றிய உமா, ''அப்பா நீங்க ஏம்பா பயப்படுறீங்க. தென்றல் இருக்கிறது பத்து ஆம்பிளைங்களுக்குச் சமம்ப்பா. அந்த தைரியத்துல தானே எங்க அம்மா அப்பா எங்களையும் அனுப்புறாங்க. ஏழு வருஷமா ஏறி இறங்குற மலைதானேப்பா. அதுவும் எங்களோட வீடுதான். நீங்க பயப்படாம சாப்பிட்டு பாட்டு கேட்டுட்டு இருங்க. நாங்க போயிட்டு வந்திடுறோம்'' - என்றாள்.

''அடி ராஜாத்தி. நல்ல வேளை ஞாபகப்படுத்திட்ட அந்த ரேடியோவை போட்டுவிட்டுட்டு கிளம்புங்கம்மா'' என்றார். அவரது படுக்கையை விட்டு சற்று தள்ளியிருந்த ஸ்விட்சை உமா போட்டுவிட, 'ஹல்லோ வணக்கம். வந்தனம் நமஸ்கார். நீங்க கேட்டுகிட்டு இருக்கிறது நம்ம ஹலோ எப்.எம். இந்த இனிய காலைத் தென்றலை உங்களுக்காக வழங்க வந்திருக்கும் நான் உங்கள் உங்கள் வருண்'' - இனிமையாய் பேசிய அந்தக் குரலின் பெயரைக் கேட்டதும் முன்னே நடந்து கொண்டிருந்த தென்றல் சட்டென நின்றாள். நெஞ்சுக் கூட்டிற்குள் சுரீரென்று நரம்பொன்றை சுண்டியெடுத்தாற்போல் வலித்தது. தன்னையும் மீறி கண்கள் தந்தையை நோக்க அவரும் தன் அன்பு மகளைத் தான் பார்த்துக் கொண்டிருந்தார் ஏக்கமாய்.

ஒரு கணம் தான் நின்றாள். அடுத்த கணம் கம்பீரமாய் நிமிர்ந்து நடக்க ஆரம்பித்தாள். வழக்கம்போல் ஏமாற்றமாய் சோர்ந்து போனார் மேகநாதன். இந்த பெண்ணின் மனதினுள் இன்னும் அவன் இருந்து கொண்டுதான் இருக்கிறானோ.



அதற்காகத்தான் திருமணமே வேண்டாம் என்கிறாளோ, தாயில்லாப் பெண். நானும் இல்லாமல் போய்விட்டால் தனிமரமாய் நிற்பாளே, இறைவா! இன்னும் எத்தனை காலம் என் பெண்ணை இப்படி ஒத்தை மரமாய் நிற்க வைப்பாய். வாழ வேண்டிய பெண்ணாயிற்றே. இப்படி தன்னைத் தானே வருத்திக் கொள்கிறாளே. இதற்கெல்லாம் முடிவே இல்லையா, பெற்ற மனம் தவித்தது. கட்டியிருந்த வேட்டியை ஒதுக்கி தனது இடது காலைப் பார்த்தார். பார்க்க, அவருக்கே பிடிக்கவில்லை. சதையை அறுத்து மேடும் பள்ளமுமாய் ஆங்காங்கே திட்டுத் திட்டாய் தையல்களோடு கொஞ்சம் அறுவறுப்பாகக் கூட இருந்தது. எத்தனை திடமான கால்கள். இந்த ஆனைக்கட்டி மலையை எத்தனை ஆயிரம் முறை ஏறி சுற்றியிருக்கும். இந்த மலைப்பகுதியில் ஒரு பகுதியில் கூட தன் பாதம் பதியாமல் இருந்திருக்காது. சுற்றி சுழன்று உழைத்த உழைப்பு, நோய் என்று ஒருநாளும் படுத்தறியாதவர். அப்போது கோவையில் இருந்த சமயம். வாரம் ஒருமுறை ஆனைக்கட்டி மலைக்கு வந்துவிடுவார். ஒருநாள் முழுக்க மலைமுழுவதும் சுற்றி தமக்கு தேவையான வேர்கள், இலைதழைகள், விதைகள், பட்டைகள் எல்லாம் மூட்டையாகக் கட்டிக் கொண்டு தன் நண்பன் சுப்பிரமணியின் வீட்டிற்கு வரும்போது இரவாகி விடும். தனக்காகவே வாசலிலே நிற்பார் தனது பால்ய சிநேகிதன். ''ஏன்டா, காட்டுக்குள்ளே போனா சீக்கிரமா திரும்ப மாட்டியா, நேரமானதும் எவ்ளோ பயமா இருக்கு தெரியுமா, வாத்தியார் வேலை பார்த்துட்டு நானும் ஓய்வாதானே இருக்கேன். என்னையும் துணைக்கு கூப்பிட்டுப் போலாமில்ல'' என்று கடிந்து கொள்வார் சுப்பிரமணியன்.

"அடப் போடா, என் வேகத்துக்கு உன்னால நடக்க முடியுமா? நீயே மூட்டு வலிக்காரன். போதாதற்கு ஆஸ்துமா வேற. நான் உன்னைக் கூட்டிட்டு எப்படிப் போக முடியும். தஸ்ஸு புஸ்ஸுன்னு சும்மாவே இளைக்குது உனக்கு. தோ பாருடா, உன் மகன் வெளிநாட்டுல இருந்து மருந்து அனுப்பினான்னு அதையே போட்டு தேய்ச்சிட்டு இருக்கியே. கொஞ்சமாவது சரியாச்சா. பேசாம நான் சொல்ற மாதிரி செய்யுடா. பாகற் காயை வாரத்தில மூணு நாள் சாப்பாட்டோட சேர்த்துக்க. அது மூட்டுக்களை பலப் படுத்தும் வலி குறையும். அதோட யூகலிப்டஸ், ஓம இலை, வேப்பிலை பட்டை எல்லாம் சேர்த்து ஒரு தைலம் செய்து வெச்சிருக்கேன். அதைப் போட்டுப் பார். அடுத்த வாட்டி வரும்போது சின்னப் பையனாட்டம் துள்ளிக் குதிப்பே. அப்புறம் இந்த ஆஸ்துமா அதுக்கு நாம ஓரளவு உணவுக் கட்டுப்பாட்டோட இருந்தாலே தவிர்க்கலாம். இருந்தாலும் இந்த மாதிரி மூச்சுத் திணறும் போது முசுமுசுக்கை இலையை பறித்து சுத்தமாக்கி வெங்காயத்தோடு சேர்த்து அரிந்து நெய்விட்டு வதக்கி பகல் உணவில் சேர்த்துச் சாப்பிட்டா குணமாகிடும். என் கூட வா, நான் செய்து தர்றேன் சாப்பிடு" என்றார்.

"அதையெல்லாம் பிறகு பார்க்கலாம். முதல்ல வா சாப்பிடு, பசியோடு இருப்பே"- என பரிவாய் உண்ண வைப்பார். வாரம் ஒரு முறை வழக்கமாய் நடப்பதுதான் என்றாலும் நண்பனைப் பார்த்த சந்தோஷம் இருந்தாலும் மகள் தனியே வீட்டில் இருப்பாளே என்ற கவலை ஒருபுறம் இருந்து கொண்டேதான் இருக்கும்.



ஆனைக்கட்டி மலை கோவையிலிருந்து கிட்டத்தட்ட ஐம்பது கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் ஓங்கி உயரமாய் நின்றது. பேருந்தில் வந்தாலும் மலைப்பகுதி என்பதால் ஊர்ந்து ஊர்ந்து ஏற எப்படியும் மூணு மனி நேரத்திற்கும் மேலாகி விடும். மூலிகைகளைப் பறித்துக் கொண்டு வரும் முன் கடைசி பஸ் நான்கு மணிக்கே போய்விடும். இருட்டிய பிறகு போக்குவரத்து நிறுத்தப்பட்டு விடும். அதனால் தங்கியிருந்துவிட்டு அதிகாலைப் பேருந்தில் கிளம்பி தென்றல் கல்லூரி செல்லுமுன்பாக வீடு வந்து சேர்ந்து விடுவார்.

அப்போது தென்றல் கல்லூரியில் இறுதியாண்டு படித்துக் கொண்டிருந்த நேரம். வழக்கம் போல அன்றும் அப்படித்தான் கிளம்பி மலை மேல் ஏறி தனக்கு தேவையானவற்றை சேகரித்துக் கொண்டிருந்தார் மேகநாதன். எப்போதுமே ஜன நடமாட்டம் அதிகமாக இல்லையென்றாலும் ஆங்காங்கே ஓரிரு தலைகள் தெரியும். அது கோடை விடுமுறை நேரமாதலால் கொஞ்சம் அதிகமாக நடமாட்டம் தெரிந்தது. அதில் ஒரு கல்லூரி மாணவர்கள் கூட்டம் உற்சாகமாகவோ அல்லது துணிச்சலாகவோ இல்லை பயமின்றியோ மலையின் ஓர் ஓரமாய் நீண்டு கொண்டிருந்த வழுக்குப் பாறையை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். பார்த்த மேகநாதனோ பதறினார். மலைக்காட்டில் ஆண்டுக் கணக்காய் சுற்றித் திரியும் அவரே அந்தப் பாறையருகே செல்ல மாட்டார். பார்க்க பசுமையான புற்களை தன் மேல் போர்த்தி யிருப்பதைப் போல் இருந்தாலும் அத்தனையும் ஈரமான பசும்பாசிகள். கால் வைத்ததும் வழுக்கி கீழே இருக்கும் அதள பாதாளத்தில் தள்ளி விடும். பிறகு உடம்பின் ஒரு

பாகம் கூடக் கிடைக்காது. கல்லூரி மாணவர்களின் கால்களில் ஷூ வேறு. நிச்சயமாய் விழுந்து விடுவார்கள் எனத் தெரிந்ததும் கீழே நின்றே குரல் கொடுத்தார்.

''தம்பிகளா, அந்தப் பக்கம் போகாதீங்க. ஆபத்து. அது வழுக்கும் பாறை. தயவு செய்து கீழே இறங்கிடுங்க'' - என உரக்கவே குரல் கொடுத்தார். அவரது குரல் அந்த மலையில் எதிரொலித்து அவர்களைச் சென்றடைய அந்த மாணவர்கள் நின்று திரும்பினர். ''ஏன்? ஏன் போகக் கூடாது?'' - என்றான் முதலில் போய்க் கொண்டிருந்தவன்.

''தம்பி! அதுல ஏறினா வழுக்கிடும். எதையும் பிடிச்சுக்கவும் முடியாது. கீழே பள்ளம் பாருங்க. அங்கதான் விழணும். கீழே இறங்கிடுங்க'' என்றார். இளம் கன்று பயமறியாது என்பார்களே அதேபோல் அவர்கள் தங்களுக்குள் ஏதோ பேசி சிரித்துக் கொண்டனர். முதலில் சென்றவன் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டே முன்னேற அது நடந்தது. சட்டென வழுக்கி கீழே விழுந்து விட எங்கே பள்ளத்தில் விழுந்து விடுவோமோ என அஞ்சி கடைசி நொடியில் உடம்பை உருட்டி விட்டான். பரிதவிப்பாய் பதறி ''ஐயோ! ஐயோ!'' என பார்த்துக் கொண்டிருந்த மேகநாதன் அவன் தன்னை நோக்கித்தான் வருகிறான் என கவனிக்கத் தவறினார்.

புற்களிலும் பாறைகளிலும் முட்டி மோதி அவன் புரண்டு சற்று பள்ளத்தில் நின்ற மேகநாதனையும் தட்டி தன்னோடு உருட்டிக் கொண்டே போனான். எதிர்பாராமல் நடந்த இந்த மோதலை தாக்குப்பிடிக்க முடியாமல் ஓலத்துடன் மேகநாதன் ஒருபுறமாய் பந்தாடப்பட கல்லூரி மாணவர் கூச்சலும் கதறலுமாய் பின்னே ஓடி வர கீழே



விழுந்த மாணவன் ஒரு பாறை இடுக்கில் சிக்கிக் கொள்ள, பின்னே வந்த மேகநாதன் அவன் மேல் விழுந்து புரண்டு பெரிய வீறிடலுடன் பாறைக் கூட்டத்தின் நடுவே விழுந்து மூர்ச்சையாகிப் போனார்.

துளி உயிர் மட்டுமே ஒட்டிக் கொண்டிருந்ததாய் ஞாபகம். 'இதோ இதோ கண்கள் இருட்டிக் கொண்டு வருகிறதே. என் மகள் என் தென்றல் ஐயோ அவளை இவ்வுலகில் தனியே தவிக்க விட்டுப் போகிறேனே. என் பிள்ளையை யார் பார்த்துக் கொள்வார்கள்! மகளே, நான் போகிறேன். என் உணர்வுகள் மரத்துப் போகின்றன. என் காதுகளில் ஓசை விழவில்லை. நான் போகிறேன்.' யாரோ அவரைப் பற்றித் தூக்கினார்கள். கயிற்றில் கட்டி இழுத்தார்கள். எமன்தான் தன்னை இழுக்கிறான் என்ற முடிவுக்கு வந்த நொடி முற்றிலுமாய் உணர்வுகள் மறைந்து விட ஆழமான மயக்கத்திற்குப் போனார் மேகநாதன்.




*பொன் எழில் பூத்தது புதுவானில்*
*வெண்பனி தூவும் நிலவே நில்!*

கையிலிருந்த மூங்கில் குச்சியால் புற்களை விலக்கி விட்டவாறே சரசரவென முன்னேறிய தென்றலைத் தொடர்ந்த கலாவும் உமாவும் ஒருவரை ஒருவர் பார்வையால் கேட்டுக் கொண்டனர். எப்போதும் கலகலப்பாகவும் ஊர் நடப்புகளையும் பேசிக் கொண்டே

வரும் தென்றல் இன்று முகம் கடுத்து பேச்சற்று வரவும் அதைக் கேட்கவும் தயங்கி மெதுவாய் பின் தொடர்ந்து வந்தனர். பேச்சும் சிரிப்புமாய் மலையேறும்போது அலுப்போ களைப்போ தெரியாது. ஆனால் இன்று உடல் வெகு சீக்கிரமாய் களைத்துப் போய்விட அடர்ந்து விரிந்திருந்த மரத்தினடியில் உட்கார்ந்து விட்டாள் உமா. முன்னே சென்று கொண்டிருந்த தென்றல் நின்று திரும்பினாள்.

''என்னடி இப்பவே, உட்கார்ந்திட்ட. இன்னும் சூரியனே மேலே எழுந்து வரலையே, அதுக்குள்ள என்ன ஓய்வு?'' என்றாள்.

''ஆமாம். அவருக்கென்ன, குளிருக்கு இதமா மேகப் போர்வையை போர்த்திட்டு சுகமா உறங்கி எழுந்து, பொறுமையா வருவாரு. அவர் வர்றவரைக்கும் என் வயிறு தாங்காதுப்பா. சாப்பிட்டாத்தான் என்னால நடக்கவே முடியும்'' - என்றவாறு கையோடு கொண்டு வந்திருந்த பித்தளைத் தூக்குப் பாத்திரத்தைத் திறந்தாள்.

''தென்றல் எனக்குக் கூட பசிக்குதுப்பா. வாப்பா சாப்பிட்டுப் போலாம்'' என்ற கலா தென்றலின் பதிலை எதிர்பாராமல் பையை இறக்கி சாப்பாட்டுப் பாத்திரத்தை எடுத்தவாறே உட்கார்ந்துவிட தென்றலும் அமைதியாய் உட்கார்ந்து சாப்பிட ஆரம்பித்தாள். ''இந்தாப்பா தென்றல் கொஞ்சம் கம்பங் கஞ்சியும் குடிச்சுக்கோ. இட்லியும் சாம்பாரும் ஆபீஸுக்குப் போறவங்க சாப்பிடுற சாப்பாடு. நாமெல்லாம் இப்படி வயிறு முட்ட கஞ்சியோ கேழ்வரகுக் கூழோ குடிச்சாத்தான் பசி மறந்து உழைக்க முடியும்'' - என்றவாறே தூக்கின் மூடியில் கொஞ்சம் கம்பஞ்சோறும் காணத் துவையலும் வைத்துக் கொடுத்தாள் உமா. மறுக்காமல் வாங்கிக் கொண்டாள் தென்றல். வயிற்றுக்கும் நாவிற்கும் இதமாய் இருந்தது. ஆனால் இதையெல்லாம் சமைக்கத்தான் தெரியவில்லை. எளிதான டிபன் மட்டும் சாப்பிட, செய்யத் தெரியும். மற்றபடி இந்தக் கஞ்சியெல்லாம் காய்ச்சத் தெரிவதில்லை. ஒருமுறை கலாவிடம் கேட்டு செய்து பார்த்தபோது கஞ்சி பாத்திரத்தோடு ஒட்டிக் கொள்ள அதை சுத்தம் செய்ய ஒரு வாரம் போராட வேண்டிய தாயிற்று. அதோடு விட்டவள்தான் பிறகு முயற்சிக்கவும் இல்லை.

''ஏம்பா தென்றல், உங்கிட்ட ஒண்ணு கேட்டா தப்பா நினைச்சிக்க மாட்டியே'' - மெதுவாய் தொடங்கினாள் கலா. என்ன என்பது போல் அவள் பார்த்ததுமே கொஞ்சம் தயங்கி, ''இல்ல, உங்க அப்பாரு நம்மளாட்டம் செடி பறிக்கப் போனப்போ தானே தவறி பள்ளத்துல விழுந்து கால் ஒடிஞ்சு போச்சு. அப்படித்தானே எல்லாரும் சொன்னாங்க. ஆனா இன்னிக்கு காலையில நீ யாரோ..'' தென்றலின் கோபப் பார்வையால் அப்படியே நிறுத்திக் கொண்டாள் கலா. சில நிமிடம் யாரிடமும் சத்தமே இல்லை. நிறுத்தி நிதானமாய் மூச்சை வெளியே இழுத்து விட்டு, ''அதெல்லாம் நமக்கு எதுக்கு? முடிஞ்சு போனதைப் பத்தி பேசி நேரத்தை ஏன் வீணாக்க வேண்டும். சாப்பிட்டாச்சுன்னா எழுந்திருங்க போகலாம்'' - என்றவாறு எழுந்து பாட்டிலைத் திறந்து கையைக் கழுவிக் கொண்டாள். மற்றவர்களிடம் இருந்து எந்தப் பதிலும் இல்லாமல் போகவே, ''என்னாச்சு?'' - என்றாள் சிடுசிடுப்போடு.

''நாங்கதான் உன்னை எங்க தோழியா நினைக்கிறோம். நீ எங்களை அப்படி நினைக்கல அப்படித்தானே. முந்தாநாள் வந்து பொண்ணு பார்த்திட்டுப் போனானே என்னை ஒரு ஒன்றரைக் கண்ணன். அவனைப் பத்திக் கூட உங்கிட்டே வந்து சொன்னேன்ல. கலாவும்தான் எதையாவது மறைச்சிருக்காளா? நீ மட்டும் எப்பவும் எதையும் சொல்லவே மாட்டே இல்ல. என்ன இருந்தாலும் நாங்க ஏழைபாழைங்க. உன்னாட்டம் பெரிய படிப்பும் படிக்கல்ல. அதான் எங்களை ஒதுக்கியே வைக்கிற இல்ல'' - என்றாள் உமா.

''என்ன உமா பேசற? இத்தினி வருஷம் நாம ஒண்ணாவே இருக்கோம். பழகுறோம். என்னைப் பார்த்தா இப்படிக் கேட்கிற?'' - என்றாள் பதட்டமான குரலில் தென்றல்.

''பின்னே, இதோ பாரு தென்றல் நாம எல்லோருமே கிட்டத்தட்ட முப்பது வயதைத் தொடப் போறோம். கொஞ்சம் முன்னே பின்னே என்றாலும் கல்யாண வயசைக் கடந்து ரொம்ப தூரம் வந்துட்டோம். எனக்கு வரதட்சணைன்னு பத்து பைசா கிடைக்காதுன்னு தெரிஞ்சதும் வர்ற மாப்பிள்ளை எல்லாம் சொல்லாம கொள்ளாம ஓடிடுறான். கலாவுக்கு அவ தங்கை தம்பிகளுக்கும் அவ அப்பனுக்கும் சாப்பாடு போடவே சம்பளம் முழுதும் சரியாப் போயிடுது. எங்களுக்கு கல்யாணம் ஆகாதது ஒண்ணும் பெரிய சிதம்பர ரகசியம் இல்லை. ஆனா உனக்கு அப்படி எதுவும் இல்லையே. ரொம்ப அழகா கலரா இருக்கே. நிறைய படிச்சிருக்கே. ரொம்ப புத்திசாலி. உங்க அப்பாவுக்கு நீ ஒரே பொண்ணு. பிறகேன் கல்யாணமே பண்ணாம இருக்கே. மாப்பிள்ளை



கிடைக்கலேன்னு மட்டும் பொய் சொல்லிடாதே. போன வாரம் கூட கார்ல ஒரு கூட்டம் வந்திட்டுப் போனதை நாங்க பார்த்தோம்'' - என்றாள் உமா.

''அப்பா எதுவும் சொன்னாரா?'' -கடுத்த குரலில் கேட்டாள்.

''சேச்சே! அப்பா ஒருநாள் கூட உன்னைப் பத்தி எங்ககிட்ட பேசினதில்லை. ஆனா.. அப்பா இப்ப கொஞ்சநாளா சரியில்லை. அடிக்கடி தனியா உட்கார்ந்து கண்கலங்குகிறார். அது தெரியுமா உனக்கு? எப்பவும் கடை கடையா சேல்ஸ் பண்ணப்போறியே தவிர அப்பாவைக் கவனிச்சிப் பார்த்தாதான் அவர் வேதனை உனக்குத் தெரியும்'' - என்றாள் கலா கசப்பாய்.

தென்றலின் கண்களில் நீர் திரண்டது. ''எனக்குத் தெரிகிறது. அப்பாவின் வேதனை தெரியாத மகளா நான்? மனிதனாகப் பிறந்து விட்டால் கஷ்டமும் நஷ்டமும் வரத்தான் செய்யும். நாம் தாங்கித்தான் நிமிர வேண்டும். அதைச் சொன்னால் புரிந்து கொள்ள மறுக்கிறாரே.''

''உன் நிலையில் நின்று நீ சொல்கிறாய். அப்பாவின் நிலையில் இருந்து பார். வயோதிகர். உடலாலும் மனமுற்று போயிருப்பவர். தனக்குப் பின் தன் மகள் நாதியின்றி போய்விடுவாளோ என பயப்படுகிறார். இது சராசரி தகப்பனின் வருத்தம்தானே. உன் கையில் தொழில் இருக்கிறது. வருமானத்திற்கும் குறைவில்லை. பிறகேன், தென்றல் வயதை வீணாக்குகிறாய். இப்போதே நம்மை முதிர் கன்னி என்கிறார்கள். இன்னும் ஓரிரு வருடங்களில் நம் தலை நரைத்து விடும். பிறகு கிழவி என்பார்கள்.

எங்களுக்கு கல்யாணம் என்பது கனவில்தான் நடக்கும். நீ எங்களைப் போல் இல்லையே, பிறகேன் இப்படி அடம் பிடிக்கிறாய்?'' - விடாப்பிடியாய் நின்றாள் உமா.

ஒரு நீண்ட பெருமூச்சை விட்டாள் தென்றல். ''அதெல்லாம் ஒரே நாளில் சொல்ல முடியாத கதை. கதை பேசிக் கொண்டிருந்தால் நம் பிழைப்பு நடக்காது. கலா உன் தங்கைக்கு யூனிபார்ம் வாங்க காசு கேட்டியே. இப்பப் பறிச்சுட்டுப் போற பொருள்களைப் பதப்படுத்தி மருந்தாக்கி தங்கசாமி அண்ணாச்சிகிட்டே கொடுத்தாத் தான் காசு கைக்கு வரும். அதனால முதல்ல வேலையைப் பார்ப்போம். மற்றதெல்லாம் ஒதுக்கி ஓரமாய்ப் போடுங்க. வாங்க சீக்கிரமாய்''- என்றவாறு பொருட்களை எடுத்துக் கொண்டு முன்னே கிளம்ப மற்றவர்களால் எதுவும் பேச முடியாமல் அவளைப் பின் தொடர்ந்தார்கள்.

அவர்கள் தேடிவந்த செடிகள் ஓரிடத்தில் அடர்ந்திருக்க மூவரும் ஆளுக்கொரு புறமாய் நின்று விடுவிடுவென பறித்து பைகளில் நிறைத்துக் கொள்ள ஆரம்பித்தபோது அந்த சத்தம் கேட்டது. தடதடவென்று முனகி மேலேறும் மோட்டார் சைக்கிளின் சத்தம். ''போச்சு! சண்டாளப் பாவிக்கு மூக்கிலே வேர்த்திடும். எப்படித்தான் நாம இருக்கிற இடம் தெரியுமோ? அவன் கண்ல கொள்ளிய வெக்க'' - நொடித்தாள் உமா.

''அதையெல்லாம் அப்புறம் வைக்கலாம். முதல்ல இவளை ஒளிச்சு வைப்போம். இல்லே அவன் விடுற ஜொள்ளுல இந்த மலையே மிதந்திடும்'' - என்றவாறே அருகிலிருந்த புதருக்குள் தென்றலைத் திணித்தாள் கலா. எப்போதுமே கலா கேடயமாக நின்று கொள்வாள். அதனால் கலா இல்லாமல் ஒருபோதும் மலை ஏறுவதில்லை தென்றல். கழுகு மூக்கோடு வந்து சேர்ந்தான் அழகப்பன்.

''என்ன உமா, தோட்டமெல்லாம் வேர்த்துக் கொட்டுது. உங்க தென்றலை எங்கே காணோம்'' - வாயில் தொங்கும் சிகரெட்டோடு வண்டியை விட்டு இறங்காமலே கேட்டான்.

அப்போதுதான் பார்ப்பது போல், ''அடடே, என்னண்ணே இந்தப் பக்கம்'' என விசாரித்தாள் அக்கறையாய்.

''இந்தா இதான்ன வேண்டாம்றது. என்னை அண்ணன்னு சொல்லாதேன்னு உனக்கு எத்தனை தரம் சொல்றது?''

''அட ஆமாம். சொன்னீங்கதான். சரிடா தம்பி. இனிமே உன்னைத் தம்பின்னே கூப்பிடுறேன். என்னடா தம்பி இந்தப் பக்கம்'' - உமா சீரியஸாகவே கேட்க, ''என்னடி கொழுப்பா? வாடா போடான்னு சொல்றே?'' - என்றான் குரலை உயர்த்தி.

''அட என்னப்பா உன்னோட பெரிய வம்பாப் போச்சு. அப்படியும் கூப்பிடாதே இப்படியும் கூப்பிடாதேன்ற. பிறகேன் இங்க நிற்கிற? கிளம்பு. எங்களுக்கு ஆயிரம் சோலி இருக்கு'' - என்றவாறு தன் வேலையைத் தொடர்ந்தாள் உமா. மனதிற்குள் கலக்கமாகவே இருந்தது. ''இந்தச் சண்டாளன் போய்விட மாட்டானா. புதருக்குள் ஏதேனும் பூச்சி அட்டை இருந்து தென்றலின் உடம்பில் ஏறிவிட்டால் என்ன செய்வது? ஆனால் அழகப்பன் அசராமல் நின்றான்.

அழகப்பன் அந்தப் பகுதியின் குறுநில மன்னன் என்றே சொல்லித் திரிபவன். ஆனைமலைப் பகுதியின் தேக்கு, கோங்கு மரங்களை குத்தகைக்கு எடுத்திருப்பவன். அதனாலேயே அந்தப் பகுதி முழுவதும் தனக்கே சொந்தம் என்று சொல்லித் திரியும் மைனர். சட்டையின் பட்டன்கள் எப்போதும் பாதி திறந்தே கிடக்கும். கழுத்தில் புலி நகத்தோடு கூடிய தடிமனான தங்கச் சங்கிலி புரள, கனமான கைச் செயினோடு அவன் வலம் வருவது மற்ற பெண்களுக்கு எப்படி இருக்குமோ இவர்களுக்கு அவனைக் கண்டாலே புலியைக் கண்டு கொண்டது போல் ஒரு மிரட்சி. பயம் என்றும் சொல்லலாம். மூவருள் உமா துடுக்கானவள் என்பதால் அவளே பதில் பேசி அனுப்பி விடுவாள். கலா அவனை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. அதோடு கடுகடுவென அவள் பார்வையே அவனை நெருங்க விடாது. தென்றல் அவனைப் பார்த்ததும் பதுங்குவதால் தென்றலை மிகவும் பிடித்துப் போனது. தளிர்மேனி நடுங்க அவள் கண்கள் மிரள்வது ஒரு மானின் மிரட்சியை நினைவூட்டும் அவனுக்கு. அதுவும் அவள் தினமும் ஏதாவது இலை தழை பறிக்க வர வேண்டுமே. இவனை பகைத்துக் கொண்டால் ஆபத்து என ஒதுங்குவது அவனுக்கு வசதியாகப் போயிற்று. எல்லை மீறி நெருங்கி வரமாட்டான்தான். என்றாலும் காமம் வழியும் அந்தப் பார்வையும் தேன் ஒழுக அவன் பேசுவதையும் கேட்டால் உடல் முழுவதும் பற்றியெரிவது போல் இருக்கும். அவனைக் கண்டால் அன்று முழுதும் தென்றல் முகம் கலங்கித் தவிக்கும். அதனாலேயே அவன் வண்டி தூரத்தில் வருவதை அறிந்த உடன் பதுங்கிக் கொள்வாள்.



உமாவும் சாமர்த்தியமாய் அவனை திசை திருப்பி அனுப்பி விடுவாள். ஆனால் இன்று அசைவதாக இல்லை.

புதருக்குள் பெரிய கட்டெறும்புகள் தங்கள் புற்றின் அருகே காலை வைத்திருந்த தென்றல் மீது ஏறி விளையாடியது. தோல் ஷூ இல்லாவிட்டால் எப்போதோ காலைப் பதம் பார்த்திருக்கும். என்றாலும் அவள் அசையாமல் இருக்கவே அவளையும் ஒரு மரமாகக் கருதி அவள் உடல் முழுக்க வரிசையாய் ஏற ஆரம்பித்தது. முதுகில் கையில் ஒன்றிரண்டு கடித்து இரத்தத்தை உறிஞ்ச கத்தவும் முடியாமல் அசையவும் முடியாமல் தவித்துக் கொண்டிருந்தாள்.

உமா பறிப்பதை நிறுத்தி விட்டு கலாவை அழைத்தாள். ''போலாமா கலா, இதுபோதும்னு நினைக்கிறேன்'' - என்றவாறு திரும்பியவள், ''அட நீ இன்னும் புறப்படலியா'' என்றாள் அழகப்பனைப் பார்த்து. புகைந்து கொண்டிருந்த சிகரெட்டை தூர எறிந்தவன், ''அடியே சில்வண்டு, நீங்க மூணு பேரும் மலையேறி வரும்போதே, நான் பார்த்திட்டேன். மரத்தை வண்டி பிடிச்சி ஏத்திவிட்டுட்டு வர்றதுக்குள்ள அவளை மறைச்சி வெச்சிட்டா நான் நம்பிடுவேனா? எப்படியும் இங்கதான் எங்காவது இருப்பா. அவ வராம நான் போறதா இல்லை. நீ பறிச்சிட்டா கிளம்பு. நாங்க கொஞ்சம் தனிமையில பேசிட்டு வர்றோம். எப்பப் பாரு ஒரு பாதுகாப்பு வளையம் மாதிரி கத்தியே நிற்கிறீங்களே. கிளம்புங்க. கிளம்புங்க. அப்பத்தான் அவ வெளியே வருவா'' - அதிகாரமாய் அவர்களை விரட்ட அதற்கு மேலும் உள்ளே இருப்பது சரியில்லை என்று முடிவுடன் வெளியே வந்தாள் தென்றல்.

"ஆஹா சிலுசிலுன்னு தென்றல் வீசுதே. வாடி செல்லம். ஏன் இத்தனை நாளா என் கண்லயே படல நீ. உன்னைத் தேடித் தேடி துரும்பா இளைச்சுப் போயிட்டேன் தெரியுமா?" - என்றவாறே வண்டியை விட்டு கீழே இறங்கி வந்தான்.

காலையிலேயே அப்பா ஏற்படுத்திய நினைவுகள் அதோடு தோழியரின் பேச்சு போதாதென்று கட்டெறும்பு கடித்ததில் ஏற்பட்ட வலி என மொத்தமாய் சேர்ந்து தென்றல் கொதித்துக் கொண்டிருந்தாள். இதில் அழகப்பனின் பேச்சு நாராசமாய் காதைத் தீண்ட அடிபட்ட நாகமாய் சீறினாள். "ஏய் அறிவில்ல உனக்கு. மூளை இல்ல. மனுஷன்தானே நீ. அஞ்சு அறிவுள்ள மாட்டுக்கு ஒரு சூடு போதும். உனக்கு எத்தனை முறை சூடுபட்டும் அறிவே வராதா? சும்மா ஏன் என்னைச் சுத்தி வர்ற? உனக்கு மானம் ரோஷம் எதுவும் கிடையாதா? உனக்குன்னு எவளாவது கிடைப்பா. அவளைக் கட்டிக்க. என்னை விட்டுடு. உங்கிட்ட ஏற்கனவே சொல்லியிருக்கேன். இந்த ஜென்மத்துல எனக்கு கல்யாணம் கிடையாது. திரும்பத் திரும்ப எங்கிட்ட வந்து செருப்படி வாங்காதே. நான் எப்பவும் அமைதியாய் இருக்க மாட்டேன். ஆனது ஆகட்டும்னு ஒரே சீவு சீவிடுவேன் ஜாக்கிரதை'' - கையிலிருந்து கத்தியைக் காட்டியவளைப் பார்த்து மிரண்டு பின்வாங்கினான். மூச்சு வாங்க கண்கள் நெருப்பைக் கக்க நின்றவளைப் பார்த்து உள்ளே எழுந்த நடுக்கத்தை மறைத்துக் கொண்டு, ''ஏன்டா செல்லம் உனக்கு இத்தினி கோபம் வருது. உடம்பு எதுவும் சரியில்லையா. சரி சரி, வீட்டுக்குப் போம்மா. நாம அப்புறம் பார்ப்போம். ஏய் சில்லு வண்டு வெட்டிப் பேச்சு பேசாம சீக்கிரமா குழந்தையை



வீட்டுக்கு அழைச்சிட்டுப் போங்க. பாவம் முகம் வாடிப் போய் கிடக்கு. நான் வர்றேன்'' - என்றவாறு தனது யமஹாவை உயிர்ப்பித்து தடதடவென புறப்பட்டுப் போனான்.

''ப்பூ'' - என்றவாறு பெருமூச்சுடன் பொத்தென உட்கார்ந்தாள் தென்றல். அழகப்பன் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்த மற்ற இருவரும் அவளருகே அமர்ந்தனர். ''என்னப்பா இப்படிப் பேசிட்டே. ஒருநிமிஷம் ரொம்பப் பயந்திட்டேன்'' - என்றவாறு அவள் தோளில் கை வைத்தாள் உமா.

''ம்ப்ச்... எத்தனை நாள்தான் இந்த நாய்க்கு பயந்து பதுங்குகிறது. போனா போகுதுன்னு விட்டது பெரிய தப்பு. நாலு அறை அறைஞ்சிருக்கணும்'' - என்றாள் தென்றல் ஆத்திரமாய்.

''ஏய், கோபத்தைக் குறைச்சுக்க. இது அவன் இடம். நம்ம நாளைப் பின்னே வரவேண்டாம்மா. இனிமே இப்படிப் பேசாதேப்பா. எனக்குப் பயமாயிருக்கு'' - கலா உண்மையாகவே பயந்துபோனாள்.

''அடி சும்மா ஏன் பயப்படுறே. இது என்ன அவன் சொந்த இடமா? ஏதோ குத்தகைக்கு எடுத்திருக்கான். அதுவும் மரம் மட்டைகளை மட்டும்தான். என்னமோ மொத்தக் காடும் அவனுக்கா சொந்தம். அவன் சும்மா உதார் விட்டுட்டு திரிவான். மத்தபடி வெறும் பயந்தாங்குளி. பாரு. தென்றல் சீறியவுடன் எப்படி பயந்து ஓடுறான். இவனுக்குப் போய் இவ்வளவு நாளா பயந்தோமோ ச்சே'' - அலுத்துக் கொண்டாள் உமா.

உண்மைதான். எப்போதும் பயந்து பதுங்குவதை விட சீறிப் பாய்வதால் நன்மையும் உண்டு. அன்று தேவேந்திரன் சொன்ன சொற்களை கேட்டுக் கொண்டு ஒடுங்கி விடாமல் சீறினாளே, அந்த சீற்றத்தைக் கண்டு தேவேந்திரனும் உடன் இருந்தவரும் அரண்டு போகவில்லை. குனிய குனியத்தான் குட்டுவார்களோ, நிமிர்ந்தால் மிரண்டுதான் போகிறார்கள். கசப்பாய் புன்னகைத்துக் கொண்டாள் தென்றல்.

# 3

*சின்னப்புறா ஒன்று - எண்ணக்*
*கனாவினில் வண்ணம்*
*கெடாமல் வாழ்கின்றது*
*நினைவில் உலவும் நிழல் மேகம்...*

அந்த உயர்தர ரெஸ்ட்டாரண்ட் நள்ளிரவைத் தாண்டியும் சுறுசுறுப்பாய் இயங்கிக் கொண்டிருந்தது. வரிசையாக உயர் ரகக் கார்களும், இரு சக்கர வாகனங்களும் நின்று கொண்டும் வந்து கொண்டும் இருக்க தரைத் தளத்தில் பார் களை கட்டியிருந்தது. இளவயது மற்றும் வயதான செல்வந்தர்கள் என அனைவரும் சரிசமமாய் 'தண்ணி'யில் மிதந்து கொண்டிருந்தனர். குடாய் அவரவர் கேட்கும் சைடிஸ்களும் தயாராகிக் கொண்டிருந்தது. பணம் ஒரு பொருட்டாய்த் தெரியாமல் போனவர்களால் கடையின் கல்லா நிறைந்து வழிந்து கொண்டிருந்தது. அதிகமாய் குடித்துவிட்டு எழ முடியாதவர்கள், இரவு முழுவதும் அங்கேயே தங்கிக் கொள்ளும் வசதியும் இருந்ததால் எதைப் பற்றியும் கவலையின்றி மதுவின் மயக்கத்தில் மூழ்கிக் கொண்டிருந்தனர்.

கதிர் வெகு நேரமாய் காரில் காத்திருந்தான். கையிலிருந்த வாட்சை திருப்பிப் பார்த்தான். பின்னிரவு இரண்டு மணி. வந்து முழுதாய் எட்டு மணி நேரம் ஆகியிருந்தது. இதற்கு மேலும் தாமதித்தால் தவறு என்ற முடிவுடன் காரை விட்டு இறங்கினான். சுத்தமான வெள்ளைச் சீருடையில் நின்ற கதிர் முப்பது வயதைத் தாண்டிய இளைஞன். களையான தெளிவான முகம். அந்த உடையிலும் மிடுக்காகவே இருந்தான். காரை பூட்டிக் கொண்டு நடந்தவன் சற்று தயங்கி நின்று விட்டு அந்த மதுபானக் கடையினுள் நுழைந்தான். நாற்றம் குடலைப் புரட்ட அவசரமாய் பாக்கெட்டினுள் கைவிட்டு கைக் குட்டையை எடுத்து மூக்கைப் பொத்திக் கொண்டே ஒவ்வொரு டேபிளாய் தேடிக் கொண்டே வந்தான். அனைத்து டேபிளிலும் விலை உயர்ந்த கண்ணாடிச் குவளையில் வகை வகையாய் பொன் நிறத் திரவம். தட்டுகளில் பொரித்த கறி வகைகள், முந்திரிகள், எல்லாம் ஆங்காங்கே சிதறிக் கிடக்க, ஒவ்வொரு அடியாய் பார்த்து கால் வைத்தான். அறுபது வயது மதிக்கத்தக்க ஒருவர் டேபிளில் வாந்தி எடுத்து அதன் மீதே தலைவைத்து படுத்திருக்க கதிருக்கு குமட்டியது. எப்படித்தான் இந்த நாற்றத்தைக் குடிக்கிறார்களோ. சம்பாதிக்கும் பணத்தை எல்லாம் குடித்தே அழிப்பவர் ஒருபுறம். குடித்துக் குடித்தே குடல் வெந்து சாவதற்கு ஏன் இதைக் குடிக்க வேண்டும். அதற்குப் பதிலாக இவர்கள் விஷத்தை வாங்கிக் குடிக்கலாமே. ஒரே நாள் கூத்தோடு எல்லாம் முடிந்து

விடும். தன் தெருவில் ஒருவர் இருக்கிறார். பகலெல்லாம் வண்டி இழுத்து உழைப்பார். அவர் உழைப்பைப் பார்க்கும் எல்லோரும் அவரைப் பார்த்து பரிதாபம் கொள்ளும் அளவிற்கு வண்டி நிறைய மூட்டைகளை வைத்து இழுப்பார். ஆனால் இரவானால் மூச்சு முட்ட குடித்து விட்டு கட்டியிருக்கும் துணி அவிழ்ந்து கிடப்பதைக் கூட அறியாமல் சாக்கடையோரம் பன்றிகளோடு பன்றியாய் படுத்துக் கிடப்பார்.

காலையில் பரிதாபமாக பார்த்தவர்கள் அருவருப்பாக காறித் துப்புவார்கள். அப்படி ஒரு போதைப் பழக்கம் தேவைதானா? மனைவி குழந்தைகளைப் பட்டினியால் வயிறு எரிய வைத்துவிட்டு குடித்து குடல் புண்ணாகி வயிறு எரியுதே எரியுதே என சிலசமயம் கத்துவார். அப்போதெல்லாம் அவரைத் தூக்கிப் போட்டு நாலு மிதி மிதிக்க வேண்டும் போல் தோன்றும். அம்பது நூறுக்கு குடிப்பவரைச் சொல்கிறோமே. இதோ ஐநூறும் ஆயிரமுமாய் நோட்டு பறக்கிறதே. பணத்தின் அருமை தெரியவில்லையா? இல்லை வறுமையைப் பற்றி அறிந்திருக்கவில்லையா? என்ன உலகம் இது. கஞ்சிக்கும் வழியின்றி எத்தனையோ பேர் தவிக்க இங்கு காசு தண்ணீராய் கரைகிறதே. மனம் வெறுத்து திரும்பியவனின் கண்களில் அவன் பட்டான். சுவரோரமாய் போடப் பட்டிருந்த இருக்கையில் அமர்ந்து இன்னும் குடித்துக் கொண்டிருந்தான். அவன் முன் இருந்த டேபிளின் மீது ஏழெட்டுப் பெரிய பாட்டில்கள் காலியாய் இருக்க கைகளிலிருந்த கண்ணாடிக் கோப்பையில் கொஞ்சமாய் மீதிமிருந்தது. அதையும் ஒரே மூச்சாய் குடித்து விட்டு



அவன் பேரரை அழைக்க வேகமாய் போய் அவன் முன்னே நின்றான் கதிர்.

''இரண்டு ரம் வித் ஐஸ்'' - என்றவாறே நான்கு விரல்களைக் காட்டியவனிடம் பவ்யமாய் குனிந்து, ''ஸார் மணி இரண்டு. நாம் இங்கு வந்து எட்டுமணி நேரமாகிறது. இன்று போதும் ஸார். போகலாமா'' என்றான் கதிர்.

''ஹேய், ஹூ ஆர் யூ மேன். என்னைப் போகச் சொல்றதுக்கு உனக்கு என்ன ரைட்ஸ் இருக்கு. டாமிட். ஆப்டர் ஆல் நீ ஒரு சர்வர். ஊத்திக் குடுக்கிறது மட்டும்தான் உன் வேலை. என்ன பெரிசா டைம் எல்லாம் சொல்றே. போ மேன். கேட்டதைக் கொண்டு வா. கமான் க்விக்'' - என்றான் சற்று குழறலாய்.

''நோ ஸார், ஐ'ம் நாட் ஸர்வர். நான் உங்கள் டிரைவர் கதிர் ஸார்'' - என்றான் அமைதியாகவே.

''என்ன கதிர் ஸார். உனக்கென்னடா நீயே மரியாதை கொடுத்துக்கிறே. நீ யாரா வேணா இருந்துட்டுப் போ. நௌ ஐ வாண்ட் டூ ரம்ஸ். கொண்டு வர முடியுமா? முடியாதா? நான் ஓனர் கிட்டே கம்ப்ளைண்ட் கொடுத்தாத்தான் நீ சரிப்படுவ, நகரு நீ'' - என்றவாறே எழுந்தவன் தள்ளாடி கதிர் மீது சாய, அவனை அப்படியே தாங்கிக் கொண்டு சர்வரை அழைத்து பில் கொண்டுவரச் சொல்லிவிட்டு காருக்கு அழைத்துச் சென்றான். அரைகுறை நினைவோடு இருந்தவன் முனகினான். ''டேய் என்னை எங்கே தூக்கிட்டுப் போற?''

''காருக்குப் போறோம் ஸார்.''

''காருக்கா, நீ கார் கூட வெச்சிருக்கியா? வெரிகுட், வெரிகுட்'' - சிரித்தவனை வேதனையாய் பார்த்தான்.

''ஸார் கார் உங்களோடதுதான் ஸார். நான் டிரைவர்தான்'' - என்றவாறே காரைத் திறந்து பின் சீட்டில் படுக்க வைத்தான். வழக்கமான பேரர் பில்லோடு காருக்கே வந்துவிட பர்சை திறந்து கொண்டே பில்லைப் பார்த்தவன் அதிர்ந்தான்.

''என்னப்பா இது நாலாயிரத்து ஐநூறு ரூபாய் போட்டிருக்கு. அவ்ளோ குடிச்சாரா?'' - என்றான் பதட்டமாய்.

''ஆமாம் ஸார். இன்னிக்கு கொஞ்சம் ஓவர்தான்..'' என்றவனைப் பார்த்து, ''ஏம்பா, என்னதான் உங்களுக்கு வியாபாரம் முக்கியமென்றாலும் இப்படியா கொடுப்பது. அவரைப் பற்றி தெரிந்தும் ஏன் இப்படி அதிகமாகக் கொடுக்கிறீர்கள். எத்தனை வருடமாய் வருகிறார். அவர் உடல்நிலையைப் பற்றி கொஞ்சம் யோசிக்க மாட்டீர்களா, உங்களுக்கெல்லாம் மனிதாபிமானமே கிடையாதா?'' - சற்று கோபமாகக் கேட்டான் கதிர்.

''நாங்க என்ன ஸார் செய்யட்டும். அவர் கேட்டால் கொடுத்துத்தானே ஆக வேண்டும். அதுதானே எங்கள் வேலை. எங்களிடம் கோபம் கொள்வதை விட அவரை இங்கு வரவிடாமல் வீட்டில் வைத்துக் கொள்ளப் பாருங்கள் ஸார். இவர் குடித்த பணத்தை வைத்தே என் முதலாளி புதிதாய் இன்னொரு பிராஞ்ச் தொடங்கிவிட்டார். இத்தனை குடியை எப்படித்தான் இவர் உடல் தாங்குகிறதோ. நினைத்தால் பாவமாகத்தான் இருக்கிறது. என்ன ஸார் பிரச்சனை இவருக்கு லவ் பெய்லியரா?'' எனக் கேட்டான் ஸர்வர்.



பதில் பேசாமல் பணத்தை எண்ணி நீட்டினான். அவன் வாங்கிக் கொண்டு நகர்ந்ததும் பர்ஸை மூடி படுத்திருந்தவனின் பேண்ட் பாக்கெட்டில் திணித்தான். ''ஏய் எவன்டா அவன் என் பர்ஸில் கை வைப்பது?'' - தள்ளாட்டமாய் எழுந்தவனை ஸீட்டில் அமர வைத்துக் கொண்டே, ''நான்தான் ஸார் பில் செட்டில் பண்ணிவிட்டு பர்ஸை வைத்தேன்'' - என்றான்.

''யாரைக் கேட்டு என் பர்ஸை எடுத்தாய், ராஸ்கல்''

''நான் எடுக்கவில்லை ஸார். தினமும் உள்ளே போவதற்கு முன் என்னிடம் பர்ஸை தந்துவிட்டுத்தானே போவீர்கள். நான்தான் பில்லுக்குரிய பணத்தைக் கொடுப்பேன்'' - என்றவாறே கதவைச் சாத்திவிட்டு முன் கதவைத் திறந்து அமர்ந்து காரை உசுப்பினான்.

''நீ பில் பே பண்ணுவியா. ஆமா நீ யாரு?'' - என்றான்.

''நான் உங்கள் டிரைவர் ஸார். கடந்த மூணு வருஷமா உங்க காரை நான்தான் ஓட்டிட்டு வர்றேன்'' - சாலையில் கவனத்தை வைத்துக் கொண்டே பதில் கூறினான்.

''ம், கார் டிரைவரா. என்னவோ ப்ளைட் ஓட்டுறவன் மாதிரி ஒயிட் அண்ட் ஒயிட்ல வந்திருக்கிற, என்ன பெரிய பைலட்னு நினைப்பா உனக்கு. ஐ ஹேட் திஸ் ஒயிட் கலர். இனிமே இந்த ட்ரஸ் போட்டுட்டு வராதே. ஒழுங்கா வேற கலர் ட்ரஸ் போட்டுட்டு வா'' - என்றான் ஸ்டெடியாய்.

''ஓகே ஸார்'' - என்ற வார்த்தையோடு நிறுத்திக் கொண்டாலும் இரண்டு நாட்களுக்கு முன், ''என்ன உனக்கு காலேஜ் ஸ்டூடண்ட்டுன்னு நினைப்பா. டிரைவர் மாதிரியா வர்ற நீ. ஒழுங்கா யூனிபார்ம்ல வரணும் புரியுதா'' என்று

சொன்னது நினைவில் மோதியது. அமைதியாய் காரை செலுத்தினான். வேலையில் சேர்க்கும் போதே தேவேந்திரன் சொல்லியிருந்தார்.

''குடித்து விட்டால் என்ன வேண்டுமானாலும் பேசுவான். நீதான் பொறுத்துக் கொள்ள வேண்டும். மற்றபடி தங்கமானவன் என் மகன். நீயும் அவன் வயதை ஒத்திருப் பதால்தான் உன்னை வேலையில் அமர்த்துகிறேன். கடமைக்காக என்றில்லாமல் அவனைக் கொஞ்சம் அக்கறையாய்ப் பார்த்துக் கொள்ளப்பா. என் ஒரே வாரிசு அவன்தான். ஏதோ போதாத நேரம் இப்படி குடிப்பழக் கத்திற்கு அடிமையாகி விட்டான். எப்படியும் மீட்டுட லாம்னு எங்கே எல்லாமோ கொண்டு போய் ட்ரீட்மெண்ட் எடுத்தோம். ம்ப்ச்.எதுவும் அவனை மாத்தலை. வீட்டுல அடைச்சு வெச்சாலும் சாயங்காலமானா எப்படியும் கத்தி கதறிக் கூச்சலிட்டு வெளியே வந்து விடுவான். அவனே காரைத் தாறுமாறாய் ஓட்டி ஒருமுறை பெரிய விபத்தாகி விட்டது. அவன் உயிர் பிழைத்தது பெரிய விஷயம். அதனால்தான் உன்னைத் தேர்ந்தெடுத்தேன். மாதா மாதம் சம்பளத்தை உன் ஊருக்கு அனுப்பி விடு. நீ நம் வீட்டிலேயே தங்கிக் கொள்ளலாம். சாப்பிட்டுக் கொள்ளலாம். அவன் எங்கு போக வேண்டும் என்று சொன்னாலும் அழைத்துப் போ. இந்தா சாவி. இது உன்னிடமே இருக்கட்டும். தப்பித் தவறி கூட அவனிடம் கொடுத்து விட வேண்டாம் என்று சொல்லியிருந்தார்தான். ஆனால் தவறியும் கூட தன் மகன் அதுவும் இளவயதுடைய படித்த அறிவும் அழகும் நிறைந்த மகன் எப்படி இந்தப் பழக்கத்திற்கு தன்னை அடிமையாக்கிக் கொண்டான் என ஒரு வார்த்தை விடவில்லை. கதிர் கேட்கவும் இல்லை.



இதெல்லாம் பெரிய இடத்து விவகாரம் என்று அதைப் பற்றி அலசி ஆராயவும் இல்லை.

வருணனும் மிகவும் நல்லவன்தான். கோடிக் கணக்கான சொத்துக்களுக்கும் தான் ஒரே வாரிசு என்ற மமதை ஒரு நாளும் அவனிடம் இருந்ததில்லை. அலட்சியமாகப் பேசுவதும் இல்லை. கூடுமானவரை அமைதியாய்தான் இருப்பான். பகலில் எங்கும் வெளியே செல்ல விரும்ப மாட்டான் என்பதால் கதிர் கூடுமானவரை ஓய்வாகத்தான் இருப்பான். எனினும் தயார் நிலையில் தான் இருப்பான். சில சமயங்களில் கோவில் மேடு போக வேண்டும் வா என்பான். சரியென கிளம்பிப் போனால் ஒரு ஓட்டு வீட்டின் முன் காரை நிறுத்தி விட்டு இறங்காமல் உள்ளே அமர்ந்தபடியே அந்த வீட்டையே வெறித்துக் கொண்டிருப்பான். சில சமயம் மணிக் கணக்கில் பசி மறந்து அமர்ந்து விடுவான். பிறகு நேராக பாருக்கு போகச் சொல்லி விடுவான். மற்றபடி இந்த மூன்று வருடங்களில் வேறு எங்கும் அவன் செல்வதைப் பார்த்ததே இல்லை. அநாவசியமாக ஒரு வார்த்தை கூட பேச மாட்டான். தண்ணீர் அதிகமாகி விட்டால் பேசிக் கொண்டே இருப்பான். நிறைய தத்துவங்கள் கூட வாயிலிருந்து அருவியாய் கொட்டும். கதிர் எதற்கும் வாக்குவாதம் செய்ய மாட்டான். என்ன சொன்னாலும் அமைதியாய் கேட்டுக் கொள்வான். ஆனால் நாள்கள் போகப் போக வருணன் எல்லாவற்றையும் மறந்து கொண்டு வருவது புரிந்தது. முன்பெல்லாம் பாருக்குள் சென்றால் சற்று நேரத்தில் திரும்பி விடுவான். பேசிக் கொண்டே வருவான். ஆனால் இப்போது நேரம் போவது தெரியாமல் இருப்பதோடு தன்னையே யார் என்று கேட்கிறாரே. ஒரு வாரமாய்

நிலைமை மோசமாகிறது. இன்று எப்படியும் முதலாளியிடம் சொல்லிவிட வேண்டும். சம்பளம் கொடுக்கும் முதலாளியின் மகன் என்பதையும் தாண்டி வருணனை மிகவும் பிடித்துப் போனது. அவனது உடல் நிலை கண்டு வருந்திக் கொண்டுதான் இருந்தான்.

என்ன பெற்றோர்கள் இவர்கள், வாழ வேண்டிய மகன் முழு குடிகாரனாகி விட்டதைப் பற்றி அதற்கான தீர்வைப் பற்றி சிந்திக்காமல் தேவேந்திரன் வாரத்தில் நான்கு நாட்கள் வெளிநாடு பறந்து போய் பணமாய் சேர்க்கிறார். இந்த அம்மாவோ பூஜையறையே கதியென்று கிடக்கிறார். பணம் இருந்தும் பெற்றோர் இருந்தும் இவர் அநாதைதானோ, இரக்கம் கசிந்தது.

''வண்டியை நிறுத்து... நிறுத்து.. நிறுத்து'' - பின் சீட்டிலிருந்து குரல் வர சடாரென பிரேக்கை அழுத்தினான். வெளியே பார்த்த கதிருக்கு வண்டியை நிறுத்தச் சொன்னதன் காரணம் புரிந்தது. பின்னால் திரும்பிப் பார்த்தான். வருணன் கண்களில் சந்தோஷ மின்னல் அடித்தது. வெகு நாளாய் பார்க்க விரும்பிய பொருளைப் பார்ப்பது போல் அத்தனை ஆசையாய் பார்த்துக் கொண்டிருந்தான். முகத்தில் அத்தனை மலர்ச்சி. இது தினமும் பார்க்கும் காட்சிதான். அப்படி அந்தப் பெயரில் என்னதான் இருக்கிறது. பார்வையை வெளியே வீசினான் கதிர். அந்த உயர்ந்த கட்டிடத்தின் தலையில் அதன் பெயர்ப் பலகையில் மின்சார பல்பின் உதவியால் அந்தப் பெயர் மின்னியது. 'தென்றல் ஆடை உலகம்' என அந்தப் பெயர் நீலமாகவும், ரோஜா நிறமாகவும் ஆரஞ்சு நிறமாகவும் மாறி மாறி ஒளிர்ந்து கொண்டிருந்தது. எத்தனை அதிகம்



குடித்திருந்தாலும் இந்த பெயர்ப் பலகையைக்கண்டதும் நிற்கச் சொல்லி விடுவான். ஆவலை அடக்க முடியாமல், ''ஏன் ஸார் இந்தப் பேர் உங்களுக்கு ரொம்பப் பிடிக்குமோ'' - எனக் கேட்டான் கதிர்.

''தென்றலை யாருக்காவது பிடிக்காமல் போகுமா. இது ரொம்ப அற்புதமான பேர் இல்ல. இந்தப் பெயரை வைக்க வேண்டும் என்றால் அந்தப் பெற்றோர் மிகுந்த ரசனை உடையவராக இருந்திருக்க வேண்டும். தென்றல் பேரைச் சொல்லும்போதே எவ்வளவு சுகமாக இருக்கிறது பார்த்தாயா? இந்தப் பெயர் என் உயிர் உள்ளவரை எனக்கு மறக்காது. கதிர் ஒருவேளை நான் மரித்துப் போனால்...'' முடிப்பதற்குள்.

''ஐயோ ஸார் என்ன பேச்சு இது?'' - பதறினான்.

''எப்படியும் நடக்கப் போவதுதானே? அதற்கு ஏன் பதறுகிறாய். என்னை இந்த வழியாய் கொண்டு செல்லும் போது ஒரு நிமிடம் இந்த இடத்தில் நின்று விட்டு கொண்டு போ கதிர். அப்பத்தான் என் ஆத்மா சாந்தியடையும்'' என்றவாறு சீட்டில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டான்.

''அப்படி எல்லாம் பேசாதீர்கள் ஸார். இப்படிப் பேசுவது தெரிந்தால் அம்மா எப்படி வருத்தப்படுவார்கள். நீங்கள் நிறைய காலம் வாழ வேண்டும் ஸார்.''

''யாருக்காக.. யாருக்காக.. வாழ வேண்டும் கதிர். எனக்கென்று யாருமே இல்லை. என்னை பெற்றவருக்கு பணம் மட்டுமே பிரதானம். உனக்குத் தெரியுமா என் உயிர் எப்போதோ பறந்து போய்விட்டது. இந்த உடல்தான்

நடமாடுகிறது. அதுவும் அழிந்து விட்டால், எரித்தோ புதைத்தோ விடுவார்கள். அதற்காகத்தான் என்னை நானே அழித்துக் கொள்கிறேன். என்ன பார்க்கிற. உயிரை போக்கிக் கொள்ள எனக்கு ஒரே ஒரு புல்லட் போதும். எங்கிட்டே துப்பாக்கியும் இருக்கு. ஆனா தற்கொலை பண்ணிக்கிறது கோழைத்தனமாம். அப்பா சொன்னார். அதனால்தான் இந்த ஸ்லோ பாய்ஸன் கொஞ்சம் கொஞ்சமா என்னை அழிக்க நானே முன்வந்தேன்" - முதன் முறையாய் வருண் மனம் திறந்துபேச கதிர் ஆச்சர்யமானான். கிடைத்த வாய்ப்பை நழுவ விடாமல், "ஸார் யார் மீதுள்ள கோபத்தால் உங்களை இப்படி வருத்திக் கொள்கிறீர்கள். குடிப்பதால் உயிர் உடனே போய்விடாது ஸார். உங்கள் உடம்பை அரித்து எத்தனை நோய்களை உருவாக்கி உங்களை உருக்குலைத்து விடுமே. நீங்கள் தான் ஸார் வலியால் துடிப்பீர்கள். தயவு செய்து இந்தக் கருமத்தை தொடாதீர்கள்" - என்றான் கெஞ்சலாய்.

வாய்விட்டு சிரித்தான் வருண். "போடா.. ஃபூல். தாங்க முடியாத வலியையே தாங்கிக் கொண்டேன். இதயத்தை அப்படியே துண்டு துண்டா வெட்டி எறிஞ்சா எப்படி இருக்கும். அப்படி ஒரு வலியையே நான் வருஷக் கணக்கா அனுபவிச்சிட்டு இருக்கேன். நீ என்னன்னா நோய் வரும். உடம்பு உருக்குலைந்து விடும் என்கிறாய். என் வாழ்க்கையே உருக்குலைந்து சிதறிப் போய்விட்டது. இனி என்ன நடந்தால் என்ன?" என்றவன் அதற்கு மேல் எதுவும் பேசவில்லை. இதுநாள் வரை எதுவும் தெரியாமல் இருந் தாலும் இன்று லேசாய் பிரச்சனை புரிய ஆரம்பித்ததும் கதிர் மனம் கலங்கிப் போனான்.



பெரிய கோடீஸ்வர வீட்டுப் பிள்ளை. ஒரே வாரிசு. இவருக்கு அப்படி என்ன வேதனை இருக்கும். நிச்சயமாய் தன் எஜமானனின் மனதில் ஒரு பெண் இருக்கிறாள் என்பது மட்டும் தெளிவாய் புரிந்து போயிற்று. தன்னால் ஏதேனும் செய்ய முடியுமா, அந்தப் பெண் யார்? இப்போது எங்கே இருக்கிறாள். எப்படி இருப்பாள்? யாரிடம் கேட்பது, கேட்டாலும் தான் யார் சொல்வார்கள். தேவேந்திரன் ஒரு டிரைவரான தன்னிடம் நிச்சயமாய் சொல்லப் போவதில்லை. அவரது அதிகார தோரணையே அதைச் சொல்லாமல் சொல்லிற்று. அம்மாவிடம் கேட்டால் தெரியுமா? நம்மிடம் சொல்வார்களா? தன்னால் எஜமானனின் மனக் காயத்தை ஆற்ற முடியுமா? பல்வேறு சிந்தனையுடன் வீட்டை அடைய போர்டிகோவிலே நின்று கொண்டிருந்தார் தேவேந்திரன். வாயில் சிகரெட் புகைந்து கொண்டிருக்க கண்களில் கோபக் கனல் பறந்தது. இத்தனை நேரம் தோன்றிய எண்ணங்கள் மாயமாய் மறைந்து போய்விட உள்ளுக்குள் நடுக்கமாய் காரை நிறுத்திப் பூட்டி விட்டு, இறங்கினான் கதிர். வருணனிடம் சற்றும் அசைவில்லை.

## 4

*நெஞ்சில் நீயே நிறைந்திட*
*வேண்டும் நீண்ட கனவுகள்*
*நான் காண வேண்டும் - உனை*
*நினைத்தே நான் உயிர்விட வேண்டும்!*

''என்ன கதிர்வேல், இதுதான் வீட்டுக்கு வர்ற நேரமா? இப்படி நேரம் காலம் தெரியாம ஊர் சுத்தவா உன்னை வேலைக்கு வெச்சேன். மணி என்ன தெரியுமா?'' - சீறினார் தேவேந்திரன்.

''ஏன் அவர் வாட்ச் ஓடலையாமா. உங்கிட்ட டைம் கேட்கிறார். சொல்லிட்டு போய் சாப்பிட்டு படு கதிர், குட்நைட்'' என்றவாறே இறங்கினான் வருண். நிற்க முடியாமல் தடுமாற மகனைத் தாங்கிக் கொள்ள வந்தார் தேவேந்திரன். அந்த நிலையிலும் உஷாராய் விலகினான் வருண். 'டோண்ட் டச், டோண்ட் டச்' ஒற்றை விரலைக் காட்டி எச்சரித்து விட்டு வீட்டினுள் சென்றான். ''நீ போ'' - என கதிரை அனுப்பி விட்டு மகனுடன் சென்றார். ''வருண், நான் உங்கிட்டே பேசணும்'' என்றார் கட்டளையாய்.

''ஸாரி! நான் யாருடனும் பேசுவதாய் இல்லை'' என்றவாறே மாடிப் படிகளில் ஏறினான். ''டேய்! நான் உன் அப்பாடா!''

''ஸோ வாட்?'' திரும்பாமலே பதிலளித்து விட்டு போனான். கொஞ்சம் இறங்கி வந்தார். ''நான் அப்படி என்னப்பா தப்பு செய்தேன். முகம் கொடுத்து பேசமாட்டேன் கிறியே, உன் அம்மா பாவம்பா. இவ்ளோ நேரம் முழிச்சே இருந்தா. இப்பத்தான் மாத்திரை கொடுத்து தூங்க வெச்சேன். ஒருநாளாவது சீக்கிரமா வரமாட்டியா. உன் அம்மா எவ்வளவு வருத்தப்படுறா தெரியுமா? நீ இப்படி குடிச்சே அழிஞ்சு போறியே. உன்னை இந்த நிலையில் பார்க்கிறதுக்கா நான் இவ்ளோ சொத்து சேர்த்து வைச்சிருக் கேன். எனக்குப் பிறகு இதையெல்லாம் நீதானேப்பா ஆள வேண்டும். நீயே இப்படி பொறுப்பில்லாம அலைஞ்சா



எப்படி? பாடுபட்டு சேர்த்த பணத்தைப் பாதுகாக்க வேண்டாமா?''

''பணம்... பணம்.. சொத்து. இதைவிட்டா உங்களுக்கு வேற எதுவுமே தெரியாதா. ச்சே வீடா இது. பணப் பேய்கள் நடமாடும் சுடுகாடு. இங்கு இருக்கவே எனக்குத் துளியும் விருப்பம் கிடையாது. அம்மாவிற்காகத்தான் வருகிறேன். இனி என்னுடன் பேச வேண்டாம். பேசினால் வீட்டிற்கே வரமாட்டேன்'' சொல்லிவிட்டு தன் அறைக்குள் நுழைந்து படீரென கதவை அறைந்து சாத்தினான்.

முகத்திலறை வாங்கியதுபோல் அப்படியே நின்றார். இவன் என்னை மன்னிக்கவே மாட்டானா? அப்பா என்று ஒருமுறை அழைக்க மாட்டானா? அப்படி என்ன பெரிய தவறு செய்துவிட்டேன் என்று இப்படி தண்டிக்கிறான். உடல் எடை நாளுக்கு நாள் குறைந்து இளைத்துப் போகிறானே. எதைச் சொன்னாலும் நின்று கேட்க மாட்டேன் என்கிறானே. வருத்தமாய் மகனின் பூட்டிய அறையையே பார்த்துக் கொண்டிருந்தார்.

''ஐயா'' என பவ்யமாய் வந்து நின்றார் இராமநாதன். பெருமூச்சோடு திரும்பிய தேவேந்திரன், ''வா ராமு. பாத்தியா இவனை? நான் கூப்பிட்டதுக்கு என்ன சொல்லிட்டு போறான்னு பார்த்தியா? இவன் மாறவே மாட்டானா?'' - என்றவாறே சோபாவில் சாய்ந்து அமர்ந்தார்.

ராமநாதன் தேவேந்திரனின் வலது கை. சிறு வயது முதலே இந்த வீட்டில் வசிக்கும் வேலையாள். அதோடு தேவேந்திரனுக்கே சில சமயம் அறிவுரை சொல்லும் அளவிற்கு அறிவாளி. புத்திசாலி. ராமநாதன் இல்லாமல்

தேவேந்திரனுக்கு வேலையும் ஓடாது. தன்னுடனேயே வைத்துக் கொள்வார். ராமநாதன் தேவேந்திரனின் காலடியிலேயே தரையில் அமர்ந்து கொண்டார். "தம்பி பேசுறதையும் நாம முழுக்க தப்புன்னு சொல்லிட முடியாது. ஏன்னா அவர் அந்த அளவுக்கு காயப்பட்டிருக்கிறார். அந்தக் காயத்திற்குக் காரணமானவங்க மேல அந்தக் கோபம் திரும்புறது நியாயம் தானுங்களே."

"நீ என்ன அவனுக்கு வக்காலத்தா? அவன் செய்தது மட்டும் சரியா? நம்ம அந்தஸ்து என்ன? கௌரவம் என்ன போயும் போயும் லேகியம் விக்கிறவன் பொண்ணைப் போய்... ச்சே.. இவன் புத்தி ஏன் அப்படிப் போச்சு. நான் எவ்ளோ பெரிய இடத்தில் சம்பந்தம் பேசி வெச்சிருந்தேன். இவன் எப்படி ஏமாத்தலாம். பணம் பணத்தோடதான் சேரணும் ராமு. அது ஏன் அவனுக்குப் புரியலை. ஏதோ சின்னப் பையன் கொஞ்சம் அப்படி இப்படி அலைவான்னு நினைத்தேன். இவன் என்னன்னா கட்டினா அவளைத்தான் கட்டுவேன்னான். நான் எப்படி அதை அனுமதிப்பேன். அதான் அந்தப் பொண்ணைப் பார்த்துப் பேசினேன். ஏதோ கூடக் குறைவா பேசியிருப்பேன்தான். பெற்றவனில்லையா நான்? கோபம் இருக்கத்தான் செய்யும். கோபத்தில் நாலு வார்த்தை பேசவேன்தான்.

"இவனுக்கு இருக்கும் நேசம் அந்தப் பெண்ணுக்கு இல்லை ராமு. அதான் பெரிய வீராப்பு வசனமெல்லாம் பேசிட்டு போயிட்டா. அவ எப்பவோ கல்யாணம் பண்ணிட்டு குழந்தை குட்டின்னு இருப்பா. இவன்தான் இப்படி முட்டாள் மாதிரி இவனையும் நோக வைத்துக் கொண்டு எங்களையும் கண்ணீர் விட வைக்கிறான். ஏதோ



ஒரு நாள் இரண்டு நாள் குடித்தான். போகிறதென்று விட்டால் இப்படி முழுக் குடிகாரனாகி விட்டானே. இவன் நிலையைக் கண்டு லக்ஷ்மி நோயாளியாகவே ஆகி விட்டாள். எத்தனை சொத்து பணம் இருந்து என்ன பிரயோஜனம் ராமு. ஒரு நிமிஷம் நிம்மதியா தூங்க முடியுதா? ஒரு பிடி சோறு சாப்பிட முடியுதா? இந்த வீட்ல சிரிப்பு சத்தம் கேட்டு எத்தனை வருஷம் ஆச்சு. வாழ்க்கையே பாலைவனமா மாறிப் போச்சு ராமு. என்ன பண்ணப் போறேனோ தெரியலை" உஷ்ணமாய் பெருமூச்சு விட்டார்.

"வெசனப்படாதீங்க ஐயா. எல்லாம் சரியாகிடும். இந்த வீட்டுக்கு ஒரு மவராசி வந்தா எல்லாம் சரியாகிடும். ஒரு பெண்ணால ஏற்பட்ட காயம் இன்னொரு பெண்ணால மாறிடும்யா. வீட்டுக்கு மருமக வந்துட்டா நம்ம அம்மா பழையமாதிரி எழுந்து நடமாட ஆரம்பிச்சிடுவாங்கய்யா. வீட்ல பெருஞ்சாதி இருக்கும்போது தம்பியும் இப்படி நேரம் காலம் தெரியாம வெளியே சுத்தாதுய்யா. முதல்ல தம்பிக்கு ஒரு பொண்ணைப் பார்த்து கல்யாணம் பண்ணி வையுங்க. அப்புறம் பாருங்க" என்றார் உற்சாகமாய்.

"புரிந்துதான் பேசுகிறாயா ராமு. நம் வீட்டிற்கு பெண் வீட்டார் தேடி வந்து எத்தனை முறை அவமானப்பட்டுப் போயிருக்கிறார்கள் என்று உனக்குத் தெரியாது? நீயும்தானே இருந்தாய். அதுவும் அந்தப் பரமேஸ்வரன் அவமானம் தாளாமல் போனவன்தான். இன்று வரை என் முகத்தில் கூட விழிப்பதில்லை. எத்தனை வருட நட்பு தெரியுமா? எங்களுது. இப்போது ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்க முடியாமல் எவ்வளவு அசிங்கமாய்ப் போய்விட்டது.

அவன் வயதிற்காவது மரியாதை கொடுத்தானா? அப்போதே அப்படிப் பேசியவன் மீண்டும் அந்தப் பேச்சை எடுத்தால், சும்மா இருப்பானா? மீண்டும் மீண்டும் அவமானப்பட என்னால் முடியாதப்பா. இப்போதே என் முகத்தைக் கூட பார்த்துப் பேசமாட்டான். இந்த அழகில் திருமண ஏற்பாடு செய்வது தெரிந்து பேச்சையும் நிறுத்தி விட்டால்.."

"அங்கேதான்யா நீங்க தப்பு பண்றீங்க. நாம கல்யாண ஏற்பாடுகளை எப்போ செய்தோம். தம்பிய விட்டு அந்தப் பொண்ணு போய் கொஞ்ச நாள்லதானே. அப்போ எப்படியும் அந்தப் பெண்ணோட நினைப்பு இருந்திருக்கும். அதனால அப்படி பேசிபுட்டாக. இப்போதான் வருஷம் ஆயிடுச்சில்ல. எல்லாம் மறந்து போயிருக்கும். குடிப்பழக்கத்திலேயே ஊறி உடம்பு முழுக்க கெட்டுப் போறதுக்குள்ள நாம புள்ளையப் பாதுகாக்க வேண்டாமா. நம்ம கதிர் கூட காலையில் சொன்னான். தம்பிக்கு கதிரையே மறந்து போயிடுதாம். அப்பப்ப நீ யாருன்னு கேட்குதாம். பக்கத்திலேயே இருக்கிற டிரைவரையே மறக்குதுன்னா எத்தனையோ வருடத்துக்கு முன்னால பார்த்த பெண்ணோட நினைப்பு எப்படி இருக்கும். அதனால நீங்க தெரியாம பொண்ணு பாருங்கய்யா" விளக்கைத் தூண்டினார்.

தேவேந்திரன் புருவம் நெரித்து யோசிக்க ஆரம்பித்தார். "அப்படியா சொல்ற ராமு. நிச்சயமா மறந்து போயிருப்பானா? எனக்கு நம்பிக்கை இல்லை. அப்படி மறந்திருந்தா என்மேல் உள்ள கோபமும் குறைந்திருக்க வேண்டுமே. அது கொஞ்சமும் குறையவில்லையே" வருத்தமாய்க் கேட்டார்.



இதுவரை சாமர்த்தியமாய் பேசிய ராமநாதனால் இதற்கு மட்டும் சட்டென பதில் கூற முடியவில்லை. எப்படிக் கூற முடியும். சில வருடங்களுக்கு முன், சரியாகச் சொல்வ தென்றால் ஏழு வருடங்களுக்கு முன் இந்த வீட்டில் இதே இடத்தில் வைத்துத்தான் வருண் ருத்ர தாண்டவம் ஆடிக் கொண்டிருந்தான். "என்னைக் கேளாமல் எப்படி நீங்கள் அங்கு போவது? என்னை வெளியே அனுப்புவதுபோல் அனுப்பி விட்டு சினிமா வில்லன் போல் வேலை செய்திருக்கிறீர்கள்? என்னிடம் வேறு கதை கூறி என்னை முடக்கி விட்டீர்கள். என்ன பார்க்கிறீங்க. உண்மையை எத்தனை நாள் மூடி மறைக்க முடியும். முட்டி மோதி அது வெளியே வந்துதானே தீரும். அது இன்று அந்த வீட்டு சொந்தக்காரர் மூலம் வந்துவிட்டது. யூ ஆர் எ சீட்டிங் பெல்லோ. என்னவெல்லாம் பேசினீர்கள் என் தென்றலிடம். அவள் மனம் என்ன பாடுபட்டதோ? அவளைப் பெற்றவர் வயிறும் மனமும் எப்படி கொதித்துப் போயிருக்கும். நான் விரும்பியதற்கு அவள் என்ன பாவம் செய்தாள்? ஒரு பெண் என்றும் பாராமல் மிரட்டியிருக் கிறீர்கள். இந்தப் பாவம் உங்களை எப்படி சும்மா விடும்? நீங்கள் எந்த எண்ணத்தில் அவளை விரட்டினீர்களோ அந்த எண்ணம் இந்த ஜென்மத்தில் நடக்காது. என் வாழ்வில் திருமணம் என்ற பேச்சுக்கே இடமில்லை. என் மனதில் தென்றலைத் தவிர இன்னொருத்திக்கு இடமில்லை. நம்மை விட அவள் எதில் குறைந்து போனாள் என்று அவளை விரட்டினீர்கள்? இந்தப் பணமா? இந்தப் பணம் தந்த தைரியத்தில்தானே அப்படிச் செய்தீர்கள். உங்கள் பணம் முழுவதையும் நான் அழித்து விடுகிறேன். இந்தப் பணம் தானே என் வாழ்க்கையைப் பறிக்கக் காரணமாய்

இருந்தது. என் உயிரையும் இதுவே குடிக்கட்டும். என்னை நானே கொஞ்சம் கொஞ்சமாக அழித்துக் கொண்டு உங்கள் கண் முன்னே உயிரை விடுவேன். நீங்கள் செய்த தவறுக்கு நான் தரும் தண்டனை அதுதான். நீங்கள் பேசிய பேச்சில் அவள் இறந்து போனாளோ அன்றி யாரையும் மணந்து கொண்டாளோ, எங்கே இருக்கிறாளோ, எப்படி இன்னல் படுகிறாளோ, அவள் படும் துயரத்தை உங்கள்ஆயுள் முழுதும் நீங்கள் அனுபவிக்க வேண்டும். இன்று முதல் நீங்கள் எனக்கு அப்பா இல்லை. உங்களை அப்பா என்று அழைக்க மாட்டேன். உங்கள் முகத்தில் விழிக்கவும் மாட்டேன். உங்கள் நிழல் கூட என் மீது படக் கூடாது. இனி ஒரு நொடி இந்த வீட்டில் நிற்க மாட்டேன்'' - என வெளியேறியவனை அவனது தாய் ஆர்ப்பரித்து விட்டு வெளியேறியவனை அவனது தாய் மகாலட்சுமி கட்டிக் கொண்டு கதறினாளே, 'என் உயிர் போன பின்பு எனக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து விட்டுப் போப்பா. ஒரே பிள்ளையைப் பெற்ற என்னை அநாதைப் பிணமாய் விட்டுவிட்டுப் போய்விடாதே'' - என்ற வார்த்தைக்குப் பின்பே வீட்டிலிருக்க சம்மதித்தான். ''அம்மா! உங்களுக்காக மட்டும்தான் இருக்கிறேன். இவரிடம் சொல்லுங்கள். என்னிடம் இவர் நெருங்கி வரக் கூடாது. வந்தால் போய்விடுவேன்'' என்ற நிபந்தனை யோடு தான் உள்ளே சென்றான்

அதை அத்தனை சீக்கிரமாய் மறந்து விட முடியாதுதான். அன்றிலிருந்து இன்றுவரை தந்தையிடம் எதற்கும் வந்து நின்றதில்லை. கேட்டதில்லை. ஒரு தகப்பனாய் தேவேந்திரன் பட்ட வேதனையைக் காணச் சகியாமல்தான் இந்த பேச்சையே ஆரம்பித்தார் இராமநாதன்.



''எல்லாம் சரியாகிடும்யா, பொண்ணு நல்ல குணவதியா அழகும் அம்சமா பாருங்க. உங்க மேல மதிப்பும் மரியாதையும் அன்பும் தானாகவே வந்திடும் தம்பிக்கு.''

''அது சரி ராமு. பொண்ணைப் பத்தி பிரச்சனை இல்லை. போன மாசம் கூட கிருஷ்ணமூர்த்தி வந்து பேசினான். பொண்ணு படிப்பை முடிச்சிட்டதாகவும், மாப்பிள்ளை பார்ப்பதாகவும் சொல்லி நம்ம வருணனுக்கு பார்க்கலாமான்னு கேட்டான். பொண்ணும் அத்தனை அழகா இருந்தா. நான்தான் பிறகு பார்க்கலாம்னு சொல்லிட்டேன்'' - என்றார்.

''ஏன்யா அப்படிச் சொன்னீங்க? சரின்னு சொல்லி யிருக்கலாமே?''

''அதெப்படி சொல்ல முடியும் ராமு. இவன் சம்மதிக்க வேண்டும். அதோடு நாம்தான் இவனைப் பார்த்துக் கொண்டே இருக்கிறோமே. ராஜாவாட்டம் இருந்த பிள்ளை இப்போ எப்படி இருக்கிறான் பார்த்தாயா? வீட்டிற்குள்ளேயே அடைந்து கிடப்பதால் யாருக்கும் தெரிய வாய்ப்பில்லை. கிருஷ்ணமூர்த்தி கூட முன்பே பார்த்ததுதான். இப்போது இவனைப் பார்த்தால் ஒத்துக் கொள்வானா? மறுத்து விட்டால், அது அசிங்கமாகி விடாதா?''

''அட என்னய்யா நீங்களே இப்படிச் சொன்னா எப்படி? தம்பி என்ன அப்படி மோசமாகிடுச்சி. கொஞ்சம் இளைச்சி போயிருக்கு. நல்லா மளமளன்னு சவரம் பண்ணி சென்ட் எல்லாம் அடிச்சு கோட்குட் போட்டு விட்டா ஜம்முன்னு ராஜாவாட்டம் இருப்பார். நீங்க அம்மாகிட்ட கலந்து பேசி ஆக வேண்டிய காரியத்தைப் பாருங்க. தம்பி தன்னால வழிக்கு வந்திடும்'' - என்றார் உறுதியாய்.

''என்னவோ, சொல்கிறாய். எனக்கென்னவோ நம்பிக்கை யில்ல. உன் பேச்சைக் கேட்டு முயற்சி செய்கிறேன். மற்றபடி எல்லாம் அவன் செயல்'' - மேலே நோக்கி கையைக் காட்டியவாறு எழுந்து கொண்டார் தேவேந்திரன். ''சரி ராமு, நேரம் விடியப் போகுது. நீ போய் ரெஸ்ட் எடு. நான் அப்படியே வாக்கிங் போயிட்டு வர்றேன். நான் வெளியே போனதும் கதவைப் பூட்டிக்கோ'' - என்றவாறு உடைமாற்ற தன் அறைக்குள் நுழைந்தார்.

'மாத்திரையின் உதவியால் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள் அவர் மனைவி மகாலட்சுமி. மகனின் நிலை கண்டு வருத்திக் கொண்டதில் துரும்பாய் இளைத்திருந்த போதும், உறக்கத்திலும் புன்னகை மாறாத் தெய்வீக முகம். மகனையும் கணவனையும் பம்பரமாய் சுழன்று கவனித்துக் கொள்பவள். இன்று பூஜையறையைத் தவிர வேறெங்கும் நடமாடுவதில்லை. எது இவளை இப்படி முடக்கிப் போட்டது. நான்தான்.. என் செயல்பாடுகள்தான். இந்த வீட்டில் துள்ளித் திரிந்த இரண்டு புள்ளி மான்களையும் முடக்கி விட்டேனோ, பிள்ளையின் முடக்கத்தில் துவண்டு போனதோ இந்தத் தாய்மான். எத்தனை கலகலப்பான பிள்ளை வருண். ஒரு இடத்தில் பத்து நிமிடம் உட்கார்ந்தான் என்றால் அதிசயம்தான். அத்தனை துடிதுடிப்பு. சுறுசுறுப்பு. வேகம். புத்திக் கூர்மை. எதற்கும் அஞ்சாத துணிவு. அத்தனையையும் ஒட்டு மொத்தமாய் பறித்துக் கொண்டு போய்விட்டாளே அந்தப் பெண். அவள் பெயர் கூட நினைவில்லை. பேசாமல் அவளையே வருணுக்கு மணம் முடித்திருக்க வேண்டுமோ. அப்படி நடந்திருந்தால்... இன்று எப்படியும் மூன்று பேரக் குழந்தைகளேனும் பிறந்திருக்கும். குழந்தைகளின்



பொறுப்புள்ள தகப்பனாய் தன் மகன் தன்னைப் போல் கடுமையாய் உழைக்க ஆரம்பித்திருப்பான். பேரக் குழந்தைகளைக் கொஞ்சிக் கொண்டும் கதை சொல்லிக் கொண்டும் மகாலட்சுமி இன்னும் இளமையாகி இருப்பாள். ஏன் நான் கூட பெருமிதமாய் கம்பீரமாய் நிமிர்ந்து நின்றிருப்பேன்.'

'என்னோட படிப்பு முடிஞ்சதும் அப்பாவுக்கு கம்ப்ளீட் ரெஸ்ட்தான். அப்பாவோட ப்ரீயா இருக்கலாம். கம்பெனி பொறுப்பு முழுக்க நான் பார்த்துக்குவேன். வருஷத்துக்கு ஒருமுறை நாமெல்லாம் சேர்ந்து கண்டிப்பா எங்கோவது டூர் போகணும். வாரம் ஒருமுறை பீச்சுக்குப் போகணும். மாதம் இருமுறை தியேட்டர்ல போய் படம் பார்க்கணும். அப்புறம் மாதம், ஒரு முறை அம்மாவை 'புல்லா ரெஸ்ட்' எடுக்க வைச்சிட்டு, நாம ரெண்டு பேரும் வீட்டு வேலை சமையல் உட்பட எல்லாம் செய்யணும் சரியாப்பா. இப்படியெல்லாம் செய்தா அம்மா மனசு குளிருமாம். ஒரு புக்ல போட்டிருக் காங்க. வீட்ல பெண்கள் கண் கலங்காம இருந்தா அந்தக் குடும்பம் முன்னேறுமாம். அவங்க மனசு குளிர்ந்தா நம்ம வாழ்க்கையே அமோகமாக இருக்குமாம்'' - என்பான் வருண்.

அவனை நெட்டி முறிப்பாள் லக்ஷ்மி. ''என் ராஜா, நீ என் மகனா பொறந்தப்பவே என் மனசும் வயிறும் குளிர்ந்து போச்சுப்பா. இதைவிட வேறென்ன வேண்டும். உனக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணி, பேரக் குழந்தைகளைக் கொஞ்சினாப் போதும். அம்மாவுக்கு வேற எந்த ஆசையும் இல்லை'' என்பாள்.

அவளது ஆசை தன்னால்தான் நிராசை ஆனதோ. பணம் கௌரவம் என பாராமல் அந்தப் பெண்ணையே இவளுக்கு மருமகளாகியிருக்கலாம். முதன் முறையாய் தேவேந்திரன் கண் கலங்கினார். காணக் கிடைக்காத அற்புத வைரமாய் கிடைத்த மனைவியையும், மகளையும் தன் வறட்டுக் கர்வத்தால் சிதைய விட்டோமே என்ற எண்ணம் தோன்றி மனதை அறுத்தது. அந்தப் பெண் கூட அழகாய்த்தான் இருந்தாள். அடக்கமாய்த்தான் பேசினாள். பிறகேன் நான் அவளை மறுத்தேன். அவமதித்தேன். பாவம் அந்தப் பெண். இப்போது எங்கே இருப்பாள்? எப்படி இருப்பாள்? கணவன் குழந்தைகளோடு இருப்பாளோ? இல்லை வருணைப் போல் அவளும் காத்துக் கிடப்பாளா!" கண்களில் நீர் சுரந்தது.

## 5

*ஏதோ ஒரு பாட்டு என் காதில்*
*கேட்கும் - கேட்கும் போதெல்லாம்*
*உன் ஞாபகம் தாலாட்டும்!*

மருந்து இடிக்கும் உரலில் கடுக்காயைப் போட்டு இரும்புத் தடியால் அதை நசுக்கிக் கொண்டிருந்தாள் தென்றல். சுக்கும் இந்துப்பும் உமா கையில் இருக்க ஒவ்வொன்றாய் உரலில் போட்டு தூளாக்கிக் கொண்டிருந்தாள். வயிற்றுப் பூச்சிக்கான மருந்து உருண்டைகளை கவனமாய் எண்ணி பாட்டில்களில் அடைத்துக் கொண்டிருந்தாள் கலா. சற்று தள்ளியிருந்த, குடிலில் மற்ற



மருந்துகளை அடுப்பில் மண் சட்டியை வைத்து இரு பெண்கள் காய்ச்சிக் கொண்டிருந்தனர். நாலைந்து பெண்கள் வேர்களை தரம் பிரித்து நிழலில் உலர்த்திக் கொண்டிருக்க மேகநாதன் லேகியத்தை பக்குவமாக பிளாஸ்டிக் டப்பாவில் அடைத்து அதன் வாயை கவர் பண்ணி மூடிக் கொண்டிருந்தார். மற்றவர்கள் பேசிக் கொண்டே வேலையில் கவனமாய் இருக்க அப்பாவின் அறையில் சத்தமாக பாடல் கேட்டுக் கொண்டிருந்தது.

"ஏன் தென்றல், அப்பாவுக்கு பாட்டுன்னா ரொம்ப இஷ்டமோ, ரேடியோவுக்கு ஓய்வே இல்லையே, நாம கூட எப்பவும் கேட்கிறதில்லையே" என்றாள் கலா. சிரித்துக் கொண்டாள் தென்றல். "அப்பாவுக்கு பாட்டு என்றால் உயிர். அதுவும் பழைய பாட்டு என்றால் கேட்கவே வேண்டாம். அசையவும் மாட்டார். சாப்பாடு இல்லாமல் கூட இருந்து விடுவார்கள். ஆனால் பாட்டு இல்லாமல் இருந்ததே இல்லை. தூங்கி எழுந்தால் பாட்டு, சாப்பிடும் போதும் பாட்டு. வேலை செய்யும் போதும் ஓய்வெடுக்கும் போதும் ஏன் இரவில் உறங்கும் போதும் பாட்டு வேண்டும் அப்பாவிற்கு. அதனால்தான் எங்க வீட்டில் ரேடியோவிற்கு ஓய்வே கிடையாது. ஆனால் நல்ல பொழுதுபோக்குதான். நம்ம கூட உற்சாகமாக வேலை செய்யனும்னுதான் அப்பா இவ்வளவு சவுண்டா வெச்சிருக்காங்க. நாமளும் ஊர் வம்பு பேசாம இருக்கலாம்" என்றாள்.

"அதுவும் காலைத் தென்றல் வருண் வந்தால் போதும் அப்பாவிற்கு. அங்குமிங்கும் நகர்வதே இல்லை. கிறங்கிப் போய்விடுகிறார். அப்படி என்னதான் பேசுவானோ அந்த வருண்" அலுத்துக் கொண்டாள் உமா.

"ஏன் உமா நீ உங்க வீட்ல ரேடியோ கேட்க மாட்டியா? குரலா அது. அப்படியே காதிலே தேன் பாயும். அதுவும் நடுநடுவே கவிதை சொல்வார் பாரு வருண். அந்தக் கவிதைக்காக நம்ம சொத்தையே எழுதி வெக்கலாம்" – கலா உணர்ச்சிமயமாய் கூற, "எதை? அந்த ஓட்டை வீட்டையும், பழைய சாமான்களையுமா? கலா உனக்கு கவிதை பிடிக்கும்தான்.. அதுக்காக தன்னிலை மறந்து போகும் அளவிற்கா பைத்தியமாய் இருப்பாய். சொத்தை எழுதி வைக்கிறளாம்? ம்.. எனக்கும் வந்து வாச்சிருக்காரே எங்க அப்பா. இருந்த ரேடியோவை வித்து குடிச்சிட்டு வர்றாரு. பிறகெப்படி பாட்டு மேல கவிதை மேல நமக்கு ஆர்வம் வரும். சலிப்புதான் வரும்" – உமாவின் குரலில் சலிப்போடு வருத்தமும் இருக்க அவளை சமாதானம் செய்தாள் தென்றல்.

"அதற்கென்ன உமா, விடிந்ததில் இருந்து இருட்டும் வரை இங்குதானே இருக்கிறாய். இதுவும் உன் வீடென்று நினைத்துக் கொள். நல்ல பாடல்களை ரசி. எப்பவுமே சலிப்பு வெறுப்பைத்தான் தரும். ஏழ்மையையும் ரசனை யோடு பார். பிடித்துப் போகும். நம்மை நாமே ரசித்துக் கொள்ள வேண்டும். நம் திறமையை அறிவை செயல்பாடு களை நம்மைச் சுற்றியுள்ள சூழல்களை ரசித்துப் பழக வேண்டும். அப்போதுதான் வாழ்க்கை மீது ஒரு பிடிப்பு வரும்."

"நீ சொல்றது சரிதான்ப்பா. ஆனா பாரு. காலையில இங்க வரும்போதுதான் கண்ணாடியப் பார்க்கிறேன். முன் உச்சியில ரெண்டு வெள்ளை மயிர். தலை நரைக்க ஆரம்பிச் சிடுச்சுப்பா. எனக்கு அழுகையே வந்திடுச்சு தெரியுமா? இன்னும் எத்தனை காலம் இப்படியே இருக்க முடியும். இப்பல்லாம் மூணு புள்ளை நாலு புள்ளை பெத்தவனுக்கு ரெண்டாந்தாரமாத்தான் பொண்ணு கேட்டு வர்றானுங்க. எவ்வளவு வேதனையா இருக்கு தெரியுமா? நேத்து பக்கத்து வீட்டுக்காரன் ஒரு மாப்பிள்ளை பத்தி சொல்றான்ப்பா. ஏற்கனவே ரெண்டு பெண்டாட்டி கட்டி ஆறு பிள்ளைக இருக்குதாம். அம்பத்து ரெண்டு வயசாம். சம்சாரம் செத்துப் போச்சுன்னு என்னை மூணாம் தாரமாக் கேட்கிறானாம். துடைப்பக்கட்டை எடுத்து அடிச்சி விரட்டினேன் தெரியுமா? போற போக்கைப் பார்த்தா ஏதேனும் கிழட்டுப் பயலுக்குத்தான் வாழ்க்கைப் படுவேனோ என்னவோ?" சொல்லும்போதே அழுதுவிட்டாள் உமா.



மருந்து இடிப்பதை நிறுத்திவிட்டு தோழியை அணைத்துக் கொண்டாள் தென்றல். "அப்படி எல்லாம் சொல்லாதே உமா. இத்தனை கேவலமாய் விலைபேசும் உன் தகப்பனுக்கு நீ ஏன் பலியாகிறாய். பேசாமல் உன் மனதிற்கு யாராவது பிடித்திருந்தால் சொல்லு. நானே உனக்கு நகை செய்து சீர் செனத்தியோடு திருமணம் செய்து அனுப்புகிறேன். சொல் உமா. உன் மனதில் யாரேனும் இருக்கிறாரா? ம்?" என்றவாறு முகத்தைப் பற்றிக் கேட்டாள்.

"ம்ப்ச். அதெல்லாம் இல்லப்பா. குடும்பம் மானம் மரியாதைன்னு சின்ன வயசில வந்தவனையெல்லாம் விரட்டிட்டேன். இப்ப எல்லாரும் குடும்பமா இருக்கானுங்க. சில பேர் என்னைப் பார்த்து பரிதாபம் கூட படுறாங்க. அதோ போறாரே அவரு கூட என் பின்னால சுத்தி சுத்தி வருவாரு தெரியுமா?" – கை நீட்டிய திசையைப் பார்த்த தென்றல் ஆச்சரியமானாள். "இவனா?" முகத்தைச் சுளித்தாள்.

''ஏன் அவருக்கென்ன? சின்ன வயசில ரொம்ப அழகு தெரியுமா? பயங்கரமான ஸ்டைல் பண்ணுவாரு. என்ன கொஞ்சம் வழிசல் கேஸ். எவளைப் பார்த்தாலும் வழிவான். அதனாலதான் பிடிக்காமப் போச்சு. இப்ப அவருக்கு உன்னைப் பிடிச்சிருக்கு'' என்ற உமாவின் குரலில் லேசான ஏமாற்றம் தொனித்தது.

பைக்கில் நிமிர்ந்த நிலையில் கம்பீரமாகவும் அலட்சியமாகவும் சென்று கொண்டிருந்த அழகப்பனைப் பார்த்தாள் தென்றல். ஏனோ வெறுப்புதான் வந்தது. ''இந்தப் பொறுக்கியைக் கட்டிக்கிறதுக்கு நீ காலம் பூரா இப்படியே இருந்திடலாம்'' என்றாள் கடுகடுப்பாய்.

''நானும் அப்படித்தான் நினைச்சேன். ஆனா ஒரு கிழவனுக்கு மூணாம் தாரமா போறதை விட இவன் எவ்வளவோ மேல். பெண்களைப் பார்த்தால் வழிவானே தவிர யாரிடமும் இதுவரை தப்பாக நடந்து கொண்ட தில்லையே. சிகரெட் பிடிப்பாரே தவிர சாராயமெல்லாம் தொடவே மாட்டார். நல்ல உழைப்பாளி தெரியுமா?'' என்றாள் உமா.

''அவனைப் பற்றி இத்தனை சொல்கிறாயே, பிறகென்ன பேசாமல் அவனையே கட்டிக் கொள்வதுதானே?'' என்றாள் தென்றல்.

''இந்த முடிவை நான் அப்பவே எடுத்திருக்கலாம். இப்ப அவரு உன் மேலதான் ஆசையா இருக்காரு தென்றல். உன் நல்லதிற்காகத்தான் சொல்கிறேனப்பா. நீயாவது புத்திசாலியா இருந்துக்கோ. வர்ற வாய்ப்பை நழுவ விடாதே. அவர் நல்லவர்தாம்பா. கல்யாணமானா எல்லாம் சரியாகி



விடும். நல்ல வசதியானவன்தான். நல்ல சம்பாதித்து இப்ப பெரிசா வீடு கூட கட்டி இருக்காரு. வர்றப்போ வேணாம்னு சொல்லிட்டு அப்புறம் என்னை மாதிரி அழவேண்டாம் பாரு. அதுக்காகத்தான் சொல்றேன்'' - என்றவாறு மீண்டும் கண்ணீரைச் சிந்தினாள்.

நிச்சயமாய் இவள் மனதில் அந்த அழகப்பன் இருக்கிறான். இல்லையென்றால், இந்தக் கண்ணீர் வராது. ஆனால் அவன் சரியான பொறுக்கி ஆயிற்றே. அவனைப் போய் எப்படி விரும்புகிறாள்? இப்போதுதானே சொன்னாள் யாரிடமும் தப்பாக நடந்து கொள்ள மாட்டான் என்று. ஆமாம் தன்னிடம் கூட பேசுவானே தவிர எல்லை மீறி அருகே நெருங்கியதில்லையே. பேசாமல் இவனிடமே பேசி உமாவை இவனுக்கு முடித்துவிட்டால் என்ன? அவள் பாரமும் தீரும். தனக்கு அவனால் ஏற்படும் நெருக்கடியும் விலகும். பார்க்கலாம். பேசிப் பார்க்கலாம்.

''சரி, உமா, இப்போ வேலையைப் பார்ப்போம். மத்ததெல்லாம் பிறகு பார்க்கலாம்'' என்றவாறே உரலில் இருந்து அரைபட்ட மருந்தை எடுத்து மெலிதான சல்லடையில் சலிக்க ஆரம்பித்தாள். உமாவும் மூக்கை உறிஞ்சியவாறே தன் வேலையில் ஈடுபட கலா வானொலியில் ஒலித்த பாடலில் லயித்துப் போயிருந்தாள். உயிரே படப்பாடல் அது. ''காற்றின் அலைவரிசை கேட்கின்றதா. கேட்கும் பாட்டில் ஒரு உயிர் விடும் கண்ணீர் வழிகின்றதா, நெஞ்சு நனைகின்றதா'' என நாயகன் உருகிப் பாடிக் கொண்டிருந்தான்.

தென்றலின் கரங்கள் தன் வேலையை நிறுத்திக் கொண்டன. செவி மடல்கள் சிலிர்த்தன. உடல் முழுக்க

புல்லரித்தது. என்ன வரிகள். "உயிரை வேரோடு கிள்ளி என்னைச் செந்தீயில் தள்ளி எங்கே சென்றாயோ கள்ளி. ஓயும் ஜீவன் ஒடுமுன்னே ஓடோடி வா". துக்கம் தொண்டையை அடைக்க கண்களில் நீர் முட்டியது. உயிரே படப் பாடலுடன் உங்களிடம் இருந்து விடைபெறுவது உங்கள் உங்கள் வருண்... என்றது அந்த இனிய குரல்.

வருண்...வருண்... தென்றலாய் தவழ்ந்த தன் வாழ்வில் பேய் மழையாய் வந்தவன். இறுதிவரை கண்ணீரை மட்டுமே தந்து விட்டுப் போனவன். தன்னிடம் சொல்லிக் கொண்டு விடை பெறாமல் தந்தையை அனுப்பி விலகிக் கொண்ட கோழை. உன்னைப் பார்த்த பின்பு நான் நானாக இல்லையே என்றவன். பணம் பந்தியிலே குணம் குப்பையிலே என்ற கதையாய் ஓடிப் போனவன். வெளியூருக்கு அல்ல. வெளிநாட்டிற்கே போய்விட்டான். தேடிப் போக முடியாத இடமாம். எப்படி இருப்பான். இத்தனை வருடங்களில் நிச்சயமாய் குழந்தை குட்டி என்று தனது கோடீஸ்வர மனைவியோடு அமோகமாய் வாழ்ந்து கொண்டிருப்பான். தன் நினைவை அடியோடு அழித்திருப் பான். பணம் பத்தும் செய்யும். துரோகி. என்றாவது ஒருநாள் உன்னைப் பார்க்காமலா போய்விடுவேன். பார்ப்பேன். உன்னைப் பார்ப்பேன். அப்போது நான் இன்னும் உயர்ந்திருப்பேன். நீ என்னை நிமிர்ந்து பார்க்கும் அளவிற்கு இன்னும் உயர்வேன். நீ தந்த தோல்விதான் என் வெற்றி யின் முதல் படி என்று சொல்ல வேண்டும் உன்னிடம். உன் நெஞ்சைக் கூறு போடும் படி நாலு வார்த்தையாவது கேட்க வேண்டும். முடிந்தால் உன் கன்னத்தில் பளார் பளாரென்று அறைய வேண்டும்.



"தென்றல், தென்றல் என்னப்பா யோசனை. தங்கசாமி அண்ணாச்சி வந்திருக்கார் பாரு" - உசுப்பினாள் உமா.

"ம்ம்..." திடுக்கென விழித்தாள். "ஓ.. ஏதோ ஞாபகம். இதோ வந்திட்டேன் அண்ணாச்சி" - என்றவாறு எழுந்து அறையில் ஓரமாய் இருந்த மருந்துகள் அடங்கிய அட்டைப் பெட்டியை எடுத்து வந்தாள்.

"இந்தாங்க அண்ணாச்சி. நீங்க கேட்ட மருந்து எல்லாம் இருக்கு. எல்லாம் பார்சல் பண்ணி வெச்சட்டேன்" என்றவாறு அவரிடம் கொடுத்தாள்.

"ரொம்ப நன்றிம்மா. ரெடியாகியிருக்குமோ, என்ன வோன்னு வந்தேன். அப்புறம் அந்த வாத மருந்து தீர்ந்து போச்சும்மா. ஒரு பத்து பாட்டில் போட்டு வையும்மா. நான் ரெண்டு நாள்ல ஊருக்கு போயிட்டு வந்திடுவேன். வந்தப்புறம் வர்றேன். சரியா இந்தாம்மா காசு" என்றவாறே பணத்தை எண்ணி நீட்டினார்.

"நன்றி அண்ணாச்சி, காபி சாப்பிடுறீங்களா?"

"இல்லம்மா. நேரமாச்சி. நான் கிளம்பட்டுமா. மேகநாதன் நான் போயிட்டு வர்றேன்" - என்றவாறு கிளம்பினார். அவரை அனுப்பி விட்டு தோழிகளிடம் வந்தாள். "கலா இந்தா உனக்கு ஆயிரத்து ஐநூறு. உன் தம்பி தங்கைகளுக்கு யூனிபார்ம் எடுத்துடு. உமா இது உனக்கு. நீயும் கலாவுமா போய் ஆர்.எஸ். புரத்தில் ஸ்ரீ குமரன்னு ஒரு நகைக்கடை இருக்கு. அங்க போய் உனக்கு ஒரு கம்மல் ஜிமிக்கி வாங்கிக்கோ. இன்னும் பத்து நிமிஷத்தில் பஸ் வந்திடும். உடனே போங்க. வாங்கிட்டு உடனே திரும்பி வந்திடுங்க. அப்புறம் உங்க அம்மா அப்பா இங்கே தேடி

வந்திடுவாங்க. ம்.. கிளம்புங்க.. பணம் பத்திரம். இரு ஒரு பர்ஸ் எடுத்திட்டு வர்றேன்.'' - என்றவாறே தன் அறைக்கு ஓடினாள்.

''ஏய் எனக்கு எதுக்குப்பா இப்போ கம்மல் ஜிமிக்கி யெல்லாம்'' என்றவாறு பின்னலேயே ஓடி வந்தாள் உமா.

''ஷ்... சொன்னதைச் செய். மற்றதை வந்த பிறகு பேசிக் கொள்ளலாம். எத்தனை நாள் இந்த பிளாஸ்டிக் தோடோடு இருப்பாய். நாளைக்கு கல்யாணமாகி போகும்போது காதில கழுத்தில போட நகை வேண்டும். இப்போதே சேர்ப்போம். ம்.. கிளம்பு... ஏய் பஸ் வந்திடுச்சு. கிளம்பு.. கிளம்பு..'' இருவரையும் விரட்டினாள். இருவரும் ஓடிச் சென்று பஸ்ஸில் ஏறிக் கொள்ள திரும்பி வீட்டிற்குள் நுழைந்தாள் தென்றல்.

''என்னம்மா சொல்கிறாய்?'' என்றார் மேகநாதன்.

''பாவம்ப்பா உமா. அவளுக்கு கல்யாணத்திற்கென்று ஒரு பொட்டு நகை இல்லை. அதான் அண்ணாச்சி தந்த பணத்தைக் கொடுத்து கம்மல் வாங்கிக் கொள்ளச் சொல்லி அனுப்பினேன். உங்களிடம் தான் கேட்டிருக்க வேண்டும். எட்டு மணி பஸ் போயிட்டா அப்புறம் ஒரு மணிக்குத்தான் அடுத்த பஸ். அதான் அனுப்பிட்டு வந்து சொல்றேன்'' - என்ற மகளைக் கூர்மையாய்ப் பார்த்தார்.

''அதெல்லாம் சரி மகளே, உன் திருமணத்தைப் பற்றி எப்போது சிந்திப்பாய். எத்தனை காலம் இப்படியே இருக்கப் போகிறாய்?''

''அப்பா..'' கத்தினாள். ''நீங்கள் எத்தனை முறை கேட்டாலும் என் பதில் ஒன்றுதான். எனக்கு திருமணம் செய்யும் எண்ணமே இல்லை. இனியொரு ஆண் என் வாழ்வில் கிடையாது. தயவு செய்து இனி இந்தப் பேச்சை எடுக்காதீர்கள்'' - வெறுப்பாய் கூறிய மகளை வருத்தமாய் பார்த்தார்.



''சரிம்மா, இனிமே இந்தப் பேச்சை எடுக்க மாட்டேன். அடுத்த முறை நீ மலையேறும்போது எனக்கு நான்கே நான்கு அரளிக்காய் பறித்துக் கொண்டுவா. எனக்கு அதுபோதும்.''

''அப்பா...ஆ.. ஆ..'' வீறிட்டாள் தென்றல்.

''ஏனப்பா நீங்களும் என்னை சித்ரவதை செய்கிறீர்கள். நான் முழுதாய் உங்களோடு இருப்பது பிடிக்கவில்லையா? ஏற்கனவே ஒருவன் என் மனதைக் கூறுபோட்டு விட்டான் அப்பா. அதை நீங்களும் குத்திக் கிளறாதீர்கள். அவன் நினைவுகள் மறைந்து போனாலும் அவன் எனக்கு ஏற்படுத்திவிட்டுப் போன காயம் இன்னும் ஆறவில்லை யப்பா. காலம் காயத்தை ஆற்றி விடும் என்பார்கள். நானும் அதற்குத்தான் காத்திருக்கிறேன். ஆனால் என் காயம் ஆறவில்லையே. இந்த ரணத்துடன் நான் எப்படி அப்பா உங்கள் விருப்பத்தை நிறைவேற்ற முடியும். என்னை மன்னித்து விடுங்கள். என்னை என் வழியில் விட்டு விடுங்கள். என் மன உறுதியைத் தகர்த்து விடாதீர்கள். நான் வைராக்யமாய் வாழ வேண்டும். என்னைத் தூக்கி யெறிந்தவர்கள் முன் நான் வாழ்ந்து காட்ட வேண்டும். என்னை திசை திருப்பி விடாதீர்கள். எனக்கு நிறைய வேலை இருக்கிறது. இந்த மாதிரி வெட்டிப் பேச்சு பேச எனக்கு நேரமில்லை'' என்றவாறு வெளியேறி தன் வேலையில் மூழ்கினாள்.

# 6

*உன் மடியில் நானுறங்க*
*கண்ணிரண்டும் தான் மயங்க*
*என்ன தவம் செய்தேனோ!*
*என்னவென்று சொல்வேனோ!*

''தென்றல்! உனக்கு இந்தப் பெயரை யார் வைத்தது?'' கொஞ்சலாய் ஒலித்தது வருணின் குரல்.

''ஏன் எங்க அப்பாதான் வெச்சாங்க. ஏன் கேட்கிறீங்க?''

''இல்ல. இது ஒரு அபூர்வமான பேர். இந்தப் பெயரை சுருக்கியும் கூப்பிட முடியாது. திட்டவும் முடியாது. நைஸ் நேம். உங்க அப்பாவுக்கு நல்ல ரசனை.''

''ஆமா. எங்க அப்பாவுக்கும் அம்மாவுக்கும் கல்யாண மாகி, பதினைஞ்சு வருஷம் கழிச்சு நான் பொறந்தேனாம். அதனாலதான் வாடிக் கிடந்த எங்கள் மனதை தென்றலாய் தாலாட்ட வந்த உனக்குத் தென்றல்னு பேர் வெச்சோம்னு அப்பா எப்பவும் சொல்வாங்க'' - பெருமையாய்ச் சொன்னாள் தென்றல்.

''அவர்கள் வாழ்வில் மட்டுமல்ல தென்றல் என் வாழ்விலும் தென்றலாய் வந்து வசந்தம் தந்தவள் நீதான். நீ இல்லையென்றால் என் வாழ்க்கை பாலைவனமாகி விடும் தென்றல். என்னை விட்டு எங்கும் போய்விடாதே'' - தழுதழுத்தான்.



''எங்கும் போக மாட்டேன். உன்னுடனேயே இருப்பேன். நீ ஏன் இப்படி கவலைப்படுறே. தூங்குடா கண்ணா, நிம்மதியா தூங்கு'' - அவனது தலையை எடுத்து தன் மடி மீது வைத்துக் கொண்டாள். இதமாய் தலையை வருடி விட சுகமாய் உறங்க ஆரம்பித்தான். நல்ல உறக்கத்தில் பொட்டென இரு சூடான துளிகள் முகத்தில் விழ சட்டெனக் கண் விழித்தான். இது தென்றலின் மடி அல்ல! தன் தாயின் மடி. மகாலக்ஷ்மி கனிவான முகத்தோடு மகனை வருடி விட்டுக் கொண்டிருந்தாள். கண்களில் நீர் வழிந்து கொண்டிருந்தது.

''தூங்கு ராஜா, எத்தனை வருடங்கள் ஆகிறது இப்படி என் மடியில் படுத்து உறங்கி. படுத்துக்கோ ராஜா, என் கண்ணே'' என முகத்தை வருடினாள். அம்மாவின் பஞ்சு போன்ற விரல்கள் நரம்போடி மெலிந்திருந்தது. உடலும் நலிந்து போயிருந்தாள். மஞ்சளும் குங்குமமுமாய் மின்னும் முகம் இப்போது பொலிவிழந்து கண்களின் கீழ் கருவளையம் குடி கொண்டிருந்தது. தலை அதிகம் வெளுத்திருக்க அம்மாவின் தோற்றம் பரிதாபமாக இருந்தது. எப்போதும் வெள்ளைக்கல் பதக்கமும் இரட்டை வடம் சங்கிலியுமாய் இருக்கும் கழுத்து இப்போது தாலிக் கொடியுடன் மட்டுமே இருந்தது. புன்னகையைத் தொலைத்த உதடுகள் உலர்ந்து வெடிப்புடன் இருந்தது. அம்மாவை வெகு நாட்களுக்குப் பிறகு அருகில் பார்த்ததும் மனம் கசிந்தது. மெல்ல எழுந்து தாயைத் தன் மார்பில் சாய்த்துக் கொண்டான் வருண். ''அம்மா இது என்ன கோலம்? ஏன் இப்படி வாடி வதங்கிப் போயிருக்கிறீர்கள். என்னம்மா ஒழுங்கா சாப்பிடுவதில்லையா? உடம்பு எதுவும் சரியில்லையா. சொல்லுங்கம்மா. என்னாச்சும்மா

உங்களுக்கு?'' மகனின் பரிவில் மகாலஷ்மி உடைந்து அழ ஆரம்பித்தாள்.

''எனக்கு என்னப்பா உடம்புக்கு. எம் பிள்ளை நீ இப்படி தேய்ந்து கொண்டே போகிறாயே கண்ணா. அதைப் பார்க்கும் என்னால் எப்படியப்பா சாப்பிட முடியும். உன் துன்பத்திற்கெல்லாம் நான்தானே காரணம். என் பிள்ளை தன் மனதில் தோன்றிய நேசத்தை என்னிடம் தானே சொன்னாய். நான்தானே அப்பாவிடம் சொன்னேன். கண்ணா! நான் அப்பாவிடம் சொன்னால் அப்பா உடனே பெண் பார்க்க அழைத்துப் போவார்கள் என்றுதான் சொன்னேன். அப்பாதான் முதலில் நானும் ராமுவும் போய் பார்த்துப் பேசிட்டு வர்றோம். அப்புறமா நல்ல நாள் பார்த்து எல்லாருமா சேர்ந்து போயி நிச்சயம் பண்ணிடலாம்னு சொல்லி என்னை விட்டுவிட்டு போயிட்டாங்கப்பா. மத்தபடி எனக்கு வேறு எதுவும் தெரியாதுப்பா. என்னையும் ஏம்ப்பா ஒதுக்கிட்ட. நீ என் பிள்ளை. உனக்கு நான் கெடுதல் பண்ணுவேனா? நான் எதையோ நினைத்துச் செய்ய எப்படியோ முடிந்து போனதப்பா. நீ என்னுடன் பேசி என் கையால் சாப்பிட்டு எத்தனை நாள் ஆயிற்று. உன்னைப் பார்க்கவே முடிவதில்லையே. கதவைப் பூட்டிக் கொள்கிறாயே. எப்போதும் போல் வந்து கதவைத் தட்டினேன். நீ பூட்டவில்லையோ. திறந்து கொண்டது. அதனால்தான் உள்ளே வந்தேன். உன் வாடிய முகம் கண்டதும் தாளாமல் என் மடிமேல் உன்னைத் தாங்கிக் கொண்டேன். உன் உறக்கத்தைக் கலைத்து விட்டேனாப்பா.''



''இல்லம்மா. எப்போதோ விழிப்பு வந்துவிட்டது. ஏதோ கனவு அதான் விழிகளைத் திறக்காமல் படுத்திருந்தேன்'' - என்றான் வருண்.

''அடடா என் குழந்தையின் கனவைக் கலைத்து விட்டேனா'' முகம் வாடினாள் மகாலஷ்மி.

''ஹூம். அதுதான் எப்போதோ கலைந்து விட்டதே. அதைப் பற்றி இனி பேச என்ன இருக்கு? சரிம்மா குளிச்சிட்டு நான் வெளியே கிளம்பணும்'' - என்றவாறு கட்டிலை விட்டு இறங்கினான்.

''குளிச்சிட்டு வாடா கண்ணா. அம்மா உனக்கு டிபன் பண்ணி வெக்கிறேன்'' - என்றவாறு உற்சாகமாகச் சென்றாள் லஷ்மி.

குளித்துவிட்டு கீழே இறங்கி வருகையில் அந்த வித்தியாசத்தை உணர்ந்தான் வருண். பார்வை சற்று மங்கலாய்... காட்சிகள் எல்லாம் அலையாய் அசைந்தது போல்... நின்று தலையை உதறி தன்னை சுதாரித்துக் கொண்டான். இப்போது கொஞ்சம் தெளிவாகத் தெரிந்தது. ஹாலில் நான்கு பேர் அமர்ந்து பேசிக் கொண்டிருக்க அதைக் கண்டு கொள்ளாமல் வெளியே போர்டிகோவில் நின்று காரைத் துடைத்துக் கொண்டிருந்த கதிரை அழைத்தான். ''கதிர் ரெடியா, வெளியே போகணும்'' - என குரல் கொடுத்துக் கொண்டே செருப்பில் காலை நுழைத்தான்.

''இதோ ஒரே நிமிஷம் ஸார்'' - அவசரமாய் துடைத்துவிட்டு பக்கெட்டோடு கதிர் வந்தான்.

''கதிர் சாப்பிட்டியா?''

''இனிமேத்தான் ஸார். காரை வாஷ் பண்ணிட்டு சாப்பிடலாமேன்னு''

''ஓகே, நீ சாப்பிட்டு வா. நான் கார்ல வெயிட் பண்றேன்'' - என்றவாறே நகர்ந்தவனை, ''ஒரு நிமிஷம் நில்லு வருண்'' - என நிறுத்தினார் தேவேந்திரன். பதிலேதும் கூறாமல் திரும்பியும் பாராமல் நின்றான்.

''வீட்டுக்கு கெஸ்ட் வந்தா வாங்கன்னு கேட்டு ரெண்டு வார்த்தை உட்கார்ந்து பேசமாட்டியா? காலையிலேயே எங்க கிளம்பிட்ட. வா உட்கார்ந்து பேசு.''

''நான் ஏன் பேசணும். டோண்ட் டிஸ்டர்ப் மீ.''

''நீதான் பேசணும். ஏன்னா அவங்க உன்னைப் பார்க்கத்தான் வந்திருக்காங்க.'' - தேவேந்திரன் குரலை உயர்த்தியதும் கோபமாய்த் திரும்பிய வருண், வந்திருப் பவர்களில் இரண்டு பெண்களும் இருக்க, அவர்கள் தன்னைப் பார்த்துவிட்டு ஏதோ கிசுகிசுக்கவும், ''அம்மா. ஆ..ஆ'' - ஆத்திரமாய் கூவினான்.

கையில் தோசைக் கரண்டியோடு ஓடி வந்தவள், ''ஒரு நிமிஷம்ப்பா... என்னப்பா கிளம்பிட்டியா.. ஒரே நிமிஷ இருப்பா. உனக்கு பிடிச்ச ஆனியன் தோசை ரெடியாகிட்டு இருக்கு. டைனிங் ஹால்ல உட்காருப்பா'' என்றவாறே கிச்சனுக்குள் நுழைய ''அம்மா! அதெல்லாம் அப்புறம். முதல்ல இவங்க யாருன்னு கேளு. ஏன் வந்திருக்காங்க?'' என்றான் கோபமாய்.

அப்போதுதான் மகாலஷ்மியும் பார்த்தாள். ''யாருங்க இ எப்போ வந்தாங்க. என்ன விஷயமா வந்திருக்காங்க?'' என்றாள் கணவனிடம்.



''இது என் நண்பன் கிருஷ்ணமூர்த்தி. இது அவன் சம்சாரம். அவங்க ரெண்டு பேரும் இவன் தம்பிங்க'' என அறிமுகப்படுத்தினார்.

முகம் மலர்ந்து, ''ஓ.. வாங்க.. வாங்க.. உட்கார்ந்திருங்க. எம்புள்ள அவசரமா புறப்பட்டுட்டு இருக்கான். அவனுக்கு டிபன் கொடுத்து அனுப்பிட்டு வர்றேன். தங்கம்மா வந்திருக்கிறவங்களுக்கு காபி கொடு'' - என குரல் கொடுத்தவாறே நகர்ந்த தாயைத் தோள் பற்றி நிறுத்தினான்.

''அம்மா.. மொதல்ல ஏன் வந்திருக்காங்கன்னு கேளுங்க.''

''இது என்னடா பேச்சு? வீடு தேடி வந்தவங்கள அப்படி எல்லாம் கேட்கக் கூடாது ராஜா. நீ போய் உட்காரு. நான் உனக்கு தோசை எடுத்துட்டு வர்றேன்'' - என்றவாறு அவள் போய்விட வந்திருந்தவரில் ஒருவர் வாய் திறந்தார்.

''ஏன் தம்பி! அம்மாவைக் கேட்கிறீங்க. நாங்களே சொல்றோம். எம் பொண்ணு ஆர்த்திக்கு உங்களைப் பார்க்கலாம் என்று அப்பாவிடம் கேட்டேன். வீட்டுக்கு வா பேசலாம்னார். அதான் வந்தோம். தம்பிக்கு உடம்பு எதுவும் சரியில்லையா. ஏன் இப்படி எலும்பும் தோலுமா இருக்கார் தேவா'' - என தந்தையிடம் கேட்டார் கிருஷ்ணமூர்த்தி.

சாப்பிட்டுக் கொண்டிருந்த கதிர், காபி கொண்டு வந்த தங்கம்மா, தோசையோடு வந்த மகாலஷ்மி, தேவேந்திரன் அவர் அருகிலேயே நின்று கொண்டிருந்த ராமநாதன் என அனைவரும் இந்த நொடி என்ன நடக்குமோ என்ற பயத்துடன் வருணைப் பார்க்க, அவன் அடக்க மாட்டாமல் சிரித்தான். சிரித்துக் கொண்டே இருந்தான். வந்தவர்கள்

சற்று பயத்துடன் எழுந்துகொள்ள, "இவர் சொன்னார்னு வந்தீங்களா, அய்யோ அய்யோ... இவரே ஒரு சீட்டிங் பெல்லோ. இவர் பேச்சை நம்பி நீங்கள் வரலாமா" என சிரித்துக் கொண்டே கேட்டான்.

"வருண்" - அதட்டிய தந்தையைக் கையமர்த்தினான். "நான் வந்தவர்களோடு பேசிக் கொண்டிருக்கிறேன். டோண்ட் சவுண்ட். ஆங்.. மிஸ்டர் கிருஷ்ணமூர்த்தி உங்கள் நண்பர் என்னைப் பற்றி உங்களிடம் என்ன சொன்னார். நல்லவன் வல்லவன் திறமைசாலி அப்படி இப்படின்னு அளந்து விட்டிருப்பாரே. நம்பாதீர்கள். அத்தனையும் பொய்" ரகசியமாய்ச் சொன்னான்.

"தேவா என்னடா இது? உன் பையன் பேச்சே சரியில்லையே" திகிலாய் கேட்டார் கிருஷ்ணமூர்த்தி.

"வெரிகுட். உடனே கண்டுபிடிச்சிட்டீங்களே. ஆமா நான் பைத்தியக்காரன்தான். அதோட முழு குடிகாரன். எனக்கு கடைசி நாள் நெருங்கிட்டு இருக்கு. எனக்கு உம் பொண்ணை கட்டி வைச்சு அது வாழ்க்கையை ஏன்யா அழிக்கப் பார்க்கிற. இதோ பார் உம்பொண்ணு கருப்போ சிவப்போ எனக்குத் தெரியாது. ஆனாலும் உன் நல்லதிற்குத்தான் சொல்றேன். இந்த ஆள் பேச்சைக் கேட்டு இனிமே இங்க வராதே. வேற நல்ல மாப்பிள்ளையாப் பார்த்து கட்டிவை. பொண்ணைப் பெத்தவன்நீ பொறுமையா நல்லவனாப் பார்த்துத் தேடு. இவனை நம்பாதே. பொய் பேசிப் பேசியே எல்லார் வாழ்க்கையும் அழிச்சிடுவாரு. ஃபார் எக்ஸாம்பில் நான்தான். புரியுதா கிளம்புங்க. கிளம்புங்க எல்லாரும்" - அவன் விரட்ட,



"தேவேந்திரா, உன் பேச்சை நம்பி வந்ததுக்கு நல்ல மரியாதை பண்ணிட்டே. உன் புள்ளையைப் பார்த்த உடனே என் மனைவி சொன்னா, என்னங்க மாப்பிள்ளை சீக்காளி மாதிரி இருக்கானேன்னு. நம்மை விட பெண்கள் புத்திசாலிதான். ஒரு பார்வையில கண்டுபிடிச்சிட்டாளே. உன் பையன் நல்லவன்றதால அவன் வாயாலேயே உண்மையை ஒத்துக் கொண்டான். இல்லே என் பெண்ணோட வாழ்க்கை என்னாகியிருக்கும்? இதுதான் உன்னோட லட்சணமா, என்னய்யா பெரிய மனுஷன் நீ. இப்படிப் பண்ணிட்டியே?" கிருஷ்ணமூர்த்தி ஆவேசமாய் கத்திவிட்டுப் போக அவமானத்தால் குறுகிப் போனார் தேவேந்திரன்.

வருண் கைகொட்டி சிரித்தான். தேவேந்திரன் நிமிர்ந்தும் பாராமல் அமர்ந்திருக்க, அருகில் நின்ற ராமநாதனிடம் வந்தான் வருண். "இது எல்லாம் உன் வேலையாகத்தான் இருக்கும். எனக்குத் தெரியும். இனி இதுபோல் எதுவும் நடந்தால் உன் தலையைத் திருகிக் கொன்றே போட்டு விடுவேன்" - என்றான் மிரட்டலாய்.

"தம்பீ.. நான்.." என அவர் தொடங்க, "ஏய் ச்சீ வாயை மூடு. எங்கிட்ட ஒரு வார்த்தை பேசக் கூடாது நீ. அவர் கூட நீயும் தானே போனே. என் தென்றலை விரட்ட எப்படி உங்களுக்கு மனசு வந்தது. அவ... அவ மனசு பூ மாதிரி. என்னவெல்லாம் பேசினீர்களோ, என்னை ஒரேயடியாய் தலை முழுகிவிட்டுப் போய்விட்டாளே. எத்தனை கனவு கண்டிருப்போம். எங்கள் எதிர்காலத்தை எண்ணி. அவை அனைத்தையும் ஒரே நாளில் பொசுக்கி விட்டீர்களே. நான்

சாகும் வரை உங்களை மன்னிக்க மாட்டேன்'' விரல் நீட்டி எச்சரித்து விட்டு வெளியேறினான்.

அவசரமாய் கையைக் கழுவி விட்டு பின்னே ஓடி வந்து கதவைத் திறந்து விட்டான் கதிர். வருண் ஏறிக் கொண்டதும் தானும் ஏறிக் கொள்ள ''கோவில்மேடு போ கதிர்'' - என்ற ஒற்றை வார்த்தையோடு கண்களை மூடிக் கொண்டு இருக்கையில் சாய்ந்து கொண்டான். கார் புறப்பட்டுப் போய்விட வேகமாய் வாசலுக்கு வந்த மகாலஷ்மி கண்ணீரோடு அப்படியே நின்றாள். கோபமாய்த் திரும்பியவள், ''நீங்கள் மனிதர்தானா? அவன் உங்களிடம் கேட்டானா கல்யாணம் செய்து வையுங்கள் என்று. என் குழந்தை கேட்ட மரப்பாச்சி பொம்மையை உடைத்து எறிந்து விட்டு, இப்போது தங்கமும் வைரமும் இழைத்த பொம்மையை நீட்டினால் அதை வாங்கிக் கொள்ளுமா? என் மகன் வாழ்க்கையில் முதன் முதலாய் என்ன கேட்டான்? அம்மா எனக்குத் தென்றலைப் பிடித்திருக்கிறதம்மா. அவளோடு வாழத்தான் ஆசைப்படுகிறேன் என்றானே. பெற்றவராய் இருந்து அவன் ஆசையை நிறைவேற்றி வைத்தீர்களா? என் குழந்தையின் ஆசையை உயிரோடு கொன்று விட்டீர்களே. துள்ளித் திரிந்த என் செல்வத்தை நடைப்பிணமாக்கி விட்டீர்களே. எத்தனை நாள் கழித்து இன்று என் மகன் என்னிடம் பேசினான் தெரியுமா? அவனுக்காக ஆசையாய் செய்த சாப்பாட்டைக் கூட சாப்பிடாமல் என் மகன் பட்டினியாய் போய்விட்டானே. உங்கள் இருவருக்கும் திருப்திதானே. போங்க. போய் கொட்டிக் கொள்ளுங்கள்'' என்றவாறு கண்ணீருடன் பூஜையறைக்குள் நுழைந்து கொண்டாள்.



பெருமூச்சோடு கண்ணீரும் வழிய அப்படியே அமர்ந்திருந்தார் தேவேந்திரன்.

''ஐயா, நான் நல்லதிற்குத்தான்..'' என்ற ராமநாதனை தடுத்தார். ''வேண்டாம் ராமு. எதுவும் சொல்ல வேண்டாம். எப்போதும் நடப்பதுதானே... நான் அவசரப்பட்டிருக்கக் கூடாது. என் மகன் மனதில் அந்தப் பெண் இத்தனை ஆழமாய் பதிந்து போயிருப்பாள் எனத் தெரியாமல் போய்விட்டதே. தொழிலில் ஜெயித்து ஜெயித்து கர்வம் என் கண்ணை மறைத்திருக்கிறது. அதனால்தான் இன்று மனைவியையும் மகனையும் அழ வைத்துக் கொண்டு தரையில் விழுந்த மீனாய் துடித்துக் கொண்டிருக்கிறேன். நான் என்ன செய்தால் இவன் என்னை ஏற்றுக் கொள்வான்?'' தலையைப் பற்றிக் கொண்டார்.

''ஐயா, தம்பி இவ்ளோ ஆழமா அந்தப் பெண்ணை விரும்பின மாதிரி அந்தப் பொண்ணும் விரும்பி யிருக்குமோ, ஒருவேளை நம்ம தம்பி மாதிரி அதுவும் கல்யாணம் பண்ணிக்காம இருந்தா?''

படக்கென எழுந்தார். ''ஒருவேளை அப்படியும் இருக்குமோ? அந்தப் பெண் அப்படிக் காத்திருந்தால், நிச்சயமாய் அவளை மருமகளாக்கிக் கொள்வேன். அவள் காலில் விழுந்தேனும் என் மகனை ஏற்றுக் கொள்ளச் சொல்ல வேண்டும். ராமு, அந்தப் பெண் இருந்தது வாடகை வீடுதானே? உனக்கு அந்த இடம் நினைவிருக் கிறதா? அந்த வீட்டுக்காரரிடம் விசாரிக்கலாமே'' படபடப்பாய் கேட்டார்.

''நினைவு இருக்குதுய்யா. கோவில்மேடு பக்கத்துல சிவாஜி காலனியில ஒரு சந்துலதான் அந்தப் பொண்ணு

இருந்தது. வீடு கூட ஒரு ஓட்டுவீடு. வாங்கய்யா போய் விசாரிச்சுப் பார்ப்போம்'' - அவசரப்படுத்தினான் ராமநாதன்.

''ஒரு நிமிஷம் இரு'' என்றவராய் பூஜையறையை நோக்கி நடந்தார். உள்ளே தீபம் சுடர் விட்டு எரிய மகாலஷ்மி கண்களை மூடிக் கொண்டு கந்த சஷ்டி கவசத்தை உச்சரித்துக் கொண்டிருந்தாள். கண்களில் நீர் நிற்காமல் வழிந்து கொண்டிருந்தது.

''லஷ்மி! ஒரு நல்ல விசயமாய் வெளியே போகிறேன். அது நல்லபடியாய் முடிந்தால் நம் மகன் பழைய வருணாய் நமக்குக் கிடைத்துவிடுவான். ஆம் லஷ்மி. நான் அந்தத் தென்றலை தேடிப் போகிறேன். நம் அதிர்ஷ்டம் ஒருவேளை நம் வருணைப் போல் அந்தப் பெண்ணும் திருமணம் செய்யாமல் இருந்தால் மன்றாடி அவளை நம் வீட்டிற்கு அழைத்து வருவேன். நம் மருமகளாக ஏற்றுக் கொள்வேன். இந்த நல்ல விஷயம் நல்ல படியாக நடந்தேற நீ என் எதிரில் வரவேண்டும் லஷ்மி. உன் எதிரில் சென்றால் அந்த செய்தி சுபமாக இருக்கும். வருகிறாயா?'' - என்றார் மென்மையாய்.

ஆர்வமாய் கண்களைத் திறந்தாள். ''உண்மையாகத்தான் சொல்கிறீர்களா, இது நடக்குமா?'' அவள் கேட்ட நொடி அவரது செல்போன் கிணுகிணுத்தது. ''பார்த்தியா! மணி கூட அடிக்குது. நாம நினைச்சது நல்லபடியா நடக்கும். நம்ம புள்ளை நல்லா வாழ்வான் பாரேன்'' - என்றவாறே போனை எடுத்து காதிற்கு கொடுக்க, ''ஐயா நான் கதிர் பேசறேன்யா. சாருக்கு உடம்பு ரொம்ப மோசமா இருக்குய்யா. கார்ல வரும்போதே இரத்தமா வாந்தி எடுத்திட்டாரு. இங்கே உள்ள ஜே.கே. ஹாஸ்பிடல்ல சேர்த்திருக்கேன். அவங்க



என்னவெல்லாமோ சொல்லி பயமுறுத்துறாங்க. நீங்க உடனே அம்மாவையும் அழைச்சிட்டு வாங்கய்யா. ஐ.சி.யூ,ல அட்மிட் பண்ணியிருக்கு. சீக்கிரம் வாங்கய்யா'' கலக்கமான குரலில் கதிர்வேல் பேச தேவேந்திரன் போனை நழுவ விட்டார்.

## 7

*கண்கள் இரண்டும் என்று*
*உம்மைக் கண்டு பேசுமோ*
*காலம் இனிமேல் நம்மை*
*ஒன்றாய் கொண்டு சேர்க்குமோ!*

''என்னடி சில்வண்டு! வேலைக்கு கிளம்பிட்ட போல. ஆமா என்னடி இது காதுல ஏதோ புதுசா மின்னுது'' ரோட்டோரமாய் உமா குனிந்த தலை நிமிராமல் நடந்து செல்ல வண்டியை உருட்டிக் கொண்டே வந்தான் அழகப்பன். கோபமாய் நிமிர்ந்தாள் உமா.

''இந்தா, வாடி போடின்னு பேசின பல்லைப் பேத்துடுவேன் ஆமாம்.''

''ஏன்டி கோவிச்சுக்கிறே. உன்கிட்ட எனக்கு உரிமை இல்லையா? நீ எனக்கு தூரத்து உறவுதானடி. அதை நெருங்கிய உறவா மாத்தலாம்னு நினைச்சா நீதான் மாட்டேனுட்ட. ஆமா உன் அப்பனுக்குக் கூட புத்தி வந்திடுச்சு போல. உனக்கு நகை நட்டு செய்து போட்டிருக்கானே.''

''ஏய்! என் அப்பனை மரியாதை இல்லாமப் பேசாதே. இது ஒண்ணும் அப்பன் வாங்கிப் போடலை, என் பிரண்டு தென்றல்தான் வாங்கிக்கச் சொல்லி பணம் தந்தா தெரியுமா?'' - என்றாள் பெருமையாய்.

''இது என்ன பெரிய விஷயம். நீ நாள் பூரா உழைக்கிற. அவ சம்பளம் தர்றா. என்னவோ சும்மா கொடுக்கிற மாதிரி சொல்றே.''

''உனக்கு என்னய்யா தெரியும்? என் சம்பளப் பணம் பூரா அப்பன் சாராயக் கடைக்கு தாரை வார்த்திடும். அதான் இது அவ பணத்திலேயே வாங்கிக்கச் சொன்னா. அவளுக்கு ரொம்ப நல்ல மனசு'' - ஆசையாய் கம்மலை தொட்டுப் பார்த்துக் கொண்டாள்.

''ம். அதான் நெருங்கி வர்றேன். என்னைக் கண்டாலே பாம்பு மாதிரி சீறுகிறாளே. ஏன்டி நீயாவது என்னைப் பத்திக் கொஞ்சம் எடுத்துச் சொல்லக் கூடாதா?'' உரசுவதைப் போல் நெருங்கி வரவும் ஒதுங்கி நின்று முறைத்தாள்.

''ஆமா! எனக்கு வேற வேலையே கிடையாது பாரு. அவ உன்னைப் பார்த்தாலே காறித் துப்புறாளே. உனக்கு கொஞ்சமும் வெட்கமே இல்லையா? பேசாம அவளை மறந்திடு. உனக்கென்ன வேற பொண்ணா கிடைக்காது?'' எரிச்சலோடு சொன்னாள்.

''அடிப் போடி இவளே! என்னைப் பார்த்ததும் வெறுக்கிறான்னு விலகிப் போயிடக் கூடாதுடி. எறும்பு ஊறக் கல்லும் தேயும். நான் கொஞ்சம் கொஞ்சமா அவ மனசை மாத்திடுவேன். பார்க்கிறியா?'' சவாலாகக் கேட்டான்.



''கிழிச்சே! அவ உன்னைக் கண்டாலே எரிமலையாகிடுறா. நீ அவகிட்டே செருப்படி வாங்காமப் போகமாட்டேன்னு நினைக்கிறேன்.''

''நீ கூடத்தான் என்னைப் பார்த்தாலே மூஞ்சைத் திருப்பிட்டு போயிடுவே. நின்னு ஒரு வார்த்தை பேச மாட்டே. இப்பப் பாரு என்கூட எவ்ளோ சகஜமா பேசிட்டு வர்றே. இதை மாதிரி அவளும் மாறிடுவா பாரேன்.''

நெஞ்சு சுருக்கென தைத்தது. ச்சே! இவனுடனா இத்தனை நேரம் பேசிக் கொண்டு வந்தோம். பொறுக்கி! தன்னிடமே இன்னொரு பெண்ணைப் பற்றி பேசுபவனை எப்படி மனிதனாக மதிப்பது. ச்சீ, இவன் நிழல் தன் மீது பட்டால் கூட பாவம். விடுவிடுவென நடக்க ஆரம்பித்தாள்.

''அடக் கோபத்தைப் பாரு. போடி போ. அவ்வளவு சீக்கிரம் உன்னை விட்டுடுவேனா. உனக்கு ஒருநாள் கச்சேரி இருக்கு. அப்பப் பார்க்கலாம். இப்ப வேலையிருக்கு. வரட்டுமா. அப்புறம் நான் கேட்டதாச் சொல்லு உன் தோழிகிட்டே. யேய் பார்த்துப் போடி. எம் மேல உள்ள கோபத்தில யாரையாவது முட்டிக்கப் போறே'' சொல்லிக் கொண்டே பைக்கை உயிருட்டிக் கிளப்பினான்.

மனம் முழுக்க பற்றி எரிந்தது. கட்டையில போறவன். இந்த ஜென்மத்தில் அவன் திருந்தப் போறதில்லை. மூஞ்சைப் பாரு குரங்காட்டம். கலா வீடு வந்ததும் நின்றாள் உமா. கலா வாசலிலேயே நிற்க இருவரும் இணைந்து நடக்க ஆரம்பித்தனர். உமா அமைதியாகவே வந்ததும், ''ஏன்டி, முகமெல்லாம் வாடியிருக்கு. எதுவும் பிரச்சனையா?'' என்றாள் பரிவோடு.

''சேச்சே... இல்லப்பா ஏதோ யோசனை. நேராமாச்சே சீக்கிரமா வா'' - வேகமாக நடையைப் போட்டு வர வாசலருகே பூத்திருந்த பூச்செடிகளை ஆராய்ந்து கொண்டே தலையை உலர்த்திக் கொண்டிருந்தாள் தென்றல். இடைவரை நீண்டு கருத்த கூந்தல், கொடிபோல் உடல். சந்தன நிறம். கருவண்டுக் கண்கள். சிரித்தால் மின்ன லடிக்கும் பற்கள். ஆனால் சிரிப்பது குறைவு. அமைதியாய் இருக்கும்போதும் அதிக அழகுதான். இவள் முன்னால் நம்மால் நிற்கவும் முடியாது. துளி பொறாமையோடு அவளைப் பார்த்தாள் உமா.

''ஹேய் உமா! என்ன புதுசா பார்க்கிற மாதிரிப் பார்க்கிறே. என்னாச்சு உனக்கு?'' முகத்தினருகே சொடுக்குப் போட்டாள் தென்றல்.

''என்னன்னே தெரியலப்பா. அடிக்கடி இப்படித்தான் பேயறைஞ்ச மாதிரி ஆகிடுறா. கொஞ்ச நாளா இவளுக்கு என்னவோ ஆயிடுச்சு'' - கலா கூற,

''ஆமா பெரிய கண்டுபிடிப்புதான். வா வேலையைப் பார்ப்போம்'' - என்றவாறே உள்ளே போனாள்.

வாசலில் நின்றவாறே, ''ஆமா என்ன அதிசயம். வீடே அமைதியா இருக்கு. அப்பா இன்னும் எழுந்திருக்கலையா, இல்லையே! காலைத் தென்றல் கேட்காம இருக்க மாட்டாரே. தென்றல் அப்பா எங்கே? படுக்கை கூட காலியா இருக்கு'' எனக் கேட்ட கலா, தோழியிடம் பதிலின்றிப் போகவே தோழியை உற்றுப் பார்த்தாள்.

தென்றலின் கண்கள் லேசாக கலங்கியிருக்கப் பதறினாள்.



''ஏய் அப்பா, எங்கேடி? ஏன் அழறே? சொல்லு அப்பாவுக்கு என்ன? உடம்பு ஏதும் சரியில்லாமப் போச்சா? நீ மௌனமா இருக்கிறதப் பார்த்தா பயமா இருக்கே சொல்லுடி'' - தென்றலின் தோளைப் பற்றி உலுக்கினாள் கலா.

அதற்குள் வீட்டினுள் சென்ற உமாவும் மேகநாதனைக் காணாமல் திரும்பி வர தென்றலின் கண்ணீர் இருவரையும் பதற வைத்தது.

குலுங்கி அழ ஆரம்பித்தவளைத் தோள் பற்றி அணைத்து வீட்டினுள் அழைத்துச் சென்று அமர வைத்தாள் கலா.

''ஏய், என்னன்னு சொல்லுப்பா. இப்படி ஒண்ணும் சொல்லாம அழுதா என்ன அர்த்தம்? என்னான்னு சொல்லேன்'' - உமா பதட்டமாய்க் கேட்க,

''ஒண்ணுமில்லடி. நேத்து அப்பாவுக்கும் எனக்கும் சின்னதா ஒரு வாக்குவாதம்.''

''என்ன உன் கல்யாணத்தைப் பத்தியா?'' - என்றாள் கலா.

''ம்'' மௌனமாய் தலையசைத்தாள் தென்றல். ''அதுதான் எப்பவும் நடக்கிறதாச்சே!''

''அதில்லடி. நேத்து கொஞ்சம் எல்லை மீறிப் போச்சு. அப்பா எங்கிட்டே அரளிக்காய் பறிச்சிட்டு வரச் சொல்லுமளவுக்குப் போயிருச்சு.''

''அய்யோ!'' தோழியர் வாயில் கைவைத்து அதிர்ந்தனர்.

''நானும் எப்பவும் போல பேசிட்டு வேலையைப் பார்க்க பின்னால போயிட்டேன். திரும்பி வந்து பார்த்தா அப்பா ரெடியாக வெளியே புறப்பட்டுட்டு இருந்தாங்க. எங்கேப்பா போறீங்கன்னு கேட்டேன். மனசு சரியில்லை. எம் பிரண்டு வீட்டுக்குப் போறேன்னு சொல்லிட்டுப் போயிட்டாங்க. அந்தத் தாங்குக் கட்டையோட பஸ்ஸில எப்படி ஏறிப் போவீங்கன்னு தடுத்தேன். எல்லாரும் உன்னை மாதிரி மனசாட்சி இல்லாமலா இருப்பாங்கன்னு சொல்லிட்டுப் போயிட்டாங்க'' என்றபடி விசும்பினாள் தென்றல்.

''அப்பா சரியாத்தான் சொல்லியிருக்கார்'' - என்றாள் உமா.

வெடுக்கென நிமிர்ந்தாள் தென்றல். ''ஆமா, எல்லாரும் உன்னை மாதிரி கல் நெஞ்சமாவா இருப்பாங்க. யாராவது ஹெல்ப் பண்ணி பஸ்ல ஏற்றி விட்டிருப்பாங்க, அதைத்தான் சொன்னேன்.''

''நான்.. நான் கல்நெஞ்சக்காரியா...?'' திணறினாள் தென்றல்.

''பின்னே இல்லையா, வயதான காலத்தில் ஒரு தகப்பனுக்கு வேற என்னடி வேணும்? தன் மகள் குடும்பம் குழந்தைகளோடு வாழ வேண்டும் என்றுதானே ஆசைப்படுவார். அவர் ஆசையை நிறைவேற்றுவதுதானே உன் கடமை. இந்த ஏழெட்டு வருடங்களில் எத்தனை மாப்பிள்ளைகளை விரட்டியடித்திருப்பாய். அப்போதெல்லாம் அப்பா பட்டபாடு எங்களுக்கு மட்டும்தானே தெரியும், நீ கல் போலத் தானே இருப்பாய். எத்தனை நாள்தான் அவரும் உன்னிடம் கெஞ்சுவார். அதனால்தான்



கிளம்பிட்டார். எங்கே போனாரோ? எதற்காகப் போனாரோ?'' ஆத்திரமாய் உரைத்த உமாவின் வாயைப் பதறி மூடினாள் தென்றல்.

''அபசகுணமாய் எதையும் சொல்லிடாதே உமா. என்னால் தாங்க முடியாது. நான் உயிர் வாழ்வதே என் அப்பாவிற்காகத்தான். அவர் இல்லை என்றால், என்றோ உயிரை விட்டிருப்பேன்'' என்றாள் கண்ணீரோடு.

''பிறகேன் அவரை அப்படி வதைக்கிறாய்?'' என்றாள் கலா.

''இல்லை கலா. நான் அப்பாவை வதைக்கவில்லை. என்னை நானே வதைத்துக் கொள்கிறேன். ஒரு ஏமாற்றுக்காரனை நம்பி ஏமாந்த எனக்கு நானே கொடுத்துக் கொள்ளும் தண்டனை தான் இது. இது அப்பாவிற்குத் தெரியும். தெரிந்தும் என் மனதை நோகச் செய்தால் நான் என்ன செய்ய முடியும்? அவன் ஏற்படுத்திய காயம் என் மனதில் ஆறாத ரணமாய் இருக்கும்போது என்னால் எப்படி இன்னொருவரை ஏற்றுக் கொள்ள முடியும்? சொல்லுடி'' - கண்கள் குளமாக தென்றல் கேட்க தோழியர் அதிர்ந்து போயினர்.

''தென்...ற.. ல்..''

''ஆமாம். அன்று கேட்டாயே அப்பாவிற்கு எப்படி கால் உடைந்தது என்று? அது விதி அல்ல. சில பணம் படைத்த பொறுப்பில்லாத தறுதலைகளால் நடந்த விபத்து. சில கல்லூரி மாணவர்கள் வழுக்குப் பாறையில் ஏறுவதை, அப்பா பார்த்துத் தடுத்திருக்கிறார். அதை அலட்சியம் செய்து போன ஒருவன் வழுக்கி கீழே நின்ற என் அப்பாவின்

மேல் மோதி அதே வேகத்தில் அப்பாவையும் இழுத்துச் சென்றதால் அப்பா பாறைக் கூட்டத்தில் விழுந்திருக்கிறார். அப்பா இறந்து விட்டதாகவே நினைத்து அனைவரும் கூச்சலிட்டபோது அங்கு வந்த சிலர் பாறையில் இறங்கி, கயிற்றை கட்டி மேலே எடுத்து உயிர் இருந்ததால் கோவை ஹாஸ்பிடலில் சேர்த்துவிட்டு என்னிடம் தகவல் சொல்ல வந்தவன்தான் அவன். அவன், வருணன். அமைதியாய் இருந்த என் வாழ்வில் கோடை மழையாய் வந்து இறுதி வரை அந்த மழையை என் கண்களுக்குக் கொடுத்துவிட்டு ஓடிப் போனவன். பணக்காரக் கோழை. என் மனதை ரணமாக்கி விட்டு இன்னொரு பெண்ணை மணந்து கொள்ள அயல்நாடு சென்று விட்ட கயவன்.''

சொல்லும் போதே தென்றலின் முகம் கடுத்தது. தோழியர் ஒருவரை யொருவர் திகைப்பாய் பார்த்துக் கொள்ள, தென்றல் தொடர்ந்தாள்.

அன்று காலையில் எழும்போதே, தென்றலின் மனம் கலங்கிப் போயிருந்தது. நேற்றுப்போன அப்பா இன்னும் ஏன் வரவில்லை. அதிகாலை புறப்பட்டு இந்நேரம் வந்துவிடுவாரே. மனம் கலங்கியவாறே எழுந்து குளித்து கல்லூரிக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தபோதுதான் அந்தக் குரல் கேட்டது.

''வீட்ல யாரும் இல்லீங்களா? ஹலோ.. ஹலோ..'' அந்நிய ஆடவனின் குரல் கேட்டதும் அவசரமாய் துப்பட்டாவை எடுத்துத் தோளில் வழிய விட்டவாறே ''யாரு, யார் நீங்க?'' என வெளியே வந்த தென்றலைப் பார்த்ததும் வியந்து போனான் வருண். அவன் எதிர்பார்த்து வந்தது ஒரு முப்பது நாற்பது வயதுப் பெண்மணியை



ஏனென்றால் மேகநாதன் தலைமுடி பாதிக்குமேல் நரைத்திருந்தது. எப்படியும் அறுபது வயதிற்கு மேல் இருக்கும். முதியவர் வலியிலும் மயக்கத்திலும் 'ஐயோ என் குழந்தை என்னைத் தேடுவாளே, தனியே தவிப்பாளே. என்னை மகளிடத்தில் கொண்டு போய் சேர்த்து விடுங்கள். அவள் முகத்தைப் பார்த்தபின் சந்தோஷமாய் கண்ணை மூடிவிடுவேன்'' என விடாமல் புலம்ப அவரது அட்ரஸை வாங்கிக் கொண்டு அவருக்கு துணையாய் தன் நண்பர்களை இருக்க வைத்துவிட்டு, இங்கே வந்தால்... ஒரு சின்னஞ்சிறு பட்டாம்பூச்சி அல்லவா வந்து நிற்கிறது. பேச்சின்றி நின்ற வருணைப் பார்த்ததும் தன் ஆடையை ஒருமுறை குனிந்து சரிபார்த்து விட்டு அவன் முகத்தின் முன்னே சொடுக்கினாள் தென்றல்.

''ஹலோ! யார் ஸார் நீங்க, வந்தீங்க. ஒண்ணும் பேசாம சிலைசாகி நிற்கிறீங்க? உங்களுக்கு யார் வேணும்?'' அதட்டலாய்க் கேட்டாள்.

''நீங்கதான் வேணும்'' குறும்பாய் பதில் வந்தது.

''வ்வாட்..'' அதிர்ச்சியாய் விழியை விரிக்க, ''அடேங்கப்பா, என்ன ஐஸ். சும்மாவா சொன்னாங்க பெண்களோட கண்கள் கடல். அதில விழுந்தா நீந்தி கரையேற முடியாதுன்னு. ரொம்ப கரெக்ட்டா சொல்லி யிருக்காங்க'' - என விளையாட்டாய்க் கூறவும் தென்றல் கோபமானாள்.

''லுக் மிஸ்டர்., நீங்க யாருன்னு இன்னும் சொல்லல. உங்களுக்கு யாரு வே.. இல்ல நீங்க யாரைப் பார்க்கணும்?''

"உங்களைத்தான் பார்க்கனும்." மீண்டும் குறும்பாகவே அவன் சொல்ல, "யூ ஸ்டுப்பிட். அறிவில்ல உனக்கு. நீ என்ன வேலை வெட்டி இல்லாதவனா, உன்னைப் போல் எங்களுக்கும் வேலை இல்லை என்று நினைத்தாயா? எனக்கு காலேஜ்க்கு லேட்டாகுது. அவுட்" வெளியே கை நீட்டினாள்.

"அட காலேஜா, நான் ஸ்கூலுக்குப் போகிற பாப்பான்னு நினைச்சேன். முகத்தில இன்னும் அந்தக் குழந்தைத்தனம் மிச்சமிருக்கே. அதிலயும் நீங்க கோபப்படுறப்போ முகம் குங்குமமா சிவக்குதே. அந்திவானச் சூரியனைப் பார்க்கிற மாதிரி அற்புதமான காட்சி. எங்க, எனக்காக இன்னொரு வாட்டி கோபப்படக் கூடாதா?" என்றான் கெஞ்சுதலாய்.

தென்றல் துணுக்குற்றாள். ஒருவேளை பைத்தியமாய் இருக்குமோ. மெண்டல் ஹாஸ்பிடலில் இருந்து தப்பி வந்திருப்பானோ? ஆனால் பைத்தியம் இத்தனை அழகாய் உடுத்தியிருக்குமா? மனதிற்குள்ளாக அவனை அளந்தாள்.

இளநீல சர்ட்டும் கருநீல பேண்டுமாய் புல் ஹேண்ட் இவற்றோடு வெகு நாகரீகமாய்த்தான் இருந்தான். கழுத்தில் ஒட்டினாற் போல் செயின் மின்ன கைகளில் வாட்ச் மோதிரம், அதோடு ஒரு சாவியும் இருக்க, அவனுக்குப் பின்னால் எட்டிப் பார்த்தாள். புதுவகைக் கார் ஒன்று கண்ணை உறுத்தாத புது நிறத்தில் நின்றிருந்தது. கால்களில் பளபளக்கும் ஷூ. அளவான மீசை, கருகருவென இருந்தது. அடர்த்தியான தலைமுடி ஒழுங்காக வெட்டப்பட்டு அழகாய் வாரியிருந்தது. ஏதோ இதமான நறுமணம் கூட அவனிடம் இருந்து வீசியது. பைத்திய



என்றால் இப்படி அழகாய் ட்ரெஸ் பண்ணிக் கொண்டு காரில் வந்து இறங்குமா?

"நீங்க இப்போ என்னைப் பத்தி என்ன நினைக்கிறீங்கன்னு சொல்லட்டுமா?" என அவன் கேட்கவும் திடும்மென விழித்தாள்.

"என்ன பார்க்கிறீங்க? எனக்குக் கொஞ்சம் சைக்காலஜியும் தெரியும். சொல்லட்டுமா.." என்றான் புன்னகையுடன். வசீகரமான அந்தப் புன்னகையில் கொஞ்சம் தடுமாறித்தான் போனாள் தென்றல். அவசரமாய் மறுத்தாள். "வேண்டாம், சொல்ல வேண்டாம். ப்ளீஸ் எனக்குக் காலேஜுக்கு டயமாச்சு. நீங்க யாருன்னு சொல்லுங்க. சிவராமன் மாமாவைப் பார்க்க வந்தீங்களா?" என்றாள்.

"சிவராமன் மாமாவா அது யார்?" விழித்தான்.

"என் அப்பாவின் நண்பர். இந்த வீட்டின் சொந்தக்காரர். தற்சமயம் இங்கில்லை. வெளியூர் போயிருக்காங்க. வர ரெண்டு நாளாகும். உங்களுக்கு யார் வேணும்?" என்றாள் அவசரமாய்.

"ஓ.கே. ஒகே... இனிமேலும் உங்கள் பொறுமையை நான் சோதிக்க மாட்டேன். ஒரு முக்கியமான விஷயமா வந்தேன். உங்களைப் பார்த்ததில் மற்றதையெல்லாம் மறந்து விட்டேன். ஸாரி. உங்கள் அம்மாவைக் கூப்பிடுறீங்களா? அவங்கிட்டதான் சொல்லணும்" என்றான்.

"ஓ. அப்படியா, அப்போ நீ அங்கேதான் போகணும்" என வாசலைக் காட்டினாள்.

"ஓ, வெரி ஸாரி. மிஸ்டர் மேகநாதன், உங்களுக்கு யார்?" என்றான் கொஞ்சம் வருத்தமாய்.

"அவர் எங்க அப்பாதான். ஓ, அப்பாவைப் பார்க்க வந்தீங்களா? அவங்க இப்ப வீட்ல இல்லை."

"தெரியும்" - என்றான் ஒற்றைச் சொல்லாய்.

"தெரியுமா? தெரிந்தே வந்திருக்கிறாய் என்றால், ஹேய்! யார் நீ. உன் பேச்சு பார்வை எதுவும் சரியில்லை. வீட்டில் பெரியவர்கள் இல்லையென்று தெரிந்தே வந்தாயா. நான் ஒரு குரல் கொடுத்தால் போதும், உன் உடம்பு புண்ணாகி விடும். போ, போடா" கோபமாய் சீறியவளைப் பார்த்துச் சிரித்தான் வருண்.

"பொறுமை, பொறுமை, எதற்கு இத்தனை கோபம். நீ ரொம்ப தைரியசாலிதான். சரி வந்து காரில் ஏறு. உன் அப்பாவைப் பார்க்கப் போகலாம்" என்றதும் சிலிர்த்தாள்.

"என்னடா திமிரா? என்ன ரொம்ப உரிமையா காரில ஏறுன்னு சொல்றே?"

"ஏன் நீ மட்டும் ரொம்ப உரிமையா வாடா போடான்னு சொல்லலாம். நான் மட்டும் கண்டைக்காய் சைஸில் உள்ள உன்னை வா போ என்று சொல்லக் கூடாதா? எனக்கும் இந்த உரிமையான பேச்சுதான் பிடித்திருக்கிறது. வம்பை வளர்க்காமல் கதவைப் பூட்டிக் கொண்டு கிளம்பு. உன் அப்பா கொஞ்சம் உடல் நலமில்லாமல் மருத்துவ மனையில் இருக்கிறார். உன்னைப் பார்க்க வேண்டும் என்று ஒரே புலம்பல். அதற்காகத்தான் வந்தேன் வா. என்னையே பார்த்துக் கொண்டு நின்றால் எப்படி, சுமா



கிளம்பு" கேலியாகவே அவன் சொல்ல கொஞ்சம் பயந்து பின்வாங்கினாள் தென்றல்.

மயக்க மருந்து தெளித்துத் தன்னைக் கடத்திப் போக வந்திருக்கிறானோ, வீட்டில் யாரும் இல்லாத நேரமாய் வந்திருக்கிறானே, வேகமாய் வீட்டிற்குள் நுழைந்து கதவைச் சாத்தினாள் தென்றல். தலையில் கை வைத்துக் கொண்டான் வருண்.

"போச்சுடா. முதலில் பைத்தியக்காரன். இப்போ கடத்தல் காரனா? சரி, என்னை நம்ப வேண்டாம். நான் போகிறேன். நான் சொல்ற ஹாஸ்பிடலுக்கு போய் உங்க அப்பாவை பார்த்துக்கோ. நான் ஒன்றும் வேலையில்லாதவன் அல்ல. எனக்கும் நிறைய வேலை இருக்கிறது. என்னை நம்பி என் கம்பெனியும் ஆயிரம் தொழிலாளர்களும் இருக்கிறார்கள். சரி பாவம், விபத்தில் சிக்கிய பெரியவரை அப்படி விட்டுப் போக மனமில்லாமல் ஹாஸ்பிடல்ல அட்மிட் பண்ணி அவரது வீட்டில் தெரியப்படுத்துவோம் என்று வந்தால் ஒரு அழகான படித்த அருமையான பையனை பைத்தியம், கொள்ளைக்காரன் என்றா நினைப்பது? ஆனாலும் நல்லதிற்கு காலமே கிடையாதுப்பா" என்றவாறே அவன் திரும்பி நடக்க, படாரென கதவைத் திறந்து வெளியே வந்தாள் தென்றல். "என்ன அப்பாவுக்கு விபத்தா. என்ன சொல்ற? நீ பொய்தானே, விளையாட்டு தானே?" நம்பிக்கையின்றிக் கேட்டாள்.

"ஏம்மா, உன்னை இப்போதுதான் முதன் முறையாப் பார்க்கிறேன். உன்னிடம் எனக்கு என்ன விளையாட்டு. சரி சரி அப்படிப் பார்க்காதே. நான் எப்பவும் ஜாலி டைப். அதான் கொஞ்சம் ஜாலியாப் பேசினேன். இப்ப

விஷயத்திற்கு வருவோம். உன் அப்பா மலையில் பள்ளத்தில் விழுந்து விட்டார். இப்போது சுகம் ஹாஸ்பிடலில் இருக்கிறார். அடி கொஞ்சம் பலம்தான். என் மீது நம்பிக்கை இருந்தால் என் காரில் வரலாம். இல்லையென்றால் ஒரு ஆட்டோ பிடித்து வா. நான் முன்னே செல்கிறேன்'' மென்மையான குரலில் அவன் கூறியதும் தென்றலின் உதடுகள் நடுங்க கண்கள் கலங்கியது.

''அப்பாவிற்கு... நிஜமாகவே விபத்தா? பிறகேன் வந்ததும் இதைச் சொல்லவில்லை. அடி பலமாப் பட்டுவிட்டதா'' கண்ணீர் இறங்கியது.

''இதற்காகத்தான் வந்த உடன் சொல்லவில்லை. உன் அப்பாவின் தோற்றத்தைப் பார்த்துவிட்டு அவருடைய பெண் என்றால் கொஞ்சம் முதிர்ந்த பெண்மணியை எதிர்பார்த்துத்தான் வந்தேன். ஆனால் பால்மனம் மாறாத இந்தக் குழந்தையிடம் எப்படிச் சொல்ல முடியும். சொன்னால் தாங்கிக் கொள்ளும் அளவிற்கு மனதிடம் இருக்கிறதா என்பதற்காக கொஞ்சம் விளையாட்டாய் நடந்து கொண்டேன். மற்றபடி அப்பாவிற்கு பயப்படும் படி ஒன்றுமில்லை. அதோடு பெரிய ஹாஸ்பிடல். நம்ம பேமிலி டாக்டர்தான் அப்பாவிற்கு ட்ரீட்மெண்ட் செய்தார். ஸோ, ஒன்றும் பயமில்லை. போகலாமா'' என்றதும்,

''சரி!'' எனத் திரும்பியவள் நின்றாள். ''பெரிய ஹாஸ்பிடல் என்றீர்களே, அப்படின்னா நிறைய பணம் வேணுமே. பேங்கிற்குத்தான் போகணும். வீட்ல ஒரு ஆயிரம் ரூபாதான் இருக்கும். பணம் உடனே கட்டணுமா?'' படபடப்பாய் கேட்டவளைக் கையமர்த்தினான்.



''பணத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். அதையெல்லாம் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். அது எங்கள் கடமை. இன்பாக்ட் எங்களைக் காப்பாத்தினதே உங்க அப்பாதான். அவர் மட்டும் தடுக்கலேன்னா நாங்க யாரும் இப்ப இல்லாமப் போயிருப்போம்'' எனத் தொடங்கி ஆனைக் கட்டி மலையில் நடந்ததை சுருக்கமாய் சொல்லி முடித்தான்.

கொதித்துப் போனாள் தென்றல். ''யூ பாஸ்டர்ட்ஸ். உங்களோட விளையாட்டுக்கு எங்க அப்பாவை பலியாக்கி விட்டீர்களே. உங்களுக்கெல்லாம் திமிர். பணத் திமிர். அந்தத் திமிரை இப்படியா ஒரு வயோதிகரிடம் காட்டுவது. எங்கப்பாவிற்கு ஒன்று என்றால் உங்களில் ஒருவனைக் கூட சும்மா விட மாட்டேன்'' - கொத்தாய் அவன் சட்டையைப் பற்றி உலுக்கியவளை அதற்கு மேல் பேச விடாமல், இழுத்துக் கொண்டு காரில் உட்கார வைத்து கதவை மூடியவன் அவளது வீட்டின் கதவை வெறுமனே சாத்தி தாளிட்டுவிட்டு வெளிப்புற கேட்டையும் மூடிவிட்டு காரில் ஏறி உட்கார்ந்து ஸ்டார்ட் செய்தான்.

''என்ன செய்தீர்கள் என் அப்பாவை? கொன்றே விட்டீர்களா? உங்கள் பணத் திமிரையும் வாலிபத் திமிரையும் காட்ட அப்பாவியான என் தந்தைதான் கிடைத்தாரா? நீ சொல்வது உண்மையாய் இருக்காது. எங்கள் அப்பாவை வேண்டுமென்றேதான் மலையிலிருந்து தள்ளியிருப்பீர்கள். ஏன் அவர் உங்களுக்கு என்ன தீங்கு செய்தார்? ஏன் இப்படிச் செய்தீர்கள்?'' - மீண்டும் மீண்டும் தென்றல் குற்றம் சாட்ட அவள் புறம் திரும்பி மென்மையாய் சிரித்தான் வருண்.

''உனக்கு எப்படி கல்லூரியில் சீட் கொடுத்தார்கள்?'' அவன் சீண்ட,

''என்ன? ஏன் எனக்கென்ன, நைன்டி பர்சன்டேஜ் மார்க் எடுத்திருந்தேன். பிறகெப்படி சீட் தராமல் இருப்பார்கள்'' சிலிர்த்துக் கொண்டு வந்தாள்.

''பிட் அடித்தாயா என்ன? ஏன்னா உனக்கு அறிவு இருப்பதாகப்படவில்லை எனக்கு. நாங்களே தள்ளி விட்டிருந்தால், எதற்காக அங்கிருந்து அத்தனை கஷ்டப்பட்டு தூக்கி இங்கு வந்து ஆஸ்பிடலில் சேர்த்துக் காப்பாற்ற வேண்டும். ம்..?'' அவனது கேள்வியால் விழித்தாள்.

## 8

*உன்னைப் பார்த்த பின்பு*
*நான் நானாக இல்லையே*
*என் நினைவு தெரிந்து - நான்*
*இதுபோல இல்லையே...*

உறக்கம் வராமல் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான் வருண். எப்போதும் உறக்கம் வரும்வரை கம்ப்யூட்டர் புக்ஸ் அல்லது டி.வி. என ஏதாவது ஒன்றில் ஆழ்ந்துபோயிருப்பவன் இப்போது அவை எதையும் தேடாமல் எதையோ நினைப்பதும் சிரிப்பதுமாக இங்கும் அங்குமாய் புரண்டு படுத்தான். கண் மூட நினைத்தால் விழிகள் அடம்பிடித்தன. விழிகளுக்குள் அழுத்தமாய் நின்று கொண்டிருந்தாள் தென்றல். அவளைச் சந்தித்து



இதோ இரண்டு மாதம் முடிவடையப் போகிறது. இந்த ஐம்பத்தி ஏழு நாட்களும் தூக்கம் என்பது தூரமாய் போனது உண்மை. தூக்கம் மட்டுமா நண்பர்கள் கூடத்தான். ரோஹித் கேட்டே விட்டான். ''டேய் வருண், நம்ம ஷ்யாம்தான் பள்ளத்தாக்குல மாட்டிக்கிட்டான். பொழைப்பானா மாட்டானான்னு பயந்துட்டு இருந்தோம். அவனே எழுந்து நடமாட ஆரம்பிச்சுட்டான். ஆனா நீ அதள பாதாளத்தில விழுந்திட்டியேடா. அந்த மாதிரி விழுந்து எவனும் எழுந்ததே இல்லையே. நீ எப்படி மீளப் போற. எப்படி இருந்தவன்டா நீ. இப்ப இப்படி ஆயிட்டியே'' - என்று கேட்டவனை முறைத்தான் வருண்.

''எனக்கு என்னடா நான் எப்பவும் போலத்தான் இருக்கேன். நீயா ஏதாவது கற்பனை பண்ணிக்காதே'' - என்றான்.

''நான் கற்பனை பண்றது இருக்கட்டும். நீ சேதுவா மாறிடாதே. அவ்வளவுதான் சொல்வேன்'' -தோளைக் குலுக்கியவாறே சொன்னான் ரோஹித்.

'அவன் ஏன்டா சேதுவா மாறணும். இது ஒண்ணும் ஒன்சைட் இல்ல. ரெண்டு பக்கமும் சம்மதம்தான். அதுவும் அந்தப் பெண்ணோட அப்பாவுக்கு டபுள் ஓ.கே. பின்னே நம்ம வருணைக் கூட யாருக்காவது பிடிக்காமப் போகுமா. அந்தப் பொண்ணு வந்த அன்னைக்கு எண்ணெயில் போட்ட கடுகு மாதிரி என்னமாப் பொரிஞ்சு தள்ளிச்சு. ஆனா இப்பல்லாம் வந்த உடனே வருணைத்தான் தேடுது. அதுவும் போன வாரம் அவங்க அப்பா கால்ல சில்வர் பிளேட் பொறுத்தியபோது வருணின் கையைப் பற்றி கண்களில் ஒற்றிக் கொண்டு அழுதாளே. அப்போதே

அந்தப் பெண்ணின் மனது எங்களுக்குப் புரிந்து விட்டது. நீ சும்மா எதையாவது பேசிக் குழப்பிடாதே" - என்றான் வருணின் ஆருயிர் நண்பன் சதீஷ்.

"டேய் சதீஷ். நீதான் அவனை உசுப்பேத்தி விடுற. அந்தப் பொண்ணு ஏதோ தன்னோட அப்பாவை காப்பாத்தினதுக்காக மட்டும்தான் அப்படி அழுதிருப்பா. நீங்களா ஏதாவது நினைச்சி இவனைக் கெடுத்திடாதீங்க" - ரோஹித் மீண்டும் சொல்ல, "இனி நீ வாயைத் திறந்தால் உனக்கு அடுத்த பெட்டை ரெடி பண்ணிவிடுவேன்" - என நண்பர்கள் அனைவரும் அவனை மொத்தினர். வருணுக்கும் அந்த சந்தேகம் இருந்ததுதான். தன் தந்தையைக் காப்பாற்றியதற்காக மட்டும்தான் தென்றல் தன்னுடன் இயல்பாகப் பழகுகிறாளோ என்ற எண்ணம் மனதின் ஓரமாய் நெருடிக் கொண்டுதான் இருந்தது. அதன் முடிவு நாளை தெரிந்து விடும். கட்டிலை விட்டு எழுந்து டிராயரைத் திறந்தான். அந்த சிறிய நீலநிற டப்பாவை திறந்தான். உள்ளே சிவப்பு நிற வெல்வெட் துணியில் அந்த ரத்தினக் கைச் செயின் மின்னியது. அரிசி போன்ற ரத்தினக் கற்களுக்கு மேலே துளி வைரமுமாய் இணைந்து கண்ணைப் பறித்தது. தென்றலின் தந்தக் கைகளுக்கு இது வெகு பொருத்தமாய் இருக்கும். முந்தைய தினம் தன்னிடம் மேகநாதன் சொன்னது நினைவில் வந்தது.

"தம்பி, நாளை மறுநாள் என் மகளுக்குப் பிறந்த நாள். நான் கண்டிப்பாக வீட்டுக்குப் போக வேண்டும். டாக்டரிடம் சொல்லி என்னை வீட்டிற்கு அனுப்பச் சொல்லிவிடுங்கள்" என்றார் கெஞ்சுதலாய்.



"ஏன் ஸார். இப்பத்தான் பிளேட் பொருத்தியிருக்கு. இன்னும் பதினைந்து நாள் நீங்கள் கண்டிப்பாக பெட் ரெஸ்டில் இருந்தே ஆக வேண்டும். கால் நன்றாக குணமாக வேண்டாமா, ஏன் அவசரப்படுறீங்க?"

"இல்ல தம்பி, எனக்கு தென்றல் பிறந்தநாள்தான் பண்டிகை நாள். அன்று முழுக்க நானும் என் மகளும் ரொம்ப சந்தோஷமா இருப்போம். அவ விதவிதமா சமைப்பா. நாங்க சேர்ந்து சாப்பிடுவோம். வெளியே போவோம். கோவிலுக்குப் போவோம். எங்களுக்குன்னு ஒரு தனி உலகம் அமைச்சு சந்தோஷமா கொண்டாடு வோம்" - கண்கள் மின்ன சொன்னவரைப் பார்த்து, "ஏன் ஸார், என்னையும் அந்த உலகத்துல சேர்த்துப்பீங்களா? கடைசி வரைக்கும் உங்க தென்றலோட வாழ ஆசைப்படு கிறேன். என்னை ஏற்றுக் கொள்வீர்களா?" - கேட்டே விட்டான்.

ஒருகணம் வாயடைத்துப் போனார். அடுத்த கணமே மலர்ந்தார். "உங்களைப் போல் ஒரு பிள்ளை எனக்கு இல்லையே என்று வருந்தினேன். நீங்களே மருமகப் பிள்ளையாய் வந்தால் அதைவிட பெரிய சந்தோஷம் ஏது. ஆனால்.. தென்றல் மனதில் என்ன இருக்கிறதென்று.."

"அதை நான் பார்த்துக் கொள்கிறேன் மாமா. உங்களை ஸார் என அழைக்கப் பிடிக்கவில்லை. மாமா, மாமான்னு கூப்பிடலாமா?" தயங்கியவனைப் பார்த்து சிரித்தார் மேகநாதன்.

"அட! சும்மா கூப்பிடுங்க மாப்பிள்ளை" கலகலத்தார்.

''பிறகென்ன மாமா, தென்றலோட பிறந்தநாளை ஹாஸ்பிடல்ல வெச்சே கொண்டாடி விடலாம். எல்லா பேஷண்டுகளுக்கும், ட்ரீட்தான். கேக் நான் வாங்கிட்டு வந்திடுறேன். ஆனா எல்லாம் சஸ்பென்ஸா இருக்கட்டும். தென்றல்கிட்டே சொல்ல வேண்டாம் சரியா'' - எனக் கேட்டுக் கொண்டான்.

மேகநாதன் ஒப்புக் கொண்ட துணிவில் தென்றலுக்கு பிறந்தநாள் பரிசும் வாங்கியாயிற்று. நாளை ஞாயிறு. தென்றலுக்கு கல்லூரி விடுமுறை. ஸோ, நாளைக்கு முழுவதும் அவளுடன்தான் கழிக்கப் போகிறோம் என்ற நினைவில்தான் உறக்கம் வர மறுத்தது. நகை டப்பாவை மூடி பத்திரப்படுத்தி விட்டு நாளை உடுத்திக் கொள்ளும் துணிகளை எடுத்து வைத்தான். ஏழெட்டு துணிகளை மாற்றி கடைசியாய் தென்றலை முதன் முதலாய் சந்தித்த அன்று போட்டிருந்த உடைகளைத் தேர்ந்தெடுத்து லேசாய் முத்தமிட்டுக் கொண்டான்.

காலையில் வேகவேகமாய் குளித்து ஆடை மாற்றி அழகாய் தலைவாரி வாசனை திரவியத்தைப் பூசிக் கொண்டு பரிசுப் பொருளை பாக்கெட்டினுள் பத்திரப் படுத்திக் கொண்டு துள்ளலாய் படியிறங்கி வரும்போது இடுப்பில் கைவைத்துக் கொண்டு நின்றார் தேவேந்திரன்.

''ஹாய் டாட்! குட்மார்னிங்... ஆபீஸ் போகல... ஓ.கே. வர்றேன். டாட் ஒரு முக்கியமான எங்கேஜ்மெண்ட் இருக்கு பை.'' என்றவாறு காலில் ஷூவை மாட்டிக் கொண்டு காபியோடு எதிரே வந்த அன்னையை அணைத்து கன்னத்தில் முத்தமிட்டு 'வர்றேன் மாம்' - என கார்ச் சாவியை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.



''வருண் கண்ணா, டிபன் ரெடி சாப்பிட்டுப் போம்மா'' - மகாலஷ்மி கொஞ்சலாய் அழைத்தாள். ''வேண்டாம்மா. இன்னிக்கு ஒரு பர்த்டே பார்ட்டி இருக்கு. அங்கே சாப்பிட்டுக்கிறேன்'' - நடந்து கொண்டே சொன்னவனைத் தந்தையின் குரல் நிறுத்தியது.

''பார்ட்டி எங்கே சுகம் ஹாஸ்பிட்டல்லயா?'' - நின்று திரும்பி திடுக்கிட்டுப் பின் சிரித்தான்.

''யெஸ் டாட். உங்களுக்கெப்படித் தெரியும்?'' பதட்டத்தை மறைத்துக் கொண்டு இயல்பாகவே கேட்டான் வருண்.

''எப்படித் தெரியுமா? பார்த்தியாடி அவன் மனசில கொஞ்சமாவது பயமிருக்கா? யாரோ ஒரு வைத்தியனுக்கு இரண்டு மாசமா இவன் நம்ம காசிலே மருத்துவம் பார்க்கிறான். இதுவரை மூணரை லட்சம் செலவழிச்சிருக்கான். ஏன்டா உன் இஷ்டத்துக்கு ஆபீஸ்ல வந்து பணம் வாங்கிட்டுப் போயிருக்கே. என்கிட்டே ஒரு வார்த்தை கேட்காம'' - குற்றம் சாட்டும் குரலில் கேட்டார்.

''ஓ ஈஸி டாட். இது யார் பணம். நம்ம பணம். நம்ம பணத்தை எடுத்துச் செலவு பண்ண நான் யார்கிட்ட கேட்கணும். ஏற்கனவே சொன்னேனே. என்னையும் என் பிரண்ட்ஸையும் காப்பாத்தினது அவர்தான். அந்த நன்றிக்காக எவ்வளவு வேண்டுமானாலும் செலவு பண்ணலாம். இதுக்கெல்லாம் கணக்கு கேட்கக் கூடாது சரியா'' - தந்தையின் கன்னத்தைத் தட்டினான்.

''வெறும் நன்றிக் கடன்தானே. வேறொன்றும் இல்லையே?'' மகனை உற்றுப் பார்த்தார்.

சொல்லிவிடலாமா? வேண்டாம். முதலில் தென்றல் மனதைத் தெரிந்து கொண்டு பிறகு சொல்லலாம், முடிவுடன் சிரித்தான்.

''நத்திங் டாட். யூ டோண்ட் ஒர்ரி, வரட்டா'' - அதற்கு மேல் நில்லாமல் சென்று விட்டான்.

''ஹேப்பி பர்த்டே டூ யூ, ஹேப்பி பர்த்டே டூ தென்றல், ஹேப்பி பர்த்டே டூ யூ'' நண்பர்கள் அனைவரும் கோரஸாய் பாடி கைதட்ட மெழுகுவர்த்தியை ஊதி அணைத்தாள் தென்றல். கொஞ்சம் கூச்சமாகவே இருந்தது. இத்தனை நாளாய் அறைக்குள்ளே தானும் தந்தையுமாய் வெகு சிம்பிளாய் கொண்டாடும் பிறந்த நாள். இன்று மருத்துவ மனையிலே இத்தனை ஆண்கள் கூட்டத்தின் நடுவே அதுவும் அருகிலேயே நின்ற வருண் முன் கேக்கை வெட்ட சிரமமாய் இருந்தது. அவளது கையைப் பற்றித் தானே கேக் வெட்ட உதவினான். நடுக்கத்தையும் மீறி சிலிர்த்தது. அனைவரும் பூச்செண்டைப் பரிசளிக்க நன்றியோடு பெற்றுக் கொண்டாள். கண்கள் வருணையே தேடியது. அமைதியாய் ஒதுங்கி நின்றவன் கடைசியாய் வந்து அந்தப் பரிசுப் பொருளை தயக்கமாக நீட்ட வாங்கிப் பார்த்தவள் அதிர்ந்து போனாள். அதைவிட அதிர்ச்சி, அப்பாவே ''மாப்பிள்ளை நீங்களே அவ கையில போட்டு விடுங்க'' என்றதுதான். அதிர்ச்சியோ ஆனந்தமோ மறுக்கத் தோன்றாமலே நின்றாள் தென்றல். அதையே சம்மதமாக ஏற்றுக் கொண்ட, வருண் கைச்செயினை அவளது வலக்கையில் மாட்டிவிட அவள் வெண் தந்தக் கரங்களுக்கு, அத்தனை பாந்தமாய் இருந்தது அது. சிலையாய் நின்றிருந்த இருவரும், நண்பர்களின்



கரவொலியால் தான் இயல்பு நிலைக்குத் திரும்பினர். மனம் படபடத்தபோதும் இது சரியா, தவறா என கேள்வி வண்டாய் துளைத்தது. பயம் சூழ்ந்து கொண்டது.

''இதுல பயப்பட என்ன இருக்கு? நீ ஒண்ணும் வலியப் போகலியே. அவரே தான் உன்னை விரும்பி வாங்கிட்டு வந்து உன் கையில போட்டு விட்டாரு. இதுல தப்பே இல்லை'' என்றாள் கலா சுவாரஸ்யமாய்.

''அதானே, அப்பாவே சம்மதிச்ச பிறகு நீ ஏன் பயப்படணும். நீ சொல்றத வெச்சுப் பார்த்தா நிச்சயமாஅவர் நல்லவர்னு தான் நான் நினைக்கிறேன்'' என்றாள் உமா தன் பங்காய்.

''நானும் அப்படித்தான் நினைச்சேன். முதலில் பயந்தாலும் என் மனம் முழுக்க அவர்தான் இருந்தார். தினமும் என்னைப் பார்க்க வந்திடுவார். ஒருநாள் கூட வராம இருக்க மாட்டார். இந்த நிலையில அப்பாவோட கால் குணமாக ஆரம்பிச்சது. வீட்டுக்கு வர்ற வரையில் கூடவே இருந்து எல்லாம் பார்த்துக்கிட்டாரு. கால் தாங்குக் கட்டையோட அப்பாவை தினமும் வாக்கிங் கூட்டிப் போவாரு. அப்புறம் என்னோட படிப்பு முடிஞ்சது. படிப்பு முடிஞ்சதுமே தன்னோட அம்மா கிட்டே சொன்னாரு. அவங்க அப்பா வெளிநாடு போயிருந்ததால அவர் வந்ததும் வீட்டுக்கு பெண் கேட்டு வர்றதா சொன்னாரு. அந்த ஒரு மாசமும் நாங்க அவ்ளோ சந்தோஷமா இருந்தோம். கார்லயே என்னை அவரோட கம்பெனிகளுக்கு எல்லாம் கூட்டிட்டுப் போனார். கம்பெனி ஹோட்டல், லாட்ஜ்னு எல்லா இடமும் காட்டினாரு. அப்பத்தான் எனக்கு முதன் முறையா அந்த சந்தேகம் வந்தது'' - நிறுத்தினாள் தென்றல்.

"என்ன, என்ன சந்தேகம்?" - ஆவலாய் கேட்டாள் கலா.

"இல்லே, இத்தனை பெரிய பணக்காரர் ஏன் இப்படி எனக்காக மெனக்கெடணும். ஏன் என்னையே சுற்றி வர வேண்டும். அவர் நினைத்தால் எத்தனையோ பணக்காரப் பெண்கள் அவருக்குக் கிடைக்கலாம். பிறகேன் என்னை மணப்பதாகச் சொல்கிறார் என்ற சந்தேகம்."

"போடி இவளே! ஏன் உன் முகத்தை நீ கண்ணாடியில பார்த்ததே இல்லையா? உன்னைப் பார்த்த பிறகு அவருக்கு மற்ற பெண்ணை எப்படிப் பிடிக்கும்? எத்தனை அழகுடி நீ? உன்னை அவருக்கு பிடித்துப் போனதில் உனக்கு என்ன சந்தேகம்?" - கோபமானாள் உமா.

"காசு பணம் பார்த்து வர்றதா நேசம். ஏன்டி அவரை ஏற்றுக் கொண்டாயே அப்போது அவர் உன்னை சந்தேகப் பட்டாரா. இவள் நம் பணத்தைக் கண்டுதான் நம்மை ஏற்றுக் கொண்டாள் என்று. உன்னிடம் சொன்னாரா? நீயாக ஏன் வீணாக சந்தேகப்பட்டாய்?" - என்றாள் கலா.

"இல்லை. அது வீண் சந்தேகமில்லை. உண்மை யாகவே ஆகிவிட்டது. ஆமாம். அதன் பிறகு இரண்டு நாளிலேயே அது தெளிவாகி விட்டது. ஒருநாள் வந்த காரில் இருந்து இறங்காமலேயே, "கனடாவில் ஒரு முக்கியமான வேலை இருக்கிறது. காண்ட்ராக்ட் முடிந்து சைன் பண்ணி விட்டு ஒரே வாரத்தில் வந்து விடுவேன். வந்ததும் நம் திருமணம்தான். ப்ளைட்டுக்கு டயமாச்சு வரட்டுமா" என கை அசைத்துவிட்டுப் போனவர்தான் திரும்பி வரவே இல்லை. நான் அவரைக் கடைசியாகப் பார்த்தது அன்றுதான்" - விழியோரமாய் பூத்திருந்த நீரை சுண்டியெறிந்தாள் தென்றல்.



நம்ப முடியாத அதிர்ச்சியோடு அமர்ந்திருந்தனர் தோழியர்.

"நிஜமாவா சொல்றே. திரும்பி வரவே இல்லையா? ஒருவேளை அவருக்கு அங்கே போன இடத்தில் ஏதேனும் நடந்திருக்குமோ? விபத்து எதுவும் நடந்திருந்தால்... அதனால் கூட வர தாமதம் ஆகியிருக்கலாமே" பதட்டமாய் கேட்டாள் கலா.

"இல்லையில்லை. அப்படி எதுவும் நடக்கவில்லை. அவர் போன மறுநாளே அவர் சார்பில் வந்த அவர் அப்பா நிறைய பேசினார். மகன் பேச எண்ணி பேச முடியாமல் போனதாக நிறையவே பேசினார். என்னை விட்டு ஓடிப் போன அவரைக் கூட மறந்து விடுவேன் கலா. ஆனால் அவர் அப்பா பேசிய வார்த்தைகளில் ஒன்றைக் கூட என்னால்.. என்னால் மறக்கவே முடியாது. நான் அதுவரை கேட்டறியாத பேச்சு கேட்கக் கூடாத பேச்சை சுலபமாகப் பேசிவிட்டார் அந்தப் பணக்காரர். எத்தனை ஏளனம், எத்தனை அசிங்கம், அவமானம்" - நினைப்பே கூனிக் குறுக வைத்தது. கண்கள் இரத்தமெனச் சிவந்தது.

## 9

*வசந்தகாலக் கோலங்கள்*
*வானில் விழுந்த கோடுகள்*
*கலைந்திடும் கனவுகள்*
*கண்ணீர் சிந்தும் நினைவுகள்...*

''ஏம்மா! எம் பையனுக்கு எப்பவுமே தயாள குணம் உண்டு. இரக்க சுபாவம் கூட ஜாஸ்தி. ஏதோ வயதானவர் உயிருக்குப் போராடுகிறார் என்று காப்பாற்றி இருக்கிறான். அதற்காக இளிச்சவாயன் கிடைத்து விட்டான் என்று இப்படியா அப்பாவும் மகளுமாய்ச் சேர்ந்து அட்டையாய் அவனை ஒட்டிக் கொள்வீர்கள். இதுவரை நீங்கள் உறிஞ்சிய தொகை எவ்வளவு தெரியுமா? நான்கு லட்சத்திற்கும் மேல். அதோடு நகையாகவும் வேறு பிடுங்கியிருக்கிறீர்கள்'' என்றவரது கண்கள் தென்றலின் வலது கையில் பதிய ஆயிரம் கம்பளிப் பூச்சிகள் ஒன்றாக ஊர்ந்ததுபோல அருவெறுப்பாய் தனது கையிலிருந்த கைச்செயினை அத்து எடுத்தாள்.

''வேண்டாம்மா! தானமா கொடுத்த எதையும் நாங்க திரும்பி வாங்கிறதில்லை. அவனும் அதையேதான் சொல்லிட்டுப் போனான். எங்கே உங்க அப்பா, அடுத்த மாப்பிள்ளையைத் தேடிப் போயிட்டாரா? கால்ல அடி பட்டது உண்மைதானா? இல்ல அதுவும் நாடகம்தானா?'' - நக்கலாகக் கேட்டார் தேவேந்திரன்.

''அது நாடகம் என்றால் அந்த நாடகத்தை இயற்றியது உங்கள் மகனாகத்தான் இருக்கும். அப்படி ஒரு நாடகம் நடக்கத் தேவையில்லை எங்களுக்கு. உங்கள் மகனிடம் போய்க் கேட்டுப் பாருங்கள்'' சீறினாள் தென்றல். நல்ல வேளையாய் அப்பா இந்தக் கொடுமொழிகளைக் கேட்க இங்கு இல்லை. என்றாலும் நடைப் பயிற்சி முடிந்துவரும் நேரம்தான். தவிப்பாய் வாசலைப் பார்த்தவள் கூசிப் போனாள். வாசலில் நின்றிருந்த காரைப் பார்த்து கூடியிருந்த



கூட்டம். வீட்டினுள் நடந்து கொண்டிருந்த களேபரத்தை ஆவலாய் கவனித்துக் கொண்டிருந்தது.

''இப்படி கோபத்தைக் காட்டினால் நான் பயந்து விடுவேனா, இதோ பாரம்மா. நீ யாரோ, எப்படிப் பட்டவளோ, அதைப் பற்றி எல்லாம் ஆராய நான் வரவில்லை. என் மகனுடன் சேர்ந்து என் சொத்தை யெல்லாம் தெரிந்து கொண்டு அதை உன் பெயருக்கு மாற்றும்படி அவனை நச்சரிக்கிறாயாமே. உனக்கு என்ன உரிமை இருக்கிறது. என்ன துணிச்சலில் அப்படிக் கேட்டாய்? கேட்கிறேன் என்று தப்பாய் எடுத்துக் கொள்ளாதே. என் மகனுடன் அப்படி இப்படி போட்டோ எடுத்து வைத்துக் கொண்டு அவனை மிரட்டுகிறாயா? உன் பேச்சை யெடுத்தாலே அலறுகிறான். சொல் அப்படி எதுவும் இருந்தால் கொடுத்துவிடு. விலையாக எத்தனை லட்சம் கேட்டாலும் தருகிறேன்'' - அவர் பேச தென்றல் போட்ட கூச்சலில் வீடே அதிர்ந்தது.

''ச்சீ! நீயெல்லாம் என்னய்யா பெரிய மனிதன்? வயதில் பெரியவர் என்பதால்தான் உன்னை வீட்டிற்குள்ளேயே அனுமதித்தேன். நீயும் உன் மகனும் வேண்டுமானால் எங்கே எந்தப் பெண் கிடைப்பாள். அவளிடம் கிண்டலாய் பேசி ஜாலம் காட்டி மயக்கலாம் என்று அலையலாம். நாங்கள் அப்படிப்பட்டவர்கள் அல்ல. சித்த வைத்திய சாலையில் கிடைக்கும் வருமானமே போதும் என்ற மனதுடன் வாழ்பவர்கள். பணக்காரர்களைப் போல எங்களுக்குப் புத்தியோ ஏமாற்றும் முறைகளோ கற்று வைத்திருக்கவில்லை. உன் பிள்ளை தான் என்னைத் தேடி ஓடி வந்தானே தவிர நான் ஒன்றும் உன் வீடு தேடி

வரவில்லை. என் தந்தையின் விபத்திற்குத் தானே காரணம் என்றுதான் செலவழித்தானே தவிர எனக்கு உதவு என்று யார் காலையும் நான் பிடிக்கவில்லை. ஊரைச் சுற்றும் தெருப் பொறுக்கியைப் பெற்றுவிட்டு என்னிடம் பேச வந்திருக்கிறாயே, வெட்கமாக இல்லை உனக்கு. வெளியே போய்விடு. இல்லையென்றால் செருப்பால் அடித்தே விரட்டி விடுவேன்'' - புலியின் சீற்றத்தோடு தென்றல் கூற, உடன் வந்திருந்த இன்னொருவர் குரல் கொடுத்தார்.

''ஏம்மா, என்னம்மா மரியாதை இல்லாமப் பேசுற. அவரை யாருன்னு நினைச்சே?''

''யோவ், யாரா இருந்தா எனக்கென்னய்யா, வெட்க மில்லாம ஒரு வயசுப் பொண்ணுகிட்டே என்னவெல்லாம் பேசுறான். இவனுக்கு என்னய்யா மரியாதை வேண்டிக் கிடக்கு. இதோபார் இது கௌரவமானவர்கள் வாழும் இடம். இங்கு நீங்கள் நிற்பதே தவறு. போங்க வெளியே.''

''நாங்க போறது இருக்கட்டும்மா. உனக்கு இன்னும் ரெண்டு நாள் டயம் தர்றேன். அதுக்குள்ள ஊரை விட்டு ஓடிப் போயிடு. இல்ல எம்புள்ளையை மடக்கிப் போட்டு எம்பணத்தையெல்லாம் பறிக்கிறான்னு கம்ப்ளைண்ட் கொடுத்து உன்னையும் உன் அப்பனையும் உள்ளே தள்ளிடுவேன். என் மகன் கனடாவிற்கு எதற்காக போயிருக்கான் தெரியுமா? நாளை அவனுக்கு அங்குதான் என்கேஜ்மெண்ட். நெக்ஸ்ட் வீக் மேரேஜ். எல்லாம் முடிஞ்சதும் அவன் அங்கேயே செட்டில் ஆயிடுவான். பொண்ணு யார் தெரியுமா? ரோட்டோரமா லேகியம் விக்கிறவன் பொண்ணில்ல. மல்ட்டி மில்லியனர் பொண்ணு. நானாவது உன்னை இதோடு விட்டுவிட்டு



போகிறேன். என் சம்பந்தி ரொம்ப மோசமான ஆளு. உன்னை இல்லாமல் பண்ணிவிடுவார். முடிவு உன் கையில்தான் இருக்கிறது. வரட்டுமா, வா ராமு'' - என்றவாறே வெளியேற அந்த சமயத்தில் தான் அப்பா வந்தார்.

''தென்றல் யாரும்மா இது?'' என்றவாறே வீட்டினுள் நுழைய, ''அடடே! இந்த அம்மாளைப் பெற்றவர் நீங்கள் தானா? பெண்ணிடம் எல்லாம் சொல்லியிருக்கேன். பாத்து நடந்துக்கோங்க'' - என்றவர் அதற்கு மேல் அங்கு நில்லாமல் புறப்பட்டுச் சென்று விட்டார். எல்லா நிகழ்வுகளும் கண் முன்னே தோன்றியதைப் போல் இறுகிப் போய் அமர்ந்திருந்தாள் தென்றல். வெகுநேரம் யாரும் பேசவில்லை. ஒருவாறாக தன்னை சுதாரித்துக் கொண்டு வாயைத் திறந்தாள் தென்றல்.

''அப்பா எத்தனையோ முறை கேட்டும் என்னால் முழு விபரத்தையும் சொல்ல முடியவில்லை. பட்டும் படாமலும் சொல்லிவிட்டு வீட்டைக் காலி செய்வதில் மும்முர மானேன். அவர்கள் என்னை பயமுறுத்தியதால் அல்ல. அங்கே இருந்தால் மற்றவர்கள் முகத்தில் எப்படி விழிப்பது? சிவராமன் மாமாவும் நல்லவர்தான். என்றாலும் பணக்காரர்களைப் பகைத்துக் கொள்ள முடியுமா? அதனால் எதிர்த்து ஒன்றும் சொல்லவில்லை. எங்கு போவது என ஒருநாள் முழுக்க யோசித்துத்தான் இந்த ஆனைக்கட்டி மலையைத் தேர்ந்து எடுத்தேன். அப்பா செய்ய முடியாமல் போன தொழிலை நாமே எடுத்துச் செய்தால் என்ன என்று தோன்றியது. என்னதான் ஆங்கில மருத்துவம் கிளை பரப்பி விரித்திருந்தாலும் சித்த வைத்தியம் ஒன்றும் முழுதாய்

அழிந்துவிட வில்லையே. அப்பாவின் உதவியோடு செயல்படத் தொடங்கினேன். இங்கு வந்த பிறகு நடந்ததுதான் உங்களுக்குத் தெரியுமே. அப்பாதான் நம்ப மறுத்தார். "என் மாப்பிள்ளை மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது என்று சொல்லி அவன் கொடுத்த போன் நம்பருக்கு போன் செய்தார். அவன் ஏதோ எங்கேஜ் மெண்டில் இருப்பதாகவும், பிறகு பேசுவதாகவும் சொல்லி இருக்கிறான். அப்போதே அப்பா உடைந்து போனார். இருந்தாலும் ஒரு ஓரத்தில் அவன் மீது நம்பிக்கை இருக்கத்தான் செய்கிறது. இங்கு வந்து சில மாதங்களில் ஒருநாள் பழைய வீட்டிற்குப் போய் வந்தார். அவனை எங்கே எப்படித் தேடுவார்? நடக்க இயலாத கால்களோடு எப்படி அலைய முடியும். பிறகு நான் கண்டிப்பாய் எங்கும் போகக் கூடாது என்று சொல்லிவிட்டதால் வீட்டோடு இருந்தார். நேற்றுதான் கோபித்துக் கொண்டு கிளம்பி விட்டார்" - பெருமூச்சோடு நிறுத்தினாள்.

"சரிப்பா, கவலைப்படாதே. அப்பா இப்போ எங்கே போயிருப்பார் என்று தெரியுமா உனக்கு?" கலா கேட்டாள்.

"நாங்கள் தங்கியிருந்த பழைய வீட்டுக்குத்தான் போயிருப்பார். அந்த வீட்டின் சொந்தக்காரர்தான் சிவராமன் மாமா. அப்பாவின் நண்பர். அவரைத் தவிர வேறு நண்பர்கள் கிடையாது. அங்குதான் போயிருக்க வேண்டும்."

"சரி வா, ஒரு நடை போயிட்டு வந்துடலாம். அப்பா இருந்தால் கையோடு அழைத்துவிட்டு வரலாம், கிளம்பு" என்றாள் கலா.



"இ.. இல்லப்பா, வேண்டாம். இன்று ஒருநாள் பார்த்துவிட்டு நாளை வேண்டுமானால் போகலாம்" - தடுமாறினாள் தென்றல்.

"ஏன்.. ஏன் வேண்டாம்" அதட்டினாள் உமா.

"இல்லடி! அங்கு போனால் எனக்குத் தேவையில்லாத நினைவுகள் வரும். வேண்டாம் ஆறிப் போன காயத்தை ஏன் குத்திக் கிளற வேண்டும்" சலித்தாள் தென்றல்.

"ஏன் தென்றல், கேட்கிறேன்னு தப்பா நினைச்சுக்காதே. உன் மனசில இன்னும் அந்த வருண் இருக்காரா? அதனாலதான் கல்யாணமே வேணான்றியா, சொல்லு தென்றல்" என்றாள் உமா.

முகம் கடுத்தது. "இல்ல. அவன் நினைப்பு இல்ல. ஆனால் அவனால எனக்கு ஏற்பட்ட அவமானத்தை என்னால இன்னும் மறக்க முடியல. அது இன்னும் என் மனசுல நெருப்பா எரிஞ்சுகிட்டுத்தான் இருக்கு. அந்த நெருப்போட இன்னொரு ஆணை ஏறெடுத்துப் பார்க்கவும் பிடிக்கவில்லை. அவனை.. அவன் பெயரைக் கூட நான் கேட்கவிரும்பவில்லை. நான் சொன்னது உங்க மனசோட இருக்கட்டும். இனிமேல் அதைப்பற்றி யாரும் பேச வேண்டாம். ப்ளீஸ்.. வாங்க வேலையைக் கவனிப்போம்" - என்றவாறு எதுவுமே நடவாதவள் போல் எழுந்து சென்றாள் தென்றல். ஒரு நீண்ட பெருமூச்சோடு கலாவும் உமாவும் அவளைப் பின்தொடர்ந்தனர்.

"சிவராமா, நீ சொல்றது உண்மைதானா? என் மாப்பிள்ளை இங்கே வந்தாரா? சொல்லுடா, எப்போ..

எப்போ வந்தார்'' - நண்பனின் தோளைப் பற்றி உலுக்கினார் மேகநாதன்.

''அட நெசம்தானப்பா. அந்தப் பையன் நீங்கள்லாம் போயி கொஞ்ச நாள் கழிச்சு உங்களைத் தேடி வந்தான். விசாரிச்சான். நான் பதில் சொல்லாம விரட்டி அடிச்சிட்டேன். ஆனா திரும்பத் திரும்ப வந்து பரிதாபமா தெருவில நின்னு நீ இருந்த போர்ஷனையே வெறிச்சுப் பார்த்திட்டு இருந்தான். ஒருநாள் மனம் கேளாம அவனோட அப்பா வந்து பேசினதை எல்லாம் சொல்லிட்டேன். கோபமா போயிட்டான். அப்புறம் கொஞ்ச நாளா காணோம். ஏதும் நோய் கண்டிச்சு போல. எலும்பும் தோலுமா திரிஞ்சான். எப்பவாவது வந்து நிற்பான். அவன் அப்பன் உன் பொண்ணு கல்யாணம் பண்ணிட்டு போயிட்டதா சொன்னானாம். நானும் அப்படியே விட்டுட்டேன். நான் அவன்கிட்டே போய் எதுவும் பேசுறதில்லைப்பா. நமக்கு ஏன் பெரியவங்க பொல்லாப்பு. நீ கேட்டியேன்னு தான் சொல்லிட்டேன். சரி நீ எப்போ கிளம்பணும். நான் இன்னிக்கு எம் பொண்ணு வீட்டுக்குப் போலாமின்னு இருந்தேன்'' - சிவராமன் நழுவுவது தெரிந்தது.

''சரிப்பா. நீ புறப்படு. நானும் கிளம்பறேன். சிவராமா எனக்கு ஒரே ஒரு உதவி செய்யுப்பா. என் மாப்பிள்ளை வீடு எங்கே இருக்குன்னு உனக்குத் தெரியுமா? தெரிஞ்சா சொல்லேன். என்னவோ ஒரே ஒருமுறை அவரைப் பார்க்கணும் போல இருக்கு'' - என்றார் மேகநாதன்.

''உனக்கு ஏன்டா வேண்டாத வேலை. உன்னைப் பார்த்தால் வீட்டிற்குள்ளே விடுவார்களோ விரட்டுவார்களோ வேண்டாம்டா. உம் பொண்ணு உன்னைத் தேடுவா. நீ



ஊருக்குக் கிளம்பு'' - விரட்டுவது புரிந்தும் அசையாமல் நின்றார். சிவராமன் மனமும் இளகியது. ''இதோ பார் மேகநாதா, சொன்னாலும் கேட்க மாட்டாய். சரி, உனக்காகச் சொல்கிறேன். ஆனால் சரியான விலாசம் தெரியாது. லாலி ரோட்ல ஏதோ ஆஞ்சநேயர் கோவில் பக்கத்திலனு கேள்விப்பட்டேன். பார்த்துப் போ. என் பெயரைச் சொல்லிடாதே. எதற்கும் போவதற்கு முன் ஒருமுறை யோசித்துக் கொள்'' வற்புறுத்தினார் சிவராமன்.

மேகநாதன் யோசிக்கவில்லை. வருணைப் பார்த்தே ஆகவேண்டும் என்ற முடிவோடு இருபுறமும் தாங்குக் கட்டைகளை ஊன்றிக் கொண்டு நடக்க ஆரம்பித்தார். மெயின் ரோட்டிற்குப் போனால் ஆட்டோ பிடித்துப் போய்விடலாம். வியர்வை ஆறாய்ப் பெருக நடையை எட்டிப் போட்டார். வெயில் உக்கிரமாய் தாக்கியது. ''அடடே, வைத்தியர் ஐயா, நீங்களா? பார்த்து எவ்னோ நாளாச்சு. நல்லா இருக்கீங்களா?'' - ஆவலாய் விசாரித்தவரை கூர்ந்து பார்த்தார்.

''அட, நம்ம பரமசிவன். என்ன பரமு நல்லா இருக்கியா? உன் உடம்பு நல்லா குணமாயிடுச்சா. வயித்துப் புண் நல்லா ஆறிடுச்சா?'' அக்கறையாய் விசாரித்தார் மேகநாதன். பரமசிவன் சிரித்துக் கொண்டார்.

''அய்யா! உங்களுக்கு நல்ல ஞாபக சக்தி. எப்பவோ உங்ககிட்ட வந்த என்னை என் வயிற்று வலியை நினைவு வெச்சிருக்கீங்களே'' வியந்தார்.

''ஆறு மாசமா தொடர்ந்து எங்கிட்டே மருந்து வாங்கி சாப்பிட்டியே. எப்படிப்பா மறக்க முடியும்? குணமாகி விட்டதா?'' மீண்டும் விசாரித்தார்.

''சுகமாகி விட்டதய்யா. இப்போ ஒரு வலியும் இல்லய்யா. நீங்கள் போனது எங்களுக்குத்தான்யா ரொம்பக் கஷ்டமா போச்சு. ஆனாலும் கடவுள் இருக்கான்யா. உங்களையும் உங்க பொண்ணையும் வீட்டை காலி பண்ணிக் கொண்டு போகச் சொன்னானே ஒரு பெரிய மனுஷன். அவனை இப்பத்தான் பார்த்திட்டு வர்றேன்'' பரமசிவம் அலட்சியமாய் சொல்ல பதட்டமானார் மேகநாதன்.

''சம்பந்தியப் பார்த்தியா, எங்கே? எங்கே பார்த்த?''

''அடப் போங்கய்யா. அவனைப் போய் சம்பந்தின்னு சொல்லிகிட்டு. அவன் புள்ள உங்க கால உடைச்சான். அப்பன்காரன் பாவம்யா தென்றலம்மா. அந்தக் குழந்தையைப் போய் வாய்க்கு வந்ததை எல்லாம் பேசி அதோட மனசையே உடைச்சிட்டான். இப்போ பெத்து வெச்சிருக்கிற ஒரே புள்ளைய எமனுக்கு கொடுத்திடுவான் போலிருக்குய்யா.''

''ஏய்.. ஏய்.. என்னப்பா சொல்றே. என் மாப்பிள்ளைக்கு என்னாச்சு? எங்கே பார்த்தாய் அவரை. அவர் உடம்புக்கு என்னப்பா. தயவு செய்து சொல்லுப்பா.'' படபடப்பாய்க் கெஞ்சினார்.

''பதட்டப்படாதீங்கய்யா. நம்ம சோமு உடம்பு சரியில்லாம ஆஸ்பத்திரியில இருக்கான். அவனைப் போய் பார்க்கப் போயிருந்தேன். திரும்பி வரும்போது அந்தப் பயலைப் பார்த்தேன். உடம்புல ஒண்ணுமில்லை. வெறும் கூடுதான் இருக்கு. நிறைய குடிப்பான் போல. என்னவோ டாக்டர் இனிமே தேறாதுன்ற மாதிரிதான் சொன்னார். தகப்பன் நொந்து போய் உட்கார்ந்திருக்கான். பாவம் அந்த அம்மாதான் கதறிகிட்டு கிடக்கு. என்னதான் காசு பணம் சம்பாதித்தாலும் கொஞ்சம் புண்ணியத்தையும் சேர்க்கணும்யா. இவனுங்க பாவத்தையில்ல சேர்த்திருக்கானுங்க. அதுவும் நம்ம புள்ள தங்கமான புள்ள. அதைப் போயி அப்படிப் பேசலாமா? அதான் கடவுளாப் பார்த்து பலமா கொடுத்திருக்காரு. சாவட்டும் விடுங்கய்யா'' - வெறுப்பாய் சொன்ன பரமசிவத்தை அவசரமாய் மறுத்தார்.

''வேண்டாம்பா. அப்படிச் சொல்லாதே. என் மாப்பிள்ளை நல்லவர்தான். அவங்க அப்பாதான் தப்பு பண்ணியிருக்கார். அதுக்கு என் மாப்பிள்ளை என்ன செய்வார் பாவம்.''

''அட என்னய்யா நீங்க. பெத்தவங்க பாவம். பிள்ளைங்க தலையிலதானே விடியும்.''

''சரிப்பா, இப்போ எந்த ஆஸ்பத்திரியில இருக்காங்க. எனக்கு சொல்லுப்பா. நான் அவரைப் பார்க்கணும். தயவு பண்ணுப்பா'' கெஞ்சினார்.

''கொஞ்ச தூரம்தான்யா. ஜே.கே. ஹாஸ்பிடல்னு பெரிசா இருக்கே அதுதான். வெயில் அதிகமாக இருக்கே. நீங்க நடக்க சிரமமா இருக்குமே. என் சைக்கிள்ல உட்காரீங்களா. கொண்டு போய் விட்டுடறேன்'' என்ற பரமசிவம் தனது சைக்கிளில் மேகநாதன் ஏறி அமர உதவினார். அமர்ந்ததும் அவரது மடியில் தாங்குக் கட்டைகளைக் கொடுத்துவிட்டு சைக்கிளில் ஏறி அழுத்தினார்.

மேகநாதனின் உடல் நடுங்கியது. கடவுளே என் மாப்பிள்ளைக்கு எதுவும் ஆகியிருக்கக் கூடாது. அவர்

நல்லவர். எத்தனை அற்புதமான பிள்ளை. பாறைக் கூட்டத்தில் அடிபட்டுக் கிடந்தபோது எத்தனை அக்கறையாய் காப்பாற்றி உடைந்த காலை நொறுங்கிய எலும்புகளை அகற்றிவிட்டு, தகடைப் பொருத்தி கூடவே இருந்து கவனித்துக் கொண்டதோடு நில்லாமல் அதன் பிறகும் தான் எத்தனை உதவியாய் இருந்தார். நடைப் பயிற்சிக்கு மருந்து மாத்திரைகளுக்கு சத்தான உணவு வகைகளுக்கு என எல்லா வகையிலும் உதவினாரே. அவரை நான் காப்பாற்ற வேண்டும். அவரை சாக விடமாட்டேன். என்னிடம் உள்ள மூலிகை மருந்தால் குணமாக்குவேன். என்னால் முடியும். நான்கு தலைமுறையாய் சித்த வைத்தியம் செய்து வரும் எங்களால் முடியாதது இல்லை. என்னால் முடியும். மனதிற்குள் சபதம் எடுத்த போது மருத்துவமனை வந்து விட்டது. இறங்கி உள்ளே நுழையும் போதே மகாலஷ்மியின் ஓலம்தான் கேட்டது.

''கண்ணா, ராஜா, கண்ணைத் திறந்து பாருடா அம்மாவை. டாக்டரும் கைவிரித்து விட்டாரே. நான் என்ன செய்யப் போகிறேன். டாக்டர் முதலில் எனக்கு ஒரு ஊசி போட்டு என்னைக் கொன்று விடுங்கள். எனக்கு என் மகன் கொள்ளி வைக்க வேண்டும். அவன் போன பிறகு என்னால் வாழ முடியாது. நான் போய்விடுகிறேன். அவனுக்கு முன்னே நான் போய்விடுகிறேன். என் பிள்ளையை இழந்து நான் வாழ முடியாது'' கண்ணீர் விட்டுக் கதறினாள்.

''இல்லம்மா! உங்க பிள்ளையை நான் காப்பாற்றுவேன். என்னால் முடியும். என் மாப்பிள்ளையை நான் காப்பாற்றுவேன்'' - என்ற குரலில் அனைவரும் திரும்பினர். தேவேந்திரனின் முகம் பிரகாசமடைந்தது.



## 10

*பழைய ராகம் மறந்து நீ*
*பறந்ததென்ன பிரிந்து*
*இரவு தோறும் அழுது - என்*
*இரண்டு கண்ணும் பழுது!*

''பெரியவரே! இது ஒண்ணும் விளையாட்டு இல்லை. சும்மா வேப்பிலை அடிச்சு குணமாக்க முடியாது. அவரோட உடம்பு ரொம்ப மோசமா இருக்கு. குடல் முழுக்க புண்ணாகிப் போச்சு. அதோட லிவரும் கெட்டுப் போயிருக்கு. உடம்புல இரத்தம் ஓடலை. லிக்கர்தான் ஓடிட்டு இருக்கு. மூளை வரை பாதிப்படைஞ்சிருக்கு. அவருடைய நினைவுத் திறனும் பார்வையும் மங்கிப் போய்ட்டு இருக்கு. எந்த நோய்க்கு முதல்ல ட்ரீட்மெண்ட் பண்றதுன்னு இவ்ளோ படிச்ச நாங்களே குழம்பிட்டு இருக்கோம். எந்த மருத்துவத்தையும் இவரால தாங்கிக் கொள்கிற சக்தியும் இல்ல. நீங்க என்ன மந்திரவாதியா, மந்திரம் போட்டு எல்லா நோய்களையும் குணமாக்கிவிட'' கிண்டலாய்க் கேட்டார் ஒரு மருத்துவர்.

''இல்லய்யா, நான் மந்திரவாதி இல்ல. நான் ஒரு வைத்தியன். மூலிகை மருந்து தயாரிப்பவன். இயற்கை மருத்துவத்தால் முடியாதுன்ற நோயே கிடையாது. என்னால முடியும். இவரோட ஒவ்வொரு நோய்க்கும் தனித்தனியா மருந்து கொடுத்து என்னால காப்பாற்ற முடியும். கொஞ்ச

நாளாகும். ஆனா நிச்சயம் குணமாகும்'' - உறுதியாய்க் கூறினார் மேகநாதன்.

''அதுவரை இவர் உடல் தாங்க வேண்டுமே. இட்ஸ் டூ லேட்'' வருத்தமாய்த் தோளைக் குலுக்கினார் மருத்துவர்.

''ஐயா நீங்க மருத்துவர்தான் கடவுள் இல்லை. நீங்கள் எப்படி என் மாப்பிள்ளைக்கு நாள் குறிக்கலாம். நான் காப்பாற்றுகிறேன். சம்பந்தி இனியும் காலம் கடத்த வேண்டாம். நான் ஆனைக்கட்டி மலையில் தான் இருக் கிறேன். அங்கேயே நம் வீட்டிலேயே தங்கிக் கொள்ளலாம். வாருங்கள் போகலாம். எப்படியும் மாப்பிள்ளையைக் காப்பாற்றிவிடலாம்'' தேவேந்திரனிடம் நம்பிக்கையோடு சொன்னார்.

தேவேந்திரன் யோசனையாய் மருத்துவரைப் பார்க்க, அவர் உதட்டைப் பிதுக்கி, ''உங்கள் இஷ்டம். ஆனா பொழைக்க சான்ஸ் இல்லை. வேணா ட்ரை பண்ணிப் பாருங்க'' - என்றார்.

மகாலஷ்மி மேகநாதனைப் பார்த்துக் கைகூப்பினாள். ''ஐயா! நீங்க யாரோ எவரோ எனக்குத் தெரியாது. ஆனா இப்போ என் கண்ணுக்கு நீங்க கடவுளா தெரியறீங்க. என் மகனை நீங்கதான் காப்பாத்தணும். என் குல விளக்கு அணையாம நீங்கதான் ஒளியேற்றி வைக்கணும். என் சொத்து முழுக்க வித்தாலும் பரவாயில்ல. எம்புள்ள மட்டும் எனக்கு உயிரோட கிடைச்சாப் போதும்'' - கண்ணீர் உகுத்தாள்.

''கவலைப்படாதே தாயீ. உம்புள்ளை உனக்கு திரும்பக் கிடைப்பான். அதுக்கு நான் உத்திரவாதம். என்ன சம்பந்தி



இன்னும் யோசிக்கிறீங்க? உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?''

''அய்யோ! அப்படி இல்லை. எனக்கு உங்க வீட்டுக்கு வரக் கூசுது. ரொம்ப சில்லறைத்தனமா நடந்துக்கிட்டேன். அதான்..'' தயங்கினார்.

''அதையெல்லாம் எப்போதோ மறந்துட்டேன் நான். இப்போ நமக்கு மாப்பிள்ளையோட உசுருதான் முக்கியம். வாங்க போகலாம்'' - அவசரப்படுத்தினார். அரைமனதோடு ''சரி, நீங்கள்லாம் கிளம்புங்க. நான் மாத்துத் துணிமணி யெல்லாம் எடுத்துட்டு வர்றேன். கதிர், நீ கூடவே இருந்து பார்த்துக்கோ. இந்தா இதைச் செலவுக்கு வெச்சுக்கோ லஷ்மி'' என்றவாறு மனைவியின் கைகளில் பணத்தைக் கொடுத்தார்.

ஸ்ட்ரெச்சர் மூலமாக வருண் காருக்கு கொணர்ந்து ஏற்றப்பட மகாலஷ்மி தன் மடியில் மகனின் தலையை வைத்துக் கொண்டு பின் சீட்டில் அமர்ந்து கொள்ள கதிர், அருகில் மேகநாதன் அமர்ந்து கொண்டதும் கார் புறப்பட்டது.

விடாமல் புரையேறியது தென்றலுக்கு. தலையில் தட்டி நீர் அருந்திய பிறகும் நிற்கவே இல்லை. கண்களில் நீர் வரும் வரை நிற்கவில்லை. ''அப்படி யாருடி உன்னை நினைக்கிறா, தொண்டையே கிழிந்து விடும் போலிருக்கே'' தலையில் தட்டிக் கொண்டே கலா சொல்ல, ''வேறு யாரு அப்பாவாகத்தான் இருக்கும். ஒருவேளை புறப்பட்டு வந்திட்டு இருப்பாரோ?'' என்றாள் உமா. அவள் சொல்லி வாய் மூடவில்லை. வேகமாய் வந்து நின்றது அந்தக் கார்.

அப்பாதான் முதலில் இறங்கினார். தென்றல் புன்னகையோடு எழுந்து ஓடிவர, ''மெல்லப்பா மெல்ல இதோ இந்தக் கட்டில்ல படுக்க வைப்பா. நீங்களும் வாங்கம்மா'' - என்றவாறே தென்றலிடம் திரும்பி, ''தென்றல் எல்லோருக்கும் காப்பி தண்ணி போடும்மா'' - என்றார்.

''என்னப்பா யாரு இவங்க. என்னாச்சு?'' - என்றாள்.

''அதையெல்லாம் அப்புறமா சொல்றேன். இவங்க நமக்கு ரொம்பவும் வேண்டியவங்க. நம்ம கூடத்தான் தங்குவாங்க. அந்த டிரைவர் தம்பிக்கு ஒரு அறையை ஒதுக்கிடும்மா'' என்றவர் அலமாரியில் இருந்த மருந்தை எடுத்து ஒரு சிறு கோப்பையில் பாதியளவு ஊற்றி வருணை மெல்ல எழுப்பி தன் தோளில் சாய்த்து வாயைத் திறக்க வைத்து ஊற்றினார். கண்களைத் திறக்காமலேயே முனகலுடன் விழுங்கினான்.

''அம்மா இப்போ மயக்கம் தெளிஞ்சிடும். எருக்கம் வே[ர்] கஷாயம் கொடுத்திருக்கேன். உடம்புல உள்ள நச்சு தன்மை குறைய ஆரம்பிச்சிடும். அது குறைஞ்சாத்தான் நாம கொடுக்கும் மருந்து நின்று வேலை செய்யும். பொழு[து] போயிடுச்சு. இனி மலையேற முடியாது. ராத்திரிக்கு வயிற்றுப் புண் மருந்து மட்டும் கொடுக்கலாம். நாளை கொஞ்சம் மூலிகை பறிச்சிட்டு வந்து மருந்[து] தயாரிக்கணும். அம்மா ஓய்வு எடுக்கிறதா இருந்தா எடுங்க'' என்றார் மேகநாதன்.

''இல்லய்யா, எம்புள்ள கண் திறக்கும் வரை நான் எங்கு[ம்] நகரப் போவதில்லை'' - மகனருகே அமர்ந்து கொண்டா[ள்] மகாலஷ்மி. தென்றல் காபியோடு வர 'இப்போதைக்[கு]



எனக்கு எதுவும் வேண்டாம்மா. என் குழந்தை கண் விழிக்கட்டும்'' என மறுத்தாள்.

யாரந்தக் குழந்தை? இத்தனை அன்பான தாயின் மகன்! லேசாய் எட்டிப் பார்த்தாள். ம்ஹூம். மகனருகே அமர்ந்திருந்த மகாலஷ்மி மகனின் முகத்தை மறைத்துக் கொள்ள உடல் மட்டும்தான் தெரிந்தது. அப்பாவிற்கு கொடுத்துவிட்டு டிரைவரைத் தேடினாள். கண்ணில் படவில்லை. காபியோடு வெளியே வர மருந்துகளை இடித்துக் கொண்டிருந்த பெண்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான் கதிர். தென்றலின் பின்னே வந்த கலா சற்றே கோபத்தோடு ''இதோ பாருங்க, இப்படியெல்லாம் பொம்பளைங்களை பார்க்கக் கூடாது. அவங்க வேலை செய்யிறவங்க... வேடிக்கைப் பொருள் இல்லை'' என்றாள்.

பதறித் திரும்பினான் கதிர். ''அய்யோ! சத்தியமா நான் பொண்ணுங்கள பார்க்கலேங்க! அவங்க மருந்து தயாரிக்கிறதைப் பார்த்திட்டு இருந்தேன்'' என்றதும் பெண்கள் இருவருக்கும் லேசாய் சிரிப்பு எழுந்தது. காபியை நீட்டிய தென்றலிடம் நன்றி சொல்லிப் பெற்றுக் கொண்டவன் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு குரலைத் தழைத்துக் கொண்டு, ''ஏங்க உங்க கிட்ட ஒரு விஷயம் கேட்டா தப்பா நினைச்சுக்க மாட்டீங்களே?'' என்றான் கதிர்.

''என்ன? என்ன விஷயம்?'' கலாதான் கேட்டாள்.

''இல்லங்க. என் முதலாளி அதிகமா குடிச்சதால இந்த நிலைமைக்கு போயிட்டார். டாக்டர்ஸ் எல்லாம் கைவிரிச்சிட்டாங்க. ஆனா இந்த வைத்தியர் நான் காப்பாத்திக் காட்டுறேன்னு கூட்டிட்டு வந்திட்டாரு. ஏங்க இவரு

நல்லவர்தானா? இல்லே பணத்தைப் பிடுங்க இப்படிச் செய்கிறாரா? நீங்க தப்பா நினைச்சுக்காதீங்க. உங்களுக்கு சம்பளம் கொடுக்கிறவரைப் பற்றி உங்களிடமே கேட்கக் கூடாதுதான். ஆனா இங்கே யாரையும் எனக்குத் தெரியாது. அதோட, இங்க தங்கியிருந்துகிட்டு மற்றவங்க கிட்டே போய் விசாரிக்கிறது அநாகரிகம். அதனாலதான் உங்க கிட்டே கேட்கிறேன்'' - துணிச்சலாகவும், நேர்மையாகவும் கேட்ட அவனை வியந்து நோக்கினாள் கலா.

''ஏங்க அப்படிப் பார்க்கிறீங்க? நான் ஒண்ணும் தப்பா கேட்கலையே. ஏன்னா எனக்கு எங்க முதலாளியோட உயிர் முக்கியம். நல்ல வைத்தியர்னு தெரிஞ்சா எவ்ளோ நாள் ஆனாலும் இருந்து பார்க்கலாம். இல்லேன்னா வேற ஹாஸ்பிடலுக்கு கூட்டிட்டுப் போலாமே, அதனாலதான் கேட்டேன்'' என்றான் மீண்டும்.

''நீங்க ஒண்ணும் கவலைப்படாதீங்க. எங்க அப்பா ரொம்ப நல்லவர், காசுக்கு ஆசைப்படாத வைத்தியர். காசுக்கு ஆசைப்பட்டிருந்தா இதோ இந்தக் குடில்கள் எல்லாம் கட்டிடமாக இருந்திருக்கும். அதோட தன்னால் முடியாத வேலையை எப்போதுமே அப்பா ஏற்றுக் கொள்வதில்லை. நீங்கள் தைரியமாக இங்கே இருக்கலாம். வரட்டுமா, ஆறிப் போகுமுன் காபி குடிங்க'' என்றவாறே தென்றல் சென்றுவிட அவள் பின்னே செல்ல முயன்ற கலாவை கைநீட்டித் தடுத்தான் கதிர்.

''ஏங்க, அவங்க வைத்தியரோட பொண்ணா, அச்சோ அவங்ககிட்டேயே அப்படிக் கேட்டுட்டேன். தப்பா எடுத்துப்பாங்களா?'' பதட்டமாய் கேட்டவனிடம் ''ஒரு



நிமிஷம் இருங்க, கேட்டுட்டு வந்து சொல்றேன்'' - என சீரியஸாகவே சொல்லிவிட்டு நகர்ந்தாள் கலா.

''ம்மா.. ம்மா..'' முனகலோடு கண் விழித்தான் வருண். பார்வைக்கு எதுவும் புலப்படவில்லை. அருகிருந்த மகாலஷ்மி மகிழ்ச்சியோடு மகனை அணைத்துக் கொண்டாள். ''என் ராஜா, எழுந்திட்டியா. என் கண்ணே, அம்மா எப்படி பயந்துட்டேன். வைத்தியர் ஐயா எம்புள்ள கண்ணு முழிச்சுட்டான், ஓடிவாங்க'' - சத்தமாய் குரல் கொடுத்தாள்.

''ம்மா, வயிறெல்லாம் எரியுதும்மா. ரொம்ப வலிக்குதும்மா'' வலியால் முகம் சுருக்கினான் வருண்.

''ராஜா! இதற்காகத்தானே அந்தப் பாழாய் போன குடியை விட்டுவிடு என்று கெஞ்சினோம். இப்போது இப்படித் துடிக்கிறாயே'' அழுதாள் அம்மா.

''ஒண்ணுமில்லம்மா, இனி அழவேண்டாம். மாப்பிள்ளை இந்த ஜவ்வரிசிக் கஞ்சியைக் குடிங்க. வயிறு எரியாது. பால் விட்டு ஜவ்வரிசியை வேக வெச்சிருக்கேன். துளியூண்டு சர்க்கரையும், சேர்த்திருக்கேன். பால் பாயாசம் மாதிரி தான் இருக்கும். குடிச்சிடுங்க'' என்றவாறு கட்டிலினருகே உள்ள நாற்காலியில் அமர்ந்து கையோடு கொண்டு வந்திருந்த கிண்ணத்தில் இருந்த கஞ்சியை ஸ்பூன் உதவியால் அவனுக்கு ஊட்டினார். புரியாத பார்வையோடு இருந்தாலும் மறுக்காமல் வாயைத் திறந்தான் வருண். ஒரு குழந்தைக்கு ஊட்டுவது போல் பொறுமையாய் ஊட்டி விட்டு அவன் வாயை தன் மேல் துண்டால் ஒற்றியெடுத்தார். ''மாப்பிள்ளை! இப்ப

தொண்டை வயிறு எல்லாம் குளிர்ந்து போச்சில்லே'' என்றவாறு சிரித்தார்.

பதிலுக்கு அவனும் புன்னகைத்து ''ம்'' என்றான்.

''சரி இன்னும் கொஞ்ச நேரங்கழிச்சி இன்னொரு வாட்டி தர்றேன். எப்பேர்ப்பட்ட வயித்து புண்ணையும் இந்த ஐவ்வரிசிக் கஞ்சி ஆத்திடும்'' என்றார் பெருமையோடு.

வருண் சோர்வாய் கண்களை மூடிக் கொள்ள கண்களில் கண்ணீருடன் மகாலஷ்மி மேகநாதனைப் பார்த்தாள்.

''ஐயா! நான் ஆஸ்பத்திரியிலேயே கவனிச்சேன். நீங்க வார்த்தைக்கு வார்த்தை மாப்பிள்ளைன்னு சொல்றீங்களே. எம்புள்ளையை உங்களுக்குத் தெரியுமா? அவன் முகத்திலேயும் ஒரு மலர்ச்சி தெரியுதே. எனக்கு உங்களைப் பார்த்த ஞாபகம் இல்லை. ஆனா.. எப்படி..'' தயக்கமாய் அவள் இழுக்க, பெருமூச்சை விட்டார் மேகநாதன்.

''என் வீட்டு மாப்பிள்ளை ஆகியிருக்க வேண்டியவர் தாம்மா. சம்பந்தி செய்த குழப்பத்தால் எல்லாம் கெட்டு விட்டது. ராஜகுமாரனாய் வலம் வந்தவர் இப்படி உலர்ந்த சருகாய் கிடக்கிறார்'' என்றார்.

இருக்கையை விட்டு எழுந்தே விட்டாள் மகாலஷ்மி. ''என்ன அப்படின்னா, நீங்க அந்தப் பெண்ணோட அப்பாவா. கடவுளே கடைசியில் உங்களிடமே வந்து விட்டோமே. எங்கே, எங்கே உங்கள் பெண். திருமணம் செய்து கொண்டாளா? எங்கு வாழ்கிறாள்?'' பதட்டமாய்க் கேட்டாள்.



மறுப்பாய் தலையசைத்தார் மேகநாதன். ''இல்லம்மா, திருமணம் செய்து கொள்ள மறுத்துவிட்டாள். இப்போது என் பணியை அவள்தான் சிறப்பாகச் செய்கிறாள். என்னால் இந்தக் காலை வைத்துக் கொண்டு நடமாட முடியாதே. அவள்தான் மலையேறி தேவையான மூலிகைகளைப் பறித்துக் கொண்டு வருவாள்.''

''நான்.. நான் உங்கள் பெண்ணைப் பார்க்க வேண்டுமே'' ஆவலாய் தேடினாள் மகாலஷ்மி.

''இப்போது காபி கொண்டு வந்தாளே... அவள்தாம்மா என் மகள் தென்றல்'' என்றார்.

''இரண்டு பெண்கள் வந்தார்களே. நான் சரியாக கவனிக்கவில்லை! கொஞ்சம் கூப்பிடுகிறீர்களா?'' என்றாள்.

''அதனால் என்னம்மா மற்ற பெண்களுடன் மருந்து அரைத்துக் கொண்டிருப்பாள். நான் போய் அழைத்து வருகிறேன்'' - என்றவாறே அவர் எழ, ''வேண்டாம், நீங்கள் சிரமப்பட வேண்டாம். நான் போய் பார்த்துவிட்டு வருகிறேன். என் பிள்ளையை...''

''நான் பார்த்துக் கொள்கிறேன் அம்மா. அதைவிட எனக்கு வேறு என்ன வேலை?'' - என மேகநாதன் சொல்ல புன்னகையோடு எழுந்து சென்றாள் மகாலஷ்மி.

மருந்தின் வாசனை மூக்கை துளைத்தது. சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டே வந்தவள் அந்தப் பெண்கள் கூட்டத்தை அடைந்ததும் நின்றாள். விதவிதமாய் எழெட்டுப் பெண்கள் அமைதியான அழகுடன் இருக்க

இதில் எந்தப் பெண் என் மகனின் இதயத்தில் இடம் பிடித்தவள் எனத் தேடினாள். அதற்குள் உமா எழுந்து வந்தாள்.

''என்னங்கம்மா... எதுவும் வேணுமா?'' என்றதும் ''ம், ஆமா. எம் மருமகளைப் பார்க்கணும். இங்கே யாரும்மா தென்றல்'' என மகாலக்ஷ்மி ஆவலாய்க் கேட்டதும் அதிர்ந்து போய் எழுந்தாள் தென்றல்.

''எ.. என்ன மருமகளா நானா? யார் நீங்க. எந்த நோக்கத்தோட இங்கே வந்திருக்கீங்க.. அப்பாவோட சேர்ந்து எல்லோரும் நாடகமா போடுறீங்க'' வெடித்தாள் தென்றல்.

''இல்லம்மா, அப்படி எதுவும் இல்லை. என் பிள்ளையை உன் அப்பா காப்பாற்றி விடுவேன் என்றதால்தான் இங்கு வந்தோம். ஆனால் இது உன் வீடு என்று எனக்குத் தெரியாது. ஏன் உனக்குக் கூட நான் யாரென்று தெரியா தேம்மா. நானும் இன்றுதான் உன்னை முதன் முதலாய் பார்க்கிறேன். எத்தனை அழகும்மா நீ. என் மகன் உன் நினைவாகவே இருப்பதில் தவறேதும் இல்லை. உன்னைப் போய் எப்படி அவருக்குப் பிடிக்காமல் போனது. என்ன எளிமையான அழகு, அடக்கம், இப்போ சொல்றேம்மா, நீதான் என் மருமகள். என் மகன் குணமாகி எழுந்ததும் நானே உங்கள் திருமணத்தை நடத்தி வைக்கிறேன், நம்பும்மா, இது நாடகம் இல்லை.''

''போதும் நிறுத்துங்க'' கிரீச்சிட்டாள். ''சுத்தி வளைக்காம பேசுங்க. யார் நீங்க? நீங்கள் யார் என் திருமணத்தை நடத்தி வைப்பது? நான் உங்களிடம் கேட்டேனா. நீங்களே வந்திருந்தாலும் சரி இல்லை அப்பா அழைத்து வந்திருந் தாலும் சரி, நான் திருமணம் செய்து கொள்ளும் எண்ணத்தில் இல்லை. நீங்கள் போகலாம்'' வெளியே கைநீட்டினாள்.



''இன்னும் நான் யாருன்னு சொல்லவே இல்லையேம்மா'' பொறுமையாகவே சொன்னாள் மகாலக்ஷ்மி.

''நீங்கள் யாராக இருந்தாலும் அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. நீங்கள் போகலாம் என்று சொன்னேன்.''

''வருண் என் பிள்ளை என்று சொன்னாலும் இப்படித் தான் விரட்டுவாயா தென்றல்? உன் வருண் உன் நினைவாகவே வாழ்ந்து இன்று தன் வாழ்நாளை முடித்துக் கொள்ளும் தருவாயில் இருக்கிறான் என்றாலும் இதேபோல் விரட்டி விடுவாயா? சொல்லம்மா. நானும் என் மகனும் உனக்கு ஒரு தீங்கும் செய்யவில்லையே. முதலில் என் மகன் என்னிடம் தான் உன்னைப் பற்றிச் சொன்னான். நானும் உன்னைப் பார்க்காமலே முழுமனதோடு ஏற்றுக் கொண்டேன். ஏனென்றால் என் மகன் விருப்பம்தான் என் விருப்பம். அந்த விருப்பத்தை அவன் அப்பாவிடம் சொன்னதுதான் தப்பாகி விட்டதோ என்னவோ என் மகன் வாழ்க்கையே சூன்யமாகிப் போனது. மீண்டும் உன்னைக் கண்டது தெய்வச் செயல்தானம்மா. இப்போது கேட்கிறேன். நீ என் மகனை ஏற்றுக் கொள்வாயா? அவனுக்கு மறு ஜென்மம் தருவாயா? என் மருமகளாய் வருவாயா?'' கையேந்தி யாசகம் கேட்டவளைப் பார்த்து சிலையாகிப் போனாள் தென்றல்.

''நீ.. நீங்க..'' வார்த்தை வராமல் திணறிப் போனாள்.

''நான்தாம்மா வருணோட அம்மா. உன் முன்னால எம் பிள்ளைக்காக உயிர் பிச்சை கேட்டு நிக்கிறேன். பாவம்மா வருண். அவன் ஒரு பாவமும் அறியாதவன். அவங்க அப்பா பண்ணின சூழ்ச்சி தெரியாம வேலை விஷயமாத்தான் கனடா போனான். அவன் திரும்பி வரும்முன் உன்னை எப்படியோ துரத்தி விட்டார். வருணனை விரும்ப வில்லை, என் தந்தையைக் காப்பாற்றியதால் சாதாரணமாகப் பேசினேன். அவ்வளவுதான் என்று சொல்லிவிட்டாயாமே. அதைக் கேட்டு என் மகன் துடித்த துடிப்பை என்னால் இன்னும் மறக்க முடியவில்லையம்மா. நீயாகத்தான் விலகி விட்டாய் என்று இடிந்து போனவனுக்கு பிறகுதான் அவன் அப்பா, செய்த கொடுமை தெரிய வந்தது. அன்றிலிருந்து என் மகன் எங்களுக்கு இல்லாமல் போய்விட்டான். முழு நேரமும் குடித்துக் குடித்தே உடம்பை அழித்துக் கொண் டானம்மா. தென்றலைத் தவிர இன்னொரு பெண்ணை மணக்கமாட்டேன் என்று வந்த வரன்களையெல்லாம் விரட்டினான். இப்போதும் அவன் மனதில் நீ.. நீ மட்டும்தான் இருக்கிறாய். நான் சொல்வது அனைத்தும் உண்மையம்மா'' கண்களில் நீரோடு பேசிய அந்தத் தாயின் வார்த்தையில் பொய் இல்லை எனத் தெரிந்ததும் வார்த்தையின்றித் தவித்தாள் தென்றல்.

''ஏய், என்னப்பா ஒண்ணும் பேசாம நிக்கிற. நான்தான் அப்பவே சொன்னேன்ல. அவரு மேல எதுவும் தப்பு இருக்காதுன்னு. நீதான் நம்பல்ல. பார்த்தியா உன்னை மாதிரியே அவரும் இன்னொரு கல்யாணம் பண்ணாமத் தான் இருக்காரு. இதிலிருந்தே தெரியலியா அவரு



நல்லவருன்னு. போப்பா, போயிப் பாரு. அட வாயேன், நீங்களும் வாங்கம்மா'' - என்றவாறு உமா தென்றலின் கையைப் பற்றியவாறே நடக்க மந்திரத்திற்குக் கட்டுப் பட்டாற் போல் பின் தொடர்ந்தாள் தென்றல். கண்ணீரைத் துடைத்துக் கொண்டே உடன் நடந்த மகாலஷ்மி அந்தக் கார் வருவதைக் கண்டதும் நின்றாள்.

காரில் இருந்து இறங்கிய தேவேந்திரனைக் கண்டதும் கனவுலகில் இருந்து விடுபட்டாள் தென்றல். அவர் பேசிய வார்த்தைகள் காதில் வந்து மோதியது. முகம் செந்தீயாய் மாற உமாவின் கையை உதறித் தள்ளினாள். வேகமாய் வீட்டினுள் சென்று தந்தையைப் பற்றிக் கொண்டு ''அப்பா! அவங்க எல்லாரையும் வெளியே போகச் சொல்லுங்கப்பா! எனக்கு மனசெல்லாம் எரியுதுப்பா. அப்பா அவர் நம்ம குடும்பத்தையே அசிங்கமா கேவலமா பேசினார். அவர் புள்ள எப்படிப் போனா நமக்கென்ன? வேண்டாம் நமக்கு இவங்க உறவே வேண்டாம். இவங்க புத்தி மோசமான புத்திப்பா. தயவு செய்து இவங்களை உடனே அனுப்பிடுங் கப்பா. நான் சொல்றதைக் கேளுங்கப்பா'' - கெஞ்சினாள்.

தேவேந்திரன் மகாலஷ்மி கதிர் என அனைவரும் கலக்கமாய் வாசலுக்கு வெளியே நின்று கொண்டிருக்க, கட்டிலில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த வருண் இந்த சத்தத்தில் உறக்கம் கலைந்து கண்களைத் திறந்தான். சோர்ந்து போயிருந்த கண்கள் பிரகாசமடைந்தது.

# 11

*ஒருவன் இதயம் உருகும் நிலையை*
*அறியா குழந்தை நீ வாழ்க!*
*உலகம் முழுதும் உறங்கும் பொழுதும்*
*உறங்கா மனதை நீ காண்க!*

"ஆனாலும் உனக்கு இத்தனை அழுத்தம் கூடாதுடி. இன்னியோட பத்து நாள் ஆகிப் போச்சு. நீ வீட்டுக்கு போயி. இப்படி மருந்து நாத்தத்திலேயே குடிலுக்குள்ளே அடைஞ்சி கிடக்கிறே. அப்பா மனசு என்ன பாடுபடும்னு நினைச்சுப் பாத்தியா?" கலா ஆதங்கப்பட்டாள்.

"ம்க்கும். அவருக்கென்ன. பெரிய இடத்து சம்பந்தம் கிடைச்சிருக்கு. ரொம்ப சந்தோஷமாகவே இருக்காரு. பார்த்தாலே தெரியுதே. நடக்கவே கஷ்டப்பட்டவரு. இப்போ அவர் மாப்பிள்ளைக்காக அவரே மலைக்குப் போகிறாரே. இனி நான் அவருக்கு தேவையில்லையே" விரக்தியாய் கூறினாள் தென்றல்.

"அப்படி இல்லப்பா. அவரோட உடம்புக்கு வேற வேற மூலிகை தேவைப்படுதாம். அது நமக்கு சரியா தெரியல்லன்னுதான், அவரே போறாரு. அதுவும் தனியா போகலியே. கார்ல டிரைவரோடதானே போறாரு."

"சமையல் கூட அவரேதான் செய்யுறாரு. பத்தியச் சாப்பாடாம். ஆனா ஒண்ணு. அப்பா இப்போ ஒரு நிமிஷம்



கூட உட்கார்ரதே இல்லை. சும்மா பம்பரமாத்தான் சுத்துறாரு. அந்த வருணைப் பார்த்ததும் உங்க அப்பாவுக்கு நாற்பது வயசு குறைஞ்சிடுச்சு போல தெரியுது. உன் ஆளு கூட இப்போ தேறிட்டாருப்பா. எழுந்து உட்கார்ந்திருக்காரு. நடமாடத்தான் முடியலை போல. சீக்கிரமே நடக்க ஆரம்பிச்சிடுவார். நடக்க ஆரம்பிச்சா சும்மா இருப்பாரா? உன்னைத் தேடிட்டு இங்கேதான் வருவார். ஏம்ப்பா உனக்கு நிஜமாவே அவரைப் பார்க்க ஆசையில்லையா? ஏன்னா இத்தினி வருஷம் கழிச்சு வந்திருக்கார். உன் கண்ணெதிரே உன் வீட்லயே இருக்கார். அவரைப் பார்க்கணும்னு உனக்குத் தோணலியா" - உண்மையாகவே வியந்தாள் உமா.

"தேவையில்லாத ஆசைகளை கற்பனைகளை நான் எப்போதுமே வளர்த்துக் கொள்வதில்லை. அவரை விரும்பியது உண்மைதான். ஆனால் எப்போ அந்தப் பெரிய மனிதர் வந்து என் நேசத்தை கொச்சைப்படுத்தினாரோ அப்போதே அவரது நினைப்பை வேரோடு புடுங்கி எறிந்து விட்டேன். அவரது நினைப்பு கூட எனக்குக் கிடையாது" உறுதியாய் கூறினாள்.

"பொய், நீயே உன்னை ஏமாற்றிக் கொள்கிறாய். உன் மனதில் அவர் இருக்கிறாரோ இல்லையோ ஆனால் அவரது நினைப்பு இருக்கிறது. அதை உன் கண்ணீரே சொல்லிவிட்டது" - கலா கூறினாள்.

"காயத்தோட வலி அதிகமானாலும் கண்ணீர் வரும் கலா. அது உனக்குத் தெரியாது. என்னைத் தனியா விடுங்க. நீங்க போய் வேலையைப் பாருங்க" - விரட்டினாள்.

''ஏய் பாவம்பா அந்த அம்மா. அடிக்கடி வாசலுக்கு வந்து உன்னை ஏக்கமா பார்த்திட்டே இருக்காங்க. அன்னிக்கு நீ போட்ட கூச்சல்ல போனவருதான் அந்தப் பெரிய மனுஷன். அதற்கப்புறம் வரவே இல்லை. தெரியுமா? வந்தா உன் மனசு புண்படும்னு அவரோட புள்ளையைக் கூட பார்க்க வராம இருக்காரு. உன் ஆளு கூட நீ எங்கேன்னு அப்பப்போ அப்பாகிட்ட கேட்டுட்டே இருக்காரு. அவங்கப்பா பண்ணின தப்புக்கு பாவம் இவரும் இவங்க அம்மாவும் என்னப்பா பண்ணுவாங்க'' - உமா பரிந்து பேச கோபமாய் எழுந்தாள் தென்றல்.

''உன்னை நாலு பேர் முன்னால யாராவது செருப்பால அடிச்சிட்டு மறுநாள் வந்து எங்க வீட்டுக்கு வந்து சாப்பிட்டுப் போன்னு கூப்பிட்டா நீ போவியா? சொல்லு போவியா. போக மாட்டே இல்லை. இதுவும் அப்படித்தான். நடந்தது எதையும் நான் மறக்கலே. மறக்கப் போவதும் இல்ல. அப்படி மறக்காம அவர் முகத்தில விழிக்கவும் நான் ஆசைப்படலை. சேர்ந்து வாழவும் முடியாது. தயவு செய்து அதையே பேசிப் பேசி இம்சை பண்ணாதீங்க. போங்க'' - வெறுப்பாய் பேசிவிட்டு திரும்பிக் கொண்டாள். இருவரும் வெளியே வந்தனர். சற்று தொலைவில் நின்று கொண்டிருந்த கதிரை நோக்கிச் சென்றனர். ஆவலோடு திரும்பியவன், ''என்னங்க, ஏதாவது முன்னேற்றம் தெரிஞ்சுதா, மேடம் என்ன சொன்னாங்க?'' பரபரப்பாய் கேட்டான்.

இருவரும் ஒன்றாய் உதட்டைப் பிதுக்கினார். ''ம்ஹூம். அவ மாறுவான்னு தோணலை. அவ மனசிலே அவ்ளோ வெறுப்பு இருக்கு. உங்க முதலாளியும் அப்படி



பேசியிருக்கக் கூடாது. நெல்லைக் கொட்டினா அள்ளிடலாம். சொல்லைக் கொட்டினா அள்ள முடியுமா? திருவள்ளுவர் சும்மாவா நாவை அடக்கச் சொன்னாரு. அவர் நாவினால் சுட்ட வடு இன்னும் அவ மனசிலே ஆறாம இருக்கு. அப்படி இருக்கும்போது நாம என்ன செய்தாலும் அவ மாறமாட்டா'' என்றாள் கலா உறுதியாய்.

அவளை அதிசயமாய்ப் பார்த்தான். ''ஏங்க அவங்க மாறுவது இருக்கட்டும். நீங்க எவ்ளோங்க படிச்சிருக்கீங்க. திருக்குறளை அள்ளி வீசுறீங்களே. நான் டிகிரி முடிச்சிருக்கேன். எனக்குக் கூட இவ்ளோ தெரியாதே. சொல்லுங்க நீங்க என்ன படிச்சிருக்கீங்க?''

''அய, நான் ரொம்பல்லாம் படிக்கலீங்க. எங்க ஊருல பத்தாவது வரைக்கும்தான் இருக்குது. அதுக்குமேல படிக்கணும்னா கீழே இறங்கிப் போகணும். எங்க அப்பா அனுப்பல. பத்தாவதோட நின்னுட்டேன்'' என்றாள் கூச்சமாய்.

''ஹய்யோ, நம்பவே முடியல்ல. பத்தாவது படிச்சிட்டு இத்தனை திறமையை ஒளிச்சு வைச்சிருக்கீங்களே, எப்படிங்க?'' அவன் மேலும் வியக்க, ''இதென்ன பெரிய பிரமாதம். எங்க கலாவுக்கு கவிதைன்னா உயிர். மலையேறும் போதெல்லாம் கவிதையாத்தான் பேசுவா, தெரியுமா?'' என்றாள் உமா.

''ச்சு, சும்மாயிருடி..'' கலா அதட்டினாள்.

''ஏன்! ஏன் அவங்களை அதட்டுறீங்க. ஏங்க ஒரு கவிதை சொல்லுங்களேன். எனக்கும் கவிதைன்னா உயிர். எந்த புக்ல கவிதையைப் பார்த்தாலும் விடவே மாட்டேன். ப்ளீஸ்,

சொல்லுங்களேன்'' - அவன் உற்சாகமாய் கேட்க.. கலா கூச்சத்தோடு நெளிந்தாள்.

''இப்படி திடீர்னு கேட்டா எப்படி? நான் யோசிக்க வேண்டாமா?''

''ஓ, தாராளமா யோசிங்க. நான் வெயிட் பண்றேன்'' என கைகளைக் கட்டிக் கொண்டு காத்திருக்க, கொஞ்சம் அவஸ்தையாய் யோசித்தாள். ஒரு கணம்தான். அடுத்த கணம் வாய் திறந்தாள்.

*இன்று காலை எனக்குத் திருமணம்!*
*கணவனின் கைகோர்த்து அக்கினியை வலம்வந்தேன்!*
*என் பாதம் பற்றி மெட்டியை அவர் அணிய*
*நாணத்தில் என் பூ முகம் செந்தூரமானது.*
*என் விரல் பற்றி அவர் நடக்க*
*என் மீது பூ மழை தூவியது!*
*அக்கா பசிக்கிறது என்று தங்கையின் குரலில்*
*அனைத்தும் மாயமாகிப் போய்விட*
*பதறி எழுந்தபின்தான் தெரிந்தது கண்டது*
*கனவென்று...*

கலா நிறுத்திவிட மூவரின் கண்களும் கலங்கியிருந்தது. கதிரின் மனம் பாரமானது. அப்படியென்றால் இன்றைய ஏழை கன்னிப் பெண்களுக்கு கனவில் மட்டும்தான் திருமணம் நடக்கிறதா? எத்தனை ஏமாற்றங்களை சந்தித் திருந்தால் இந்தப் பெண்ணின் மனம் இப்படி காயப்பட்டி ருக்கும். இவளைப் போல் இன்னும் எத்தனை பெண்கள் கனவில் மட்டுமே கணவனோடு வாழ்ந்து கொண்டிருக் கிறார்களோ... என்ன கொடுமை இது? அசைவின்றி நின்றவனை உமா உலுக்கினாள்.



''சரிதான், உங்களுக்கும் பேய் பிடிச்சிருக்கா? இந்தக் கலாதான் எந்தக் கவிதையைக் கேட்டாலும் இப்படி உறைஞ்சுப் போய் நிப்பா. இப்ப நீங்களுமா? சரியான பொருத்தம்தான்'' - என்றவாறே விலகிச் செல்ல அவசரமாய் அவளை நிறுத்தினான்.

கலா கண்ணில் படவில்லை. எப்போது போனாள்? உமாவைப் பார்த்து கொஞ்சம் தயக்கமாகவே கேட்டான்.

''ஏங்க கேட்கிறேன்னு தப்பா நினைக்காதீங்க. எனக்கு.. எனக்கு கலாவோட குடும்பத்தைப் பத்தி கொஞ்சம் சொல்லுங்களேன். அய்யோ அப்படிப் பார்க்காதீங்க. நான் ஒண்ணும் தப்பான அர்த்தத்திலே கேட்கலே. எனக்கு அவங்களை ரொம்பப் பிடிச்சிருக்கு. அவங்களுக்கும் என்னைப் பிடிச்சிருந்தா மேற்கொண்டு பேசலாமே. அதனாலதான் கேட்டேன்.''

சந்தேகமாகப் பார்த்தாள் உமா. ''அதெப்படி! நீங்க இங்கே வந்து வாரம் பத்து நாள் தான் இருக்கும். அதுக்குள்ள எப்படி அவளை..''

''ஏங்க, இப்போ பொண்ணு பார்க்கப் போறோம். மிஞ்சிப் போனா ஒரு அஞ்சு நிமிஷம்தான் பொண்ணை நம்ம கண்ணுல காட்டுவாங்க. அதுக்குள்ள பொண்ணப் புடிச்சிருக்கான்னு கேட்பாங்க. நாங்களும் தலையாட்டு வோம் இல்லையா. இப்ப இதை ஏன் சொல்றேன்னா ஒரு பொண்ணைப் பார்த்து அவளை நம்ம மனசுக்கு புடிக்க பத்து நாள் என்ன ஒரு நாள் கூட வேண்டாம். ஒரு சில நிமிடங்களே போதும். அப்படிப் பார்த்தா கலாவைப் பார்த்த உடனே பிடிச்சுப் போனதாலதான் அவங்க கிட்ட பேசவே ஆரம்பிச்சேன். எனக்கு எம் முதலாளி மேலே எவ்வளோ

அக்கறை இருக்கோ அதைவிட அதிகமா மேடத்தோட வாழ்க்கைல கலா அக்கறை வெச்சிருக்காங்க. அதிலேயே என் மனசைத் தொட்டுட்டாங்க. இன்னிக்கு எம் மனசு பூரா நிறைஞ்சுட்டாங்க. கலாவுக்கு ஒரு நல்ல கணவனா என்னால இருக்க முடியும். அவங்க கண்ணீரைத் துடைக்கும் விரலா, நானிருப்பேன். என்னை நம்பினா சொல்லுங்க'' - என்றான்.

உமா நம்பிக்கையோடு சிரித்தாள். ''படிச்சவர். அதனால இத்தனை தெளிவா பேசிட்டீங்க. எனக்கு இத்தனை கோர்வையாப் பேச வராது. இருந்தாலும் உங்க கண்ல பொய் இல்ல. அது தெளிவா தெரியுது. அதனால சொல்றேன். கலா குடும்பம் கொஞ்சம் பெரிசுங்க. அவ அம்மா அப்பா ரெண்டு பேருமே படிக்காதவங்க. குடும்பக் கட்டுப்பாடு செய்யவே பயப்படும் அளவுக்கு படிப்பறிவில்லாதவங்க. அதனால தொடர்ச்சியா எட்டு குழந்தை பெத்துக்கிட்டாங்க. கலாதான் மூத்தவ. நாலு தங்கச்சிங்க. மூணு தம்பிங்க. இப்ப அத்தனை பேரையும் கலாதான் ஸ்கூல் சேர்த்தா. அவ சம்பளம் முழுக்க தம்பி தங்கச்சிகளுக்குத்தான் செலவழிப்பா. அவங்க அப்பா கொத்தனார் வேலைக்குப் போவாங்க. அவங்க அம்மா கூட வீட்ல இருந்தே கூடை, நார்ப்பெட்டி எல்லாம் முடைவாங்க. எப்படிச் சம்பாதிச்சாலும் பத்து பேர் சாப்பிடணுமே. இதில் எப்படிங்க காசு பணம் சேர்த்து அவளுக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுக்க முடியும்? அவங்க அப்பாவும் மாப்பிள்ளை தேடித்தான் அலையறாரு. ஆனா காட்டுல போய் விறகு வெட்டுறவன் கூட இருபது பவுன் கேட்கிறானே. பிறகெப்படி எங்களுக்கு நிஜத்தில் திருமணம் நடக்கும்?' கேள்வியாய் நிறுத்தினாள் உமா.



உண்மைதான். தட்சணைவாங்காமல் இப்போது யார் தாலி கட்டுகிறார்கள்? தட்சணை கொடுக்க திடம் உள்ளவர்கள் ஒன்றிற்கு பத்து மடங்கு கொடுத்து தங்கள் கடமைகளை முடித்து விடுகிறார்கள். இயலாதவர்கள்... இப்படித்தான் மாப்பிள்ளை தேடித் தேடி சலித்து வாடி வதங்கி தங்கள் இளமையையும் காலங்களையும் தொலைத்து நிற்கும் பெண்களைப் பார்த்து வேதனையில் உழல்கின்றனர். என்ன சட்டம் இயற்றி என்ன பயன்? நம்மை நம்பி வந்து நம்மோடு வாழும் ஒரு பெண்ணிடம் நாம் ஏன் கையேந்தி வரதட்சணை என்ற பிச்சை கேட்க வேண்டும் என்று ஒவ்வொரு ஆண் மகனும் அல்லவா நினைக்க வேண்டும். அப்படி நினைத்தால் தானே இந்நிலை மாறும்?

''என்ன ஸார், யோசிக்க ஆரம்பிச்சிட்டீங்க. இப்படித் தான்... இப்படித்தான் ஒவ்வொருத்தனும் யோசித்துவிட்டுப் போய்விடுவான். இப்ப நீங்க, நல்ல வேளை எங்கிட்டே கேட்டுட்டீங்க. இதுவே கலாகிட்டே பேசிட்டு நீங்க யோசிச்சா ரொம்ப நொந்துடுவா. இனிமே இந்த மாதிரி விளையாட்டுப் பேச்சையெல்லாம் மூட்டை கட்டி வெச்சிட்டு உங்க முதலாளியோட உடம்பு சரியானதும் ஊரைப் பாத்துப் போய்ச் சேருங்க. இந்தப் பேச்சு நம்மோடயே போகட்டும்'' குரலில் ஏளனமும் வருத்தமும் தொனிக்கப் பேசிவிட்டு சரேலென அந்த இடத்தை விட்டு அகன்றாள் உமா.

மனம் எரிந்தது. அதெப்படி படித்தவன் படிக்காதவன் ஏழை பணக்காரன் என இந்த ஆண்கள் மொத்தமும் ஒரே போல் இருக்கிறார்கள். பார்த்தவுடன் பிடித்துப் போனது

என்றான். பிறகு குடும்பத்தைப் பற்றித் தெரிந்ததும் எங்கே நம் தலையில் பாரம் ஏறிவிடுமோ என்ற பயம் வந்து விட்டது போலும். ம்... பார்க்க அழகாக இருக்கிறான். படித்தவன். கலாவைப் போல கவிதைகளில் ஆர்வமாய் இருப்பவன். இவன்தான் கலாவிற்கு ஏற்றவன் என்று நானும் கணப் பொழுதில் கணக்குப் போட்டுவிட்டேனே. எத்தனை பெரிய தவறு. தனக்குள்ளே முனகிக் கொண்டே வந்தவள் எதிரே வந்த அழகப்பனின் வாகனத்தை கவனிக்கத் தவறினாள். வெகு அருகில் வந்து காதைக் கிழிக்கும்படியாய் ஹாரன் அடித்த பிறகே துள்ளி விலகினாள் உமா.

"என்ன சில்வண்டு, நான் கிடைக்கலேன்ற கோபத்தில என் வண்டி முன்னாலயே விழுந்து உயிரை விட்டுட லாம்னு பார்க்கிறியா? உன்னை அத்தனை சீக்கிரமாய் போக விட்டு விடுவேனா" எப்போதும் போல நக்கல் சிரிப்புடன் அவளை ஒட்டியவாறே வண்டியை நிறுத்தி காலூன்றி நின்றவாறே கேட்டான். ஏற்கனவே உள்ள கோபம் முழுக்க தன்னிடம் மாட்டிய அழகப்பனிடம் திரும்பியது.

"ஊர் முழுக்கச் சுத்துற பொறுக்கி நீ. நீ கிடைக்கலேன்னு எவளாவது உயிரை விடுவாளா. பொறுக்கி, பொறுக்கி உனக்கு கொஞ்சமும் கூட வெக்கம் மானமே கிடையாதா? படிக்கிற காலத்தில சுத்தின. ஏதோ வயசுக் கோளாறுன்னு பார்த்தா நாற்பது வயசாகப் போகுது. இன்னும் உம் புத்தி மாறலையே. பிறகு எவ உன்னைக் கட்டிப்பா? இதோ பாரு என் பிரெண்ட் தென்றலை இப்ப விரும்பினேன்ற. அதனால சொல்றேன் கேளு. முதல்ல கண்டவளையும் பார்த்து பல்லைக் காட்டுறத நிறுத்து. அவ என்னை மாதிரி அமைதியாப் பேச மாட்டா. செருப்பைத்தான் கையில



எடுப்பா. உன் நல்லதிற்குத்தான் சொல்றேன். பேசாம அவளை மறந்திட்டு வேற எவளையாவது பார்த்து கட்டிக்க. கட்டினவளுக்காவது உண்மையா நடந்துக்க."

"ஏய், நிறுத்து. என்ன விட்டா பேசிட்டே போறே. எனக்கு நாற்பது வயதுன்னு யாருடி சொன்னது உங்கிட்டே.. உன்னை விட நாலு வயசுதான் பெரியவன் நான். ஆமா எனக்கு பொண்ணு கிடைக்கலன்னு நான் உங்கிட்ட எப்போ சொன்னேன். இப்படி.. இப்படின்னா போதும் நூறு பேரு வந்து என் வாசல்ல நிப்பாங்க. எம் பொண்ணைக் கட்டிக்க என்னைக் கட்டிக்கனு. நான்தான் நம்ம மனசுக்குப் புடிச்ச பொண்ணைத்தான் கட்டணும்னு முடிவோட இருக்கேன். தெரியுமா உனக்கு?" - கேட்டவனை வெறுப்பாய் நோக்கினாள் உமா.

"நீ இப்படின்னா கிடைக்குமே. அந்த நூறுல ஒண்ணைக் கட்டிக்க. தென்றலை விட்டுடு. அவளுக்குன்னு ஏற்கனவே ஒருத்தர் இருக்கார். கொஞ்சம் உடம்பு முடியாம இருக்கார். குணமானதும் அவங்க கல்யாணம் பண்ணிப்பாங்க. அவளையே நினைச்சிட்டு இலவு காத்த கிளி மாதிரி நிற்காதே. போ உனக்குன்னு எவளாவது கிடைப்பா" - உமாவும் கிண்டலாகவே கூற பதறிப் போனான் அழகப்பன்.

"ஏய் என்னடி தலையில கல்லைத் தூக்கிப் போடுறே? நான் என்னோட முரட்டுத்தனத்தை காட்டுனா தாங்க மாட்டாள்னு அமைதியா இருந்தா அவ எனக்கே டிமிக்கி கொடுக்கிறாளா? விடமாட்டேன். என்னைத் தவிர வேற எவன் அவளுக்குத் தாலி கட்டுறான்னு பார்க்கிறேன். சொல்லிவைடி, உன் தோழிகிட்ட. அழகப்பன் இளிச்ச

வாயன் இல்ல. அவன் நினைச்சா அதை அடைய எந்த எல்லைக்கும் போவான்னு சொல்லிவை. வரட்டுமா, பாத்துப் போ'' அவளது கன்னத்தைத் தட்டி விட்டுப் புறப்பட்டான்.

''ச்சீ'' - என முகத்தைத் திருப்பிக் கொண்டாள். மனதில் முதன் முறையாய் அழகப்பனின் மீது பயம் வந்தது. கேலியாய் கிண்டலாய் பின்னால் சுற்றித் திரிவான். ஆனால் கையை நீட்ட மாட்டான். எத்தனை திட்டினாலும் சிரித்துக் கொண்டே போய்விடுவானே தவிர கோபமாய் பேசமாட்டான். ஆனால் இன்று தென்றலுக்காக அவளை அடைய எந்த எல்லைக்கும் போவேன் என்று சொல்கிறானே. அப்படியானால் இவனால் தென்றலுக்கு ஏதேனும் ஆபத்து ஏற்படுமோ. இனியும் இதை அவளிடம் மறைக்கக் கூடாது. இவனைப் பற்றிச் சொன்னால் ஒருவேளை பயந்து போய் வருணைக் கட்டிக் கொள்ள சம்மதிக்கலாம். பேசிப் பார்க்கலாம் என முடிவு செய்தவாறே சென்றவள் தென்றலின் பதிலால் இன்னும் சோர்ந்து போனாள்.

## 12

*வாசலிலே உன் காலடி*
*ஓசை கேட்டிருப்பேன்...*
*வந்த உடன் உன் ஆசை*
*முகத்தைப் பார்த்திருப்பேன்!*

''போயும் போயும் அவனுக்குப் பயந்து நான் கல்யாணம் பண்ணிக்கணுமா, நீ பயப்படாதே உமா. அவனால என்னை எதுவும் பண்ண முடியாது. இந்த மாதிரி மிரட்டலுக்கு நான் பயப்படுறவளும் இல்லை. போய் வேலையைப் பார்'' - அலட்சியமாய் சொல்லிவிட்டாள் தென்றல். அந்த நேரம்தான் மகாலஷ்மி பதறிக் கொண்டே வந்தாள்.



''அம்மா, தென்றல், எம்புள்ளை வயிற்று வலியால துடிக்கிறானே. உங்க அப்பாவும் கதிரும் மருந்து பறிக்கப் போயிட்டாங்க. நான் என்ன பண்ணுவேன். சீக்கிரம் வாம்மா. எம்புள்ளை துடிக்கிறதை என்னால பார்க்க முடியல்லம்மா'' கண்ணீரோடு மன்றாடினாள்.

சற்றும் யோசிக்காமல் அப்போதுதான் அரைத்துக் கொண்டிருந்த கீழாநெல்லி உருண்டைகளை எடுத்துக் கொண்டு ''கலா ஒரு கிளாஸ் மோர் சீக்கிரம்'' என்றவாறே வீட்டிற்குள் நுழைந்தாள் தென்றல். வயிற்றைப் பற்றிக் கொண்டு துடித்துக் கொண்டிருந்தான் வருண். ஓடிச் சென்று அவனை மடியில் ஏந்தி கையோடு கொண்டு வந்திருந்த மருந்து உருண்டைகளை வாயில் போட்டு கலா கொண்டு வந்த மோரைப் புகட்டினாள். குடித்தவன் அதே வேகத்தில் வாந்தி பண்ண திணறித்தான் போனாள். இந்த அப்பா எங்கே போனார்? பதட்டமும் பரிதவிப்புமாய் அலமாரியில் தேட அந்த மருந்து கிடைத்தது. அப்பா எல்லாம் தயாராக எடுத்து வைத்துவிட்டுத்தான் போயிருக்கிறார். வேகமாக அதை எடுத்து அவன் வாயில் ஊற்றி வாயை மூடிக் கொள்ள அவஸ்தையாய் விழுங்கிக் கொண்டான். ஒரு கணம் அவனைத் தோளில் சாய்த்து முதுகில் வருடி விட கொஞ்சமாய் அமைதியானான். அவனை அப்படியே படுக்க வைத்து சட்டை பட்டன்களை கழற்றி வயிற்றில் மருந்தைத் தடவி பற்றுப் போட்டாள்.

வயிறு குளிர்ந்ததும் வருணனின் துடிப்பு நின்றது. கண்களில் கண்ணீரோடு தென்றலை நோக்கினான். அவளது கைகளைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டான். "தேங்க்யூம்மா, எங்கே கடைசி வரை என் கண்ணில் படாமலே போய்விடுவாயோ? என்று நினைத்தேன். உன் முகத்தைப் பார்த்துவிட்டேன். இது போதும் தென்றல். இனி எனக்கு என்ன ஆனாலும் நான் கவலைப்பட மாட்டேன்" - நிம்மதியாய் மூச்சு விட்டான்.

தென்றலும் நெகிழ்ந்துதான் போயிருந்தாள். எத்தனை வெறுப்பு இருந்தாலும், எங்கே நேரில் கண்டால் உடைந்து போய்விடுவோமோ என அஞ்சியதால் தானே இங்கு வராமல் குடிலில் முடங்கிக் கிடக்கிறாள். இன்று நேரில் பார்த்தபின் மனம் கசியாமல் இருக்குமா என்ன? என்னதான் தன்னைக் கடினமான பாறையாக காட்டிக் கொண்டாலும் அதற்குள்ளும் ஓர் மெல்லிய இதயம் இருக்கத்தானே செய்கிறது. அதில் பூட்டி வைத்த நினைவுகளும் பொக்கிஷமாய் பாதுகாப்பாய்த்தானே இருக்கிறது. பொத்தி வைத்த நினைவுகள் இன்று தன் உயிரோடு கலந்தவனை நேரில் கண்டதும் பீறிட்டுக் கொண்டு கண்ணீராய் வெளியேறியது. தாயின் பரிவோடு அவன் தலையை வருடினாள். மகாலஷ்மியோ மருமகளை அணைத்து உச்சி முகர்ந்தாள்.

"என்ன வருண், இப்படியா குடித்து உடம்பை அழித்துக் கொள்வது. இது தவறில்லையா? ரோட்டில் சிகரெட் குடித்துக் கொண்டு போகிறவனைக் கூட நிறுத்தி எச்சரிப்பீர்களே. சிகரெட் குடித்தால் நுரையீரல் கெட்டுப் போய்விடும். கேன்ஸர் வரும் என்று, அதோடு நீங்கள் விடும் புகையை சுவாசிக்கும் மற்றவர்கள் நலனும் கெடும் என்பீர்களே. எப்படி இந்தப் பழக்கத்திற்கு ஆளானீர்கள். இது எப்படிப்பட்ட விளைவுகளை ஏற்படுத்தும் என்று அறியாதவரா நீங்கள். படித்த நீங்கள் இப்படிச் செய்தால் எப்படி?" - மென்மையான அதேசமயம் கண்டிப்பான குரலில் வினவினாள் தென்றல்.

"என் அப்பா செய்த தவறுக்கு நான் தண்டனையை ஏற்றுக் கொண்டேன். நீ யார் தென்றல், எத்தனை உயர்வான பெண், பணம், நகை எதற்கும் ஆசைப்படாத உன்னை என் சொத்தைக் கேட்டு மிரட்டியதாகச் சொன்னது எத்தனை பெரிய தப்பு. மாமா பாவம் என் மீது எத்தனை அன்பு வைத்திருந்தார். அவர் நினைத்தால் யாரோ எப்படியோ போகட்டும் என்று விட்டிருக்கலாம். அதை விட்டு எங்கள் மீது அக்கறை கொண்டு அவர் எச்சரிக்காமல் இருந்திருந்தால், இன்று நாங்கள் யாருமே இல்லை. அவரது ஒரே மகனும் இல்லாமல் போயிருந்திருப்பேன். அந்த நன்றி உணர்வு கொஞ்சமும் இல்லாமல் நீயும் உன் அப்பாவும் பணத்திற்காக என்னை மடக்கி வைத்துள்ளதாகச் சொல்லலாமா? அவசர வேலை என்று என்னை அனுப்பி விட்டு, உன்னை எவ்வளவு கேவலப்படுத்தியிருக்கிறார். அதோடும் விடவில்லை. உன்னைப் பற்றி தாறுமாறாக என்னிடம் பேசி என்னையே நீ தூக்கியெறிந்து விட்டுப் போய்விட்டதாகச் சொல்லி ச்சே... சிவராமன் மட்டும் உண்மையைச் சொல்லாமல் விட்டிருந்தால், உனக்கு நடந்த கொடுமை எனக்குத் தெரியாமலே போயிருக்கும். பணம் இருந்தால் யாரை வேண்டுமானாலும் எதுவும் பேசலாமா? அதுதான் எனக்கு ஆறவே இல்லை. அதோடு

நீயே போனபிறகு எனக்கென்ன வாழ்க்கை? அதனால்தான் இந்த விஷத்தைக் கையிலெடுத்தேன். அப்பாவையும் தண்டித்தது போலாயிற்று. என்னையும் வருத்திக் கொள்ளவே தான்..."

"அதற்காக இப்படியா? அம்மாவைப் பற்றி நினைத்தீர்களா? அம்மா பாவம் இல்லையா? அவர்கள் என்ன பாவம் செய்தார்கள். அவர்களுக்கு ஏன் இந்த தண்டனை? ம்?" - அதட்டலாகவே கேட்டாள்.

"அப்படிக் கேள் ராஜாத்தி. நான் எத்தனை கெஞ்சியும் மசியவே இல்லை இவன். இப்போ இவன் துடிக்கிறதை என்னால பார்க்க முடியுதா, பெத்த வயிறு பதறுதே. என் வேதனையைப் புரிந்து கொள்ளவே இல்லையே இவன்" குறைபட்டுக் கொண்டாள் அம்மா.

"ஸாரிம்மா. என் கோபமெல்லாம் அப்பா மீது இருந்ததே தவிர உங்கள் மனமும் கஷ்டப்படும் என்று உணராமல் போய்விட்டேன்" - மனம் வருந்தியவனிடம் மாதுளை விதையை பொடி செய்து, அதனுடன் தேன் கலந்து கொடுத்தாள் தென்றல்.

"இது எதுக்கு? எனக்கு வயிற்று வலி பரவாயில்லை, அதோடு நீ கொடுத்த மருந்து இன்னமும் நாறுகிறது" - முகத்தைச் சுளித்தான்.

"அப்படியெல்லாம் சொல்லக் கூடாது. இது ஞாபக சக்தியைப் பெருக்கும் மருந்து. வாரத்தில் மூன்று நாள் சாப்பிட்டால் ஞாபக சக்தி பெருகும்" என்றவாறே அவனுக்கு ஊட்டினாள்.



"அதுசரி, நான் என்ன பரீட்சையா எழுதப் போகிறேன். இது எனக்குத் தேவையா?" - சலிப்புடன் கேட்டாலும் மறுக்காமல் விழுங்கினான்.

"ம்.. குட்.. இனி படுத்துக்குங்க. நான் கிளம்பறேன்" என்றவாறு எழுந்தவளின் கைபற்றி நிறுத்தினான். "தென்றல் ப்ளீஸ்... எம் பக்கத்திலேயே இரேன். நீ இருந்தால் வலி தெரியலை. சீக்கிரமா எழுந்து நடமாடிடு வேன். அப்பத்தானே நம்ம கல்யாணம் நடக்கும்... ம்.." கண் சிமிட்டினான்.

வறண்ட புன்னகையொன்றைச் சிந்தினாள். "இல்ல மிஸ்டர் வருண். நீங்க என்னைத் தப்பா புரிஞ்சுக்கிட்டீங்க.. நான் ஓடி வந்தது மருந்து தந்தது, எல்லாமே பழைய நேசத்தால் அல்ல. நீங்க ஒரு நோயாளி என்ற பரிவால்தான். அதோடு உங்களிடம் இதமாய்ப் பேசியதும் ஒரு மருத்துவம் தான். இப்படிப் பேசி நோயாளிகளின் மனவேதனைகளை ஆதங்கத்தை வெளியேற்றச் செய்துவிட்டால் மனபாரம் நீங்கி விரைவில் குணமடைய வாய்ப்புண்டு. ஸோ... நான் அதைத்தான் செய்தேன். நீங்க ரெண்டையும் போட்டுக் குழப்பிக்க வேண்டாம். ரெஸ்ட் எடுங்க... வர்றேன்" - என்று விட்டு நடந்தாள்.

"அம்மாடி! எனம்மா இது! ஒரு நிமிஷத்துல கோட்டை கட்டி வெச்சிருந்தேம்மா. அதை வீணாக்கிடாதம்மா!" பதறினாள் மகாலக்ஷ்மி.

"நானும் கோட்டை கட்டி வெச்சிருந்தேம்மா எம் மனசிலே. அதில உங்க பையன்தான் இருந்தார். ஆனா எப்போ உங்க கணவர் நான் பணம் காசுக்கு ஆசைப்பட்டு

உங்க மகனை மயக்கினேன்னு சொன்னாரோ அப்பவே அந்தக் கோட்டை இடிஞ்சு தூள் தூளாகிப் போச்சு. இனி அது ஒட்டாது. ஒட்டவும் முடியாது. ஏன்னா இப்பவும் நீங்க பணக்காரங்கதான். நாங்க லேகியம் தயாரிக்கிறவங்கதான். உங்க மனசுக்காகவும் வருண் நேசத்துக்காகவும், நான் அவரை மணக்கச் சம்மதிச்சாலும், வருண் குணமானதும் உங்க கணவர் இதே கேள்வியைக் கேட்க மாட்டார் என்று என்ன நிச்சயம்? ஒரு முறை கேட்ட சொற்களே இந்த ஜென்மம் முழுக்க எனக்குப் போதும்மா. மீண்டும் மீண்டும் சூடுபட்டுக் கொள்ள நான் ஒன்றும் முட்டாள் அல்ல. இந்த ஊரிலாவது நாங்கள் மானத்தோடு வாழவேண்டும். வயதான ஊனமுற்ற தகப்பனோடு ஒரு பெண் எத்தனை முறையம்மா ஊரை காலி செய்து கொண்டு போக முடியும். சொல்லுங்கள். என் நிலையில் நின்று என் வேதனையை உணர்ந்து கொள்ளுங்கள். என் தந்தை ஒரு ஆண். அவரால் என் மன ரணத்தை உணர முடியவில்லை. அதனால்தான் என்னைப் புறக்கணித்து விட்டு உங்கள் மகனை உள்ளே கொண்டு வந்தார். அதை அவர் நன்றிக் கடனாக எண்ணி செய்யலாம். ஆனால் நான் எந்தப் பாவமும் செய்யாமல் சிலுவையைச் சுமக்கிறேன். ஒரு பெண் எதை வேண்டு மானாலும் தாங்கிக் கொள்ள முடியும். ஆனால் வீண் பழியை... அதுவும் அவள் விரும்பியவரின் தந்தையே சுமத்தும்போது எப்படித் துடிப்பாள் என்று ஒரு பெண்ணாகிய உங்களுக்கு புரியாமலா போகும்?'' விம்மி வெடித்துக் கேட்டாள் தென்றல்.

மகாலஷ்மியும் வருணும் மட்டுமல்ல அப்போதுதான் வந்திறங்கிய மேகநாதனும் கதிரும் கூட ஆணியடித்தாற் போல் நின்றனர்.



''புரிகிறதம்மா. எனக்குப் புரிகிறது? ஆனால் நீயும் ஒன்றை தெரிந்து கொள்ள வேண்டும். அவசரப்பட்டு என் கணவர் செய்த பாவத்திற்கு ஏழு வருடமாக என் மகன் அவருக்கு தண்டனை கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறான். பெற்ற ஒரே பிள்ளை சீராட்டி வளர்த்த செல்லமான பிள்ளை தந்தையை அப்பா என அழைக்காமல் ஒரு வார்த்தையும் பேசாமல் ஆண்டுக் கணக்காக தவிக்க விட்டால் அதைவிட வேறென்ன தண்டனை வேண்டும் அவருக்கு. என் மகன் உத்தமமான பிள்ளையம்மா. அது உனக்கும் தெரிந்திருக்கும். அவனுக்கு அப்பா என்றால் அத்தனை உயிர். இருந்தும் அவர் உன் மீது சேற்றை வாரி இறைத்தது தெரிந்த நாளிலிருந்து இந்த நொடி வரை அவரை அப்பா என அழைக்கவில்லை. அவருடன் பேசுவதில்லை. அது தெரியுமா உனக்கு?'' - மகாலஷ்மி கேட்க அதிர்ச்சியாய் திரும்பினாள் தென்றல்,

இது என்ன புதுக் கதை என்பதாய் வருணைப் பார்க்க அவன் சற்றும் அசைவில்லாமல் தென்றலின் கண்களையே பார்த்துக் கொண்டிருந்தான். மகாலஷ்மி ஏதோ பேச வாய் திறக்க, கை உயர்த்தித் தடுத்தான் வருண்.

''வேண்டாம்மா. இனி ஒன்றும் பேச வேண்டாம். அவள் மனதில் நான் இருக்கிறேன். நிச்சயமாக இருக்கிறேன். அதை அவளது கண்களில் தேங்கி நிற்கும் கண்ணீரே சொல்லிவிட்டது. இருந்தும் அவள் மனக் காயம் ஆறுமுன் நாம் அவளைத் தொந்தரவு பண்ணக் கூடாது. என் மனதிலும் அவள்தான் இருக்கிறாள் என அவளுக்கும் தெரியும். போதும். இந்த எண்ணமே போதும். என் ஆயுளின் மிச்ச நாளை இந்த மனநிறைவோடு கழித்து விடுவேன்.

இத்தனை நாளாய் நான் தொலைத்து விட்ட வைரத்தை எண்ணி எண்ணி என்னை நானே அழித்துக் கொண்டேன். இன்று அது என் கண்ணெதிரே பட்டை தீட்டப்பட்டு ஜொலிக்கிறது. இதுபோதும் எனக்கு. இனி என்னைப் பற்றி யாரும் அவளிடம் பேச வேண்டாம். அவள் மனம் எப்போது என்னை ஏற்றுக் கொள்ளுமோ அதுவரை அவளுக்காக நான் காத்திருப்பேன். இது சத்தியம் தென்றல். நீ போகலாம். என்னைப் பார்த்தால் உன் வேதனை அதிகரிக்கும் என்றால் என்னைப் பார்க்க வேண்டாம். நானும் விரைவில் இங்கிருந்து போய்விடுகிறேன். நீ எப்போதும் போல் உன் பணியை சேவையைத் தொடரலாம். நான் உன்னை இடையூறு செய்ய மாட்டேன். நீ போ'' என்றவன் அதற்கு மேல் பேசாமல் சுவரைப் பார்த்தபடி ஒருக்களித்து படுத்துக் கொண்டான். அந்த ஒதுக்கத்தை ஏனோ தென்றலின் மனம் ஏற்றுக் கொள்ள முடியாமல் தடுமாறியது.

தயங்கி நின்றவளின் அருகே வந்தாள் மகாலஷ்மி. ''போதும்மா. இதுவரை நீயும் என் பிள்ளையும் பட்ட கஷ்டங்கள் போதும். தென்றல் எனக்குப் பெண் குழந்தைகள் கிடையாது. நீ அந்தக் குறையைத் தீர்ப்பாய் என்று நம்புகிறேன். உனக்காக வருண் மட்டுமல்ல நானும் காத்திருக்கிறேன். சீக்கிரமா நல்ல முடிவை எடுத்து விடம்மா. தகுந்த நேரத்தில் எடுக்கப்படாத முடிவுகளால் எத்தனை பேர் வாழ்க்கை தொலைந்து போயிருக்கிறது. இதை என் அனுபவத்தில் நான் நிறையப் பார்த்திருக்கிறேன். அதனால்தான் சொல்கிறேன். நீங்கள் வாழ வேண்டியவர்கள். நடந்ததையே நினைத்து வாழ்க்கையை வீணடிப்பதை விட மறப்போம் மன்னிப்போம் என்று என் மகனை ஏற்றுக் கொள்ளம்மா. என் கணவரும் தன் தவறை



உணர்ந்து விட்டார். உன்னைத் தேடி உன்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று அவர் புறப்பட்ட போதுதான் உங்கள் அப்பாவைப் பார்க்க நேர்ந்தது. இதுவே தெய்வீகச் செயல் என்றுதான் நினைக்கிறேன். உன்னை நான் வற்புறுத்தவில்லை. ஆனால் கொஞ்சம் யோசிக்கச் சொல்லுகிறேன். மனிதராகப் பிறந்தவர்கள் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் ஏதோ தவறு செய்து விடுகிறார்கள். அதற்கு தண்டனையை அவர்களே பெற்று விட்ட பிறகும் தண்டிப்பது கொடுமை அல்லவா. புத்திசாலிப் பெண் நீ. நான் சொல்லித்தான் தெரிய வேண்டுமா? ம்..'' கேள்வியாய் நிறுத்தினாள் மகாலஷ்மி.

பதிலேதும் பேசாமல் வெளியேறினாள் தென்றல். எதிரே நின்ற தந்தையையும், கதிரையும் பார்க்காதவள் போல் நகர்ந்தாள். குடிலுக்குள் நுழைந்தவளது மனம் பொங்கும் கடலாய் ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தது. என்னவென்று சொல்ல முடியாத உணர்வு அலைக்கழித்தது. இந்த மனதோடு தன்னால் வேலை செய்ய முடியாது எனத் தோன்றவும் வெளியே வந்தாள். மனம் கொஞ்சம் சாந்தியடையட்டும். காலாற நடந்தால் என்ன? என்ற எண்ணம் தோன்றிய உடன் காலில் செருப்பை மாட்டிக் கொண்டு வீட்டின் பின்புறம் இறங்கிய சரிவில் கவனமாய் பார்த்து கால் வைத்து இறங்கி நடக்க ஆரம்பித்தாள்.

மதிய வேளை என்றாலும் வெயிலின் தாக்கம் தெரியாமல் அடர்ந்த மரங்கள் கவசமாய் காத்துக் கொண்டிருந்தன. வகை வகையான தாவரங்கள், பெயர் தெரியாத கொடிகள், செடிகள் என அனைத்தும் அற்புதமான நிறங்களில் பூத்துக் கிடந்தன. நின்று ஒவ்வொன்றாய்

தொட்டுப் பார்த்து ரசித்தாள். மணமில்லைதான் என்றாலும் கொள்ளை அழகாய் பூத்திருந்தன. மஞ்சளும் குங்குமமும் கலந்த நிறத்தில் குட்டி குட்டியாய் பூத்திருந்த பட்டு ரோஜாக்கள். ரோஜா நிறத்தில் பூத்திருந்த நித்திய கல்யாணிப் பூக்கள், இடையிடையே மஞ்சள் பொடியைத் தூவினாற் போல் மஞ்சள் நிற கொத்துவாளிப் பூக்கள், ஒட்டு மொத்த காட்டையும் தன் வசத்தால் கவர்ந்திழுத்த பன்னீர் புஷ்பங்கள் என அந்த வனம் மிக ரம்மியமாய்த்தான் இருந்தது. எத்தனையோ முறை இங்கு வந்தும் தன் மனம் இத்தனை தெளிவாய் இதைப் பார்க்கவில்லையே. ரசிப்பதற்கும் ஒரு ஆர்வம் வேண்டும். ரசனை இல்லாத வாழ்வு உப்பில்லா சமையல் போல் ருசிக்காது. ஓட்டைக் குடிசையில் வாழ்ந்தாலும் கூரை வழியே தெரியும் விண்மீன்களை ரசிக்கும்போது வறுமை மறைந்துபோகும். காலில் செருப்பின்றி நடக்கும்போதும் புல் தரையைப் பாதம் தீண்டுவதை ரசித்தால் பாதம் நோகாது. குழந்தை உண்பதைப் பார்க்கும் பசியால் வாடும் தாய்க்கு தன் பசி மறந்து போகும். கிடைத்த வாழ்க்கையை ஏற்று அதை ரசித்தால் ஏமாற்றம் என்பதே இருக்காது. எப்படியென்றாலும் மனிதன் வாழப் பொறுமை சகிப்புத் தன்மை போல இந்த ரசனையும் கண்டிப்பாக வேண்டும்தான். இத்தனை காலம் ஒளிந்து கொண்டிருந்த ரசனை இப்போது மட்டும் எப்படி வெளிவந்தது. பல நூறு முறை, இதே மலையில் ஏறி தோழிகளுடன் மூலிகை தேடி அலைந்திருக்கிறோம். ஆனால் கண்கள் தேவையான பொருளை மட்டும்தான் தேடியதே தவிர இந்தப் பூக்களும் நறுமணமும் தூரத்தில் விழும் அருவியின் ஓசையும் பறவைகளின் இனிய ஒலியும் தன்னைத் தீண்டியதே இல்லை. அத்தனை கண்மூடித்



தனமாகவா நடமாடினோம். ஆம் என்றது அவளது உள்மனம். இத்தனை காலமாய் தேவேந்திரன் மீதுள்ள கோபம் மட்டும்தானே தன் கண் முன்னே-பூதாகரமாய் நின்றது. அந்த வெறுப்பில் வருணின் ஆழ்ந்த நேசம் கண்ணில் படவே இல்லையே.

"தென்றல்! இந்த புறாக் கூண்டு வாடகை வீடு இனிமே நமக்கு வேண்டாம்! நான் லாலிரோட்ல மெயின்லயே சூப்பரா ஒரு பெரிய ஷோரூம் பார்த்து ரெடி பண்ணிட்டேன். கீழ கடை. மாடியில பெரிய வீடு. மாமாவுக்கு கால் வலியில் நடக்க முடியாதே. அதனால கடைக்குள்ளே பாத்ரூமோட ஒரு பெட்ரூம். மாமா அதிலே தங்கிக்கலாம். விதவிதமா மருந்து தயாரிச்சு வியாபாரத்தைப் பெருக்கட்டும். இந்த சந்துக்குள்ளயே இவ்வளவு கூட்டம் வருதுன்னா அங்கே கூட்டத்திற்கு கேட்கவா வேண்டும்? கூடமாட ஒத்தாசைக்கு நாலு பசங்களைப் போட்டுடலாம். மூலிகை பறிக்க மலைக்கு நம்ம ஜீப்ல நாமே போய் பறிச்சிட்டு வரலாம். இனி மாமாவுக்கு எந்த ஒரு தாழ்வு மனப்பான்மை யும் வந்துடாமப் பார்த்துக்கணும். கால் போனா லைபே போயிடுச்சன்னு நினைச்சி அவர் வருத்தப்பட நாம விடக் கூடாது. இந்தக் கடையே மாமாவோட தன்னம்பிக்கையை வளர்க்கணும்னுதான் பார்த்து வெச்சிருக்கேன். மத்தபடி நம்ம வீட்ல இல்லாத பணமா? உங்க ரெண்டு பேரையும் இன்னிக்கே கூப்பிட்டுப் போகவும் நான் ரெடிதான். ஆனா உங்களோட சுயமரியாதையும் எனக்கு முக்கியம் தென்றல். அதே நேரம் மாமாவைத் தனியா விடவும் எனக்கு மனமில்லை. அதனால கல்யாணத்திற்கு அப்புறம் நாம மாடியில தான் தங்கப் போறோம். நீயும் அப்பாவை விட்டுட்டுப் போக வேண்டாம். மாமாவும் மாப்பிள்ளை

வீட்டோட இருக்கிறோமேன்னு சங்கோஜப்பட வேண்டாம். வீடும் கடையும் சேர்த்து ரேட் பேசி முடிச்சிட்டேன். இனி பத்திரம் மட்டும்தான் பதிவு பண்ணணும். மாமாவோட கால் சரியானதும் அம்மா அப்பாவோட வந்து பொண்ணு பார்க்க வருவேன். பத்து நால்ல கல்யாணம். உடனே இந்த வீட்டை காலி பண்ணிட்டு நாம நம்ம புது வீட்டுக்குப் போயிடலாம். என்ன என்னோட ஐடியா பிடிச்சிருக்கா?'' என்று அவன் கேட்கையில் கண்ணீரோடு தலையை மட்டும்தான் அசைக்க முடிந்தது. அப்பாவை எண்ணி எத்தனை நாள் தூங்காமல் அழுது கொண்டிருப்பாள். இவன் தன் தந்தையின் மீது எத்தனை அன்பு வைத்திருக்கிறான். தன் மீதுள்ள நேசத்தை விட தன் தந்தையின் மீது தான் அதிக அன்பை வைத்திருக்கிறானோ? இதை ஒருமுறை அவனிடம் கேட்டே விட்டாள் தென்றல். கலகலவென சிரித்தான் வருண்.

''கண்டிப்பா, அதிலென்ன சந்தேகம்? உன் அப்பாதான் முதலில். பிறகுதான் நீ. ஏய் ஏய் முறைக்காதேம்மா. உன் அப்பா எங்களை எச்சரித்துக் காப்பாற்ற நாங்கள் அவரைக் காப்பாற்ற பிறகுதானே நான் உன்னைப் பார்த்தேன். உன் அப்பா இல்லாமல் நீ எப்படி எனக்குக் கிடைத்திருப்பாய். இயல்பாகவே மாமாவை எனக்கு ரொம்பவும் பிடித்துப் போய்விட்டது தென்றல். நான் பணக்காரன் என்று தெரியும் முன்பே என்னை மாப்பிள்ளையாக ஏற்றுக் கொண்டவர் அவர். ஸோ, அவர்தான் எனக்கு பர்ஸ்ட்.'' என்பான். கோபமாக முறுக்கிக் கொண்டாலும் உள்ளூர பெருமிதம் கொள்வாள். தன் மனதைச் சொன்னானே தவிர இதுவரை கண்ணே மணியே என்று கொஞ்சியதும் இல்லை. அப்பாவிற்கு ஒரு நல்ல மருமகனாய் நடந்து கொண்டான்



என்று தான் சொல்ல வேண்டும். அத்தனை நல்ல இதயம் கொண்டவனை வெறுத்து ஒதுக்கியதும் தவறோ. தன் மகன் பணத்தாசை பிடித்த பெண்ணிடம் மாட்டிக் கொண்டு விட்டானோ என்ற பதைப்பில் கூட அவன் அப்பா பேசியிருக்கலாம். தென்றல் நல்ல பெண் என்று அவருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லையே. அப்படித் தெரிந்தால் இத்தனை மோசமாய் பேசியிருக்க மாட்டாரோ என்னவோ.

அதெப்படி? ஒரு பெண்ணைப் பற்றி விசாரிக்காமல் அவள் தவறானவள் என்றே முடிவு செய்து எப்படிப் பேசலாம். அதுவும் அத்தனை மோசமாக. காரணம் பணம்தானே. அந்தப் பணம் அதிகம் இருந்த உடன்தானே சரி எது தவறு எது என ஆராயாமல் ஆட்டம் போட வைக்கிறது. மனம் மீண்டும் பழைய நிலைக்கே திரும்பி விட முகம் கோபமாய் சிவந்தது.

எதை மறைக்க நினைக்கின்றோமோ அதுவே மனதை விட்டு மறைவேனா என்கிறதே. ச்சே. வெறுப்போடு அந்த நினைப்பை உதறித் தள்ளினாள். சுய உணர்விற்கு வந்தவள் அப்போதுதான் உணர்ந்தாள். அட இத்தனை தூரமா வந்துவிட்டோம். கிட்டத்தட்ட மலை உச்சியின் அருகில் வந்திருந்தாள் தென்றல். மலை முகட்டிலிருந்து வெள்ளியை உருக்கினாற் போல் வழிந்த நீர் வீழ்ச்சி பாறைகளில் மோதி நான்கைந்து கிளைகளாய் பிரிந்து ஆற்றைப் போல் ஓட இப்போது அவற்றின் ஓசை அச்சம் பயமுறுத்தியது. மலையின் மீது கருமேகங்கள் மெல்ல செல்ல சட்டென இருள்பரவ ஆரம்பித்தது. மழை வருமோ, அய்யோ! வெயில் நாளிலே நான்கு மணிக்கு

இருள் கவிழத் தொடங்கி விடுமே. எப்படி இவ்ளோ தூரம்
இறங்கிப் போவது. அதற்குள் மழை வந்துவிட்டால்
பாறைகளில் நீர் கசிந்து வழுக்கி விடுமே. இருளோடு மழை
ஈரமும் சேர்ந்து விட்டால் அத்தனை விஷ ஜந்துக்களும்
வெளியேறி நடமாட ஆரம்பித்து விடுமே. தோல்
செருப்பைக் கூட அணிந்து வரவில்லையே. குளிர் காற்று
குபீரென வீச தென்றலின் தேகம் நடுங்கியது. இது குளிரால்
வந்த நடுக்கம் அல்ல. பயத்தால் வந்தது.

பொட்பொட்டென ஓரிரு பெரிய துளிகள் விழ ஆரம்பிக்க
தென்றல் திரும்பி வேக வேகமாக இறங்க ஆரம்பித்தாள்
முதலில் பாறைகளை விட்டு நகர்ந்து மண் பாதைக்குச்
சென்று விட வேண்டும் என்ற முடிவுடன் நடக்க அதற்குள்
மழை வீசி அடிக்கத் தொடங்கியது. காற்றும் மழையும்
சேர்ந்து கொள்ள மரங்களின் அசைவே பயமுறுத்திய
கால்கள் துவள நடையை எட்டிப் போட்டாள்.

அந்த சமயம்தான் அந்த ஒலி காதில் கேட்டது. இது..
அழகப்பனின் வாகனத்தின் ஒலி. அப்படியென்றால்
அவனும் இங்குதான் இருக்கிறானோ. இருள்.. தனிமை
பயம்.. மழை.. அழகப்பனின் வருகை என எல்லாமும்
சேர்ந்து தென்றலை வீழ்த்த. அப்பாவிடம் உள்ள கோபம்
சாப்பாடு மீது காட்டியிருந்த சோர்வு என ஒருபுறம் தள்ள
நிற்க முடியாமல் அவள் சாய்ந்த நேரம் அந்த இரு சக்கர
வாகனத்தின் பளீரென்ற விளக்கொளி அவனை
துல்லியமாய் அடையாளம் காட்டியது.



# 13

*பொன்னை விரும்பும் பூமியிலே*
*என்னை விரும்பும் ஓர் உயிரே*
*புதையல் தேடி அலையும் உலகில்*
*இதயம் தேடும் என்னுயிரே!*

''யார் மேல உள்ள கோபத்தைக் காட்ட இப்படிச் செய்தே? உனக்கு வேற இடமா கிடைக்கல்ல. ராத்திரியெல்லாம் உன்னைத் தேடித் தேடி எங்கெல்லாம் சுத்தி நாங்க பட்டபாடு தெரியுமா உனக்கு? வெளியில போனா சொல்லிப் போறதுக்கென்ன? எங்கேன்னு தேடுறது? எல்லாரையும் இப்படியா கலங்க வெப்ப. உனக்கு ஒண்ணுன்னா அதுக்கப்புறம் நான்.. நான் எப்படிம்மா..'' கண்கள் கலங்க மேகநாதன் கேட்க தென்றல் பதில் பேச மனமின்றி அமைதியாகவே படுத்திருந்தாள். அவளது உள்ளங் கால்களில் நீலகிரி தைலத்தை தேய்த்து சூடு பறக்க தேய்த்து விட்டுக் கொண்டிருந்தார். சுக்கை அரைத்து நெற்றியில் பற்றுப் போட்டிருந்தார். மழையில் நனைந்ததில் குளிர் காய்ச்சலில் முனகிக் கொண்டிருந்தாள். தந்தையிடம் பேசுவதை விட அவளுக்கு நிறைய யோசிக்க வேண்டியிருந்தது. நேற்று மழையில் அந்த வனாந்திரத்தில் மாட்டிக் கொண்டபோது அழகப்பன் மட்டும் வந்திராவிட்டால், என்ன ஆகியிருக்குமோ? ஆனால் அவனைக் கண்டதும் தான் அதிகம் பயந்து போனாள்.

சொட்ட சொட்ட மழையில் நனைந்து வந்தவன் வண்டியை ஓரமாய் நிறுத்திவிட்டு தென்றலை அள்ளித் தூக்கியதும் உயிரே போயிற்று. பளார் பளாரென்று அவளை அடித்தும் அசராமல் அவளைத் தூக்கிக் கொண்டு போய் அந்த டெம்போவினுள் போட்டு கதவைச் சாத்தினான். முன் இருக்கையில் அமர்ந்து விடிய விடிய காவல் இருந்தான் விடிந்து மழை விட்டதும் அதே பாதுகாப்போடு இதோ வீ... வந்து சேர்த்துவிட்டு எத்தனை அமைதியாய் கைகட்டிக் கொண்டு நிற்கிறான். எத்தனை கொடிய காமுகனா... இவனை எண்ணி இருந்தோம். நேற்றைய தனிமையில் இவனால் என்ன வேண்டுமானாலும் செய்திருக்க முடியு... ஆனால் எத்தனை கண்ணியமாய் நடந்து கொண்டான் இவனையா அவ்வளவு கொடியவனாக நினைத்து விட்டோம். எதையும் ஒரே கண்ணோட்டத்தில் பார்ப்பது தவறு என்பதை முதன் முறையாக உணர்ந்தாள்.

''வைத்தியர் ஐயா! பாவம்யா அது. ஏற்கனவே ரொ... பயந்து போய் இருக்கு. நீங்க வேற திட்டாதீங்க. ம... வரும்னு தெரிஞ்சா போயிருக்கும். நாங்க மரத்தை எல்ல... வண்டியில ஏற்றும்வரை மழைக்கான அறிகுறி இல்ல... திடுதிப்புன்னு கொட்ட ஆரம்பிச்சிடுச்சு. மலைப்பாதையி... மழையோடு வண்டி ஓட்ட முடியாதுன்னு டிரைவ... மட்டும் வீட்டுல போய் விட்டுட்டு நான் மட்டும் மே... போனேன். வேனை அப்படியே விட்டுட்டா யானை வ... நாசம் பண்ணிடும். அப்படி போறப்போ தான் தென்ற... தடுமாறி ஓடி கீழே விழுந்ததைப் பார்த்தேன். உடனே வீட்டுக்கு கூட்டி வரலாம்னு பார்த்தேன். மழை வலுத்...



போச்சு. மோட்டார் சைக்கிள்ல தனியே போறதே சிரமம். இதுல தென்றலையும் கூட்டிட்டு வர முடியாது. அதனாலதான் வேன்ல பத்திரமா இருக்க வெச்சிட்டு விடிஞ்சதும் கூட்டி வந்தேன். இதுல எதுவும் தப்புன்னா என்னை மன்னிச்சிடுங்கய்யா'' - கைகூப்பினான் அழகப்பன்.

''அட என்னப்பா நீ பெரிய வார்த்தையெல்லாம் பேசிகிட்டு. நீ என் உசிரையே மீட்டுத் தந்திருக்கே. என் ஆயுசுக்கும் இந்த நன்றியை மறக்கமாட்டேன். நீ நல்லாயிருக்கணும்ப்பா'' மனமார வாழ்த்தினார்.

''இது போதும்யா. அப்ப நான் வரட்டுமா. இனிமேல்தான் வண்டிய எடுக்கணும் வர்றேன்'' - என்றவாறே அவன் விடைபெற்றுச் சென்ற பிறகும் தென்றலால் நம்ப முடியவில்லை. அதுவரை அமைதியாய் இருந்த மகாலக்ஷ்மி, ''ஏம்மா! நான் பேசினதால எம்மேல கோபப் பட்டுத்தான் போனியா? அம்மாடி நான் எதுவும் தப்பாகப் பேசியிருந்தா மன்னிச்சிடும்மா'' - என்றாள் கண்கள் கசிய.

''அய்யோ அத்தை! நான் யார் மேலயும் கோவிச்சிட்டுப் போகல. எனக்கே கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணிக்கணும் போல இருந்தது. சும்மாதான் போனேன். ஏதோ ஞாபகத்துல ரொம்ப தூரம் போயிட்டேன். மழை வரும்னு எதிர்பார்க்கல. மற்றபடி எனக்கு யார் மேலயும் கோபம் இல்லை'' மெதுவாகவே சொன்னாள்.

''உன்னைக் காணோம்னு வருண் ராத்திரியெல்லாம் தூங்கலம்மா. விடிஞ்சதும் தான் அப்பா மருந்து கொடுத்து தூங்க வெச்சார். இந்த கதிர் இருந்திருந்தா காரை எடுத்திட்டு

தேடி வந்திருப்பாங்க. அவனும் நேத்துதான் அவங்க அம்மாவப் பார்த்துட்டு வர்றதா சொல்லிட்டு போனான். இன்னும் வரல்ல. சரி நீ ஏதாவது சாப்பிடுறியாம்மா?'' பரிவோடு மகாலஷ்மி கேட்க கண்ணீரோடு தலையாட்டினாள் தென்றல். அவள் கண்களுக்குத் தாயாகவே தோன்றினாள் மகாலஷ்மி.

''வணக்கம்ங்க. என்பேர் கதிர்வேல். ஊத்துக்குளிதான் என் ஊர். நான் எம்.பி.ஏ. படிச்சிருக்கேன். கோவையில ஒரு பெரிய கம்பெனியில வேலை பார்த்திட்டு இருந்தேன். இப்போ என் முதலாளிக்கு உடல்நிலை சரியில்லை. அதனால் அவருக்கு கார் டிரைவரா இருக்கிறேன். மாசம் பனிரெண்டாயிரம் சம்பளம் வாங்குகிறேன். எந்த கெட்டப் பழக்கமும் கிடையாது. பீடி சிகரெட், நாற்றமே பிடிக்காது. அப்புறம் எனக்கு அம்மா மட்டும்தான். ஊர்லயே இருக்காங்க. ஊர்ல தோட்டம் வயல் வீடு எல்லாம் இருக்கு. போதுமான வசதி இருக்கு. உங்களுக்கு என்னைப் பிடிச்சிருந்தா, உங்கள் பெண் கலாவை எனக்குத் திருமணம் செய்து தருவீர்களா?'' முன்பின் பார்த்தறியாத ஒரு அழகிய ஆண் மகன் தன் வீட்டுப் படியேறி வந்து தன்னிடம் இப்படிக் கேட்டதும் செய்வதறியாது திகைத்துப் போனார் ராமலிங்கம். அவரது மனைவி கண்ணம்மா தன் காதுகளையே நம்ப முடியாமல் திகைத்தாள்.

தம்பி தங்கைகளைக் குளிக்க வைத்து சீருடை மாட்டி விட்ட கலா கதிரை தன் வீட்டில் பார்த்ததும் மிரண்டுதான் போனாள். நேற்று மாலை வீடு திரும்பும் வரை தென்றல் வீடு வந்து சேர்ந்திருக்கவில்லையே. ஏதேனும் விபரீதமாகி விட்டதா?



''என்ன டிரைவர் ஸார் எங்க வீடு தேடி வந்திருக்கீங்க. தென்றல் எதுவும் சொல்லி அனுப்பினாளா?'' பதட்டமாகவே கேட்டாள் கலா.

''இல்லங்க. நான் அம்மாவைப் பார்க்கப் போயிருந்தேன். வழியில் உங்க அப்பாவைப் பார்த்து சம்மதம் கேட்கலாம் என்று நேரே வந்து விட்டேன். ஏன்னா நான் வர தாமதமாகி விட்டால் அவர் வேலைக்குப் போய்விடுவாரே. அதனால் தான் காலையிலே வந்துவிட்டேன். தொந்தரவிற்கு மன்னிக்க வேண்டும்..'' என்றான் அதே மென்குரலில்.

''சம்மதமா? என்ன சம்மதம்?'' குழப்பமாய் பார்த்தாள்.

''ஏம்மா! இந்தத் தம்பிய ஏற்கனவே உனக்குத் தெரியுமா?'' என்றார் ராமலிங்கம்.

''இல்லப்பா. நம்ம வைத்தியசாலையிலதான் இவங்க முதலாளிய வெச்சுப் பார்க்கிறாங்க. இது அவங்க கார் டிரைவர்'' என்றாள் கலா.

''வேற எதுவும் இல்லையாம்மா, அவ்வளவுதானா?'' கேட்ட தந்தையைப் பார்த்து கலவரமானாள்.

''ஏம்பா அப்படிக் கேட்கிறீங்க வேற எதுவும்னா?''

''ஸார். ப்ளீஸ். அவங்கள தப்பா நினைக்காதீங்க. நான்தான் உங்க பொண்ணை விரும்பி மணக்கக் கேட்கிறேன். அவங்ககிட்ட இதைப் பத்தி ஒரு வார்த்தையும் நான் பேசவில்லை. ஏன்னா முதல்லயே அவங்ககிட்ட பேசி அவங்க மனசில ஆசையை வளர்த்த பிறகு ஒருவேளை உங்களுக்கு என்னைப் பிடிக்காமல் போய்விட்டால்... அது எங்கள் இருவர் மனதையும் காயப்படுத்தி விடும். உங்கள்

மகளை எனக்குப் பிடித்திருக்கிறது. காலமெல்லாம் அவளுடன் வாழ ஆசைப்படுகிறேன். என் அம்மாவிடம் சொன்னேன். பெண் வீட்டார் சம்மதித்தால் சொல்லப்பா, பேசி முடிக்கலாம் என்று சொன்னார்கள். அதனால்தான் உங்களிடம் கேட்க வந்தேன். உங்களுக்குச் சம்மதம் என்றால் என்னைப் பிடித்திருக்கிறதா என்று நீங்களே உங்கள் பெண்ணிடம் கேட்டுச் சொல்லுங்கள். நீங்கள் எந்த முடிவை எடுத்தாலும் ஏற்றுக் கொள்வேன்'' - கதிரின் பேச்சு பெற்றவர்களின் முகத்தில் மலர்ச்சியைத் தர கலா பதட்டமும் நாணமுமாய் உள்ளே சென்று தன்னை மறைத்துக் கொண்டாள்.

ராமலிங்கம் புன்னகைத்தவாறே, ''தம்பி முதல்ல உட்காருங்க. படிச்ச புள்ள அதான் தைரியமாகவும், தெளிவாகவும் பேசுது. நாங்க படிப்பறிவு இல்லாத வங்கய்யா. அதான் கொஞ்சம் பயந்து போயிட்டோம். உங்க பேச்சும் உங்க நடத்தையும் எங்களுக்கு ரொம்பப் பிடிச்சிருக்குப்பா. இந்த சீரு செனத்திய பத்தி அம்மா என்ன சொன்னாங்க..'' என கேட்டதும் சந்தோஷமாகச் சிரித்தான் கதிர்.

''ஓ! உங்களுக்கு என்னைப் பிடிச்சிருக்கா. தேங்க் காட் இதுபோதும். எனக்கு இது போதும். சீர் செனத்தின்னு எதுவும் வேணாம். அதையெல்லாம் வாங்குவதே அவமானமாக நினைப்பவன் நான். மற்றபடி நீங்க என்னைப் பற்றி தாராளமாக விசாரித்துக் கொள்ளுங்கள். பெண்ணைப் பெற்றவர்கள் நீங்கள். அலசி ஆராய்வதுதானே முறை. நான் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ள மாட்டேன். நீங்களே நான் பாருங்கள். நான் அம்மாவை அழைத்து வருகிறேன்.



திருமணம் மட்டும் என் முதலாளிக்கு குணமானபின் வைத்துக் கொள்ளலாம். எனக்கு நேரமாகிறது. வரட்டுமா'' என்றவாறு எழுந்தான்.

''தம்பி! காபி சாப்பிட்டுப் போங்க. அம்மா கலா, தம்பிக்கு காபி கொண்டு வாம்மா'' கண்ணம்மா குரல் கொடுக்க, கலா தயக்கமாய் உள்ளேயே நின்று கொண்டிருந்தாள்.

பால் கூட இல்லையே, கருப்புக் காபியை எப்படிக் கொடுப்பது. இந்த அம்மா ஏன் காபி சாப்பிடச் சொன்னாள். இப்போது என்ன செய்வது? அவஸ்தையாய் கைகளைப் பிசைந்தாள். ''எங்க, பால் இல்லாத காபி இருந்தா கொடுங்க. நான் பால் சாப்பிடுவது இல்லை'' என்ற கதிரின் குரல் அவள் வயிற்றில் பாலை வார்த்தது.

அவசரமாய் முகத்தை ஒற்றி விட்டு லேசாய் பவுடரை பூசி ஒரு பொட்டும் வைத்துவிட்டு அந்த மங்கிய கண்ணாடியில் முகத்தைப் பார்த்துக் கொண்டு திருப்தியுற்றவளாய், அடுப்பில் கிடந்த காபியை டம்ளரில் ஊற்றி எடுத்து வந்தாள் கலா. இனிப்புப் பலகாரங்கள் பூ பழங்கள் ஆண் பெண் உறவினர் கூட்டம் என எதுவுமே இல்லாமல் ஒரு இனிய சுயம்வரம் அங்கே அரங்கேறியது. கதிர் அவள் கண்களுக்கு ராஜகுமாரனாய்த்தான் தெரிந்தான். கண்களில் நேசமும் கனிவும் குடி கொண்டிருந்த அவனை நிமிர்ந்து பார்க்க முடியாமல் தலை கவிழ்ந்தாள். காபியை வாங்கியவன், ''எங்க பொதுவா பொண்ணு பார்க்க வந்தா பொண்ணைப் பாடச் சொல்லுவாங்களாமே. நான் அதெல்லாம் கேட்டு உங்களை சங்கடப்படுத்த மாட்டேன். ஆனா ஒரே ஒரு கவிதை மட்டும் சொல்லணும். மறுக்காதீங்க. ப்ளீஸ் எனக்காக..'' ஆசையாய்க் கேட்டதும்

மறுக்கத் தோன்றவில்லை. கண் மூடி யோசித்தாள். சட்டென கண் திறந்தாள்.

*மலர்போன்ற உன் இதயத்தில்*
*வாசமாகக் குடியேற ஆசைப்படுகிறேன்!*
*உன் ஆயுள் வரை கூடவே வாழ்ந்து*
*உன்னுடன் உதிர்ந்து விட...*

பிரமித்துப் போனான் கதிர்.

"தேங்க்யூ.. தேங்க்யூ ஸோ மச். இதையே உங்க சம்மதமா எடுத்துக்கலாமா?'' கண்களில் குறும்பு மின்ன அவன் கேட்க வெட்கமாய் ஓடி மறைந்தாள் கலா.

நாட்கள் இறக்கை கட்டிக் கொண்டு பறக்க வருண் நன்றாகத் தேறி வந்தான். தேவேந்திரன் தனியாக இருப்பதால் கதிரை வருணுக்கு துணையாய் வைத்து விட்டு, வீடு சென்று வருவாள் மகாலஷ்மி. உடன் வருவதாகக் கெஞ்சும் கணவரை பொறுமையாக இருக்கச் சொன்னாள். தென்றல் மனம் மாறும்வரை பொறுமையாக இருங்கள் என அடக்கி வைத்தாள். கலா கல்யாணக் களையில் அழகு கூடித் தெரிந்தாள். கதிர் அம்மாவை அழைத்துக் கொண்டு வர அனைவருமாய் கலா வீட்டிற்குச் சென்று எளிமையாய் நிச்சயம் செய்து கொண்டனர். மருமகளுக்கு தன்னுடைய இரட்டை வட சங்கிலியும் நான்கு வளையல்களையும் மாட்டிவிட்டு அழகுபார்த்தாள் கதிரின் தாயார் பத்மாவதி.

கலாவின் பெற்றவர்கள் ஆனந்தக் கண்ணீர் விட கதிரின் மேல் அளவு கடந்த மரியாதையும் நேசமும் பெருகிற்று கலாவிற்கு. அனைத்தையும் மென்மையாய் பார்த்துக்



கொண்டதோடு சரி, தென்றல் வேறெதும் சொல்ல வில்லை. பட்டும் படாமலும் நடந்து கொண்டாள். இந்த ஊருக்கு வந்த நாள் முதல் ஒன்றாய் பழகிய தோழி தன்னை விட்டுப் பிரிகிறாள் என்ற வேதனை ஒருபுறம் அழுத்தினாலும், அவளாவது நன்றாக வாழட்டுமே என மனம் மகிழ்ந்தது. வருண் நன்றாக நடமாடுகிறான் என்றது பெரிய ஆறுதலைத் தந்தாலும் விரைவிலே தன்னை விட்டுப் பிரிந்து போய்விடுவான் என்ற எண்ணமே அவளை வதைத்தது.

எத்தனை நாள் இந்த நாடகம் தொடரும். கண் முன்னே அவனை வைத்துக் கொண்டு அவனை வெறுப்பது போல் நடிக்க முடியவில்லை. அவனை அறியாமலே அவனைப் பார்ப்பதும் அவன் திரும்புகையில் மறைந்து கொள்வதுமாய் எத்தனை நாள் தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ள முடியும். தன் மனதில் வருண்தான் நிரந்தரமாய் குடிகொண்டிருக் கிறான் என்று தெரிந்த பின்பும் ஏன் அவனை ஏற்றுக் கொள்ள முடியாமல் தவிக்கிறோம். அவன் போன பிறகு எப்படி அவனை மறந்து வாழப் போகிறோம் என்ற பயமே அவளை வாட்டி உருக்குலைய வைத்தது.

## 14

*நீ என்னைச் சேர்ந்திடும் வரையில்*
*இதயத்தில் சுவாசங்கள் இல்லை - நீ*
*வந்து தங்கிய நெஞ்சில்*
*யாருக்கும் இடமே இல்லை...*

கண்ணாடி முன் நின்று தலைவாரிக் கொண்டிருந்தாள் தென்றல். பார்வையை கூர்மையாக்கி தலைமுடியைப் பார்த்தாள். கார்மேகக் கூந்தலின் ஊடே வெள்ளிக் கம்பியாய் ஒற்றை நரை முடி மின்னியது. அதை மட்டும் தனியே எடுத்து வெடுக்கெனப் பிடுங்கினாள். கையோடு வந்த முடியைப் பார்த்தாள். இருபத்தியெட்டு வயதுதானே முடியப் போகிறது. அதற்குள்ளாகவா முடி நரைத்து விடும். பக்கத்து வீட்டு விமலாவிற்கு எப்படியும் நாற்பது வயதிருக்கும். ஒரு முடி கூட நரைத்ததுபோல் தெரிய வில்லையே.

ஒருமுறை கலா வாய்விட்டே கேட்டு விட்டாள். விமலா சிரித்துக் கொண்டே, ''அடியே கலா, வயசு பெரிய விஷயமே இல்லடி. கவலைப்படாம மனசை சந்தோஷமா வெச்சிக்கிட்டா மனசு எப்பவும் இளமையாகவே இருக்கும். மனசு இளமையா இருக்கும்போது முடி எப்படி வெளுக்கும். அதோட நான் எப்பவும் அரைக்கீரை தைலம்தான் தேய்ப்பேன். தேவையில்லாம எதுக்கும் கவலைப்பட மாட்டேன். அதான் என் தலைமுடி கருகருன்னு அப்படியே இருக்கு'' என்றாள்.

அவள் ஏன் கவலைப்பட வேண்டும். அவள் காலால் இட்ட வேலையை தலையால் முடிக்கும் கணவன். தங்கமான மாமியார். அழகும் அறிவுமாய் இரண்டே குழந்தைகள். செழிப்பான வருமானம். வளமான வாழ்வு. பிறகேன் கவலைப்பட வேண்டும். எப்படியோ தனக்கும் வயதாகிக் கொண்டே வருகிறது என்பதை இந்த நரைமுடி சொல்கிறதோ, அப்படியானால் கலா சொன்னது போல் இனிமேல் கிழவி என்று தான் சொல்வார்களோ, சொல்லட்டுமே. அதைக் கேட்ட பிறகேனும் எவனாவது



பெண் கேட்டு வராமல் இருந்தால் சரிதான். கையிலிருந்த முடியை விசிறி விட்டு, தலையைப் பின்னி கொண்டை யாய் முடிந்த போது அப்பா யாரையோ வரவேற்பது கேட்டது. யார்? அப்பாவின் குரல் இத்தனை ஆர்ப்பாட்டமாய் கேட்கிறதே. யோசனையாய் கண்ணாடிச் சட்டத்தில் ஒட்டியிருந்த ஸ்டிக்கர் பொட்டை எடுத்து நெற்றியில் ஒட்டிக் கொண்டு அறையை விட்டு வெளியே வந்தவள் அதிர்ச்சி அடித்தாற் போல் நின்றாள்.

கூடத்தில் அழகப்பன் நாற்காலியில் அமர்ந்திருக்க, அவனைச் சுற்றி ஆண்களும் பெண்களுமாய் நாலைந்து பேர் அமர்ந்திருக்க அவர்களுக்கு முன் தாம்பாளங்கள் வரிசையாய் இருந்தது. அவற்றில் பூ, பழ வகைகள், பட்டுப் புடவை, நகைப் பெட்டி என அழகாய் வீற்றிருந்தது.

கண்களில் கோபம் தெறிக்க, அப்பாவை ஏறிட்டாள். அவர் அழகப்பனிடம் அத்தனை உல்லாசமாய் பேசி சிரித்துக் கொண்டிருந்தார். ''நல்ல முடிவு எடுத்திருக்கீங்க மாப்பிள்ளை. எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு. எம் பொண்ணை பத்திரமா பார்த்துக்கோங்க மாப்பிள்ளை..''

''நிச்சயமா மாமா. எப்பவோ இந்த முடிவை எடுத்திருக்கணும். அவ மனசு புரியாம தயங்கி நின்றேன். இனிமேலும் தாமதிச்சா அது அவளை இழக்க வேண்டியிருக்கும். அவ இல்லாம எனக்கு வாழ்க்கை இல்ல மாமா. அதனாலதான் நேரிடையா உங்ககிட்டயே கேட்டேன். நீங்களும் உங்க வீட்லயே வெச்சு நிச்சயம் பண்ணிடலாம்னதும் எனக்கு ரொம்ப சந்தோஷம். இவங்கள்லாம் நம்ம உறவுக்காரங்க மாமா.''

''ஓஹோ! வணக்கம்மா. உட்காருங்க.. உட்காருங்க.. மாப்பிள்ளே எல்லாம் ரெடியா'' உள்ளே பார்த்து குரல் கொடுத்தார் மேகநாதன். ''இதோ மாமா! ரெடியாயிட்டே இருக்கு'' என்றவாறே வருணும் கதிரும் பெரிய ஜமுக்காளத்தை விரித்து அதில் பெரிய தட்டை வைத்தனர். அதிலும் மாலையும் பூக்களும் இருக்க தென்றலுக்கு அழுகையில் மூக்கு விடைத்தது. ஓ! என்னைக் கேளாமல் நடக்கும் இந்த கூத்தில் இவருக்கும் பங்கு இருக்கிறது. அப்படியென்றால் என்னைப் பற்றி யாரும் கவலைப் படவில்லை. அழகப்பன் நல்லவனாகவே இருக்கலாம். ஆனால் வருண் இருந்த இடத்தில் இவனை வைத்துப் பார்க்கவே வெறுப்பாக இருந்தது. யாரைக் கேட்டு இது நடக்கிறது. யாரிடம் கோபத்தைக் காட்டலாம் எனப் பார்த்தாள். யாருமே இவளைக் கண்டு கொள்ளவில்லை. அதிலும் அப்பாவின் அலட்சியம் மனதை நோகச் செய்தது.

வருண் வந்த பிறகு தந்தையும் மகளும் பேசிக் கொள்வது நின்று போனது. இந்தக் கலாவும் உமாவும் ஏன் இன்னும் வரவில்லை. ஒருவேளை இன்று அனைவருக்கும் விடுமுறை கொடுத்து விட்டார்களோ. இந்த வருணின் அம்மாவும்தான் எங்கே போனார்கள். மகன் செய்யும் வேலையைப் பார்த்தால் கொதித்துப் போய்விடுவாரே, எங்கே? கண்களைச் சுழற்றி தேடுகையில் பட்டுப் புடவை சகிதமாய் வந்தாள். கைகளில் ஆவி பறக்க பஜ்ஜி வடை போண்டா அனைவரும் புன்னகையோடு வாங்கிக் கொள்ள தென்றலுக்கு பற்றி எரிந்தது. ''என்ன நடக்கிறது இங்கே. மிஸ்டர் அழகப்பன், யார் இவங்க... இவங்களை எல்லாம் ஏன் அழைச்சிட்டு வந்தீங்க?'' - கோபமாய் கேட்டாள்.



''வாங்க! வாங்க! எல்லாரையும் பார்த்தாச்சு. இன்னும் உங்களைக் காணமேன்னு பார்த்தேன். உடம்பெல்லாம் சரியாயிடுச்சா. அத்தே நான் சொன்னேனில்லை. இதான் வைத்தியர் பொண்ணு..'' என ஒரு பெண்மணியிடம் அறிமுகம் செய்து வைத்தான் அழகப்பன்.

''அப்படியா! வாம்மா இப்படி வந்து உட்கார்'' என அந்தப் பெண்மணி அழைக்க, ''நான்சென்ஸ்! யாரைக் கேட்டு வந்தீங்க. உங்களை நான் அழைச்சேனா'' சுள்ளென விழுந்தாள் தென்றல்.

''நான் அழைத்தேன்'' மிடுக்காய் வந்தது அப்பாவின் குரல். அதிர்ச்சியாய் திரும்பினாள். ''அ... ப்.. பா! ஏன் எதற்காக என்னைக் கேளாமல் வரச் சொன்னீர்கள்?'' - கோபமாய்க் கேட்க, அவரிடம் இருந்தும் கோபமாகவே பதில் வந்தது. ''ஏன் கேட்க வேண்டும், என் பெண்ணிற்கு நிச்சயம் செய்ய நான் யாரைக் கேட்க வேண்டும்?''

''என்னைக் கேட்க வேண்டும். என் மனதில் என்ன இருக்கிறது என்று தெரிந்தும் இப்படி வரச் சொல்வது பைத்தியக்காரத்தனம்.''

''இப்போது நீ பேசுவது தான் பைத்தியக்காரத்தனம். வீடு தேடி வந்தவர்களை வரவேற்று உபசரிப்பதை விட்டுவிட்டு அப்பாவும் மகளும் என்ன அசிங்கமாய் சண்டை போட்டுக் கொண்டு, மாமா அவளிடம் என்ன பேச்சு, நடக்க வேண்டியதை கவனிங்க மாமா. நல்ல நேரம் முடியுமுன்னே தட்டை மாத்திக்க வேண்டாமா?'' - அவசரப்படுத்தினான் வருண்.

''ரொம்ப அவசரமோ உங்களுக்கு. என்னை விரட்ட அத்தனை பேரும் சேர்ந்திட்டீங்க.. நீங்களுமா வருண்'' - வேதனையாய் கேட்டாள்.

''நானும்தான். மாமாவுக்கு வேற யார் சப்போர்ட். கூடயிருந்து எல்லாம் நாந்தானே பார்த்துக்கணும். ஆமா உனக்கு மட்டும் ஏன் இதுல விருப்பமில்ல. எங்க எல்லோருக்குமே அழகப்பனைப் பிடிச்சிருக்கு. உனக்கு என்ன பிரச்சனை?'' வருண் கேட்க திணறினாள்.

''ஏன் உங்களுக்குத் தெரியாதா?''

''என்ன? என்ன தெரியாதா?'' அவனும் அதே கேள்வியைத் திருப்ப, ''போதும்! வருண். என்னை விட்டுவிட்டு உங்களால் வாழ முடியுமா? என்னை இன்னொருவருக்கு விட்டுத்தர முடியுமா? சொல்லுங்கள் வருண்'' கேட்கும்போதே கண்ணீர் திரண்டது.

''நெவர். அது ஒருநாளும் நடக்காது. நான் எப்படி உன்னை விட்டுக் கொடுப்பேன். உனக்கு ஏன் இப்படியெல்லாம் எண்ணம் வருகிறது. நீ என்னை வெறுத்தாலும் ஏற்றுக் கொள்ள மறுத்தாலும் நீ தான் என் மனைவி. அதில் எந்தவித மாற்றமும் இல்லை'' உறுதியாய் சொன்னவனைப் பார்த்து மேலும் குழம்பினாள்.

''அப்படியென்றால்... இது.. இது என்ன?''

''இது நிச்சயதார்த்தம்... இதுதான் மாப்பிள்ளை... இது அவங்க ரிலேஷன். இப்போது தட்டுமாற்றப் போகிறோம். இதிலென்ன சந்தேகம் உனக்கு?' - வருண் இயல்பாகவே பேச கோபத்தின் எல்லைக்கே போய்விட்டாள்.



''ந்நோ... இது நடக்கக் கூடாது. நடக்கவும் நான் விட மாட்டேன். வருண்! உங்களுக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கிறது. ஏன் என்னை இப்படி வதைக்கிறீர்கள்? உங்கள் உறவே வேண்டாம் என்றுதானே ஒதுங்கி வந்தோம். ஏன் இங்கு வந்தீர்கள்? உங்களைப் பார்த்து பார்த்து நான் தினமும் செத்துக் கொண்டிருக்கிறேன். உங்களை நெருங்கவும் மனமில்லாமல் விலகவும் முடியாமல் தினம் தினம் தவிக்கிறேனே. இந்த அழயில் எனக்கு வேறு ஒரு மாப்பிள்ளை தேவையா? ப்ளீஸ் வருண். இதற்கு மேலும் என்னை சித்ரவதை செய்யாதீர்கள். உங்களைத் தவிர வேறு ஒருவரின் நிழல் கூட என் மீது பட விரும்பவில்லை. அவர்களைப் போகச் சொல்லுங்கள். ப்ளீஸ்... என்னால் முடியாது.. என்னால் முடியாது..'' முகத்தை மூடிக் கொண்டு அழுதாள்.

மெல்ல அவளருகே வந்து அவளது கைகளை விலக்கினான் வருண். கண்ணீரைத் துடைத்தான். ''சொல்! உன் மனதில் இன்னும் நான் இருக்கிறேன்தானே. பிறகேன் உன்னை நீயே ஏமாற்றிக் கொள்கிறாய். எப்பவும் என் மனதில் நீதான் இருக்கிறாய் தென்றல். அதை இப்போதாவது புரிந்து கொள். இனி என்னை ஏற்றுக் கொள்வாய் இல்லையா?'' மென்மையாகக் கேட்டவனை பிடித்துத் தள்ளினாள்.

''டேய்! அறிவில்ல உனக்கு. முட்டாளா நீ. என்ன படிச்ச நீ. ஒரு பெண்ணோட மனசைப் புரிஞ்சுக்க முடியாத நீ பெரிய சைக்காலஜி தெரியும்னு ரீல் விட்டே. இடியட். உங்கிட்ட எத்தனை முறை சொல்றது. முட்டாள்.. முட்டாள்... உன் மூளையை என்ன அடகுக் கடையில் வைத்து விட்டாயா..

நான் என்ன உனக்கு விளையாட்டுப் பொருளா" என்றவாறு பட் பட் என அடித்தான். எந்தவித மறுப்பும் இன்றி புன்னகையோடு அத்தனை அடியையும் வாங்கிக் கொண்டான் வருண். கதிர்தான் பதறிப் போனான்.

"கலா! நீ சீக்கிரம் மணப் பெண்ணை அழைச்சிட்டு வாயேன். இங்கே ஒரு உள்நாட்டுக் கலவரமே நடக்கிறது. எங்க பாஸ் மீது சரமாரியா தாக்குதல் நடக்கிறதே. ப்ளீஸ் சீக்கிரமா வந்திடு" - என அவன் கொடுத்த குரலுக்கு உள் அறையிலிருந்து கலா வெளியே வந்தாள். அவள் பின்னால் நாணிக் கோணியபடி உமாவும் வர அடிப்பதை நிறுத்தி விட்டு ஆச்சரியமாய்த் திரும்பினாள் தென்றல். பட்டு உடுத்தி தலை நிறைய மல்லிகைப் பூ சூடி புதுப் பெண்ணின் அழகோடு தேவதையாய்த் தெரிந்தாள் உமா.

"ஏய் உமா! உனக்கா நிச்சயம். ஏன்டி கலா என்கிட்டே யாரும் சொல்லல. நான் என்னமா பதறிட்டேன் தெரியுமா? ஏன் மறைச்சீங்க?" என்றாள் தென்றல்.

"உங்கிட்ட சொல்லாம விட்டதால்தானே, உன் மனசு உள்ளதெல்லாம் வெளியே வந்தது. இல்லன்னா உள்ளேயே வெச்சு அழுத்திக்கிட்டு நீயும் சந்தோஷமா இல்லாம மத்தவங்களையும் அழ வெச்சுட்டுத்தானே இருப்பே. அதான் சொல்லல. எப்படி நீயே உன் மனசை சொல்லிட்டே பார்த்தியா?" கலா சொல்ல அவளைப் பாராட்டும் விதமாக கதிர் ஓடி வந்து கைகுலுக்கினான்.

"எதுக்கு இவ்ளோ ஆர்ப்பாட்டம்? நான் உங்களை பெண் கேட்டு வந்தேன் என்றா? நான் உங்களிடம் வலி வந்து பேசுவதே இதோ இந்த சில்வண்டைச் சீண்டத்தான்



இவளும் உங்களை மாதிரிதான். நெருங்கி வரும் போதெல்லாம் விலகி தூரமாப் போயிடுவா. எனக்கு அவளை விட்டா வேற யாரையும் பிடிக்கலை. வேற வழியில்லாமத்தான் உங்ககிட்டே வழிய ஆரம்பிச்சேன். அப்பவே இந்த சில்வண்டு முகம் போகும் போக்கைப் பார்க்கணுமே. உடனே எனக்குப் புரிஞ்சு போச்சு. சரி அவ அப்பாகிட்டே பேசி முடிவு பண்ணிடலாம்னு போய்க் கேட்டா எனக்கு தினமும் தண்ணியடிக்க காசு தந்திடு. அவளை எத்தனை நாள் வேணா வெச்சிக்கன்னு அசிங்கமா பேசிட்டாரு. அப்புறம்தான், உங்க அப்பா ஞாபகம் வந்தது. வைத்தியரய்யாவைப் பத்தி பேசும்போதெல்லாம் எங்க அப்பா எங்க அப்பா என்று வாய் ஓயாமல் சொல்வா இவ. அதனால நேரே உங்க அப்பாகிட்டே வந்து உமாவைப் பெண் கேட்டேன். அவரும் பெரிய மனதுடன் நம் வீட்டிலேயே நிச்சயம் செய்து கொள்ளலாம் என்று சொல்லிவிட்டார். இன்று நல்ல நாள். அதனால்தான் வந்தோம். ஆனா உங்களுக்குத் தெரியாது என்று எனக்குத் தெரியாது. இந்த சில்வண்டு கூட சொல்லவில்லையா?" என்றவாறே உமாவைப் பார்த்தான் அழகப்பன்.

"அதெல்லாம் சரி அழகப்பன், உமான்னு எவ்ளோ அழகான பேர் வெச்சிருக்காங்க, நீங்க என்ன சும்மா சில்வண்டுன்னு சொல்றீங்க? அதென்ன பெயர் சில்வண்டுன்னு" வருண் கேட்க சங்கோஜமாய் சிரித்தான் அழகப்பன்.

"அது... காட்டுல ஒரு சின்ன வண்டு திரியும். அதுதான் சில்வண்டு. எப்பவும் விர்..ருன்னு ரீங்காரமிட்டு பறக்கும். அது மாதிரி இவளும் என் மனசுக்குள்ள இருந்து

ரீங்காரமிட்டுட்டே இருப்பா. அதான் இவளுக்கு அந்தப் பெயரை வைச்சேன்'' - வெட்கத்துடன் அழகப்பன் சொல்ல அனைவரும் ஆரவாரமாய் கைதட்டிச் சிரித்தனர்.

உமா ரகசியமாய் அழகப்பனைப் பார்க்க அவனும் அவளைத் தான் பார்த்துக் கொண்டே சிரித்துக் கொண்டிருந்தான். கண்களில் நன்றியோடு அவனைப் பார்த்துக் கைகூப்ப மறுப்பாய் தலையசைத்தான். வருணின் கண்களில் இது பட்டுவிட அவன் கண்கள் தென்றலை நோக்க, வெகுநாட்களுக்குப் பிறகு தென்றல் வாய் விட்டுச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

மேகநாதன் குரல் கொடுத்தார். ''சரி சரி சிரித்தது போதும் நல்ல நேரம் முடியுமுன் தட்டை மாத்திக் கொள்ளலாம் அம்மா உமா, இப்படி வந்து அப்பா பக்கத்தில் உட்காரும்மா பெரியவங்களுக்கு நமஸ்காரம் பண்ணிக்கோ'' என்றார்.

உமா அமைதியாக வந்து அவர் காலில் விழுந்தாள் கண்ணீர் துளி தெறிக்க, ''என்னை ஆசீர்வதிங்கப்பா. நான் உங்களைத்தான் தெய்வமா நினைக்கிறேன்'' - என்றாள். ''அட என்னம்மா நீ எழுந்திரும்மா. உன் மனசுக்கேத்த மணாளனோடு நூறு வருஷம் சந்தோஷமா வாழ்வே எழுந்திரும்மா. நல்ல காரியம் நடக்கும்போது கண் கலங்கக் கூடாது'' - என்றவாறே அவளது தோள் பற்றி எழுப்பி அருகில் அமர வைத்துக் கொண்டார். அழகப்பனைப் பார்த்து, ''தம்பி! உமாவும் என் பொண்ணுதான். அதனால பொண்ணு வீட்டு சார்பா மாப்பிள்ளைக்கு செயினும் மோதிரமும் நானே போட்டுடறேன். கல்யாணத்தையும் நம்ம வீட்லயே வெச்சிடுவோம்'' என்றார்.



''வைத்தியரய்யா, ஏற்கனவே என் கழுத்தில் செயின் இருக்கு. இந்த சம்பிரதாயமெல்லாம் வேண்டாம். கல்யாணத்திற்கு நிறைய கூட்டம் வரும். அதனால ஏதாவது பெரிய மண்டபம் பார்த்திடலாம்னு நினைச்சேன்'' என்றான்.

''ஆமா நிறைய கூட்டம் வரும். சரி தம்பி. உங்க வசதி போல செய்யுங்க. எம் பொண்ணுக்கு செய்ய வேண்டிய சீரை நான்தான் செய்வேன். அதை மட்டும் மறுக்காதீங்க. நான் பெத்ததுக்குத்தான் கல்யாணம் காட்சின்னு செய்து பார்க்க எனக்குக் கொடுப்பினை இல்லை. இதுங்கள்லாம் என்னை அப்பான்னு கூப்பிட்டு வளர்ந்த புள்ளைங்க. இந்தக் கடமையாவது செய்து நான் திருப்திப்பட்டுக் கொள்கிறேனே'' - என்றவரைப் பார்த்து சம்மதமாய் தலையசைத்தான் அழகப்பன்.

''அப்புறம் தட்டை மாத்த வேண்டியதுதானே'' என மகாலஷ்மி சொல்ல, மீண்டும் கலகலப்பாய் நிச்சய தாம்பூலம் நடைபெற தென்றல் மட்டும் கண்கள் கலங்க ஒதுங்கி வெளியேறினாள். கண்கள் குளமாக வேகமாகச் சென்று தன் அறையில் அடைந்து கொண்டாள்.

## 15

*கடவுள் அமைத்து வைத்த மேடை*
*இணைக்கும் கல்யாண மாலை*
*இன்னார்க்கு இன்னாரென்று*
*எழுதி வைத்தானே தேவன் அன்று!*

உமாவின் தந்தையின் ஸ்தானத்தில் நின்று தட்டை மாற்றிக் கொண்டார் மேகநாதன். உமாவின் நிறத்திற்கேற்ற குங்கும நிறத்தில் உடல் முழுக்க ஜரிகை வேயப்பட்டிருந்த பட்டுப் புடவையைக் கொண்டு வந்திருந்தான் அழகப்பன். அதோடு "இதெல்லாம் அம்மா நகை. அம்மா போனப்புறம் அப்படியே கிடந்து போச்சு. கொஞ்சம் பாலீஷ் போட்டு எடுத்துட்டு வந்தேன். இன்னிக்குப் போட்டுக்கட்டும். எல்லாம் பழையகால நகைங்க. உமாவுக்கு பிடிக்லேன்னா புதுசா மாத்திடலாம்" - என்றவாறே அந்த நகைப் பெட்டியை நீட்டினான். தயங்கி நின்றாள் உமா. "வாங்கிக்கோம்மா. மாப்பிள்ளைக்கு உம்மேல எவ்ளோ பிரியம். உனக்கு பிடிக்கலேன்னா பரம்பரை நகைகளையே மாத்திடலாம்னு சொல்றாரே. வாங்கிக்கங்கம்மா" என்றார் மேகநாதன்.

கைநடுங்கப் பெற்றுக் கொண்டாள் உமா. "அம்மா கலா! உமாவை தென்றல் அறைக்கு கூட்டிட்டுப் போயி நிச்சயப் புடவையை மாற்றி நகையெல்லாம் மாட்டி கூட்டிட்டுவா" என அனுப்பி வைத்தார். "சரிங்கப்பா" என்றவாறு நகைப் பெட்டியையும் புடவையையும் எடுத்துக் கொண்டு உமாவை அழைத்து தென்றலின் அறைக்குள் நுழைந்தாள். அறைக்குள் நுழைந்ததும் ஓடிச் சென்று மூலையில் அமர்ந்து கொண்டு விக்கி அழ ஆரம்பித்தாள் உமா. கலா மட்டும் அல்ல கட்டிலில் அமர்ந்திருந்த தென்றலும் பதறித்தான் போனாள். "ஏய்! ஏன்டி. ஏன்டி அழறே. என்ன ஆச்சு. உனக்கு பிடிச்ச மாப்பிள்ளைதானே. பிறகேன் அழுறே, சொல்லுடி" அதட்டினாள் கலா.



"இல்லேப்பா. நான் அவரை எவ்வளவோ அவமானப் படுத்தி இருக்கிறேன். ரொம்பத் திட்டியிருக்கிறேன். தென்றலைப் பார்த்து வழியும்போது கூட தாறுமாறாய்ப் பேசியிருக்கிறேன். வேறு எவனாய் இருந்தாலும் போடி எனத் தூக்கி யெறிந்து விட்டுப் போயிருப்பான். ஆனால்.. இவர்.. இவர் இத்தனை நல்லவர் என்று தெரியாமல் போய்விட்டதே. என்னிடம் என்ன இருக்கிறது? நல்லதாய் ஒரு புடவை கூட கிடையாது. என்னைப் போய் இத்தனை வருடங்களாய் நேசித்து இதோ பார் எத்தனை சீர்வரிசை.. கலா நான்.. நான் அவருக்கு ஏற்றவள்தானா? இத்தனை அன்பிற்கும் நேசத்திற்கும் தகுந்தவளா. அவருக்கு பொருத்தமாய் இருப்பேனா? என் மீது அவருக்குக் கோபம் இருக்காதே. நான்.. நான் அவரிடம் ஒரு நாள் கூட... அன்பாகப் பேசியதில்லையே... எரிந்துதானே விழுந்திருக் கிறேன். என்னை எப்படி அவருக்குப் பிடித்துப் போனது?" அழுகையினூடே கேட்டாள். தென்றல் மிரண்டு போய் அமர்ந்திருக்க, கலாதான் அவளது கண்ணீரைத் துடைத்து விட்டாள்.

"அழாதே, உமா உனக்கென்னடி குறைச்சல். அலங்காரம் இல்லாமலே ரதி மாதிரி இருப்பாய். அதனால்தான் அவர் உன்னையே சுற்றிச் சுற்றி வந்திருக்கிறார். நாங்கள்தான் அவரைத் தப்பாக நினைத்து விட்டோம். நீதான் எங்களை மன்னிக்க வேண்டும். அவர் நல்லவர்டி. அதனால்தான் உன் புற அழகை மட்டும் பாராமல் உன் உள்ளத்தையும் பார்த்திருக்கிறார். ஒருவேளை அவரைப் பார்த்து எரிந்து விழுவதால்தான் உன் மீது அவருக்கு ஆசை அதிகரித் திருக்கும். காசு பணம் சொகுசு வாழ்க்கைக்கு ஆசைப்

படாதவள்னு உன்னைப் பார்த்தாலே தெரியுதேடி. உன் அழகும், உன் சுறுசுறுப்பும் துடுக்குத்தனமான பேச்சும் எல்லோருக்கும் பிடிக்குமே. பிறகெப்படி அவருக்கு உன்னைப் பிடிக்காமல் போகும். நீ ரொம்ப அழகுடி. அவருக்கு ரொம்பப் பொருத்தமா இருப்ப. அதோட இந்த நகையெல்லாம் போட்டுக்கிட்டா அப்படியே பட்டத்து இளவரசி மாதிரி இருப்ப. முதல்ல அழறத நிறுத்து. வந்திருக்கிறவங்க யாராவது பார்த்தா பொண்ணுக்கு மாப்பிள்ளையைப் பிடிக்கலேன்னு நினைச்சு ஆளாளுக்கு திரிச்சிப் பேசுவாங்க. வா. எழுந்து முதல்ல முகத்தைக் கழுவு. சீக்கிரமா துணி மாத்திட்டுப் போவோம்'' - என்றவாறே உமாவை எழுப்பி விட்டாள். அழுகை நின்று விட உமாவின் முகம் தெளிவடைந்தது. எழுந்து அறையின் ஓரமாய் இருந்த வாளியில் தண்ணீர் எடுத்து பின் கட்டிற்கு சென்று முகத்தைக் கழுவினாள்.

''ஏய் நீ என்னப்பா பிரமை பிடிச்சுப் போய் உட்கார்ந்திருக்க. நீயும்வேற புடவை மாத்திக்க நான் கூட பட்டுப்புடவை கட்டிட்டு வந்திருக்கேன். நீ மட்டும் இப்படி நின்னா நல்லாவா இருக்கும். வா உனக்கு நானே புடவை எடுக்கிறேன்'' என்றவாறு தென்றலின் பீரோவைத் திறந்தாள். உள்ளே நீட்டாய் மடித்து வைத்திருந்த புடவைகளுள் நன்றாகத் தேடி அந்த நீல நிற மைசூர் சில்க்கைத் தேர்ந்தெடுத்தாள் கலா. ''ம்.. சூப்பர் கலர். இதைக் கட்டிட்டு வெளியே வந்தேன்னு வை. உன் ஆள் அப்படியே மயங்கி விழுந்திடுவாரு. ம்ம்.. சீக்கிரம் கட்டு'' அவசரப்படுத்தினாள்.



தயங்கி நின்றாள் தென்றல். இந்தப் புடவை வருண் ஆசையாய் எடுத்துத் தந்தது. ''தென்றல்! இந்த நீல நிறம் எனக்கு ரொம்பப் பிடிக்கும். நீல நிற வானம், நீல நிற கடல் தோகை விரித்தாடும் மயில் இப்படி எந்த நீல நிறமென்றாலும் எனக்குப் பிடிக்கும். உனக்குப் பிடிக்குமோ என்னவோ. ஆனால் உனக்கு இந்த நிறம் பொருத்தமாக இருக்கும் என்ற நம்பிக்கையில் இதை வாங்கி வந்தேன்... பிடித்திருக்கிறதா'' என தயங்கியவாறே அதைத் தந்தான்.

''எனக்கெதுக்கு வருண் இதெல்லாம்? நீங்க தந்த பிறந்த நாள் பரிசையே பார்க்கும் போதெல்லாம் எனக்கு பயமாக இருக்கிறது. இனிமேல் இப்படி எதையும் வாங்கி வராதீர்கள். எனக்கு ரொம்ப சங்கடமா இருக்கு.'' நாசுக்காய் மறுத்தாள். வருணின் முகம் வாடி விட்டது. ''அப்படின்னா உனக்கு இது பிடிக்கலையா?''

''சேச்சே! அப்படியில்லை. ஐ லைக் திஸ் கலர். பட் இந்த மாதிரி ப்ரஸன்ட் பண்ண வேணாம். எனக்கு இது மாதிரியெல்லாம் வாங்கிப் பழக்கமில்லையே... அதான்..''

''அப்போ நீ என்னை வேற்று ஆளாய்த்தான் நினைக்கிற. நான்தான் உன்னை என் மனைவியாகவே நினைத்து ஆசையாய் வாங்கி வந்தேன். சரி. உனக்குப் பிடிக்காததை இனி நான் செய்ய மாட்டேன்.'' வருத்தமாய் திரும்பியவனை தோள் பற்றித் திருப்பினாள். ''ஸாரி வருண்! உங்க மனசை காயப்படுத்தணும்னு நான் நினைக்கல்ல. நீங்க இப்படி எனக்குப் பார்க்கிறதையெல்லாம் வாங்கிட்டு வந்து நானும் அதை ஆசையோடு வாங்கி வைத்துக் கொண்டால் நாளை உங்கள் வீட்டாருக்கு தெரியும்போது என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள். பேராசை பிடித்த பெண் என்று

எண்ண மாட்டார்களா? நமது நேசம் யாரையும் முகம் சுளிக்கவும் வைக்கக் கூடாது. மனம் கோணவும் செய்யக் கூடாது. புரிஞ்சுதா. உங்க ஆசைக்காக இப்ப இதை வாங்கிக்கிறேன். ஆனா கல்யாணத்திற்குப் பிறகுதான் கட்டுவேன். சம்மதம்னா கொடுங்க'' - என நீட்டினாள்.

''இப்பவே இவ்வளவு சட்டதிட்டமெல்லாம் போடுற. இன்னும் கல்யாணத்திற்குப் பிறகு என்னை என்னென்ன பாடுபடுத்துவியோ, நினைக்கவே பயமாத்தான் இருக்கு. என்னவோ மகாராணி இதை வாங்க சம்மதிச்சதே என் பாக்கியம். இதை நீ எப்ப கட்டி எனக்கு காட்டுவேன்னு தவம் கிடக்கணுமா? இதெல்லாம் ரொம்ப ஓவர் தென்றல். நீ இப்படி என்னை விரட்டிட்டே இருந்தே ஒருநாள் நான் ஓடியே போயிடுவேன் பாரேன்'' என்று விளையாட்டாய் தான் சொன்னான். அதுவே பிறகு வினையாய் மாறியும் போனது. அன்றிலிருந்து இன்றுவரை அந்தப் புடவையை பிரித்துக் கூட பார்க்கவில்லை அவள்.

''ஏய் தென்றல் நானே ரெடியாயிட்டேன். நீ என்ன புடவையை கையில வெச்சிட்டு கனவு கண்டுட்டு இருக்கே'' உமாவின் குரலில் கலைந்தாள். ''அட உமாவா இது. அம்மாடி எத்தனை அழகு?'' வியந்து போனாள் தென்றல். குங்கும நிற பட்டுப் புடவையும் அதற்கேற்ற ரவிக்கையும் உமாவிற்கு அத்தனை கச்சிதமாய் பொருந்தி யிருந்தது. சிவப்புக் கல் அட்டிகையும் காசுமாலையும் மூன்றடுக்கு மாலையுமாய் கைகளில் வளையல் குலுங்க அப்படியே அம்மன் சிலையாய் ஜொலித்தாள் உமா.



''பழைய நகையா இருந்தாலும் ரொம்ப அழகா இருக்கு உமா. இதெல்லாம் சுத்தமான தங்கமா இருக்கும். அவசரப்பட்டு அழிச்சிடாதே'' என்றாள் தென்றல்.

''சேச்சே! எனக்கு இதுவே அதிகம்ப்பா. வேறு எதையும் மாத்திக் கேட்க மாட்டேன். நான் இப்படி பட்டு உடுத்தி நகை நட்டெல்லாம் போடுவேன்னு கனவு கூட காணலப்பா. எனக்கு இதுவே நிறைவா இருக்கு என் அம்மா மட்டும் உசுரோட இருந்திருந்தா பூரிச்சுப் போயிருக்கும்'' சொல்லும்போதே தொண்டை அடைத்தது.

''ஏய்! நல்ல காரியம் நடக்கும்போது கண் கலங்கக் கூடாது. சரி. கம்மலையும் மாத்தியிருக்கலாமே, இது சின்னதா இருக்கே. அதுல வேறு கம்மல் இல்லையா?''

''இருக்குதுப்பா. தேர் கம்மலும், கல் கம்மலும் இருக்கிறது. நான் இதைக் கழட்ட வேண்டாம்னு சொல்லிட்டேன். தென்றல்! இந்த ஜிமிக்கி தான் நான் மொத மொதப் போட்ட தங்கம். அது அப்படியே இருக்கட்டுமே. உன் நினைவா இது என் காதோடு கிடக்கட்டும்'' என்ற உமாவை அணைத்துக் கொண்டாள்.

''உன் மனசுக்கு நீ நல்லா இருப்படி. சரி சரி கிளம்பு'' என்றாள்.

''என்னது கிளம்பா. கிளம்பறோம். முதல்ல புடவையை மாத்து. நாங்க இப்படி மின்னும்போது உன் அவர் உன்னை இப்படிப் பார்க்க ஆசைப்பட மாட்டாரா? புடவையைக் கட்டுறியா. இல்ல நான் கட்டி விடவா'' என்று கேட்டாள் உமா.

"விடமாட்டீங்களே! இதோ ஒரு நிமிஷம்" பரபரவென புடவையைச் சுற்றினாள். வருணின் மனதைப் போல புடவை வெகு மென்மையாய் இருந்தது. தொட்டாலே வழுக்கியது. இழுத்துப் பிடித்து பின் பண்ணினாள். கூந்தலைத் தளர பின்னலிட்டாள். உமாவிற்கு சூடி விட்டு மீதமிருந்த பூவை அள்ளி தென்றலுக்குச் சூட்டினாள் கலா. "என்ன பொட்டு வெச்சிருக்கே. கருப்பா இத்தூண்டு. எடு அதை" என்றவாறே அதை எடுத்து சுவற்றில் ஒட்டிவிட்டு வேறு பொட்டு அட்டையை எடுத்து நீலநிற பொட்டை எடுத்து நெற்றியில் ஒட்டி விட்டாள். லேசாய் பவுடரை ஒற்றினாள்.

"கலா, உமாதான் கல்யாணப் பொண்ணு. நானில்லை. என்னை ஏன் இப்படி அலங்கரித்துக் கொண்டிருக்கிறாய் விடு" தென்றல் அதட்டினாள்.

"நாம எல்லாருமே கல்யாணப் பொண்ணுதான். அலங்கரிச்சா ஒன்னும் தப்பில்லை. இப்பப் போய் கண்ணாடியைப் பாரு. அசந்து போயிடுவ" என்றவாறு தென்றலைக் கண்ணாடியின் முன் கொண்டு நிறுத்தினாள்.

அசந்துதான் போனாள் தென்றல். நான் இத்தனை அழகாய் இருக்கிறேனா. இல்லை இந்தப் புடவைதான் அத்தனை அழகா. ஆள் பாதி ஆடை பாதி என்பார்களே. அது இதுதானோ? இத்தனை நாளாய் எண்ணெய்த் தேய்த்து இரு பின்னலிட்டு கொண்டையிட்டே இருந்தவள் தளர்வாய் பின்னலிட்டு பூச்சூடியதும் இளமையாய் வெகு அழகாய்த் தோன்றினாள். உடம்போடு ஒட்டிய மைசூர் சில்க் அவளது தளிர் மேனியை அப்படியே தெளிவாகக் காட்டியது. வெள்ளிநிற ஜரிகை மின்னலடித்தது. வெகு நாட்களுக்குப்



பிறகு கண்ணாடி முன் நின்று தன்னையே ரசித்துப் பார்த்தாள் தென்றல்.

"ஏம்மா! பொண்ணுங்களா இன்னும் என்ன பண்றீங்க? ஒரு பொண்ணை அலங்கரிக்க இத்தினி நேரமா?" ஒரு அம்மா குரல் கொடுக்க அவசரமாய் கதவைத் திறந்து ஆளுக்கொரு புறமாய் உமாவைப் பற்றியபடி அழைத்து வந்தனர். அதுவரை கலகலவென இருந்த கூடம் கப்சிப் பென்றானது. அனைவரும் அயர்ந்து போயினர். அவரவர் தங்களது இணையை வைத்த கண்ணை எடுக்க முடியாமல் பார்த்துக் கொண்டிருக்க பெரியவர்களும் அதே நிலையில் தான் நின்றனர். மற்றவர்களை எல்லாம் விட வருணின் கண்கள்தான் வியந்து விரிந்து மகிழ்ந்தது. அவன் ஆசையாய் பரிசளித்த புடவை இது. திருமணத்திற்குப் பிறகுதான் கட்டுவேன் என்று சட்டம் போட்டுக் கொண்டு வாங்கியவள் இப்போது வானத்திலிருந்து குதித்த தேவதையாய்த் தோன்றியதும் மெய்மறந்து போனான். அவனது பார்வையைத் தாள முடியாது கூச்சத்துடன் நெளிந்தாள் தென்றல். மருமகளை நெட்டி முறித்தாள் மகாலஷ்மி.

மேகநாதனுக்கு தன் மகள் மணப்பெண்ணாகவே காட்சியளித்தாள். மாப்பிள்ளை ரெடியாய் இருக்கிறார். தன் மகள் சரியென்று சொன்னால் போதும். இதோ இப்போதே திருமணத்தை நடத்தி விடத் துடித்தது பெற்றவரின் மனம். வெகு நாட்களுக்குப் பிறகு மகளை இத்தனை அலங்காரத்தில் பார்த்ததும் பூரித்துப் போனார். அனைவரும் பேச்சற்று இருக்க கதிர்தான் வாய் திறந்தான்.

''பாஸ் நம்ம வீட்டுக்கு புதுசா மூணு பொண்ணுங்க வந்திருக்கு ஸார். பார்த்தா தேவலோகக் கன்னியர்கள் மாதிரி தோணுது. உங்களுக்கு யாரையாவது தெரியுதா பாஸ்?'' என்றான்.

''ஒண்ணுமே புரியலை கதிர். இப்பவே கண்ணைக் கட்டுதே'' மயக்கமாய் வருண் சொல்ல, பெண்கள் அனைவரும் களுக்கென சிரித்தனர்.

''சில்வண்டு! எம்பக்கத்துல வந்திடு. அவருக்கு கண்ணைக் கட்டுதாம். அப்புறம் தடுமாறி விழுந்திடப் போறார்'' - என உமாவைத் தன்னருகே உட்கார வைத்துக் கொண்டான் அழகப்பன். அவர்களுக்கு மாலை அணிவித்து பெண்கள் அனைவரும் மஞ்சளும் குங்குமமும் இட்டு ஆசீர்வதித்தனர். கூட்டத்தோடு கூட்டமாய் தென்றலின் அருகில் வந்து அவளை உரசிக் கொண்டு நின்றான் வருண். பிறர் அறியாமல் அவளது சுண்டு விரலைத் தன் விரலோடு கோர்த்துக் கொள்ள, உடல் முழுதும் மின்சாரம் பாய்ந்தது போல் உதறிக் கொள்ள கையை உருவினாள் தென்றல். அவன் விடுவதாக இல்லை. மெல்ல மெல்ல ஒரு விரல் மற்ற விரல்களோடு இணைந்து ஐந்து விரல்களும் பின்னிக் கொண்டபோது, திடீரென ஒலித்த பெருங்குரலில் பதறி விலகினர்.

''ஏய் ஓடுகாலிக் கழுதை! என்ன தைரியம் இருந்தா பெத்த அப்பன் குத்துக்கல்லாட்டம் இருக்கும்போது என்னைக் கேட்காம கல்யாணம் பண்ணுவ. வாடி வெளியே'' குரலோடு சேர்ந்து காலியான கண்ணாடி பாட்டிலும் வர கடைசி நொடியில் அதை உணர்ந்து



தென்றலை தன்னோடு சேர்த்துத் தரையில் சாய்ந்தான் வருண்.

## 16

*தொட்டால் பூ மலரும்*
*தொடாமல் நான் மலர்ந்தேன்*
*சுட்டால் பொன் சிவக்கும்*
*சுடாமல் கண் சிவந்தேன்!*

வருணின் விரல்கள் தீண்டிய இன்பம் முழுதாய் உணரும் முன் 'ச்ச்சிலீர்ரென்று' பாட்டில் உடைந்து அதில் ஒரு துண்டு தென்றலின் வலக் கரத்தில் சொருகி நின்றது. ''அம்மா...ஆ'' என வீறிட்ட பிறகே மற்றவர்கள் பார்க்க அதற்குள் செங்குருதி கோடாய் வழிய ஆரம்பித்தது. அதைப் பார்த்த வருண் கண்களில் கோபத்தீ கொளுந்து விட்டு எரிந்தது.

''டேய்ய்ய்..'' என்றவாறே வெளியேறியவனைக் கைகளை இறுகப் பற்றித் தடுத்தாள். ''பாஸ் நீங்க இடத்தைக் கவனியுங்க. நான் பார்த்துக் கொள்கிறேன் அவனை'' என்றவாறே வெளியே ஓடினான் கதிர்.

''என்னடா! ரொம்ப வலிக்கிறதா, இதோ ஒரே நிமிஷம்'' என்றவாறே அந்தக் கண்ணாடித் துண்டை கவனமாய் பிடுங்கினான். அதற்குள் இரத்தம் பீறிட மகாலஷ்மி பதறி உள்ளே ஓடி வெள்ளைத் துணியோடு வந்தார். மேகநாதன் ஒன்றும் பேசாமல் மளமளவென காயத்தை சுத்தம் செய்தார்.

வலியால் அழுதவளை அணைத்துக் கொண்டே "மாமா, மெதுவாக கிளீன் பண்ணுங்க. ரொம்ப வலிக்கும் போலிருக்கே. ஹாஸ்பிடல் போலாமா?" பதறினான் வருண்.

"இல்லே மாப்பிள்ளை காயம் அதிகமில்லை. லேசா கிழிச்சிருக்கு. இந்த பச்சை இலைச்சாறு விட்டதும் இரத்தம் நின்னுடும். அப்புறம் இதை வெச்சு கட்டுப் போட்டா எல்லாம் சரியாகிடும். பயப்படாதீங்க" தைரியமாய்ப் பேசினாலும் அவரது விரல்கள் நடுங்கிக் கொண்டுதான் இருந்தன. பெற்ற மகளின் கையிலிருந்து இரத்தம் சொட்டும்போது பெற்ற மனம் தாங்குமா என்ன? அவரது பதட்டத்தைப் பார்த்து தானே கட்டுக் கட்டினான். அதற்குள் நாலு அறை விட்டு அந்தக் குடிகாரனை இழுத்து வந்தான் கதிர்.

"பாஸ்! இந்த குடிகாரப்பயதான் பாட்டிலை வீசியிருக்கான். பாவம் வயசானவனா இருக்கான். கூட நாலு தட்டு தட்டினா பொட்டுனு போயிடுவான் போலிருக்கு. விட்டுடலாமா?" என்றான்.

"ஏய் நீ என்னடா விடுறது. நான் விடமாட்டேன். என்னைக் கேட்காம எப்படிடா நீ இந்த ஏற்பாட்டை செய்யலாம்" நிற்கக் கூட முடியாமல் அந்த ஒடிசலான உடம்போடு ஆடிக் கொண்டிருந்தார் துரை.

"ஐயோ! இது என் அப்பா" உமா எழுந்து ஓடிவந்தாள். "என்ன உங்க அப்பாவா. ஸாரிங்க. மேடத்தோட கையில காயமானதும் கோபத்தில நாலு அறை விட்டுட்டேன். ஸாரிங்க" - என்றான் கதிர்.



மேகநாதன் முன்னே வந்தார். "ஏய் கூறுகெட்ட பயலே! என்ன காரியம் பண்ணே. இத்தினி வருஷம் கழிச்சி உம் பிள்ளைக்கு இப்பத்தான் நல்ல காரியம் நடக்குது. இதை கெடுக்கணும்னு வந்தியா, பாரு உம்பிள்ளைய பாரு. இந்தக் கோலத்தில பார்த்த பிறகாவது உனக்கு மனசுன்னு ஒண்ணு இருந்தா புள்ளையை வாழ்த்திட்டு ஒருவாய் சாப்பிட்டுப் போ" என்றார்.

கண்களை கசக்கிக் கொண்டு மகளைப் பார்த்தார் துரை. "அடக் கழுதை. இவ்வளவு நகையை இத்தினி நாளாய் எங்கேடி ஒளிச்சு வெச்சிருந்தே. அடிப்பாவி மகளே! நான் அஞ்சுக்கும் பத்துக்கும் அல்லாடுறேன். நீ என்னன்னா கழுத்து நிறைய நகையை மாட்டிட்டு நிக்கிறியே., குடுடி அதை" - உமாவை நகர்த்திவிட்டு முன்னால் வந்தான் அழகப்பன்.

"யோவ் மாமா! உனக்கு அவ்வளவுதான் மரியாதை. இவளைப் பெத்தவனாச்சேன்னு உன்னை சும்மா விடுறேன். மூடிப் போயிரு. அவ மேல உன் கை பட்டுது. அப்புறம் நான் சும்மா இருக்க மாட்டேன்" மிரட்டினான்.

கொஞ்சமும் அசரவில்லை துரை. "என்னடா பண்ணுவே, உன்னால என்னடா பண்ண முடியும்? ஏய் ஒழுங்கா எம்மவள எங்கூட அனுப்பி வையுங்க. இல்லேன்னா இங்க எத்தனை தலை உருளுமோ எனக்கே தெரியாது" - விரலை நீட்டி எச்சரித்தார்.

"சரிதான், பார்ட்டி கணக்குல வீக் போல" என்ற கதிர் கலாவின் முறைப்பில் வாயை மூடிக் கொண்டான். கைவலி குறைந்திருக்க தென்றல் எழுந்து வந்தாள்.

''எதுக்காக அவளை உங்ககூட அனுப்பனும். எவனாவது மூணாந்தாரமாக் கேட்டானா, ஏன்யா ஒரு பாட்டில் சாராயம் கிடைச்சா பெத்த பொண்ணையே வித்திடுவியா. அசிங்கமா இல்ல உனக்கு. என்ன ஜென்மய்யா நீ. அப்படியென்ன குடி வேண்டிக் கிடக்கு'' கோபமாகக் கேட்டவளைக் கூர்ந்து பார்த்தான்.

''ஓஹோ! வைத்தியர் பொண்ணா அதான் பாடம் எடுக்குது. நானாவது எம் பொண்ணை மட்டும் விக்கிறேன். உங்க அப்பன் இங்க என்ன வேலை செய்யுறான். மாமா வேலைதானே செய்யுறான்.''

பளாரென அறைந்தான் வருண். ரெண்டு சுற்று சுற்றி தூரமாய் விழுந்தான் துரை. ''ஸாரி உமா! மாமாவைப் பத்தி உங்க அப்பா பேசினதை என்னால கேட்க முடியலை ஸாரி'' என்றான்.

உமா பதிலேதும் பேசாமல் வாய்பொத்தி அழுது கொண்டிருக்க, கீழே விழுந்த துரை அதே பாய்ச்சலில் எழுந்து வந்தார்.

''ஏய் வைத்தியரே! எம்பொண்ணுக்கு என்னைக் கேட்காம கல்யாணம் பண்ணி வைக்க நீ யாருய்யா? தட்டிக் கேட்டா அடியாளை வெச்சு அடிக்கிறியா? இந்த துரையை அடிச்சு வீழ்த்த முடியுமா? சிங்கம்டா. சிங்கம் சாஞ்சிருமா?'' வடிவேலுவைப் போல் உளற இம்முறை அடிக்க கை ஓங்கிய வருணைத் தடுத்தார் மேகநாதன்.

''வேண்டாம் மாப்பிள்ளை. குடிகாரப் பய பேச்சை யெல்லாம் பெரிசா எடுத்து சண்டை போடக் கூடாது. என்ன



பேசறோம்னு தெரியாமப் பேசிட்டு இருக்கான் போறான் விடுங்க.''

ஆனால் துரை விடுவதாக இல்லை.''நான் குடிகாரனா, நான் தெரியாமப் பேசுறேனா. எல்லாம் தெரிஞ்சுதான்யா பேசறேன். நீயும் உம் பொண்ணும் யோக்கியமா. ஏன்யா இந்த ஊருக்கு பஞ்சம் பொழைக்க வந்தே. முன்னே நீ இருந்த இடத்துல ஏதோ கசமுசா பண்ணிட்டுத்தானே இங்க வந்தே?''

தென்றல் அதிர்ந்து போக மேகநாதன் வாயடைத்துப் போனார்.

''இங்க வந்து பொண்ணுங்கள வெச்சு என்ன தொழில் பண்றியோ. கார் வருது போகுது. துட்டுப் பொறளுது. எம் பொண்ணுக்கு கம்மல் வாங்கிப் போட்டியாமே. பெத்தவன் எனக்கில்லாத அக்கறை உனக்கெதுக்கய்யா. நீ என்ன அவளை வெச்சிருக்கியா?'' காதைப் பொத்திக் கொண்டார் மேகநாதன்.

''அப்பாஆஆ'' வீறிட்டாள் உமா. மாலையைக் கழற்றி வீசி விட்டு வந்து தந்தையின் கழுத்தில் கிடந்த துண்டைப் பற்றி இறுக்கினாள். ''நீயெல்லாம் ஒரு தகப்பனா. பெற்ற பெண்ணை தகப்பன் வயதுள்ள ஒருவருடன் இணைத்துப் பேசுகிறாயே, நீயெல்லாம் மனிதனா, ச்சீ'' உதறித் தள்ளினாள். துண்டோடு கீழே விழுந்தார்.

''என்னடி அவனைச் சொன்னா உனக்கு கோபம் வருது? அவன் என்ன யோக்யனா? அவன் பெத்ததே கல்யாணம் பண்ணிக்காம வீட்டோடு கிடக்கு. உனக்கு ஏன்டி அவன் கல்யாணம் பண்ணி வைக்கனும். உனக்கு மாப்பிள்ளை

பார்க்க அவன் யாரு?'' நின்ற நிலையில் நின்று சேற்றை வாரியிறைக்க உடல் முழுதும் கூசிப் போயிற்று மேகநாதனுக்கு. அதற்கு மேல் துரையைப் பேச விடாமல் வருணும் கதிரும் புரட்டிப் போட்டனர். உமா தடுக்க வில்லை. மகாலக்ஷ்மியும் அழகப்பனும்தான் விலக்கி விட்டனர்.

''அ... என்னங்க நீங்க! குடிகாரன் கூட போயி சரிக்குசரி சண்டை போட்டுக்கிட்டு, செத்துத் தொலையப் போறான், விடுங்க. அட விடுங்க... அவர் வாயை எப்படி அடைக்கணும்னு எனக்குத் தெரியும்'' என்ற அழகப்பன் தன் சட்டைப் பையிலிருந்து நூறு ரூபாய் தாள் ஒன்றை உருவி நீட்டினான்.

ரூபாய் நோட்டைப் பார்த்ததும் தெம்பாய் எழுந்து நின்றார் துரை.

''ப்பூ! இந்த ஒரு நோட்டுக்கு இத்தனை அடிதடி தேவையா? உங்களுக்கெல்லாம் என்னைப் பார்த்தா இளப்பமா இருக்கா? நான் குடிகாரன்தான். குடிகாரன் உளறிக் கொட்டுவான். ஆனா உண்மையைத்தான் பேசுவான். நான் தெரியாமத்தான் கேட்கிறேன். ஏம்மா எம்மவள விட நீ ஒசப்புதானே? பிறகேன் உங்கப்பன் உன்னை வீட்டோட வெச்சிருக்கான். அவனால ஓடியாடி சம்பாதிக்க முடியாது. என் நடக்க முடியவே முடியாது. அதனால உன் சம்பாத்தியத்தில உட்கார்ந்து சாப்பிடுறான். சரிதானே. நான் எதுனா உங்க விஷயத்தில் தலைகாட்டினேனா. இல்லல்ல. நான் என் சோலியைத்தானே பார்த்திட்டு இருக்கேன். உன் அப்பன் ஏன் எம் புள்ளைக்கு மாப்பிள்ளை பார்க்கிறான். அவன் அவன் பொண்ணு காசுல சாப்பிடும்போது நான் என்



பொண்ணு காசுல குடிக்கக் கூடாதா? நான் குடிச்சா அவனுக்கு ஏன் வயிறு எரியுது. அவனுக்கு ஒரு சட்டம், எனக்கொரு சட்டமா? இதை நான் கேட்டா என்னை ஆளை வெச்சு அடிக்கிறான். இனிமேலாவது ஒழுங்கா இருக்கச் சொல்லு உங்கப்பனை. இந்த மாதிரி எதுனா செய்தான் அப்புறம் இன்னொரு காலை நானே உடைச்சிடுவேன். அப்புறம் நீ என்னை கோபிக்கக் கூடாது'' தென்றலிடம் உளறிக் கொண்டிருந்தவரைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினான் வருண்.

''ஏய் விடு. நீ தான் சும்மா எம் மேல கைய வெச்சிட்டே இருக்கே. நான் யார்னு உனக்கு இன்னமும் தெரியலே'' என்றார்.

''எல்லாம் எனக்குத் தெரியும். சீக்கிரமா போ. கடைய மூடிடப் போறாங்க'' என்றான் வருண்.

''அதெப்படி! என்னை விட்டுட்டு கடைய மூடிட்டுப் போய் விடுவானா அவன். தொலைச்சிட மாட்டேன் அவனை. சரி மாப்பிள்ளை நான் வரட்டுமா? நீங்க உடம்பைப் பார்த்துக்கோங்க. நம்ம நாளைக்குப் பார்ப்போம். வரட்டுமா. வீட்ல எல்லாரையும் கேட்டதா சொல்லுங்க''

உரிமையாய் விடை பெற்று தள்ளாடியவாறே சென்றவனைப் பார்த்து தலையில் அடித்துக் கொண்டான்.

வந்தவர்கள் அனைவரும் விடைபெற்றுச் செல்ல அனைவரையும் கைகூப்பி வழியனுப்பினார். கடைசியாக அழகப்பனும் கிளம்பினான். ''சில்வண்டு! அப்பனை நினைச்சு அழுதிட்டே இருக்காதே. அதான் தினமும் நடக்கிற கூத்துதானே! நீ நகையெல்லாம் வைத்தியரய்யா

வீட்லயே கழற்றி வெச்சிடு. வீட்டுக்கு கொண்டு போயிடாதே. நீ எதுக்கும் கவலைப்படாதே. இன்னும் பத்து நாள்ல நல்ல முகூர்த்தம் இருக்குதாம். அப்பவே கல்யாணத்தை முடிச்சிடலாம். அதுவரை உன் அப்பனை சமாளிச்சுக்கோ. வரட்டுமா?"

"ம்" தலையாட்டினாள். மற்றவர்களிடம் துரை சார்பில் மன்னிப்பு கேட்டுவிட்டு புறப்பட்டான். துரை பேசிய பேச்சிலிருந்து விடுபட முடியாமல் பேயறைந்தாற் போல் அமர்ந்திருந்த மகளிடம் வந்தார் மேகநாதன்.

"ரொம்ப சந்தோஷமா இருக்கும்மா. மனசு நிறைஞ்சு போச்சு. மக சம்பாத்தியத்தில உட்கார்ந்து சாப்பிடுறான். அதுக்காகத்தான் தம் பொண்ணுக்கு இன்னும் கல்யாணம் பண்ணாம வெச்சிருக்கான்னு ஊர் சொல்ல ஆரம்பிச்சிடுச்சு. கேட்கவே ஆனந்தமா இருக்கு."

"அப்பா.." எனத் தொடங்கியவளை கையமர்த்தினார்.

"வேண்டாம்.. எங்கிட்ட எதுவும் பேச வேண்டாம். இதுக்காகத்தானே தகப்பனுக்கு இந்தப் பேச்செல்லாம் வாங்கிக் கொடுக்கத்தானே வீட்லேயே இருக்க வர்ற மாப்பிள்ளையை எல்லாம் விரட்டி விட்டு, நீ தியாகி ஆகிட்டே. நான் பாவி ஆகிட்டேன். மகளை வாழ விடாம அவ உழைப்பை உறிஞ்சி வாழும் மாபாவி ஆகிட்டேன். ஒரு தகப்பனுக்கு இதைவிட வேறென்ன புகழ் வேண்டும். என் கால் போன அன்னிக்கு நானும் போயிருக்கணும். தப்புப் பண்ணிட்டீங்க. மாப்பிள்ளை, பெரிய தப்புப் பண்ணிட்டீங்க. என்னை அப்படியே விட்டுட்டு நீங்க போயிருந்தா, நானும் அப்படியே போயிருப்பேன்.



இன்னிக்கு இத்தனை பேச்சைக் கேட்டுக் கூனிக் குறுகிப் போகாமல் மானம் மரியாதையோடு போயிருப்பேன்'' - குலுங்கி அழ ஆரம்பித்தார். அனைவரும் கண் கலங்கினர். தென்றல் முகத்தை மூடி அழுது கொண்டிருந்தாள்.

"என்ன மாமா இது? நீங்கள்தானே குடிகாரன் பேச்சை பெரிசா எடுத்துக்க வேண்டாம்னு சொன்னீங்க. இப்ப நீங்களே அதை நினைச்சுக் கலங்கினா எப்படி மாமா?" வருண் ஆதரவாய் அவர் தோளைத் தொட்டான்.

"இல்ல மாப்பிள்ளை! குடிகாரன் என்றாலும் அவன் சொன்னது உண்மை. இன்று அவன் நேரிலே கேட்டான். மற்றவர்கள் தங்களுக்குள் பேசுவார்கள். இத்தனை நாள் நான் தானே இவளுக்குத் தடையாய் இருந்திருக்கிறேன். அதைக் கூட உணராத முட்டாளாய் இருந்திருக்கிறேனே."

"அப்பா! அப்படியெல்லாம் பேசாதீர்கள் அப்பா!... நான்.." மீண்டும் தென்றல் வாயைத் திறக்க, "வேண்டாம்! எந்த விளக்கமும் வேண்டாம். கேட்ட பேச்சுக்கள் எல்லாம் போதும். இதற்கு மேல் எதுவும் கேட்க இந்தக் கிழவனுக்கு சக்தி இல்லை. பெற்ற ஒரே பெண்ணையும் திருமணக் கோலத்தில் பார்க்கக் கொடுத்து வைக்காத துரதிர்ஷ்டசாலி. நான் இருந்து யாருக்கு என்ன பயன்? நானும் எத்தனையோ வருஷம் நம்பிக்கையோட இருந்து ஏமாந்துதான் போனேன். மாப்பிள்ளை நீங்க இனியும் இவளுக்காக காத்திருக்க வேண்டாம். உங்கள் வாழ்க்கையே உங்க அம்மா அப்பாவுக்கு நிம்மதி. நல்லதா ஒரு துணையைத் தேர்ந்து எடுத்து சந்தோஷமா வாழுங்க மாப்பிள்ளே''... மேகநாதன் பேசிக் கொண்டிருக்க விருட்டென எழுந்தாள் தென்றல். சரேலென அந்த இடத்தைவிட்டு விலகி விடுவிடுவென

தன் அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்தி தாளிட்டாள். அனைவரும் பதட்டமாய் ஓடி கதவைத் தட்ட, வருண், "தென்றல்! ப்ளீஸ் வெளியே வா. நம்ம கல்யாணம்தான் மாமாவோட மனக் காயத்திற்கு ஒரே மருந்து. அவர் இதுவரை உன்னால் அனுபவித்த வேதனை போதும். வெளியே வந்துடும்மா. நீ சரின்னு சொன்னா இப்பவே உன் கழுத்துல தாலி கட்ட நான் ரெடியா இருக்கேன். தயவு செய்து எந்த முட்டாள்தனமான காரியத்தையும் செய்துடாதே. வெளியே வா தென்றல்" உரக்கக் குரல் கொடுத்தான். பதிலில்லை.

மேகநாதன் பதறிய நெஞ்சத்தைப் பற்றிக் கொண்டு தளர்வாய் உட்கார்ந்து விட்டார். மகாலஷ்மியும் தன் பங்கிற்கு ஏதேதோ சொல்லிக் கெஞ்சியும் பதிலில்லாமல் போயிற்று.

"மேடம்! நீங்க எடுக்கப் போற முடிவுலதான் மூணு ஜோடிபோட வாழ்க்கையும் இருக்கு. சத்தியமா உங்களுக்கும் சாருக்கும் திருமணம் நடக்காமல் நான் கலாவை திருமணம் செய்து கொள்ள மாட்டேன். உமாவும் தன் தந்தையால் தானே இத்தனை பிரச்சனை வந்தது என்ற குற்ற உணர்வோடு அழகப்பனை திருமணம் செய்து கொள்வது கடினம். இப்படி அனைவரின் வாழ்க்கையும் அழிக்கும் அளவிற்கு நீங்கள் ஒன்றும் மோசமானவங்க இல்ல. ப்ளீஸ் மேடம். வெளியே வாங்க. எங்க பாஸோட முகத்தில இன்னிக்குத்தான் வெளிச்சத்தைப் பார்த்தேன். அது அணைஞ்சிடாம இருக்கணும்னா நீங்க அவர் பக்கத்துல இருக்கணும் மேடம். ப்ளீஸ்.. என்னை உங்கள் சகோதரனா நினைச்சு என் வார்த்தையை ஏத்துக்கிட்டு



வெளியே வாங்க. ஏதாவது பேசுங்க மேடம். இப்படி எதுவுமே பேசாம இருந்தா எப்படி? காலையில பாஸை திட்டுனீங்களே. அதை மாதிரி ரெண்டு வார்த்தை திட்ட வேணும் செய்யுங்கள் மேடம். ப்ளீஸ் மேடம்" - கதிரின் வார்த்தைகளுக்கு நிசப்தம் தான் பதிலாய் வந்தது. கலா உமா என ஒருவர் மாற்றி ஒருவர் கதவைத் தட்டிக் கொண்டே இருக்க, மேகநாதன் இதயம் சுக்கு நூறாகி, உடைந்தது. கண்களில் கண்ணீர் உறைந்துபோய்விட மனதிற்குள் ஒரு முடிவைத் தீர்மானித்தார். வருண் தொடர்ந்து கதவைத் தட்டிக் கொண்டே இருந்தான்.

## 17

*உன் அருகில் உன் நிழலில்*
*உன் மடியில் உன் நினைவில்*
*ஆயிரம் காலங்கள் வாழ்ந்திட வந்தேன்!*

யார் அழைத்தும் தென்றல் வெளியே வரவே இல்லை. வருண் சோர்ந்து போனான். "ஆயிரம் காரணம் சொன்னாலும் நீங்க அப்படிப் பேசியது தப்புதான் மாமா. எவ்ளோ கஷ்டப்பட்டு அவளைப் பேச வைத்தோம். எல்லாம் கூடி வந்த நேரத்தில் நீங்கள் அப்படிப் பேசியிருக்கக் கூடாது. ஏற்கனவே என்னால் மனம் நொந்தவள், இப்போதுதான் தேறி வந்தாள். அதற்குள் நீங்கள் இப்படிப் பேசலாமா? எத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு அவள் சிரித்ததை இன்றுதான் பார்த்தேன் மாமா. ம்ப்ச்.. எல்லாம் வீணாகி விட்டது."

''அப்படிச் சொல்லாதீங்க மாப்பிள்ளை. நான் இப்படிச் சொன்னா அவ கல்யாணத்திற்கு சம்மதிச்சுட மாட்டாளா என்ற நப்பாசையில் தான் அப்படிப் பேசினேன். ஆனா நான் பேசின விதம் அவளைக் காயப்படுத்தும்னு நினைக்கல மாப்பிள்ளை. இன்னும் எத்தனை காலம் இப்படித் தனி மரமாய் வாழ்வாளோ என்ற பயம் எனக்கு. அதான் பேசத் தெரியாம பேசிட்டேன் போல'' தடுமாறினார் மேகநாதன்.

''நீங்க ஏன் சம்பந்தி இவ்ளோ கஷ்டப்படுறீங்க. எப்போ அவ எம்புள்ள கூப்பிட்டும் வெளியே வரலியோ. அப்பவே எம் புள்ளைக்கு எவ்வளவு மதிப்பை வெச்சிருக்கான்னு தெரிஞ்சு போச்சு. இதுக்கு மேலயும் என்ன எதிர்பார்க்கிறா? எம்புள்ள அவ கால்ல விழணும்னு எதிர்பார்க்கிறாளா, வேண்டாம் சம்பந்தி. நாங்களும்தான் எவ்வளவு இறங்கி வர்றது. போதும் நாங்க புறப்படுறோம். கதிர்! ஐயாவுக்கு போன் பண்ணி உடனே கிளம்பி வரச் சொல்லு. அப்படியே வைத்தியச் செலவுக்கு பணம் எடுத்துட்டுவரச் சொல்லு'' - சத்தமாகவே சொன்னாள் மகாலஷ்மி.

அதுவரை அமைதியாய் அமர்ந்து வெளியே பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டுக் கொண்டிருந்த தென்றல் துல்லியமாய் அதிர்ந்தாள். காதை உன்னிப்பாக்கினாள்.

''சம்பந்தியம்மா! நீங்களே இப்படிப் பேசினா எப்படி? நான் உங்களைத்தான் நம்பியிருந்தேன். நீங்களே இப்படிச் சொல்றீங்களே?'' பதறினார் மேகநாதன்.

''வேற என்ன பேசுறது. நானும் எம் பிள்ளையும் அவகிட்ட எத்தனையோ முறை மன்னிப்புக் கேட்டாச்சு. இதுக்கு மேல ஒண்ணும் பண்ண முடியாது. அவ அப்படியே இருக்கட்டும். எப்படியோ சாகப் போன எம் புள்ளையைக்



காப்பாத்திட்டீங்க. இந்த நன்றியை என்னிக்கும் மறக்க மாட்டோம். கதிர் நீ இன்னும் போகலியா, சீக்கிரம் போ. காசை செட்டில் பண்ணிட்டு நாம போகலாம்'' - என்றவாறே மகாலஷ்மி கண் சிமிட்ட மற்றவர்கள் ஒப்புதலாய் தலையசைத்தனர். கதிர் விலகிவிட,

''சரி சம்பந்தி நீங்க புறப்படுங்க. ஆனா பணத்தைக் கொடுத்து என்னை அவமானப்படுத்தாதீங்க. நான் என் மாப்பிள்ளையைத்தான் காப்பாத்தினேன். அதுக்கு பணம் வாங்க மாட்டேன். எது எப்படி நடக்கணுமோ அப்படி நடக்கட்டும்'' என்றவர் வருணின் கையைப் பற்றிக் கொண்டார்.

''மாப்பிள்ளை! நான் ஆண் வாரிசு இல்லாதவன். இன்னும் ரொம்ப நாள் இருப்பேன்னு சொல்ல முடியாது. சீக்கிரமா போயிடுவேன். அப்படி போயிட்டேன்னா சிரமம் பார்க்காம வந்து எல்லாக் காரியத்தையும் நீங்கதான் செய்யணும் மாப்பிள்ளை. அப்பத்தான் இந்தக் கட்டை வேகும்'' - உண்மையாகவே கண் கலங்கினார்.

''என்ன மாமா இது... எப்பவுமே நீங்கதான் என் மாமா. நான் இருக்கும்போது நீங்க ஏன் கண் கலங்குறீங்க? அப்பப்போ வந்து பார்த்துப்பேன். நீங்க தைரியமா இருக்கணும், சரியா'' என்றவன் அம்மாவிடம் திரும்பி, ''ம்மா! அப்பா வர்றதுக்குள்ள நம்ம திங்க்ஸ எடுத்து வெச்சு ரெடியா இருப்போம். போலாமா'' என்றதும் அனைவரும் சென்றுவிட மூச்சு விடவும் திணறினாள் தென்றல்.

'போகிறாயா? போ. என்னை விட்டுட்டு போனவன் தானே நீ. இனி போனால் என்ன? வந்தால் என்ன?' ஒருமுறை பட்டும் இந்த மனம் இவனைத் தானே

நாடுகிறது. தன் மீதே வெறுப்பு தோன்றியது. எத்தனை முயன்றும் வருணை மறப்பது கடினமாய்த் தோன்றியது. அதற்காக அவன் தந்தை பேசிய பேச்சுக்களை ஒரேயடியாய் மறக்கவும் முடியவில்லை. தலையே வெடித்து விடும் போலிருந்தது. 'இனி யாரிடம் மனம் விட்டு பேசி முடிவெடுப்பது, கலா திருமணம் நெருங்கி வர வேலையை விட்டே நின்று விட்டாள். இப்போது அவள் அம்மாதான் மருந்து அரைக்க வருகிறார்கள். இன்னும் கொஞ்ச நாளில் உமாவும் திருமணமாகிப் போய் விடுவாள். இதோ என் வருணும் என்னை விட்டு தூரமாய் விலகிப் போகிறார். இந்த அப்பா கூட என்னை விட்டு விலகித்தான் நிற்கிறார். ஏன்? ஏன் எல்லோரும் என்னை வெறுக்கிறார்கள்? அப்படி என்ன செய்தேன். தன்மானத்தோடு வாழ வேண்டும் என்று நினைப்பது தவறா? ஊரோடு ஒட்டி வாழ வேண்டும்தான். அதற்காக எப்படி தன்மானத்தை சுய கௌரவத்தை இழந்து வாழ முடியும். தப்பு செய்தவர் தேவேந்திரன். ஆனால் இவர்கள்தானே மன்னிப்பு கேட்டனர். இல்லை.. அவர் பேச வந்தார்தான். நான்தான் பேசவிடவில்லை. அப்படி யென்றால் நான்தான் என் அவசரம் தான் இந்த நிலைக்குக் காரணமோ?

அன்று தேவேந்திரன் தன்னைப் பற்றி தரக் குறைவாக பேசியபோதே, தான் நல்லவள் என்று பேசி புரிய வைத்திருக்க வேண்டுமோ? இப்போது கூட அப்பா ஏதோ மனவருத்தத்தில் பேசியதற்காக இப்படி கோபித்துக் கொண்டு வந்திருக்கக் கூடாதோ. பாவம் அப்பா! எத்தனை வேதனைப்படுகிறார்! அவரைக் கண் கலங்க விடலாமா. சிறு வயது முதலே தனக்காகவே வாழ்ந்தவர். இன்று தன் நிலையை எண்ணி தினமும் தவிக்கிறார். அந்தத் தந்தைக்கு



நான் என்ன கைமாறு செய்யப் போகிறேன். இறைவா! என் மனம் குழம்பித் தவிக்கிறது. அமைதியில்லாமல் அலைகிறது. எப்படி மீளப் போகிறேன். எனக்கு ஏதேனும் வழிகாட்டு இறைவா! என் மனதை சாந்தப்படுத்து. என்னால் யாரும் காயப்படக் கூடாது. என்னை நீதான் காப்பாற்ற வேண்டும். இறைவா' கைகூப்பி வேண்டினாள். கண்களில் இருந்து நீர் வழிந்து கொண்டே இருக்க மனம் வேண்டிக் கொண்டே இருந்தது.

கதவை யாரோ தட்டினார்கள். விழியைத் திறக்க மனமின்றி அப்படியே நின்றாள். மீண்டும் கதவு தட்டப்பட்டது. தொடர்ந்து "அம்மா! தென்றல், நான் தேவேந்திரன் வந்திருக்கிறேன். உன்னிடம் கொஞ்சம் பேச வேண்டும் அம்மா. நான் உள்ளே வரலாமா?" என்ற தேவேந்திரனின் குரல் கேட்டதும் சட்டென கண் திறந்தாள். முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டு கதவைத் திறந்தாள்.

பழைய கம்பீரம் குறைந்திருந்தாலும் கூடவே ஒரு நிமிர்வும் இருந்தது. அவருடன் அன்று வந்த அதே நபர் வந்திருந்தார். ஒன்றும் பேசாமல் அவர்கள் அமர நாற்காலியைக் காட்டினாள். அமர்ந்தவர் அவளை உன்னிப்பாய் பார்த்தார். மாசு மருவற்ற நிலவு முகம். அதில் படித்த களையும் புத்திக் கூர்மையும் உறுதியும் தெரிந்தது. இமைகள் கொஞ்சம் நனைந்திருக்க அப்போதுதான் அழுதது தெரிந்தது. எதற்கும் அஞ்சாத நிமிர்ந்த நடையுடன் நின்றவளைப் பார்க்கையில், பாரதி கண்ட புதுமைப் பெண்ணாகவே தெரிந்தாள். உடையிலும் அணிந்திருந்த அணிகலன்களிலும் எளிமையும் நேர்த்தியும் இருந்தது. எத்தனை முயன்றாலும் லட்சங்களை வாரியிறைத்து

கூத்தடிக்கும் பெண்ணாகத் தோன்றவே இல்லை. தலைகுனிந்து அவள் நின்ற நிலை அவளது அடக்கத்தையும் பணிவையும் காட்ட ராமநாதனைத் திரும்பி அர்த்தமாகப் பார்த்தார் தேவேந்திரன்.

அன்றே இத்தனை தெளிவாய் இந்தப் பெண்ணைப் பார்த்திருந்தால் நமக்கு உண்மை புலப்பட்டிருக்கும். அடுத்தவர் சொல்லைக் கேட்டு வீணாய் ஒரு பெண்ணின் மீது களங்கம் சுமத்தி விட்டோமே என சொல்லாமல் சொல்லிற்று அவரது பார்வை. ராமநாதன் தான் வாய் திறந்தார். "தாயி! நான் ராமநாதன். நீ வந்து வாழப் போகும் வீட்டுக்கு வேலைக்காரனா வந்தவன். அய்யாவோட மனசுக்கு பிடிச்சதாலே அந்த வீட்டோட இருப்பவன். உன்னோட நிலைக்கு நான்தானம்மா காரணம். என்னால தான் எங்க அய்யா கொஞ்சம் அதிகமா பேசிட்டாங்க. நான்தாம்மா பாவி.

"சின்னய்யா லட்சக்கணக்கில பணம் எடுத்து செலவழிக்கிறார்னு தெரிஞ்சதும் ஐயா என்னை அனுப்பித்தான் விசாரிக்கச் சொன்னாக. நானும் அவங்க நண்பர்கிட்டே விசாரிச்சி அந்த ஆகபத்திரிக்கு வந்தேன். அப்போதுதான் சின்னய்யா உங்க கையில நகை மாட்டி விட்டதும் நீங்க எல்லோரும் கேக் வெட்டிப் பிறந்த நாள் கொண்டாடியதையும் பார்த்தேன். உங்க அப்பாவும் எங்க சின்னய்யாவை மாப்பிள்ளைன்னு கூப்பிட்டு உரிமையாப் பேசுனதும் தெம்பா இருந்ததும் பார்த்து அவசரப்பட்டு உங்களைத் தப்பா நினைச்சிட்டேன். அப்பாவும் மகளும் பணக்காரப் புள்ளைன்னு நம்ம புள்ளைய வளைச்சுப் போட்டுட்டாங்க. அவங்களுக்குத்தான் சின்னய்யா இத்தனை லட்சமும் செலவழிக்கிறார்னு நான் தான் அய்யா கிட்டே போய் சொன்னேம்மா. தப்பு முழுவதும் என்னதுதாம்மா. யோசிக்காம பேசிட்டேன். நான் சொன்னதும் ஐயாவும் ரொம்ப பயந்துட்டாரும்மா. எங்கே நம்ம புள்ளையை ஏமாத்திடுவாங்களோன்னு பயந்துதாம்மா உங்களைப் பார்க்க புறப்பட்டாரு. நானும் வந்தேன். சத்தியமா உங்களைத் தப்பா பேசணும்னு நினைச்சு வரலம்மா. பணம் பிடுங்குகிற ஆளா இருந்தா காசைக் கொடுத்து அனுப்பிடணும்னு முடிவு பண்ணிட்டுத்தான் சின்னய்யா இங்கே இருந்தா அவருக்கு ஏதும் ஆபத்து வந்திடுமோன்னு பயந்து அவரை வெளி நாட்டுக்கு அனுப்பிட்டு உங்களைப் பார்க்க வந்தோம். வந்த இடத்துல பேச்சு எல்லை மீறிப் போயி ஏதேதோ ஆகிப் போச்சும்மா.

"நீங்களே சொல்லுங்கம்மா. எத்தனை இடத்துல வசதியான வயசுப் பையனுங்க இப்படி மாட்டிக்கிட்டு வெளியே சொல்லவும் முடியாம புழுங்கிட்டு இருக்காங்க. வீடு வாசலை இழந்து தவிக்கிறாங்க. அதையெல்லாம் நானே நேரில் பார்த்திருக்கேம்மா. அந்த நினைப்பில்தான் ஐயாவிடம் கொஞ்சம் அதிகமாகவே சொல்லிவிட்டேன். என்னை மன்னித்து விடம்மா. வேண்டுமானால் உன் காலில் விழட்டுமா.." என எழுந்தவரை அதட்டினார் தேவேந்திரன்.

"ராமு! எத்தனை வயதானவன் நீ. என் மருமகள் காலில் விழுந்து அவளைப் பாவம் சுமக்க வைக்கப் போகிறாயா, வேண்டாம். உன் பேச்சைக் கேட்டு என் மருமகளுக்கு நான் செய்த பாவங்களே போதும். மேலும் அந்த சுமையைக் கூட்டி விடாதே" என்றவாறே எழுந்து தென்றலின் அருகே

வந்தார். ஆணியடித்தாற் போல் நின்றிருந்தவளின் தலையை வருடினார்.

"பாரம்மா! தப்பு முழுவதும் ராமுவுடையது என்று நான் சொல்ல மாட்டேன். நானும் கொஞ்சம் நிதானமாக யோசித்துப் பேசியிருக்க வேண்டும். எதையும் நான்கு முறை யோசித்து செய்பவனம்மா நான். ஆனால் ஒரே மாதத்தில் நான்கைந்து இலட்சம் வருண் எடுத்து செலவழித்து விட்டான் என்றதும் மிரண்டு போனேன். ஏனென்றால் வருண் அப்படி ஊதாரியாய் செலவு செய்பவன் அல்ல. பொறுப்பாய் தொழிலை கவனிப்பவன். கொஞ்ச நாட்களாய் அலுவலகத்திற்கும் வராமல் வீட்டிலும் தங்காமல் பணத்தைத் தாறுமாறாய் எடுத்து செலவு செய்ததில் ஒரு தந்தையாய் நான் பயந்து போனேன். அதோடு ராமு வந்து சொன்னதைக் கேட்டதும் நான் பயந்தாற்போல் நடந்து விட்டதே என்றுதான் உன்னிடம் இருந்து என் மகனை மீட்டாக வேண்டுமே என்ற வேகத்தில்தான் அப்படிப் பேசிவிட்டேனம்மா. ஆனாலும், நான் பேசியது தவறுதான். அதுவும் உன்னைப் போல் உன்னதமான ஒரு பெண்ணை அப்படிப் பேசியிருக்கக் கூடாது. அதற்கான தண்டனையைத்தான் நான் இன்னும் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்.

"ஆமாம்மா! நான் பேசியதை தெரிந்த நாள் முதல் இன்று வரை என்னை என் மகன் அப்பா என்று ஒரு முறை கூட அழைக்கவே இல்லையம்மா. என் முகத்தைக் கூட பார்க்கவில்லையம்மா. நான் எத்தனையோ முறை மன்னிப்புக் கேட்டும் அவன் மனம் மாறவே இல்லையம்மா. இதைவிட ஒரு தகப்பனுக்கு வேறு என்ன



தண்டனை வேண்டும்?" தொண்டை அடைக்க நிறுத்தினார்.

தென்றலின் மனம் வருந்தியது. 'அவர் நிலையில் இருந்து அவர் பேசியிருக்கிறார். இதற்கு வருண் தந்த தண்டனை அதிகம்தான். அப்படியானால் எந்தத் தவறும் செய்யாத வருணனுக்கு நான் தந்தது மிகக் கொடிய தண்டனை அல்லவா? அதனால் இரண்டு குடும்பமே அல்லவா தத்தளித்தது. வருண்! உங்களின் இந்த நிலைக்கு நான்தானே காரணம். நீங்கள் திரும்பி வரும் வரை நான் இருந்து உண்மையை உங்களுக்குக் கூறியிருக்க வேண்டும். நாமிருவரும் சேர்ந்து உங்கள் தந்தையின் மனதில் இடம் பிடித்திருக்க வேண்டும். இதை எதையும் செய்யாமல் இன்றுவரை வெறுப்பை மட்டுமே காட்டியிருக்கிறேனே. வருண் என்னை மன்னிப்பீர்களா வருண். என் கோபம் வெறுப்பு வேதனை எல்லாம் பொடிப் பொடியாகிப் போனது வருண். இதோ உங்களுக்கே உங்களுக்காக உங்கள் தென்றல் வருகிறேன். ஏற்றுக் கொள்வீர்களா வருண். என்னை ஏற்றுக் கொள்வீர்களா?' தென்றலின் கண்களில் கண்ணீர் தேங்கியது.

"நீ அழக் கூடாதும்மா. நீ வாழ வேண்டிய பெண். உன் வாழ்வை திசைமாற்றி நிலைகுலைய வைத்துவிட்டேன். உண்மையைக் கூறி உன்னிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்றுதான் அன்று வந்தேன். ஆனால் என்னை நீ பேச விடவே இல்லை. உன் நிலையில் நீ செய்தது சரிதாம்மா. ஆனால் பாவம் செய்த நான்தான் தண்டனையை அனுபவிக்க வேண்டும். என் மகன் ஒரு பாவமும் அறியாதவன். அவனை தண்டிக்க வேண்டாம்மா. அன்று

நடந்ததைக் கெட்ட கனவாய் நினைத்து மறந்து விடும்மா. இன்று நான் அவர்களை மட்டும் அழைத்துப் போக வரவில்லை. உன்னையும் என் வீட்டு மருமகளாக கூட்டிப் போகவே வந்தேன். வருவாயம்மா?'' கையேந்தி யாசகம் கேட்டவரைப் பார்த்து நெக்குருகிப் போனாள்.

''ஐயோ! மாமா! ஏன் இப்படியெல்லாம் கேட்கிறீர்கள். வருண் மீது எனக்கு எப்போதுமே கோபமில்லை. நீங்கள் உங்கள் நிலையைச் சொன்ன பிறகு உங்கள் மீதிருந்த வெறுப்பு கூட மாறிவிட்டது. ஆனால் எதையும் ஆராயாமல் நீங்கள் ஒரு பெண் என்றும் பாராமல், என்னை அப்படிப் பேசியிருக்கக் கூடாது. அதோடு நான் ஒன்றும் பணக்காரி இல்லையே. அதே லேகியம் விற்பவர் பெண்தானே. என்னை உங்கள் மருமகளாக எப்படி ஏற்றுக் கொள்வீர்கள். அது உங்களுக்கு கௌரவக் குறைச்சலாகி விடுமே.''

''போதும்மா! போதும்! இனியும் என்னை வார்த்தைகளால் கொல்லாதே. நான் இத்தனை கெஞ்சியும் உன் மனம் ஆறவில்லையா? ராமுவைச் சொன்னேன். இப்போது நானே கேட்கிறேன். உன் காலில் விழுந்தால் என்னை மன்னித்து விடுவாயா? என்னை மன்னித்து விடம்மா'' - என்றவாறே தென்றலின் காலில் விழ குனிந்தார் தேவேந்திரன்.

''அப்பா! வேண்டாம்ப்பா இவள் காலில் நீங்கள் விழுந்தால்தான் இவள் கிடைப்பாள் என்றால் அப்படி ஒரு வாழ்க்கை தேவையே இல்லை! உங்களைத் தலைகுனிய வைத்து இவள் கழுத்தில் நான் மாலையிட வேண்டாம். உங்கள் மகன் ஒன்றும் அத்தனை கல் நெஞ்சக்காரன் இல்லை. வாருங்கள் போகலாம்'' - கண்களில் கோபம் மின்ன கர்ஜித்தான் வருண்.



# 18

*என் ஆருயிரே நான் உனக்கு*
*சொந்தமே ஈருடல் ஓருயிராய்*
*வாழுவோம் என்றும் மாறாத*
*இன்ப உலகைக் காணுவோம்!*

தேவேந்திரன் ஆச்சர்யமாய்த் திரும்பினார். பேசியது யார் என் மகனா? என் மகன் தானே? இது கனவில்லையே. தான் தலைகுனிவதை அவன் விரும்பவில்லையா? அப்படி யானால் என் மீது இன்னும் அன்பு வைத்துள்ளானா? நன்றி இறைவா. எங்கே தன் ஆயுள் முழுவதும் என்னிடம் பேசாமல் வெறுத்து ஒதுக்கி விடுவானோ என்று அஞ்சியிருந்தேனே. என் மகன் என்னுடன் பேசி விட்டான். என்னை அப்பா என்று அழைத்துவிட்டான். இதுபோதும். இதுபோதும். கண் கலங்கியவரைத் தோளோடு அணைத்துக் கொண்டான் வருண். ''என்னப்பா அப்படிப் பார்க்கிறீங்க?'' என்றான் அன்பு பொங்க.

''உனக்கு.. உனக்கு என் மேல் கோபம் இல்லையேப்பா'' தடுமாறினார்.

''கோபம் இருந்ததுப்பா. ஏன்னா நீங்கள் பேசியது தப்பு. ஆனா அதுக்கான தண்டனையை நிறையவே நான் உங்களுக்குத் தந்துட்டேன். இனிமேலும் உங்களை வருத்த மாட்டேன் அப்பா. தென்றல் எங்கே போய் என்ன கஷ்டப்படுகிறாளோ என்ற நினைப்பில்தான் என்னை

நானே வருத்திக் கொண்டேன். இப்போ அவளைப் பார்த்திட்டேன். நல்லா இருக்கா. தன்னம்பிக்கையோட நிமிர்ந்து நிற்கிறா. இன்னும் என் நினைவோடுதான் இருக்கிறாள். இது போதும். நானும் இனி நல்ல பிள்ளையாய் உங்களுடன் இருக்கிறேனப்பா. இனி தவறியும் வேறு பாதையில் போக மாட்டேன். உங்கள் மனம் போல் நடந்து கொள்கிறேன். எனக்காக நீங்கள் யார் காலிலும் விழ நான் அனுமதிக்க மாட்டேன். வாங்கப்பா போகலாம்'' வருண் அழைத்ததும் தயங்கி நின்றார் தேவேந்திரன்.

''தென்றல்கிட்டே கொஞ்சம் பேசிப் பார்க்கிறேனே'' - என்றவரை மறுத்தான்.

''வேண்டாம்ப்பா! நாங்கள் நிறைய பேசிட்டோம். அவள் எதற்கும் மசியவில்லை. இவள் நான் விரும்பிய தென்றல் இல்லையப்பா. அவள் குளிர்தென்றலாய் என்னை வருடியவள். ஆனந்தமான இனிய தென்றலாய் என் வாழ்வில் நுழைந்து என்னை சீராட்டியவள். இப்போது அவள் மாறி விட்டாள் அப்பா. சுடும் நெருப்பாய் மாறி அனல் காற்றாய் அள்ளி வீசுகிறாள். இந்த வெப்பத்தை என்னால் தாங்க முடியவில்லை. அதனால் விலகி விடுகிறேன். காலம் மாறும். அவள் கோபமும் உக்கிரமும் தனியும். அப்போது என் பழைய குளிர் தென்றலாய் என்னைத் தேடி வருவாள். அந்த நாள் வரும் வரை அவளுக்காக நான் காத்திருப்பேன். நாம் இங்கு இருக்க வேண்டாம். போகலாம். கதிர் காரை எடு. அம்மா எங்கே?'' என்றவாறே விலகி நடந்தான்.

''டேய் நில்லுடா. அப்பாவும் புள்ளையும் பேசின உடனே எம் மருமகளை அம்போன்னு விட்டுட்டுப் போறீங்க. உங்களைப் பேச வெச்சது யாரு. எம்



மருமகதானே. முதல்ல அவளுக்கு நன்றி சொல்லுங்க ரெண்டு பேரும்'' - அதட்டினாள் மகாலஷ்மி.

இருவரும் திரும்பி தென்றலைப் பார்க்க கண்களில் ஆவலும் ஏக்கமுமாய் வருணையே பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தப் பார்வை அவனைத் தாக்க இரு கரங்களையும் நீட்டி வா என தலையசைத்தான். சுற்றி இருப்பவர்கள் மறந்து போக ஓடி வந்து அவன் கரங்களுக்குள் தஞ்சமடைந்து கொண்டாள். கோபமும் ஆனந்தமுமாய் அவனை முட்டி மோதி அழுதாள். ''என்னை விட்டுட்டு போக நினைச்சல்ல நீ. போயிடுவியா. போயிடுவியாடா, சொல்லுடா'' கோபமாய்க் கேட்டாள்.

''எப்படிடா போக முடியும்? உடல் மட்டும்தான் போகும். உயிர் உன்னுடன் இங்கேதான் உலவிக் கொண்டிருக்கும். நீயும் கோபத்தை விடுவேனா என்கிறாயே. நான் என்ன சொல்லியும் கேட்கவில்லையே நீ..'' அவன் கண்களும் கலங்கியது.

''ஸாரிடா, வெரி ஸாரி. உன்னை ரொம்ப கஷ்டப்படுத்திட்டேனா, நான் இல்லாம ரொம்ப வேதனைப்பட்டியா? ஸாரி.. இனிமே உன்னை விட்டு ஒரு நிமிஷமும் பிரிய மாட்டேன். உன் நிழலாய் உன்னுடன் இணைந்திருப்பேன். ஸாரிடா..'' என்றவாறே அவனை ஒட்டிக் கொண்டாள். அவனது இனிய தென்றல் குளிர் தென்றலாய் மாறி அவனைத் தழுவிக் கொள்ள உடலும் உள்ளமும் குளிர்ந்து போனான் வருண்.

''நானும் இனி உன்னை விடப் போவதில்லை. உடனே நம் திருமணம் நடக்க வேண்டும். அப்போ தான் கதிர்

கல்யாணம் பண்ணிக்குவானாம். ரொம்பவும் நச்சரிக்கிறான். இன்னிக்கு கட்டிக்கலாமா?'' என்றான் கிசுகிசுப்பாய்.

''அதுதான் ஏற்கனவே கட்டிக் கொண்டுதானே இருக்கீங்க. போதும்ப்பா. விடுங்க. நாங்க எவ்வளவு நேரம்தான் கண்ணை மூடிட்டு இருக்கிறதாம்'' என்ற கலாவின் குரலில் பதறி விலகினர். அப்போதுதான் சுற்றுப்புறம் கண்ணில் பட தென்றல் கைகளை உதறிக் கொண்டாள்.

''கள்ளி! இத்தனை நாள் மனசில இவ்ளோ ஆசையை வெச்சிக்கிட்டுத்தான் கல்லுளி மங்கனாட்டும் கமுக்கமா இருந்தியா? ஆனாலும் உனக்கு ரொம்பத்தான் அழுத்தம்டி. வாயைத் திறந்து ஒரு வார்த்தை சொன்னாளா பாரேன்'' என்றாள் உமா.

''அங்கே மட்டும் என்ன வாழுதாம். நிச்சயம் வரை வந்து கூட என்னிடம் ஒரு வார்த்தை சொன்னியா நீ. அதோ அவ கவிதை பேசியே கதிரை சாய்ச்சுட்டா. எங்கிட்ட யாரும் எதையும் சொல்லாமலே கல்யாணம் வரை போயிட்டீங்களே. இப்ப வந்து என்னையே கிண்டல் பண்றீங்களா?'' பதிலுக்கு இடித்தாள் தென்றல்.

''ஆக.. ஒன்று மட்டும் தெளிவாய் புரிகிறது. பெண்களின் மனம் ஆழ்கடல் போன்றது. அதில் என்ன இருக்கும் என்பது அவர்களுக்கே வெளிச்சம். நான் சொல்வது சரிதானே ஸார்'' வருணைத் துணைக்கழைத்தான் கதிர்.

'அப்படின்னா ஆண்கள் மனம்?'' – கேட்டாள் தென்றல்.

''நாங்க ஒரு திறந்த புத்தகம். எதையும் மறைப்பதில்லை'' என்றான் கதிர்.



''பார்த்து திறந்த புத்தகம் தானேன்னு யாராவது வந்து கவிதை எழுதிடப் போறாங்க. கலா எதற்கும் உன் கணவர் என்ற புத்தகத்தை மூடியே வை'' என உமா வாரி விடவும் அனைவரும் சிரித்து விட்டனர்.

தென்றல் தேவேந்திரன் அருகே வந்தாள். ''ஸாரி மாமா. நான் உங்க மனதை காயப்படுத்த வேண்டும் என்று அப்படிப் பேசவில்லை. உங்கள் மகனின் மௌன விரதம் கலைக்கவே அப்படி நடந்து கொண்டேன். தயவு செய்து என்னைத் தப்பா நினைக்காதீங்க'' என்றாள்.

''ஐயய்யய்யோ! நான் ஏம்மா உன்னைத் தப்பா நினைக்கப் போகிறேன். நீ என்னை மாமாவாக ஏற்றுக் கொண்டதையே நான் பெரும் பாக்கியமாக நினைக்கிறேன். நீ என் வீட்டு குலவிளக்கு. என் வீட்டு மகாலஷ்மி'' என சொல்லிக் கொண்டே போக, 'அப்போ நான்?'' என்றாள் மகாலஷ்மி.

ஒருகணம் நின்று பிறகு, ''நீ மகா மகாலஷ்மி. இது குட்டி மகாலஷ்மி'' என்றார் சமாளிக்கும் விதமாய்.

''பரவால்லங்க. நீங்க கூட நல்லா சமாளிக்கிறீங்க. ஆமா நாம மட்டுமே பேசிட்டு இருக்கோமே சம்பந்தி எங்கே? அவரைக் காணோமே. இந்தச் சந்தோஷத்தை முதல்ல அவர்தானே பார்க்கணும். எங்கே காணோம்?'' மகாலஷ்மி தேடிய பிறகுதான் எல்லோருமே மேகநாதனைத் தேடினர். வீடு முழுக்கத் தேடியும் காணாததால் கலவரமானது தென்றலின் முகம்.

''வருண்! வருண்! அப்பா எங்கே போய்விட்டார். இத்தனை நேரம் அவரைக் காணவில்லையே. இங்கு யார்

வீட்டிற்கும் போக மாட்டாரே. எனக்கு என்னவோ பயம்மா இருக்கு'' தென்றல் பயந்து நடுங்க,

''பயப்படாதே! இங்குதான் எங்காவது போயிருப்பார். இரு பார்க்கலாம்'' என சமாதானம் செய்தானே தவிர அவனும் கலங்கித்தான் போனான்.

''சொல்லாமல் கொள்ளாமல் எங்கு போய்விட்டார் இந்த மாமா. எங்கே போய் தேடுறது? கதிர் ஒருவேளை மருந்து எதுவும் பறிக்க மலைக்குப் போயிருப்பாரோ. எதற்கும் காரை எடு பார்த்துவிட்டு வரலாம்'' என்றவாறு காருக்கு வர எதிரே வண்டியில் வேகமாய் வந்தான் அழகப்பன்.

''எல்லாரும் எங்கே கிளம்பிட்டீங்க? அங்கே மாமா தனியா மலை மேல ஏறிப் போயிட்டு இருக்கார். எத்தினி தரம் கூப்பிட்டாலும் திரும்பிக் கூட பார்க்கலே. என்னாச்சு ஏதேனும் பிரச்சனையா?'' என்றான் பதட்டமாய்.

''அய்யோ, அப்பா, வருண். அப்பா என் மேல கோவிச்சுட்டு தப்பான முடிவு எடுத்துட்டாரா, வாங்க உடனே போகலாம். எனக்கு உடனே அப்பாவைப் பார்க்கணும்'' அழ ஆரம்பித்தாள் தென்றல்.

''நாங்களும் வர்றோம்பா. கதிர் நீ அந்தக் காரை எடு. நான் இந்தக் காரில் வர்றேன். லட்சுமி ஏறு சீக்கிரம்'' அனைவரையும் தேவேந்திரனின் அவசரம் தொற்றிக் கொள்ள எல்லாரும் காரில் ஏறிக் கொள்ள உமா அழகப்பனின் வண்டியில் தொற்றிக் கொள்ள கார் வேக மெடுத்துப் புறப்பட்டது. இருமருங்கிலுமாய் அனைவரின் கண்களும் பதட்டமாகத் தேட தென்றலின் கண்ணில் பட்டார் மேகநாதன். பாறை மீது அமர்ந்து ஏதோ செய்து



கொண்டிருந்தார். தென்றலின் கூக்குரலில் கார் ஓரமாய் நிற்க அனைவரும் இறங்கி ஓடினர். தென்றலும் கலாவும் முன்னால் ஓட, அவர்களுக்கு இணையாய் ஓட முடியாமல் பின் தங்கிய மனைவியை கைப்பற்றி மெதுவாய் கையைப் பற்றி அழைத்து வந்தார் தேவேந்திரன். அனைவருக்கும் முன்பாய் ஓடிப் போன வருண், அவர் ஏதோ வாயில் போட அதைத் தட்டி விட்டான். பின்னே வந்த தென்றல், ''ஐயோ அரளி விதை. அப்பா என்ன காரியம் செய்தீர்கள். உங்களைக் கொன்று விட்டு நான் எப்படி வாழ்வேன். என்னால்தானே இந்த முடிவை எடுத்தீர்கள்? ஏம்ப்பா ஏன் இப்படி செய்தீங்க?'' முகத்தில் அறைந்து கொண்டு அழுதாள்.

''இந்த நொண்டித் தகப்பனால் என்ன செய்ய முடியும். எத்தனை நாள் என் பெண் படும் துன்பத்தை பார்த்துக் கொண்டிருக்க முடியும். முடியல்லம்மா. என்னால எதுவுமே முடியல்ல. அதனால்தான் யாரையும் கஷ்டப்படுத்தாம இங்கேயே என் முடிவைத் தேடி வந்தேன். நீங்கள் ஏன் வந்தீர்கள்? எல்லோரும் போய் விடுங்கள். எனக்கு அமைதி வேண்டும். அந்த அமைதியைத் தேடித்தான் போகிறேன்'' யாரையும் நிமிர்ந்து பார்க்கவில்லை மேகநாதன்.

''சம்பந்தி! நீங்களா இந்த முடிவை எடுத்தது. எத்தனை துணிச்சலான தன்னம்பிக்கையான மனிதர் நீங்கள் இப்படிச் செய்யலாமா?'' என கேட்ட தேவேந்திரனைப் பார்த்து விரக்தியாய் சிரித்தார் மேகநாதன்.

''வந்திட்டீங்களா, என் மாப்பிள்ளையைக் கூட்டிட்டுப் போக வந்திட்டீங்களா?''

''சம்பந்தி. நான் எம்புள்ளையை மட்டும் கூட்டிட்டு போகல. எம் மருமகளையும் கூடவே உங்களையும்தான். எம்புள்ளை உங்களுக்காகவே லாலி ரோட்ல கடையும்

வீடும் வாங்கிப் போட்டிருக்கான். அங்கே உங்க மகளும் மாப்பிள்ளையும் குடும்பம் நடத்தும் அழகை நீங்க கண் குளிரப் பார்க்க வேண்டாமா?'' என்றார் தேவேந்திரன்.

''அதெல்லாம் கனவுலதான் நடக்கும். நான் எப்போதும் பகல் கனவு காண்பதில்லை'' விட்டேற்றியாய் பதிலளித்தார்.

''இல்லை மாமா! எல்லாம் நிஜமாகி விட்டது. என் தென்றல் என்னை ஏற்றுக் கொண்டாள். என் பழைய தென்றல் எனக்கு கிடைத்து விட்டாள் மாமா. இதோ பாருங்கள்'' என தென்றலை தோளோடு அணைத்துக் கொண்டான் வருண்.

''ஆமாம்ப்பா... என் கோபமெல்லாம் மாமா பேச்சிலேயே கரைஞ்சு போச்சப்பா. இனி உங்க மனசு போல வாழுறோம்பா. என் வருண் எனக்குக் கிடைச்சுட்டாருப்பா! அப்பா வருண் இங்கு வந்த உடனே என் மனம் கலங்கி விட்டதப்பா. என்னதான் அவரை வெறுப்பதாகக் காட்டிக் கொண்டாலும் அவர் மீது எனக்கிருந்த நேசம் மறையாமல் தான் இருந்தது. அதுவும் அத்தை என்னிடம் பேசிய உடன் வருண் மீது எந்தத் தவறும் இல்லையென்று புரிந்து போனது. ஆனாலும் வருண் மாமாவுடன் பேசாமல் தண்டித்ததை சரி செய்ய வேண்டும் என்றுதான் அமைதியாக இருந்தேன். அவரை மாமாவுடன் பேச வைக்க வேண்டும். அது வருண் நன்றாய் குணமான பின்தான் முடியும் என்பதனால்தான் என் மனதை யாரிடமும் சொல்லாமல் இருந்தேன். ஆனால் அப்போதும் மாமாவின் மீது எனக்கு கொஞ்சம் வருத்தம் இருந்தது உண்மை.

தேவேந்திரன் வருத்தமாய் தலை குனிந்து கொண்டார். அதைப் பார்த்ததும் தென்றல், ''ஆனால் நடந்த சம்பவத்திற்கு மாமா மட்டும் முழுக் காரணம் இல்லை.



அரைகுறையாய் முடிவெடுத்த ராமநாதன் தான் காரணம் என்று தெரிந்ததும் என் வருத்தம் எல்லாம் மறைந்து விட்டதப்பா. ஒரு தந்தையாய் அவர் நடந்து கொண்டிருக்கிறார். நானும் அதைப் புரிந்து தெளிவுபடுத்தி இருக்க வேண்டும். அந்தச் சூழ்நிலையில் நானும் என் நிதானத்தை இழந்து விட்டேன். மாமா உங்களை நான் மரியாதைக் குறைவாக பேசிவிட்டேன். மாமா என்னை மன்னித்து விடுங்கள்'' கைகூப்பினாள்.

''இல்லையம்மா! அன்று நீ பேசியது தவறில்லை. மானமுள்ள எந்தப் பெண்ணும் அப்படித்தான் பேசியிருப்பாள். அதனால்தான் நீ பேசியபோதே நான் வருத்தப்படவில்லை. அந்தப் பேச்செல்லாம் எதற்கம்மா இனி. முதலில் அப்பாவை அழைத்துக் கொண்டு வீட்டுக்கு போகலாம்'' என்றார் தேவேந்திரன்.

''அப்பா உங்க மனசை நான் ரொம்ப நோகடித்து விட்டேனப்பா. உங்களிடம் நான் அப்படி நடந்திருக்கக் கூடாது. நீங்கள் தெய்வம் அப்பா. உங்களால் தான் என் வருண் மீண்டும் எனக்குக் கிடைத்தார். இல்லையென்றால் என்ன நடந்திருக்குமோ? அப்பா போனதெல்லாம் போகட்டும். எங்களை ஆசீர்வதியுங்கள் அப்பா. என்னுடன் பேசுங்கள் அப்பா. இதற்கு மேலும் என்னுடன் பேசாமல் இருந்து என்னைத் தண்டிக்காதீர்கள். இனிமேல் நான் யாரிடமும் கோபப்படவே மாட்டேன். ப்ளீஸ்பா... எனக்கு நீங்க வேணும்ப்பா... எங்ககூட பேசுங்கப்பா..'' அழுத மகளை மடியில் சாய்த்துக் கொண்டார் மேகநாதன்.

''என் கண்ணே! அப்பாவை மன்னித்து விடம்மா. நீ மாப்பிள்ளையோடு சேர வேண்டும் என்றுதான் உன்னிடம் கொஞ்சம் கடுமையாய் நடந்து கொண்டேன். உன்னிடம்

பேசாமல் நான் பட்ட பாடு எனக்குத்தான் தெரியும்'' கண்ணீர் வடித்தார்.

''சரிதான். இதில் கூட மாமனாருக்கும் மாப்பிள்ளைக்கும் என்ன ஒரு ஒற்றுமை. இருவருமே பேசாமல் இருந்தேதான் சாதித்தீர்களா? ஏன் ஸார் நீங்கள் என்ன மாமனார் மெச்சிய மருமகனா?'' என்றான் கதிர்.

''இல்ல கதிர். எப்பவுமே எனக்கு மாமாதான் முதலில், பிறகுதான் இவன் ..ஸ்..ஆ..'' நறுக்கெனக் கிள்ளினாள் தென்றல்.

''உங்களுக்கு மாமாதானே வேண்டும். அவருடனே குடும்பம் நடத்துங்கள். நான் போகிறேன்'' செல்லக் கோபத்துடன் சிணுங்கியவளை இழுத்து அணைத்துக் கொண்டான் வருண்.

''எனக்கு மாமாவும் வேண்டும், மாமா பெற்ற மாணிக்கமும் வேண்டும். இதில் யாரையும் யாருக்காகவும் விட்டுத்தர மாட்டேன்'' என்றான் வருண்.


''போதும்.. போதும்.. முதலில் வீட்டுக்குப் போவோம், கல்யாணத்திற்கு நாள் குறிக்க வேண்டுமே. சீக்கிரம் வாருங்கள். குளிர் காற்று வீசுகிறது'' என்றாள் மகாலஷ்மி.

''குளிர் தென்றலைக் கூடவே வைத்துக் கொண்டு அம்மா பேசுவதைப் பார்'' காதோரம் கிசுகிசுத்தான் வருண். தென்றலின் முகம் அந்திவானமாய்ச் சிவந்தது.



# காத்திருந்த கண்களே...

## 1



*காலங்களில் அவன் வசந்தம்*
*கலைகளிலே அவன் ஓவியம்*
*மாதங்களில் அவள் மார்கழி*
*மலர்களிலே அவள் மல்லிகை*

''பயணிகள் கவனத்திற்கு! சென்னையிலிருந்து புறப்படும் நெல்லை எக்ஸ்பிரஸ் ட்ரெயின் நம்பர் ஆறு ஒன்று பூஜ்யம் ஆறு இன்னும் சற்று நேரத்தில் ஆறாவது பிளாட்பாரத்திலிருந்து புறப்படும்'' மூன்று மொழிகளிலும் ஒலிபரப்பான தகவலைக் கேட்டதும் சிவகுருநாதன் தனது மணிக்கட்டைத் திருப்பி நேரம் பார்த்தார்.

''தோ பாருடா! எப்படியும் காலைல ஆறு மணிக்கெல்லாம் நீ அங்கே இருக்கணும். அவங்க குல தெய்வம் கோவில்ல பூஜை இருக்குதாம். அசந்து தூங்கி நெல்லை வரைக்கும் போயிடாதே. மதுரையில இறங்கிடு. மதுவோட அப்பா கார் அனுப்புறதா சொல்லியிருக்கார். பார்த்து பத்திரமா போ. நானும் அம்மாவும் இன்னும் ரெண்டு நாள்ல வந்திடுவோம். பூஜை முடிஞ்சதும் நம்ம வீட்டுக்குப் போயிடு. பிரெண்டு வீடு அது இதுன்னு எங்கேயும் சுத்தப்